உ

கடவுள்துணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய சிரோரத்ன

# நடனகாண்டம்

## ஆயிரத்தைன்னூறு.

இவை,

கையெழுத்துப்பிரதி அட்டவணை

அவிழ்தபாகங்களை பாவினமாக

பி - ஜான் - டிக்ரூஸ்

அண்ணாவியாரெனும் பண்டிதரால்

பார்வையிடப்பட்ட பிரதிக்கிணங்க

---

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியாரால்

சென்னை,

புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

ரிஜிஸ்டர்ட்]    1927    [காபிரைட்.

S. 59

கடவுள் துணை.

# பொருளட்டவணை.


| பொருள். | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அவையடக்கம் | 1 |
| அவையடக்கம் | 60 |
| அகஸ்தியமகாமுனிவர்வாத இராசனின்குணத்தைக்கூறியது | 2 |
| மேற்படியாரியற்றியசந்திரோதயலேகியம் | 9 |
| மேற்படியாரியற்றியஜெய ஏலாதிசூரணம் | 36 |
| அறிவுள்தெளிதல் | 62 |
| மேற்படியாரியற்றியகுணந்தருமகிருதம் | 79 |
| மேற்படியாரியற்றியதிவ்விய சநதானநெய் | 97 |
| மேற்படியாரியற்றிய ஆதியானந்தரசாயனம் | 119 |
| அழுக்கறுத்தேற்றல் | 133 |
| அகண்டதயானந்தம் | 134 |
| அழுகண்ணரியற்றிய ஸ்நான எண்ணெய் | 162 |
| அரத்தையின்குணம் | 189 |
| அசுவனித்தேவரியற்றிய-குமரியெண்ணெய் | 198 |
| அயச்செந்தூரம் | 223 |
| அஷ்டரசாயனம் | 181 |
| அறிவிடந்தேர்ந்தல் | 178 |
| அமுர்தமூட்டல் | 177 |
| அழுகண்ணரியற்றியபரிமளவில்வாதியெண்ணெய் | 167 |
| **ஆ** | |
| ஆனந்தவொலி | 60 |
| ஆக்கைநிறுத்தல் | 139 |
| ஆக்கிரணம் | 237 |
| ஆனந்தசித்தரியற்றிய சகல வியாதிக்கு நவரத்னசந்தநாதித்தயிலம் | 237 |
| **இ** | |
| இராமதேவர் சிலேஷ்டும இராசனின் குணத்தைக்கூறியது | 6 |
| இடமறிதல் | 43 |
| இலவங்கப்பூசூரணம் | 48 |
| இடமிகுவெனல் | 60 |
| இராமதேவரியற்றிய ஆனந்தநெல்லிமுள்ளிலேகியம் | 32 |
| இராசிப்பொருத்தம் | 106 |
| இராமதேவரியற்றிய-இனிதரசக்கிருதம் | 92 |
| இடமறிதல் | 133 |
| இராமதேவரியற்றிய யசுவிகிறதீவராற்டசிரசாயனம் | 149 |
| இடைக்காடரியற்றிய விளக்கொளிவானந்தம் | 155 |
| இதற்குகுடிநீர் | 175 |
| இராசபண்டித வீரமாமுனிவரியற்றிய மேகராசாங்கரசாயன | 177 |
| இதற்குஸ்நானஞ்செயய எண்ணெய் | 213 |
| இருவர்களின்குறிப்பு | 241 |
| இமையகிரிசித்தரியற்றியபவழமாணிக்கக்குழம்பு | 230 |
| இராமதேவயயற்றிய-வேறுநெய்விருத்தம் | 112 |
| **ஈ** | |
| ஈடேற்றம் | 195 |
| **உ** | |
| உலகவழக்கு | 62 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| உண்மை நிறுத்தல் | 143 |
| ஊண்மை | 180 |
| உண்மை | 103 |
| **எ** | |
| எண்ணெய்ப்பாகவிதம் | 157 |
| எண்ணெய்த்தொகுப்பலங்காரம் | 172 |
| **க** | |
| கடவுள்வாழ்த்து | 1 |
| கருவூரார்பித்த இராசனின் குணத்தைக்கூறியது | 4 |
| கமலமுனிசிலேட்டும இராசனின் குணத்தைக்கூறியது | 6 |
| கருவூராரியற்றிய ஆரோக்கிய மஸ்துகாலேகியம் | 18 |
| கருதத்துவம் | 60 |
| கனவினவல் | 62 |
| கங்குலங்கற்றல் | 62 |
| கமலமுனியாரியற்றியமகுடாதிபர்கள்சூரணம் | 75 |
| கருவூராரியற்றியமேகநாதக்கிருதம் | 85 |
| கமலமுனியாரியற்றியசீலசவுக்கியகிருதம் | 95 |
| கருவூராரியற்றிய பூபதிநெய் | 106 |
| கமலமுனியாரியற்றியதிருமலரின்பநெய் | 114 |
| கருவூராரியற்றியபூரணாதிரசாயனம் | 129 |
| கமலமுனியாரியற்றியமகாவினிதசீர்மைஅத்திப்பழத்தின்ரசாயனம் | 153 |
| கனல்கொண்டதேகத்துக்குவெண்ணெய் | 166 |
| கஞ்சமலைசித்தரியற்றிய இரசபதங்கம் | 222 |
| கல்லுளிசித்தரியற்றியகட்டுவாதிமெழுகு | 182 |
| **கா** | |
| காசிபரியற்றியகரியநாதக்குழம்பு | 235 |
| **கி** | |
| கியாழம் | 195 |
| கியாழம் | 190 |
| கியானநாதாந்தசித்தரியற்றியதாளகபற்பம் | 233 |
| **கு** | |
| குருவணக்கம் | 1 |
| குருபதவணக்கம் | 42 |
| குற்றமற்றது | 67 |
| குணவெழுத்து | 62 |
| குருவடிப்பணிதல் | 112 |
| குன்றுதொளி | 177 |
| குதம்பைசித்தரியற்றியசந்திரோதயக்குளிகை | 209 |
| **கூ** | |
| கூனக்கண்ணரியற்றியலவணகுணதிஎண்ணெய் | 193 |
| **கே** | |
| கேழ்வி | 61 |
| **கை** | |
| கைப்பிடிக்கோல்நடை | 155 |
| கைகாட்டல் | 178 |
| கைத்தொழில் | 60 |
| **கோ** | |
| கொங்கணர்பித்தஇராசனின குணத்தைக்கூறியது | 5 |
| கொங்கணர்சௌபாக்கியபன்னீர்ப்பூலேகியம் | 23 |
| கொங்கணரியற்றியசூட்சாதிசூரணம் | 61 |
| கொங்கணரியற்றியஅகிவிதசூரணம் | 63 |
| கொங்கணரியற்றிநிகூடயகுலாதிக்கிருதம் | 80 |
| கொங்கணரியற்றிய வயிற்கொட்டலுக்குசூட்சமாகியநெய் | 109 |
| கொங்கணர் அன்னுசிபழ்த்தின் | |

| பொருள். | பக்கம். |
|---|---|
| அதிவிதுராசாயனம் | 139 |
| கௌ | |
| கௌபாலரியற்றியகோடா சுழிமாத்திரை | 220 |
| கௌபாலரியற்றியசண்டமாருதச்சுடர்த்தயிலம் | 220 |
| ச | |
| சட்டமுனியார்பித்தஇராசனின் குணத்தைக்கூறியது | 4 |
| சட்டமுனியாரியற்றியசூரியப்பிரகாசலேகியம் | 22 |
| சட்டமுனியாரியற்றியசுத்தசஞ்சீவியானந்தசூரணம் | 53 |
| சம்பிரதாயசூரணம் | 65 |
| சட்டமுனியாரியற்றியகொடிமாதளைக்கிருதம் | 86 |
| சட்டமாமுனியாரியற்றிய கெந்தகநெய் | 107 |
| சட்டமாமுனிவரியற்றியபித்தசாந்திரசாயனம் | 134 |
| சர்க்கரைப்பாகம் | 140 |
| சர்க்கரைப்பாகம் | 151 |
| சர்க்கரைப்பாகம் | 169 |
| சனகமகாமுனிவரியற்றியபிர்மதண்டியெண்ணெய் | 201 |
| சரக்குசுத்தியின்பாகம் | 215 |
| சரக்குசுத்தி | 236 |
| சன்னி-13-க்கும்-கலிக்கம் | 236 |
| சி | |
| சிலேட்டுமத்தின்குறிப்பு | 242 |
| சிவவாக்கியரியற்றியஅவத்திஎண்ணெய் | 197 |
| சிததானந்தரியற்றிய அமுர்தசுயக்குளிகை | 279 |
| சிவயோகசித்தரியற்றியபுண்புரைக்கிசிலேயெண்ணெய் | 377 |
| சு | |
| சுந்திரர்சிலேட்டும இராசனின் குணத்தைக்கூறியது | 6 |
| சுந்தரரியற்றியபஞ்சதீபாக்கினிலேகியம் | 30 |
| சுந்தரரியற்றியஜெயபூரணசூரணம் | 68 |
| சுந்தரரியற்றியசிந்தாமணிக்கிருதம் | 91 |
| சுடரொளி | 103 |
| மேற்படியாரியற்றிய குறையிலாதநெய் | 111 |
| சுந்தரானந்தரியற்றியதெளிவுள்ளவில்வாதிரசாயனம் | 147 |
| சுபசௌக்கியஸ்நானயெண்ணெய் | 165 |
| சூ | |
| சூபணப்பாகந்தெளிந்துணர் | 240 |
| சூதமாமுனிவரியற்றியமேகநாதக்குளிகை | 213 |
| சே | |
| செய்பாகம் | 139 |
| ஸ் | |
| ஸ்நானஞ்செய்யஎண்ணெய் | 161 |
| ஸ்நானஞ்செய்யஎண்ணெய் | 170 |
| ஸ்நானஞ்செய்யப்பாகநிதானம் | 195 |
| ஸ்நானஞ்செய்யஎண்ணெய் | 211 |
| ஞா | |
| ஞானமார்க்கம் | 18 |
| ஞானம் | 49 |
| ஞானமார்க்கதீபம் | 52 |
| ஞானவிதி | 59 |
| ஞானப்பெண் | 60 |
| ஞானவித்தாரம் | 254 |
| ஞானமேசுயம்பு | 67 |
| ஞானவுச்சாரணம் | 179 |
| ட | |
| டமாரானந்தரியற்றியபூவரசங்காயின்எண்ணெய் | 196 |
| த | |
| தசாங்கம் | 1 |
| தன்வந்திரியார்வாதஇராசனின் குணத்தைக்கூறியது | 3 |
| தன்வந்திரியாரியற்றியசெயவல்லாதிலேகியம் | 13 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| தன்வந்திரியாரியற்றியபித்த சாந்திசூரணம் | 40 |
| தத்துவம் | 48 |
| தத்துவம் | 62 |
| தன்வந்திரியாரியற்றியசூழ்பாண்டக்கிருதம் | 82 |
| தன்வந்திரியாரியற்றியதிருப்புகழானந்தநெய் | 102 |
| தன்வந்திரியாரியற்றிய மணிமந்திரரசாயன சுத்தவிதம் | 124 |
| தத்துவகண்ணுடியின் திறவுக்கோல் | 240 |
| **தி** | |
| திருவள்ளுவர்யியற்றிய வபித்தியத்தின்முப்புவின்குறிப்பு | 245 |
| திருமூலர்பித்தஇராசனின்குணத்தைக்கூறியது | 4 |
| திருமூலரியற்றியபுஜபெல திருமந்திராதிலேகியம் | 20 |
| திருமூலரியற்றியமாவுலிங்கப்பட்டைசூரணம் | 51 |
| திருந்தல் | 60 |
| திறமைப்பெறுதல் | 60 |
| திருமூலரியற்றியநன்னாரிவேர் கிருதம் | 86 |
| திருமூலரியற்றிய நவரசபழத்தின்நெய் | 107 |
| திருமூலரியற்றியகுணவசிகரசாயனத்தொகுப்பு | 131 |
| திறவுகோலூக்கம் | 154 |
| திருத்தலணிகொளல் | 154 |
| **தீ** | |
| தீரும்நோய் | 159 |
| **தே** | |
| தேரையர்சிலேஷ்டுமஇராசனின் குணத்தைக்கூறியது | 6 |
| தேரையரியற்றியமிளகாதி லேகியம் | 33 |
| தேரையரியற்றியஅஷ்டப்பால கர்சூரணம் | 72 |
| தேரையரியற்றியவச்சிரவல்லி சூரணம் | 73 |
| தேரையரியற்றியசீவராஜக் கிருதம் | 94 |
| தேரையரியற்றியபுஷபராக நெய் | 113 |
| தேரையரியற்றியவலுவுள்ள சாலாமிசரிரசாயனம் | 151 |
| தேர்ந்தநற்கருணை | 179 |
| தேகக்குறிப்பு | 243 |
| தேகக்குறிப்பு | 240 |
| **தொ** | |
| தொழுகண்ணரியற்றியமருந்தீன் கற்றலின்சுகந்தபாகு | 168 |
| **தோ** | |
| தோற்றுடபுகழ் | 60 |
| தோத்தரித்தல் | 60 |
| **ந** | |
| நந்தீஸ்வகர்வாதஇராசனின் குணத்தைக்கூறியது | 2 |
| நந்தீஸ்வரரியற்றியமனோரஞ்சித லேகியம் | 7 |
| நந்தீஸ்வரரியற்றியபிரசன்னக் கிருதம் | 77 |
| நந்தீஸ்வரரியற்றியசுகந்தப் பிரகாசநெய் | 96 |
| நந்தீஸ்வரரியற்றிய மரகத ரசாயனம் | 118 |
| நயனநாட்டம் | 132 |
| நன்மார்க்கம் | 149 |
| நன்னாரிவேர்கியாழம் | 162 |
| நம்பிக்கையிணைத்தல் | 171 |
| நயனநாட்டிசைத்தல் | 179 |
| **நா** | |
| நாவின்குறிப்பு | 244 |
| நாதாந்தசித்தரியற்றியகாந்த செந்தூரம் | 226 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| நி | |
| நிலையுற்றணிதல் | 159 |
| நிலநாட்டம் | 180 |
| நீ | |
| நீரின்குறிப்பு | 244 |
| நூ | |
| நூலாரம்பம் | 2 |
| நூல்வழிகூறல் | 155 |
| நூலணிகாதல் | 177 |
| நோ | |
| நோயாளர்சத்தத்தின்குறிப் | 243 |
| நோய்தீர்குழிற்பாடல் | 64 |
| ப | |
| பத்தியம் | 14 |
| பதஞ்சலியாரியற்றியமகாவிந்தை லேகியம் | 34 |
| பட்சணிநோக்கல் | 59 |
| பரிசுத்தவகை | 60 |
| பழத்தின்பாகம் | 140 |
| பத்தியம் | 160 |
| பத்தியம் | 165 |
| பண்மையுலாசம் | 177 |
| பதஞ்சலியாரியற்றிய வச்சிர கண்டிமாத்திரை | 211 |
| பாகநிறைந்தேறுதல் | 154 |
| பாகம்திறுத்தலின்முறைமை | 159 |
| பா | |
| பார்வையின்குறிப்பு | 241 |
| பாகவிர்த்தாந்தம் | 178 |
| பாம்பாட்டிசித்தரியற்றிய ஞானசுயப்பு | 206 |
| பாம்பாட்டிசித்தரியற்றியசிரோன் மணிபூபதிமாத்திரை | 207 |
| பி | |
| பிடிநாக்கீசர்வாதஇராசனின் குணத்தைக்கூறியது | 3 |
| பிரமமுனிசிலேஷ்டுமஇராசனின் குணத்தைக்கூறியது | 5 |
| பிடிநாக்கீசரியற்றியமதனவசீகர லேகியம் | 11 |

| பொருள். | பக்கம். |
|---|---|
| பிர்மமுனியாரியற்றியபிரவடிசோ மனதிலேகியம் | 29 |
| பிடிநாக்கீசரியற்றியதிவ்ய அருகின் வேர்சூரணம் | 38 |
| பிடிநாக்கீசரியற்றியவல்லாரைக் கிருதம் | 81 |
| பிர்மமுனியாரியற்றிய கைவல்லி யக்கிருதம் | 90 |
| பிடிநாக்கீசர் ராசசேகரநெய் | |
| பிர்மமுனியாரியற்றிய பவள மாணிக்கநெய் | 110 |
| பிடிநாக்கீசரியற்றியகுசம்பா கரரசாயனம் | 122 |
| பிர்மமுனிவர் இஞ்சிரசா | 145 |
| பிரபல்யம் | 178 |
| பித்தரோகமலைத்தின்குறிப்பு | 244 |
| பித்தத்தின்குறிப்பு | 242 |
| பு | |
| புலத்தியர்வாதஇராசனின்குணத் தைக்கூறியது | 3 |
| புசுண்டமூர்த்திபித்தஇராசனின் குணத்தைக்கூறியது | 4 |
| புலத்தியமாமுனிவரியற்றிய மதனலங்கிர்தலேகியம் | 14 |
| புசுண்டமூர்த்தியியற்றி இராம பாணலேகியம் | 16 |
| புலத்தியர் ஓலைத்தாமரைசூர் | 44 |
| புசுண்டமுனிவரியற்றியலவங்கப் பட்டைசூரணம் | 45 |
| புலத்தியரியற்றியதூதுவேளைக் கிருதம் | 83 |
| புசுண்டமூர்த்திஇயற்றியசுவை யானந்தக்கிருதம் | 84 |
| புலஸ்தியரியற்றியபலித ரசிகநெய் | 103 |
| புசுண்டமூர்த்தியியற்றியகண் ணேட்டக்குணநெய் | 105 |
| புலஸ்திபரியற்றியமணிமந்திர சுத்தரசாயனம் | 125 |

பொருள். பக்கம்.


புசுண்டரியற்றியமருத்துவ
ரசாயனம் 127
புலிகாலரியற்றியபுங்கம்பா
லெண்ணெய் 171
புங்கம்வேர்எண்ணெய் 173
புங்கமபால்எண்ணெபாகம் 173
புலிப்பாணிமுனிவரியற்றிய
கற்பகமுதசொளிபற்பம் 277

பூ

பூசைவணக்கம் 19
பூசைபோனமாய் கையினசெய்கை
யைச்சொல்லுதல் 47
பூபதிமாத்திரை வறைக்கின்ற
சந்தனகியாழம் 208

பெ

பெரியோர்களுயர்வு 62
பெரியோர்களுண்மை 111
பெரியோரறிவு 132

பே

பேரலங்காரம் 178

பொ

பொய்குருக்கள் 77
பொய்நீக்கல் 132

போ

போகரிஷியியற்றியவயித்திய
ரசமுப்பு 248
போகர்பித்த இராஜனின்குணத்
தைக்கூறியது 5
போகர்ஞானமார்க்கம் 27
போகரியற்றியமேகநாதகதலி
லேகியம் 28
போகரியற்றியகருணீகரக்
கிருதம் 89
போகரியற்றியநெய் 109
போதம் 130
போகரியற்றியமகாசுயகெடிஎலு
மிச்சங்காய்ரசாயனம் 141

ம

மச்சமுனியார்வாதஇராசனின்
குணத்தைக்கூறியது 3
மாதகுடாரிலேகியம் 10
மச்சமுனியாரியதீபாக்
கினிசூரணம் 37
மணிபூரகம் 41
மனதடக்கம் 56
மயிர்ப்பாலம் 59
மச்சமுனியாரியற்றியபிளியாரை
க்கிருதம் 80
மச்சமுனியாரியற்றியஇராட்சத
சிந்தாமணிநெய் 68
மனமேசெவ்வை 110
மச்சமுனியார் முயலநெய் 114
மச்சமுனியாரியற்றியவிலோசன
ரசாயனம் 120
மனோரம்யபெருமை 122
மனவருந்திணைத்தல் 155
மலத்தின்குறிப்பு 243
மறைநிறைக்காதல் 143

மா

மாதபயூகி 178

மீ

மீண்டியல 146

மு

முப்பூவின்தொகுப்பு 245
முன்நூலசாட்சி 132

மூ

மூலாதாரம் 46
மூலதெரிசனம் 47
மூலர்களினநடையின்குறி 241

மெ

மெய்க்குருக்கள் 77
மெய்வழியுறுத்தல் 133
மெய்மருந்திதுகொளல் 154

மே

மேகராசாங்கசண்டமாருத
எண்ணெய் 156
மேலோர்சாட்சி 170

| பொருள். | பக்கம். |
|---|---|
| மோ | |
| மொழிவிதகுறிப்பு | 243 |
| யூ | |
| யூகிமாமுனிவரியற்றிய சிலோகிரிமாத்திரை | 176 |
| ரோ | |
| ரோமரிஷியார்பித்தஇராசனின் குணத்தைககூறியது | 5 |
| ரோமரிஷியாரியற்றிய மூலகுடாரிலேகிய | 26 |
| ரோமரிஷியாரியற்றிய அழகிய சொக்கசூரணம் | 57 |
| ரோமரிஷியாரியற்றியநயகுணப் படலபதிக்கிருதம் | 87 |
| ரோமரிஷியாரியற்றிய அடம்பிநெய் | 108 |
| ரோமரிஷியாரியற்றியமனோகர சிவாசிரசாயனம் | 137 |
| வ | |
| அங்குலம்நாலு | 59 |
| வந்தவாசிசித்தரியற்றியபவழ பற்பம் | 232 |
| வா | |
| வாசிப்பிரகாசம் | 133 |
| வாதத்தின்குறிப்பு | 241 |
| வி | |
| விசுத்தி | 41 |
| வில்வப்பழத்தின்குணம | 188 |
| விழியின்குறிப்பு | 243 |
| வியாதிகள்தீருங்குணங்கள் | 210 |
| வீ | |
| வீரமாமுனிவரியற்றியகடைசாக் கின்பாகம் | 184 |
| வெ | |
| வெகுளி | 106 |
| வெண்பா | 252 |
| வே | |
| வேதாந்தம் | 73 |
| வேதாந்தசாரம் | 110 |
| வேதமுனிசூடாமணிமாத் | 215 |
| வேதாந்தசித்தாகாசபற்பம் | 225 |
| வேறுவிருத்தம் | 252 |
| ஜ | |
| ஜயரோகிமலக்குறிப்பு | 244 |
| ஜன்னியின்குறிப்பு | 244 |


## பொருளட்டவணை-முற்றிற்று.


பதினெண் சித்தர்களில் மஹா மகத்துவம் பொருந்திய

**போகர் சப்தகாண்டம் 7000 பாடல்.**

மஹா மகிமை வாய்ந்த சித்தர்களுள் நாற்பத்தெண் முனிவர்களும் நவ கோடி ரிஷிகளும் ஜீவர்பேரில் உள்ள காருண்யத்தால் 21 இலட்சம் கிரந்தங்கள் செய்தருளினர் ஒவ்வொருகிரந்தத்தினும் அநேக மகத்துவங்கள் நிறைந்தது போகர் சபதகாண்டமாகிய இந்நூலில் அநுபவத்திய முறைகளும் வாத முறைகளும், சரக்குகளின் சட்டுகள், கற்பங்களின் முறை உப்புவகைகளின் கட்டுவேதைகளும் பாஷாண வகைகளும் போகர்தமது சமாதிகளில் விளக்கிய இவைகளை விரிவாக எழுதுவதற்கு இடம்தாராமையால் இத்துடன் நிறுத்துகின்றனம், இதன் விபரமும் புஸ்தகத்தின் விஷய அட்டவணையில் விபரமாய் காண்க. இதன் விலை ரூபா 4 0 0 கிளேஸ் கடிதம் 6 0 0

புவனேஸ்வரி பிரசுராலயம்,
நெ. 23, பாளையப்பன் தெரு, தங்கசாலை போஸ்டு, சென்னை.

உ

கடவுள் துணை.

—*—

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியசிரோரத்னம்

நடனகாண்டம் - ௩௱-

## கடவுள் வாழ்த்து.

விருத்தம்.

உலகெலாந் தமக்குளாக்கி உதித்திடுங் கதிர்போலெங்கும்
தலமெலாம் விளங்கிக்காக்குந் தனிமுதற் கடவுள்தன்னை
நிலமையாய் மனதிலுற்று நேர்சுழிமுனையில்நின்று
இலகவே யேற்றிபோற்றி இணையடிற்றொழுகுவோமே. 1

## குருவணக்கம்.

தொழுதுமுன் பொதிகைதன்னில்துலங்கவேபதினெண்பேர்கள்
வழுவிலாப்படியேஞான வமிர்தப்பாலுண்டுதேர்ந்து
முழுதுநற் குணங்களாய்ந்து முயற்சியாயிருக்கும்நாளில்
எழுதினேனுலகோர்க்கென்று இயம்புது விந்தநூலே. 2

## அவையடக்கம்.

இந்தநூல் சிரோரத்னமென் றியம்பினேமாயிரத்தந்நூற்
றந்தைவல்லபையைப்போற்றிதரணியோர்பிணியைத்தீர்க்க
பைந்தமிழதனால் செப்பும் பண்டிதவகைகளெல்லாஞ்சிந்
தையிற் றெளிவதாக்கி சீர்வழிபெறுவீர்தாமே. 3

## தசாங்கம்.

தரு-இ-ம்-குரவஞ்சி.

தனதந்தன தனதந்தன தனதந்தன தனனம்
தனதந்தன தனதந்தன தனதந்தன தனனம் - தந்த

சீர்சிறந்தநந்தீசரகஸ்திய மாமுனியுஞ்
செழுந்தகுணமச்சமுனிபிடி நாக்கீசருந்தான்
நேர்சிறந்த தன்வந்திரிபுலத்தியரும்புசுண்டர்
நேத்தியுள்ளகருவூரார் திருமூலருந்தான்

வார்சிறந்தசட்ட முனிரோமரிஷியாரும்
வளர்பெரியகொங்கணரும் போகருடனேதான்
தார்சிறந்த பிர்மமுனிசுந்தரரும்மொன்றாய்
தவமுமிகுந்த இராமரொடுசிவத்தேவர்களுந்தான். 4

## நூலாரம்பம்.

இதுவுமது.

தேவர்சபையானவர்கள் சூழ்ந்திருக்கும்நாளில்
திருநடனகலைமாது வதனமதிலிலக
ஆவலுடன் றேரையருங்கமல முனியாரும்
அகஸ்கிழ அனைவர்களும் மிகநலமதாக
நாவதனால் புகன்றதிவைநார்கள் பிழைப்பாக
நயனவொளி பேரியோர்கள் நாதனருளாலே
காவலணிஅகண்டபரி பூரணங்கைக்கொண்டு
கலைஞானந் தெரிந்துணர்ந்த பதினெண்சித்தர் தானே. 5

## நந்தீஸவரர்.

வாதஇராசனின் குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

தந்தன தன தனன தான
தனன தனன தன தன தனன

காரணமனோன்மணியைக்-கருத்தில்வைத்து-கவனமுடன் றொழு
துபோற்றியேதான் - ஆரணத்திலுள்ள மனுக்குள்-தேககுணத்தை-
ஆய்ந்தவிதசொற்படியே-தேர்ந்துரைசெய்வேன். வாரணத்தின் செய்
கையதுபோல்-துகைவகையாய் வாழ்த்துதலுண்டாகஙிதம்-ஆழ்ந்த
கருத்தாய் பூரணத்திற்றேர்ந்தகுருவாம்நந்தீசரிதோ - புகன்றிடுவேன்
நாடித்தெரிந்திடவே-தந்த 6

இதுவுமது.

தெரியவேதானுரைக்கிறேன்- வாதாதிபனே - தேர்ந்துகொண்டு
பண்டிதர்கள் நேர்ந்துசெய்யவே - பிரியமாய் கயைதொடுக்கில் - மூன்று
விரல் பிரபலித்தோர் நரம்புயேர்க்கனவோடும்-சரிவரவிலையாகில்-பிசு
கென்று- சாற்றுவார்களே பெரியோர்நாட்டமுடனே-அரியவேகாக்கை
யைப்போலே- துள்ளிகுதித்து-ஆக்ரமுற்று மூற்கநடையானது வென்
றே - தந்த

## அகஸ்தியமகாமுனிவர்.

வாதஇராசனின்குணத்தைக்கூறியது

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

நடைதனில் வேகமுடனே- கதரியேதான்-நட்டணைகளாய் சிதறி
பொட்டென வேதான்-தடையிலாவட்டை பாம்பைப்போல் - நெளி

தெளித்து- தத்திசுழித்திடும் மத்திபமதாய்-படை மனுவேகம்போலே-தொடுத்துநின்ற-பாகமதைக்கண்டுகொள்வீர் தேகநிலையில் விடைசொல்லப்போமோதான்-அகஸ்தியர் விற்பனவிடவகர் தெளிந்துரைத்தனரே-தந்த 8

## மச்சமுனிவர்.

வாதஇராசனின் குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

தெளியவேதானுரைக்கிறேன்- அன்னமதுபோல் துள்ளி துள்ளி சாயலுடன் மெள்ளநடையால - நளிவில்லாப்படியேதான்- அசனநாடி நகைத்துப்படபடென்று மிகமுடிக்கி - விழியதுமஞ்சள்வர்னமாய்-பொசித்திருக்கும் - வித்தைமிகுத்தேவினவாய் மெத்தப்பிரட்டும்-களிப்பில்லாதிருக்குமென்றே-மச்சமுனிவர்- காட்டினரிதுவிதம்பாட்டிசைதனிலே-தந்த 9

## பிடிநாக்கீசர்.

வாதஇராசனின் குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

இசைந்துமுடக்குஞ் சுழிக்கும்-கைகால்மிகவே- ஏற்கனவேதான் கறுக்கும்மேனிகளெல்லாம்- லசமில்லாதகுணமாக - சாம்பல்பூர்த்துவடைத்திடும்நாசியது யெடுத்துலர்ந்து - திசைதனிலுள்ளபேர்கள்-சாஸ்திரத்தை-தினந்தினமும் படித்துமனதில்வைத்து-நிசமதாய்கற்றுணரவே-பிடிநாக்கீசர்-நேர்ந்தபடி பாங்குடனே தேர்ந்திடச்சொன்னேன்-தந்த 10

## தன்வந்திரியார்.

வாதஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

பாங்குடனே சொல்வதைநீங்கள். நிலைமையாய்-பத்திவிசுவாசமுடன் யுக்தியாய்கேட்பீர்-ஏங்கியேகண்ணைதிறந்து - முழிதத்திருப்பான்-எட்டில்வரைந்தே புகலனுட்டினி லுண்டோ-தாங்குவரோ இப்புவியாளர்- இரவலர்தன்-தத்வபாதம்போற்றிடுவோம் மெத்தவினவாய்-சாங்கோபாங்கமாகத்-தயவாய்-தன்வந்திரியார்- தானுரைத்திடுங்குணங்கள்-தோறுதற்கென்றே-தந்த 11

## புலத்தியர்.

வாதஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

தோணுதற்குவாத இராசனின் - பலாபலத்தை - சொல்லுதற்கு வெல்லுதற்கு பேர்களுமுண்டோ - காணுதற்கு ஞானக்க

ண்ணினல்-கருத்துணர்ந்தோர்-கண்டவர்கள் விண்டிலர்கள்மண்டலத்திலே-ஆணுவத்தை நீக்கிச்சுயம்பில்-முப்பாழ்கடந்து-ஆசைவைத்து ஞாபகமாய் பூசைகள்செய்வாய்-வேணுமென்று புலத்தியரும்-விமரீதமாய் வேதமுறைநற்குணச்சொலநாடியதென்றே தந்த. 12

## புசுண்டமூர்த்தி.

பித்தஇராசனின்குணத்தைகூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

குணம்பெறபித்தராசனின் - வயணமதை - குறிப்புடன்சாற்றுகிறேன் விரிவுடனே - மனமதைதிட்டவட்டமாய் நிலைப்படுத்தி-மணிமந்திர அவிழ்தமதைப் பணிந்துசெய்வீர்-தனமதுதந்துகொழுவர்-வைத்தியர்க்கு தத்துவமுங்கை பரிட்சை மெத்தபுணரவணும்-இனமுள்ள யூகைடயுனே-புசுண்டமூர்த்தி-ஏர்த்திதைப் படித்துணரதேர்த்துரைத்ததே-தந்த. 13

## கருவுரார்.

பித்தஇராசனின் குணத்தைகூறிய

தரு-இ-ம்-நொண்டிச்சந்தம்.

தேர்திடசொல்லுகிறேன்கேள் ஐயருட-திருவடிப்பாதச்செயல் கிருபையினல்-சார்ந்திடுமுன் விரலின்கீழ் நடுவில்தொட்டால்-சரசம் போல்பட்டுபட்டு வுரசடிக்கும்-ஆர்ந்திடவானே குந்தியின்-பட்டணத்தின்-வரசனில்லா நாடதையரசாளுகை செய்யும் - நேர்ந்துவிடும்பேய் காற் றலைபோல்-கருவூரார்- நிற்குமென்று பித்தமெனகற் பித்ததென்றே-தந்த 14

## திருமூலர்.

பித்தஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

என்றவித வுனிலாகாக்கை- யெழும்புமாப்போல்- யெத்தியேதான் தொங்கிதொங்கி சுத்திமானைப்போல்-நன்றதுபோல் துள்ளிமெள்ளவே உலாவுகின்ற-நாட்டமதைச் சொல்லரிதுபூடகமென்பர்-கன்றிதமா வெல்லயெவர்க்கும்-வெகுகடினம் காரியத்தைபுன்புகல பாரிதமென்போம்-ஒன்றினுக்குவொன்று பேதமாந்-திருமூலர்-வுண்மைநடையானதிதைநன்மையாய்சொன்னே-தந்த. 15

## சட்டமுனியார்.

பித்தஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

நடக்கையில் தேரையைப்போலே - கள்ளமதுற்ற - நட்டணைகளாக வேதான்விட்டில் போலெழும் - திடக்கையில்லாமல்

வெகுவாய் நாவரண்டு தேறுதலில்லாமல் கண்ணைசொருகியே மூடும் - மடமதுபோலவெருண்டு கண்புகைச்சல் - மருண்டது சூழ்ந்துகொண்டு யிரண்டிருக்கும் - இடமெனுஞ் சீரமதில் - நீரில்லாமல் - உலருமெனசட்டமுனி விளம்பினனே - தந்தன. 16

## ரோமரிஷியார்.

பித்தஇரர்சனின் குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

உலர்ந்திடும் மேனிகளெல்லாம் - பிணங்கியேதான் உள்ளங்கையானதிலே கிள்ளிபாக்கிலும் பலனில்லா செய்கையினவாய் - சரீரத்தில் பண்புடனே நீரில்லாமல் அன்பற்றிருக்கும் - பெலனது பெலனதுசெய்குறிகளும் கண்ணாலேயற்று பேசுகின்றவாய் மொழியை நேசமாய்கண்டு கலனிது வென்றுவரிந்து - ரோமரிஷியார் கட்டுரைத்தேன் மிக்கவேதான்விட்டுறைத்திதே தந்த. 18

## கொங்கணர்.

பித்தஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

விட்டரைப்போம் பித்தகுணத்தால் - பலசிந்தை வெடுத்து எழுந்து செல்வாண் படுத்திடாமல் நட்டுவனாட்டமதுபோல் நின்றவிதம் - நாடிக்கண்டால் சீக்கிரத்தில் பாட்டில்படித்த - கட்டுதிட்டஞ் சொல்லின்படியே - பண்டிதர்கள் - கர்த்தனிடபாதமதை மெத்தவும் போற்றி-தொட்டுவிடு சித்திரவிழ்தங்-கொங்கணரும் - தொளர்ச்சியாய் மிகசொன்னேனனவுடனே-தந்த. 18

## போகர்.

பித்தஇராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

மிகசொன்னேன் பித்தகுணத்தை - வினவியே - விரித்திதைப் பேசிடுவோங் தெரிந்திடவே-செகத்தினில்மா பெரியோர்கள்-நாடிதனை-செப்பமுடன் பாடிவைத்தார்தப் பிதமில்லை - அமத்தினின் கெறுவம்விட்டு - கவனித்து அவரவர்சொன்னநூலை தவத்துடனே சுகந்தருமெனப் படிப்பீர் - போகம் சுருதியனு போகமாய் கருதினனே. 19

## பிரமமுனி.

சிலேட்டும இராஜனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்,

கருதிடக் கேழ்ப்பீர்கள் - சிலேட்டுமத்தின் - காரியத்தையின்னதென்று வீரியமாக - பொருதிடரெண்டு விரல்பின் மூன்ற

ணிவிரல் - பொங்கமுடனே படிக்குஞ் சங்கையுடனே - தெரிந்திடப் போகாது - இதின்குணம் - செப்புவரோயிப்புவியில் வொப்பனேயாக விருதுகட்டியேநடக்க - பிரப்பமுனி - விந்தையுடன் செல்லினேனே மைந்தர்கள் முன்னே-தந்த. 20

## சுந்தரர்.

சிலேட்டும இராஜனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

முன்னமேயறியவேணும் - சிலேட்டுமந்தான் - முடிக்கியே ஆஸ்பதமாய் படித்துநிற்கும் - நன்னயமாயோடுமிது - நவிலிதுகேள் நாட்டியப்பெண்போல் துடித்துசாட்டி நொடிக்கும் - கன்னக்காரன் மெத்தக்கள்ளன்தாண் - இவனுட காரணத்தை சொல்லரிது ஆரணத்திலே - வன்னமுள்ள பட்டம் பகல்போல் - சுந்தரர் - வழிநடை தீப்பொரிப்போலா மெனத்தென்றேன்-தந்த. 21

## இராமதேவர்.

சிலேட்டும இராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

என்றபடி துள்ளிதுடிப்பான்-இவன்மெத்த-இணங்கிடா திருடன் காண் குணத்தினிலே :- ஒன்றிவன்முன் கெருடனென்பார் - கள்ளத்தனமாய் - ஒதுங்குவனே பதுங்கியிதங்கிடாமல் - நின்றயிதமிப்படியென்றுதெளிவுடன் - நீங்கள் கற்றுக்கொள்வீரிதை பாங்குடனே தான் - கன்றிதமாயோசித்துப்பார்ப்பீர் - இராமதேவர் - காணுவிதமின்னதெனதோணுதலுற்றேன்-தந்த. 22

## தேரையர்.

சிலேட்டும இராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

தோணுமிருபேரிலிவனும் - சடத்தில் வண்டன் - தொடர்ந்துபிடிக்கவென்முல் கடந்திலர்கள் - வேணுமென்றிவனே நலமாய் - பிடித்துக்கொள்ள வேண்டுவரார் தாண்டுவரார் ஆண்டு கொள்வரோ - காணவேதான் மறைந்து கொள்வான் - கள்ளபுருடன் - கட்டுக்கிசையாதகுலன் மட்டுக்கடங்கான - கோணுதலாய் பேதகஞ்செய்வான்- தேரையர்தான் - கோதகலசெய்விதத்தை வோதினனேயான்-தந்த. 23

## கமலமுனி.

சிலேட்டும இராசனின்குணத்தைக்கூறிய

தரு-இ-ம்-நொண்டிசந்தம்.

செய்துமேற் சிரசுற்றுனும் - தீயதுபற்றி - செலுத்தியேசன்னிபத்திவலித்திழுப்பான் - எய்குவான் கெற்பப்பனிபோல் வேர்

வையிட்டு ஏற்றியே சொறிந்துவிழ - மாற்றிவிழிப்பான் - மெய்ய துகனத்து நடுங்கி - மிரண்டிரண்டு - மேலதாய் படுத்தெழுந்து கோலங்கள் செய்வான் - பொய்யல்லவே யிந்தவிதங்கள் - செகத் தோர்க்கெல்லாம் - போன்றுநிற்கும் நாடிததூ ஆண்டுரைத்தனே தந்த. 24

இதுவுமது.

ஆண்டவகை யின்னதெனவே - யரிந்துணர்ந்தோம் - அம் மாவெனவே அலரிகம்மிகுரலும் - வேண்டினும் விட்டிடுவா னே - குடலில்பின்னி - விகடித்தேதான் வலித்து சகடஞ்செய்வா ன் - தீண்டிப்பிடித்தே யிழுக்கவும் - ஒருவருண்டோ - திகைக் கநடுங்கியேதான் பகைத்திடுவான் - மீண்டதிரு யீசனடியை - நமஸ்கரித்து-மிக்கவேகமல முனிமங்களஞ் சொன்னேன்-தந்த 25

நந்தீஸ்வரரியற்றிய

மனோரஞ்சிதலேகியம்.

தரு - இ-ம்-ஆநந்தக்களிப்பு.

மங்களாகவே சொல்வேன்-மனோ
 ரஞ்சிதலேகியந்தன்னையிப்போது
சங்கைதிரிகடுகேலஞ்
 சமர்த்தானலவங்கமரத்தைகடுக்காய்
பொங்கமதாஞ்சதகுப்பி-குணம்
 போன்றவிருவேலி செண்பகப்பூவும்
வங்கனமாவிலாமிச்சயஞ்-சுய
 வாய்விளங்கஞ் சிறுநாகப்பூபத்ரி-தன. 26

பத்திரிநெல்லிப் பருப்பும்-பகர்
 வானமதுரந்தனியாவுமிக்க
சித்திரவாசனையான-செழுஞ்
 சந்தனமாலவங்காதியுமொக்க
புத்தியுடனேயெடுத்து-நல்ல
 புண்ணியமென்றேவொருபலமாக
உத்தியதாகவறுத்து-இடித்
 துச்சிதமாக வடிதன்னைசெய்வீர்-தன 27

தன்னிலேசேர்க்கவேகேளுங்-தனி
 யாகியநெய்யதுபத்துப்பலந்தான்
உன்னியசட்டியிலூற்றி-உணர்
 வாகவேதீயை மெதுவாகமூட்டி

நன்னயமான பொடியை-தூவி
நன்ருய்கிளறுவீர் தென்புடனேதான்
பன்னியபத்திரமாக-பணி
வாகயிருந்து பரிவுடனேந்தாம்-தன 28

ஐந்துபலச்சுவைத் தேனும்-விட்டு
ஆனந்தசற்கரைபத்து பலமும்
விந்தையுடனென்ருய் மாட்டி-வெகு
வின்பதமாகவே லேகியங்கூடடி
பந்தயமாய்தீவராட்சி-பழம்
பாங்குடனே மூபலமதில்போட்டு
கந்தமணமதுவீசும்- மேல்
கற்கண்டுதூளிதில் சேர்த்துக்கொள்வீரே-தன 29

கொள்கையுடனே தானிந்த
குணமாகியலே கியந்தன்னேயேவாழ்த்து
வள்ளல் திருப்பதம்போற்றி-வகை
யாகவேநெல்லிக்காயினளவாய்
தள்ளிவிடுமென்றேநேய்கள்
தயவாகவேநித்தம் பத்திரமாக
வுள்ளபடியேதானுண்டால்-நிதம்
வுன்னியநோய் களகன்றிடுமேதான்-தன 30

தானிதில்நிற்குங் குணத்தை-தய
வாகவேசொல்லுவேன்- நற்குணமாக
மேனியிலுள்ள விரணம் - மிகு
வித்தாரமாகிய பித்தமயக்கம்
லானின்சுடரதால்கொண்ட-வகுப்
பானவனல்களசதியுமற்ற
யானினிநன்மையதாக-நடை
மேவியேதீரும் வியாதியைச்சொல்வேன்-தன 31

தீருவியாதியுமற்ற-திரை
யானபலவிதமேகக்கடுப்பும்
தேருதலில்லாபினத்த-லதி
சாரங்குலேநேய் பயித்தியரோகம்
நேரும்மிருமலும்மீளா-வாய்வு
நீடியேநின்றவிதம் விதமெல்லாம்
வாருமெனச்சொல்லிவிடாமல்-நோய்
வளராமல் நீங்கிசுகந்தருமப்பா-தன 32

சுகந்தரும் பத்தியங்கேளும் நல்ல
சுத்தஅவரை முருங்கையின்பிஞ்சும்
அகமகிழ்வாகிய நெய்யும்-பருப்
பானதோர் பாலுமசனமிட்டுண்பீர்
பகர்ந்திடப் போகுமேயானும்-இச்சா
பத்தியமாக பயிற்சிகள்செய்து
இகட்சியில்லாமல் மருந்தை நீங்கள்
இன்பமதாகவே யுண்பீர்கள் தாமே - தன 33

## அகஸ்தியமாமுனிவரியற்றிய

### சந்திரோதயலேகியம்

### விருத்தம்.

உண்பதற்குலகுவாகச் சொல்லக்கேளு-உயர்ந்ததொருசந்திரோதயலேகியத்தை, பண்புபெரும்நன்னாரிவேர் பலமேபத்து-பாங்கான அல்லியுடகிழங்கும்பத்து, தென்பானபன்னீர்ப்பூபலமும்ரெண்டு-திரமானமுசுமுசுக்கை வேர்பலமதொன்று, நண்ணயஞ்சேர் பொன்னிலாங் கண்ணிவேரு-நயன்றேதானெட்டு பலமிதனிற்சேரே. 34

சேர்த்தேதான் வுரலிலிட்டு யிடித்துக்கொண்டு - செவ்வையுள்ள பாண்டத்திலிதனைப்போட்டு, பார்த்துமெள்ளநல்லசலம் படிதான் விட்டு-பயற்சியுடன் அனல்தன்னைமூட்டியேதான் - கார்த்துமெள்ள வோருளக்காம் வடிதான்செய்து கனமானவடுப்பதனி லேற்றியே தான் நேர்ந்தவிதக்கடைமருந்தை சொல்லக்கேளு-நிலமையுடனே புகல்வேன்நினைவாய்த்தானே. 35

தானென்ற சீரகமும்வால்மிளகுயேலம்- தற்கோலம்அதிமதுரந் திரிபலாதி, நானென்றதிரிகடுகுதாளிசையுமப்பா - நலமானவரத்தையொடு குருசானிவோமம், கோனென்றலவங்கப்பூசாதிபத்ரி-குணமான கசகசாவுங்கூட்டியேதான், தேனென்றசரக்கை யொருநிரையதாக-தெளிவுடனேயோர்பலமாயெடுத்திடாயே. 36

எடுத்தேதான் சட்டியிட்டு வருத்துக்கொண்டு-இசையுடனே வடித்தெடுத்த சூரணத்தை, தொடுத்ததொரு கிஷாயமதிற்றாவிற்றாவி-துலங்கவேதீமூட்டி யெரித்தபின்பு, கடுத்தேதான் கரிகறுத்து பொங்கிடாமல்-கணக்குடனேசுண்டிவரும் பதத்தைக்கண்டு, அடுத்தேதானு வின் நெய்பலமோபத்து-அன்பானதேனதுவும் பலமும்யெட்டே. 37

எட்டுடனே சற்கரையும் பலந்தான்பத்து - இயல்பானதிவேராட்சிப்பலந்தான்பத்து, இட்டமுடனிவைகளெல்லாஞ் சேர்த்துக்கிண்டி - இன்பமுடன்லேகியத்தைப்பாகமாக திட்டமுடன்பீங்கா

னில் பதனம்பண்ணி-தீர்க்கமுடனிம் மருந்தையருந்தக்கேளு. கட்டளை யாய் தாணிக்காயளவதாக-கருணையுடனந்திசநதிகொண்டிடாயே. 38

கொணடிடவேதீருகிறனேயைக்கேளு-கொடியபித்தம் வயரெரிச் சல் சத்திக்குன்மம் வண்டகுணமேககனல் வாய்வுமந்தம்-வசதிகுணம் மேலெரிவுகைகால்காந்தல் அண்டிவரும்வெள்ளைமுதல்ளதிகதோஷம் அடங்காதநீரிழிவுயிருமல்வாந்தி. கண்டவுடனிவைகளெல்லாங் கடந்து போகும்-காதலுடனவிழ்தங்கண்டுண்பீர்தாமே. 39

## இதற்கு இச்சாபத்தியம்.

உண்டுவரும்போதினிலே பத்தியங்கேளு-உயர்வானகத்திரிக்காய்ப் பிஞ்சுமாகும், எண்ணமகிழ் வாயிருக்குமுருங்கைப்பிஞ்சாம்-எழில்சிற ந்தசிறுபயறு துவரையாகும், திண்ணமில்லா வெண்டக்காயவரைப் பிஞ்சும்-தெனிவானபொன்னிலாங்கிரையாகும். வண்ணமுரும்நெய்பா லும் காடையாகும்-வயணமுடன் புசிப்பீர்கள் வகையாத்தானே. 40

## மச்சமுனியார் இயற்றிய

### வாதகுடாரிலேகியம்

### விருத்தம்.

வகையானவாத குடாரிலேகியத்தை-வகுப்புடனே யின்னதென்று வசனிப்பேனயான், நகையாதேவால் மிளகுகாட்டாத்திப்பூ-நலமான கிராம்பி ஜெக்ககசகசாவும், பகையாதேசுக்குகஞ்சா மதனப்பூவும்-பண்ணபானசாதிக்காய் சாரபருப்பும், துகையாகச்சரியிடை நேர்பலம தொன்று-துணிவுடனே வுரலிலிட்டு யிடித்துச்சாடே. 41

சாடியேதான்மைபோலே யெடுத்துக்கொண்டு-சமுசியங்களெண் ணுமற்றிரமதாக நீடியேதான்பனம்வெல்லம் பலந்தான்பத்து நிதா னித்துபாண்டத்தில் நினைவாய்ப்போட்டு, வாடியேபோகாமல் பால்படியு மொன்று-வயணமுடனே கலந்துவடுப்பில்வைத்து, நாடியேமுன்மருந் தை யிதனிற்சேர்த்து-நலமாகக்கிளரியேதானெரித்திடாயே. 42

எரித்திடவே கண்டிவரும் பக்ததிலே தான்-யேற்கனவேபார்த்து மெள்ள யிரக்கிவைத்து சிரிக்காமல் கல்வத்தில்போட்டுநன்றாய்-சீக்கி ரத்தில்தானரைப்பாய் பிசினியைப்போல், திரத்துடனே, செய்துகொண் டால் பரிகாரியென்று- தினமும்நம்மைத் தானழைப்பார் உபசரித்து, கரத்தினிலேயிருந்தபொருளீந்துமெத்த - கருணையுடன்பகழந்திடுவார் கனமாய்த்தானே. 43

கனமானலேகியத்தை ஞேயாளருண்ண - களிச்சலொடுமிகு ந்தசன்னிசுரங்கள்மற்றும் இனமாகத்தேர்ந்தமூறை நாலாங்கச்சாசல்

இனியசிறக்கு டிந்தைகளின் மாந்தம்யாவும், நினைவுடனே குன்றி யிடைக்குடிக்கவே தான்-விதம்விதமாயெழும்புகின்ற பிணிகளெல்லாம், மனம்போலே நீங்கிவிடும்பத்தியமோயில்லை-மார்க்கமதாய்நடந்துகொள்ளத்திரம்பேராமே. 44

பிடிநாக்கீசரியற்றிய

மதனவசீகரலேகியம்.

நேரிசைவெண்பா,

பேரானசுக்கு பெருஞ்சீரகமதுரம்
காகிரும்பு கனமிளகு-நேரான
வால்மிளகுதிப்பிலியும் வருகுயத்திதிப்பிலியும்
சாலச்சிறுநாகப்பூதனிகடுக்காய்-யேலமுடன். 45

சாதிக்காபத்திரியுந் தனிலவங்கப்பட்டையுடன்
போதித்தபத்திரியும் பொற்கோஷ்டம்-வேதித்த
கொத்தமல்லிதாளீசங் கோலமுள்ளநெல்லிக்காய்
மற்றுமொருசீரகமும் அசுவகெந்தி-குற்றமிலா. 46

செண்பகப்பூவுடனே சேருங்கஸ்தூரி மஞ்சள்
பண்பாவுந்தற் கோலம்பருந்தாணி-கண்பரவும்
மானேகசகசாமற்று மொருதானேபின்
தேனேநீர்முள்ளி விறைசிறுவுளுந்து-கோனென்ற, 47

முள்ளிலவன் பிசினியுடன் மூர்க்கமுள்ளநிலப்பனையும்
வள்ளமுந்திரிப்பழமும் வரிசையுடன்-வுள்ளதெல்லாம்
வகைவகைக்கியொருநிறையாய் மாதேயிடித்தரித்து
துகைக்கிச்சரியாக செய்யக்கேள்- தகைத்து 48

கேளுமே ஆறுபலம் கஞ்சாவைத் தண்ணீரில்
நாளுமேவூரவைத்து நாடிடுவீர்-ஆளுமே
துஞ்சாமற் றண்ணீருநாலுபடியாமிதற்கு
அஞ்சாமலோர்படிபாக்கிடுவீர்- மிஞ்சாமல். 49

காச்சிடுவீர்தான் மிகவேகருணையுடனேதானும்
பாச்சியேகோணிகையில் பண்பாய்கேள்-மாட்சியுடன்
கிட்டிகட்டிதான் பிழிந்துகிளரிடவேசட்டியின்மேல்
வட்டிலுமேலித்த யிலமாயிருக்குங்-கெட்டியாய் 50

கையினல்தான் பிழிந்துகனத்ததொரு பீங்கானில்
மெய்யாகத் தண்ணியிலே வீசிவிடு- துய்ய
செகமனுக்களெல்லாஞ் சேர்த்துவருஞ்சற்கரைதான்
மிகவேமுப்பதுபலமும்மேன்மையதாய் புகழுடனே 51

நல்லபசுவின்பால் நலமுடனேவோர்படியாம்
மெல்லனவேதாம்விடுத்து மேலாக—சொல்லரிய
ஒன்ருகவேகலக்கி உயர்ந்தபதமாய்காச்சி
நன்ருகசூரணத்தைநயன்றெடுத்து- குன்ருமல் 52

வாகுடனே தூவிவயணமுட்ன் செய்யதுவும்
பாகுடனேசேர்க்கப்பதங்கேளும்- ஆகுமிது
பலந்தானிருபதுவும் பாங்குடனென்ருய்கலந்து
சலமேலிருமலிதைதான் பார்த்து-பெலமாக 53

மிக்கவேதான் காச்சிமிகுந்த பதங்கண்டுணர்ந்து
ஒக்கவேதான்றேனதுவும் வுணர்வுடனே-தக்கநிறை
விட்டிடுவீர்பத்துபலம் வினவுடனேமாலதனில்
ஒட்டியதுபோகாமலுத்தமமாய்-திட்டமுடன் 54

கிளரிவிடுவீர் சேர்த்து கெதிபெறவே லேகியத்தை
தளர்வுபடாதேபடிக்குத் தானிசைப்பீர்-களங்கமர
பீங்கானிற்ருன் வழித்துபெருடையுடன் வைத்ததனை
தூங்காமற் பூசைசெய்வீர் துயரகலும்-தாங்கிடவே. 55

நித்தமுமரைக்களஞ் சிநோர்நிறையாய்க்கால்களஞ்சி
சுத்தமாயுண்டவற்குச் சுகமாகும்-மெத்தனவே
காயம்பெலக்குங்கவலையது நீக்கிவிடும்
சேயரைப்போல் நன்ருய்சிரந்திருப்பார் நேயமதாய் 56

போசனமும்பாலும் புசித்தபின்பு யிம்மருந்தை
தேசரவேதின்று விடுதினந்தினந்தான்-நேசமுடன்
மஸ்தகத்தில் மும்மதந்தான்மாவேகமாய்பொழியும்
அஸ்தடடதாலேபிடிக்கவாகாது-சொஸ்தமதாம் 57

மோகமுண்டாங்கன்னியர்மேல் முழுதும்பிரியமுண்டாம்
தாகமுண்டாம்லீலையின்மேல்தயவுமுண்டாங்-வேகதிடன்
மெய்யும்மிகசிவந்து மேலானநாரியற்கு
ஐயமுறவேமனது ஆர்வரிக்குஞ்-செய்யபெல 58

முறுக்கேறியே மிகுந்தமுயற்சி தருமேவெகுவாய்
தருக்கமிலை இம்மருந்தைதான் புகழ்வீர்-உருக்கமுடன்
ஆராதாரவீடு அன்பத்தோரட்சரமும்
மாராதயோகம் வழிப்படுமாம்-நேராக 59

சந்திரமண்டல முந்தாக்கியேவாசியினைல்
மந்திரத்தில் ஸ்தம்பிக்கும் வகையைக்கேள்-தந்திரமாய்
மூலாதாரந்துடங்கிமும் மண்டலங்கடந்து
மேலாதாரவீட்டை விரவிநிற்கும்-வாலையமாய் 60

நதனருளுண்டாம் நம்மன துநற்றிடமாம்
மா தவர்களாசீர்வா தமுண்டாம்-மேதமிலே
நித்தங்குணந்தருமாம் நிலமையுடன் கொண்டவர்க்கு
மெத்தப்புகழ்பெறுவாமேதினியில்கர்த்தனருள் 61

## தன்வந்திரியாரியற்றிய

### ஜெயவல்லாதிலேகியம்.

### விருத்தம்.

கத்தனைத்தான் வணங்கிமிகக்கருணைகூர்ந்து-களிப்புடனே சொல்லுகிறேன் கேளுகேளு, சித்தரெனப்பேர்படைத்தோமுலகுதன்னில்-சிலகுணமுள்ள யிந்தபதினெண்பேர்கள், புத்திமிகும் நந்திகுருமுனிவர் மெச்ச-புகலரியநாதாந்தப் பெரியோர்மெச்ச, எத்திசையிலிருப்பவர் கொண்டாடவேதான்-எற்றவேன்லேகியத்தைச் சாற்றுவேனே. 62

## மருந்துவகைவிருத்தம்.

சாற்றுவேன் வெள்ளருகுசிவனார்வேமபு-சங்குப்பித்தேங்காயின் முதிர்ந்தநெத்து, போற்றியேதான் கருடனமுக்குநாங்கிழங்குபொருந் திடவேகுமுளன்வேர்விளாத்திசீந்தல், மாற்றுதலில்லாதவெட்பாலே யோடு-மதிகசுயமுளகரணையானவேரும், நாற்றிசையோர்க்கின்பமுறுஞ் செங்கத்தாரி-நயன்றகுண்டுமணிவேர்வோர்பலமாய்வாங்கே. 63

வாங்குவாய்சீர் முள்ளிகருஞ்சீரகமும்-வதிகபிரப்பன் கிழங்குஞ் சித்ரமூலம், தாங்குநற்சீரகமுங் கரப்பான்படை-தயவானபூதவிருட்சத்தின்பட்டை, தீங்கில்லாகெந்தகமுந் துருசுதுத்தம். திரமாகசுத்தி செய்த சூதமோடு, நீங்காமலிவைகளெல்லாம் பலமதாக-நிறுத்திடுவாய் பனம்வெட்டுவீசையொன்றே. 64

ஒன்றதுதான்படி யெள்ளுமிதனிற்சேர்த்து - ஒழுங்கான பரங்கி பட்டை பலந்தானைந்து, குன்றுமல்செங்கொட்டை அன்பதாகும் குணமாகவொன்றாகக் கூட்டியேதான், மன்றாடியீசர்பதம் வணங்கிப் போற்றி-மதிமயக்கமில்லாமலுரலில்போட்டு, நன்றாக இருப்புலக்கையா லிடித்து-நலம்பெறவேமைபோலே ஆக்கிடாயே. 65

ஆக்கியபின் லேகியத்தைவயணமாக - அன்பாகப்பாண்டத்தில் வைத்துமூடி, யோக்கியமாய் பாக்களவுஉண்ணபோது-யொடுங்காத சூலையதுங்கிறந்திபுண்கள், தாக்கியதோர்முடக்குமுதல்கடுப்புனூரல், தேக்கியதோர் சொரிசிரங்கு புழுக்கள்வெட்டு-தெளிவிலாக்குட்டநோய் தீருந்தானே. 66

தீருமப்பாபொத்துகடி வெடித்தபுண்கள் - துலையாதவரட்சியொடு கொறுக்கைதானும், மாருமப்பாசனத்த அத்திக்காய்கிரந்தி-பாருமப்பா கொண்டிடவே யிந்தநோய்கள், பறந்துவிடும் பட்சியைப்போல் பார்க்கும்போது, தேருமப்பாசடத்தினுடபிணிகளெல்லாம்- செப்பினேனி வையாவுமினிதமாமே 67

## பத்தியம்விருத்தம்

இனிதாகப் பத்தியந்தான் சொல்லக்கேளீர்-இசைவான துவரையுடபயருமாகும், கனிவானகத்திரிக்காய் பிஞ்சுமாகும் கனத்ததொரு முருங்கையுடப்பிஞ்சுமாகும், முனிவானப்பாசியுடப்பயருமாகும் முயற்சியுள்ள சுண்டக்காய்வற்றலாகும், தனியானவரைக்கீரை ஆவின்பாலாகும்-சதிரானவெள்ளாடுவிரூல்மீனுமே. 68

ஆகுமே குறவைமீனதிகமாகும்-அன்பாகவிதுகளெல்லாமுண்ணலாகும்.பாகுமேநெய்யாகும் மோருமாகும்-பதராயல் சித்தாமணக்கெண்ணெய் முழுகலாகும், ஏகுமென்றசொன்னபடி யிவைகளெல்லாம்-இசையாதுவிசையாது விணக்கமாக போகுமேபத்தியத்தி லனந்தநோய்கள்-பொருமையுடனரைப்பிட்டு ஸ்நாணஞ்செய்யே. 69

செய்தபின்பு பெண்ணின் மேலாசையாகா-சிந்தைதனைபத்தியத்தில் செலுத்தவேண்டும். மயல்கொண்டுநெருங்கிமெள்ளப் பேசாலாகா மகாபதனமாமவே தானிருக்கவேண்டும். ஐபருடப்பாதமதைப் பணிந்துவாழ்த்தி-ஆனந்தமாய் கிருபையினல் அருளைப்பெற்று, மெய்யெனவே அவிழ்தமதைவுண்டபேர்க்கு-மென்மேலுமனம கிட்சியாகுந்தானே

## புலத்தியமகாமுனிவரியபற்றிய
### மதனலங்கிர்தலேகியம்.
### கலி-சந்தவிருத்தம்.

மதனலங்கிர்தலேகியந்தனை மாவிதத்துடன்சொல்வேன்
மதுரலிகிதமோடி சைவதாகியவனசமலரிணைப் போலவே
வதனலங்கிர்தசாலமி சரியும்வதிதசுயதிருநிலப்பனே
வசிகரக்குணமதுரசாரப்பருப்பினெக்ககிரும்பதும் 71

பதனலங்கிர்த போஸ்தகாயொடுபன்பெறும் விலாமிச்சையும்
பகரிதத்துயர் பூமிசற்கரையின் கிழங்கொடுமுந்திரி
நிதனலங்கிர்தநாட்டு மூலநிலாவரைமலர்பத்திரி
நினிதமென்புகழ்பன்னீர் மொக்குடன்னேர்மையானகுல்கந்ததே

சந்தமேமிகுங்களிபெரட்டையுங் கருதிடுங்கருஞ்சீரகம்
கருணைபெறநல்சாதிக்காய்துகாணயிவையெலாமோர்பலம்
முந்தவேயிடிவடி கொளிதுபொடியாகவே செய்தானபின்
முசிதமோகனமதாகவேவபினியானதும்மொருகால்பலம் 73

விங்தையாகவே யிருவதுப்பலம் நெய்யதுக்குணமானதும்
வியல்போடறுபலங்தேனுமிக்கனவிட்டிடும்பொடியானதில்
சுந்தரத்துடனிதனை சட்டியில்சுகுணமாகவேசேர்த்துபின்
சுபசபாசெனதீயைமூட்டியேசெபதபத்துடனேற்றிடே. 74

## கலிவிருத்தம்.

ஏற்றிமிக்கனப்பாகமதாகவே
பேற்றிநற்குணலே கியந்தன்னையே
சாற்றினப்படிக்கிண்டிகிளறியே
தேற்றிடுமிதைத் திட்டமதாகவே. 75

திட்டமாகவெடுத்து பீங்காணிலே
சட்டமாகவடைத்துப் பதனமாய்
மட்டமாய்நெல்லிக்கா யுனளவதாய்
கட்டளைப்படியுண்டு சுவைத்திடே. 76

சுவைத்தநற்கே மிகுபலமாகுமாம்
நவைப்படும்மொழியான விதைமாம்
என்வப்பிணிமுதலானது சாந்தமாம்
கவைக்கனமலர்மா மரையென்பரே. 77

எனபதிந்த குணகுணங்கண்டுளம்
முன்பதாகத் தெரிந்துயுணருவார்
அன்பொடிசுகமாகவிருக்குமாம்
தென்புசூழ்ந்து தெளிதலுண்டாக்குமே. 78

உண்டபோது நற்தாதுவிளைந்திடும்
கண்டபித்தங் கபமுதலானதும்
சண்லடயிடடும் வாய்வினிறச்சலும்
தொண்டைநோய் முதலானதுதீருமே. 79

தீருமேகண்ணின்னோயின் சிவப்பதும்
ஆருமேகுடலானபிரட்டலும்
வேறுவேறெனவெண்ணிப்பதுங்கிடும்
பாருமின்னம் பகருவேன்யானுமே. 80

மேகவாய்வு வெகுவிதசத்தியுங்
தாகமாகவிருக்குங் குணங்களும்
மோகமாகதொடுக்குங்கவனமும்
பாகமாகவேவுண்ணநடுங்குமே, 81

நடுநடுங்கிடும் பித்தபினத்தலும்
விடுகனென்றுவிரட்டும்வெதுப்பகை
கடுகடுத்திடும் மாசனனேயையும்
முடுமுடுக்கிடும் மூற்கமதாகவே. 82

மூற்கமான கனவுநினைவதும்
தீர்கமுற்றுத்தெளிந்து யுகந்திடும்
ஆற்குமிவ்வித லேகியமாகுமாம்
ஏற்குமேற்கும் மிதுசுளுவானதே. 83

பத்தியம்-கலிவிருத்தம்.

சுலபமாகவே செப்பிடும்பத்தியம்
வலுவிரர்து வெகுவிதமாகவே
சொலுமிறைப்படி தீரும்வியாதிகள்
பலுகவேசுகபாகமீதானதே. 84

இதுவுமது

தானிதற்குவோர்பத்தியமோயிலை
மேனிமிக்கசிறக்கவிடுக்குமாம்
யேணிபோலிணை மாமலைசஞ்சிவி
கோணிடாதிது மூலிகளானதே. 85

மூலியானது சாந்தகுணந்தரும்
மேலினுக்கு விசைந்தகுளிர்ச்சியாம்
பாலினுக்குள்ள முக்குணம்போலவே
கோலினலல்லோ காண்பதுநல்லதே. 86

நல்லலேகியஞ் சொல்லினேன் யானிதோ
மெல்லமெய்லவிருந்து போலுண்பீரால்
கல்லகல்லக்கசடறும் போலவாம்
தொல்லையெல்லாந் துலைந்ததுப்போகுமே 87

புசிண்டரியற்றிய
இராமபாணலேகியம்.
விருத்தம்.

துலையாதவல்பிணிகள் தீருதற்கு - சொல்லுகிறேன் ராமபாணலேகியத்தை அலையாதேபலவிதமாய் மயங்கியேதான் - அப்பனே இம்மருந்தைசெய்யவேணும் நிலையானகாரியத்தை யறியவேணும்-நிதானித்துபார்த்து மெள்ளத்தெளியவேணும், கலையாமல்கியானத்தின் னுருக்கம்வேணும்-கண்டுகண்டுதெரியே நீருகதிப்பாரே. 88

## லேகியவரலாறு.

பாரென்ற பூமிசற்கறைகிழங்கு
பண்பாகபலமதுதான் நாற்பதாகும்
தேரென்றபடியேதான் பார்த்துவாங்கி
திரமாகக்காசதுபோல் நருக்கியேதான்
நேரென்றகதிரோன் முன்னுலரவைத்து
நினைவாகபத்திரமாய் நிதானித்தேதான்
சேரென்றவுரலிலிட்டு பெலனதாக
செவ்வையா யிடித்ததனைமாவதாக்கே. 89

தாக்கப்பாயிருப் புல்க்கைபதனுலாட்டி
தயவாகவடிகட்டியெடுத்துக்கொண்டு
தூக்கப்பாயிதில் சேர்க்கவித்துக்கேளு
சொகுசான சூரிவித்துநெல்லிவித்து
ஆக்கப்பாமுன்னைவித்துகஞ்சாவித்து
அழகானஆலம்வித்து புங்கம்வித்து
பாக்கப்பாகடிக்கு முன்னேயிவைகள் தன்னை
பலதினுசுசேராமல் பரிந்துவாங்கே. 90

பரிவான ஆவாரைநீர்முள்ளிவித்து
பயிற்சியுள்ள நெருஞ்சிவித்து அத்திவித்து
குரியானவசலைவித்து இதுகளெல்லாம்
குணமுடனே வோர்பலமாய் நிருத்தெடுத்து
சரியாகபொன்னிரம்போல் வருத்தெடுத்து
சதிராகமுன் பொடியில்சேர்த்திடித்து
நெரியாகத்தேனதுவும் பலம்பத்தாகும்
நேர்மையாய் விட்டதனைப் பிசைத்திடாயே. 91

## கலிவிருத்தம்.

பிசைந்தப்பாகதை சட்டியிலிட்டு
அசைந்திடாம லடுப்பினிலேற்றிடு
இசைந்திடப்படியேற்கையாய் கிண்டிடு
தசைந்திடா திதகவனவொக்குமே. 92

ஒக்கவே தீவராட்சிப்பலமைந்து
கக்கிடாமல்கலந்து கணக்குடன்
சிக்கசற்கறைவொன் பதிடைப்பலம்
பக்குவமிதுயான் மிகசொன்னதே. 93

## விருத்தம்.

சொன்னபடி இவைகளெல்லா மொன்றதாக்கி
சுரண்டிமெள்ள பீங்கானில் வைத்துக்கொண்டு

வன்னமுள்ள சாம்பிராணிதூபமிட்டு
வணங்கிடுவாயம் மணியைவயணமாக
கன்னலென வொருகளஞ்சிகளிப்பதாக
கனிவுடனே இருப்போதுவுண்பீராகில்
நன்னயமாய் நயனமது துலங்கிகாட்டும்
நாடாதுசூடனைத்தும் நசுண்டுப்போமே. 94

போக்குமப்பா கைகாலினசதிமற்ற
புகையானமேகஜல முட்கொள்ளாது
ஆக்கையது பெலமாகுந் தாதுண்டாக்கி
அகலாதுவிந்ததனை மேலதாக்கும்
நீக்குமப்பா மூலநோய்வயரெரிச்சல்
நீரழிவுகுத்திருமல் பித்தரோகம்
காக்குமப்பா யிந்தவிதநோய்களைத்தான்
தவிராமல் சாதிக்குஞ் செய்திடாயே. 95

(இதுக்குபத்தியமில்லை.)

கருவூராரியற்றிய

ஆரோக்கியமஸ்துகா லேகியத்தின் சிறப்பு

வெண்பா

செய்யவேவாரோக்ய சீர்சிறந்தலேகியத்தை
உய்யவேசொல்லுகிறேன் வுச்சிதமாய்-துய்யதிரு
மஸ்துக்காவென்று மாநிலத்தோருண்ண வேதான்
சொஸ்தமிதுவாக்குமெனச்சொல் 96

சொல்லுவேனிப்பொழுது சூட்சமதை யின்னதென்று
வெல்லுவேன் மேர்பிணிமேற் கொள்ளாமல்
புகழுமகிட்சியுண்டாம் பொன்மயம்போலென்னாளும்
திகழுந் தினந்தினந்தான் றென்பு 97

தென்புடனேஞானத் திருவருளையுச்சரித்து
அன்புடனே நித்தம் அனுசரிப்பீர்-முன்றுணையாம்
வாசிமலரேற்றிவணக்கமுடன் கைற்றொழுது
நேசிமலரேற்றிடுவீர்நிதம். 98

நிதமுனக்குட்தேர்ந்து நேசமுடனேயிருந்தால்
விதவிதங்களெல்லாம் விளங்கிடுமாம்-பதனமதாய்
மருந்துமுதல் கைவரிசைமாதவமாய் நேர்படுத்தி
திருந்தமுதல்செய்வாய் தினம் 99

ஞானமார்க்க விருத்தம்.

வானந்தஞானவழி மார்க்கந்தன்னை
வசிகரமாயுச் சரித்துமனதிற்கொள்ளு

தானந்தசிங்குவைத்தானங்கென்றேற்றி
　　தப்பாமல் வாழ்க்கைபெற்று சார்ந்துநின்று
மோனந்தந்தனிற்சிறந்து யரிவைக்கொண்டு
　　மூட்டுவாய்சிலம்பொலியை முழுதுமேதான்
ஞானந்தப்பிரகாசந் தோன்றுந்தோன்றும்
　　நமனேதுநமக்குள்ளே நலமதென்றே. 100

## லேகியபாகம்.

தேறுனபரங்கிபட்டை யிரண்டுபத்து
　　தெளிவான நெல்லிவற்றல்பலமதொன்று
கோனுனதிப் பிலியும்பலமதொன்று
　　குணமான கொத்தமல்லிபலமதொன்று
பானுசிறுதேக்குபலமதொன்று
　　பரிவான லவங்கப்பூபலமதொன்று
தானுனசித்தரத்தை பலமதொன்று
　　தனியானவாய் விளங்கம்பலமதொன்றே. 101

பலமிதுதானென்றுக வருத்திடித்து
　　பாகமாய்வடிக்கட்டி வைத்தப்பாலே
நலமானநெய்பலந்தான் முப்பதாகும்
　　நன்றாகசட்டிதனிலூற்றியேதான்
குணமானசூரணத்தைத் தூவித்தூவி
　　குன்றாமல் மெழுகுபதமாய்ப் பிசைந்து
பெலபாகபிரபலிக்கவயணங்கண்டு
　　பிரியமுடன் மெதுவாகயெரித்திடாயே. 102

எரித்துவிடுமெதுவாகக் காங்கையேற
　　எட்டியனல் பிடிக்காமலிருந்து பாரு
கரிகறுத்துப்போகாமல் பதனமாய்கிண்டு
　　கனகசெம்பொன்னிரமாக வருகும்போது
பரிவானதேனதுவும் படியொன்றாற்றி
　　பதனமதாய் பாற்றுமெள்ளபண்பாய்மீயும்
உரிசைபெறப் பாண்டமதை யிரக்கியேதான்
　　உயர்ந்ததொரு பீங்கானில் வைத்துமூடே. 103

## பூசைவணக்கம் விருத்தம்.

மூடியபின்னே வேத்தியஞ்செய்து நீதான்
　　முயற்சியுள்ள ஈசனடிதெண்டஞ்செய்து
வாடியேபோகாமல் மனதைத்தேற்றி
　　வருந்துவாயெனேக் காக்கவேணுமென்று

நாடியேநின்றவர்க்கு நற்கருணையாகும்
நாதாந்த நவநிலைமைநயன்றுகாணும்
தேடினால் கருத்துடனே தெளிவுண்டாகும்
தெகிட்டாத தெய்வமொழி சிலாக்கியந்தானே. 104

## கலிவிருத்தம்.

சீர்த்துவத்துடனே சொன்னலேகியம்
ஏர்த்திடக்குணம்யான் மிகச்சொல்லுவேன்
பார்த்திடப்புன்னைக் காயினளவதாய்
கோர்த்தநோய்கட்கிடுவீர்கள் சீலமே 105

## வேறுவிருத்தம்.

சீலமில்லாதெளிந்த தொருரோகபாகம்
தீராதவாத பித்தபயித்தியரோகம்
காலனைப்போ லுரவாடுமேகசூலை
கடிவிஷமும் புண்புறைகள் கனத்தநோய்கள்
சாலவேதானகன்று விடுந்தா துண்டார்க்கி
தவறாதுதவறாது மருந்தின்போக்கு
கோலமுள்ளக் குருவருளால் கொண்டபேர்க்கு
கோதகலுமென்னாளுந் தெளிவுண்டாமே. 106

## இதற்குபத்தியம்

வதளிவுடனே பத்தியததை சொல்லக்கேளு
தீர்க்கமுள்ள யிச்சாபத்தியமதாகும்
பழியாதேயவிழ்தமதை கெறுவமீறி
பரிகாசத்தந்திரத்தா லொன்றுமாகா
தொழிலானபாகமிது மெவர்க்குமாகும்
தொல்லுலகின் ஞேயதனைத்தீர்ப்பதற்கு
மொழியானமொழியனந்த காதையுண்டு
முக்குற்றங்கடந்தவர்கள் பெரியோர்தாமே. 107

## திருமூலரியற்றிய

### புஜபெலதிருமந்திராதி லேகியம்.

### கொச்சகம்

தாரணியிலே யிருக்கும்தபோதனர்களானவர்கள்
பூரணவிலாசமென யொருதினிதமும் புகழ்வர்
காரணத்தையின்னதென்று கண்டுகளிப்பாருகந்து
வாரணத்தின் ஞகமத்தோர் வாழ்த்திசொல்வர்சூட்சமதே. 108

## சந்தக்கலிவிருத்தம்.

சூட்சமாகவே சொல்லுவேன் திருமந்த்ரலேகியமானதை சுருதி முறையிது இஞ்சியெண்பலங் தோலுரித்துபின் காசிபோல், மாட்சியாகவே நெய்யைசட்டியில் வார்த்திடுப் பலமூன்றுமே மர்த்தனப்பட சித்தமகிழவே மாட்டிமாட்டி வருத்திடு, மீட்சி பெறயிடிகளிப்பதாகவே மிக்கரெண்டரை நாழிகை, மெத்தனத் துடனெக்க வுரவுரமிலகபொன்னனிபோல், பூட்சியத்துடனத்தி திப்பிலிபொருதும்மதுர மோடேலமும், புனிதமுற சிறுநாகமல ரோடு புகழுகோஷ்டமீதானபின். 109

## வேறுவிருத்தம்.

பின்னமில்லா சீரகம்பெருமையுள்ள தாளிசம்
நன்னயக்கிராம்புசாதிக்கா யுரவதாகவே
வின்னமாங்குறுங்கடுக்காய் வானதோர்சரக்கெலாம்
மன்னவர்களிப்பதா வாங்குவீர் நேரோர்பலம். 110

வாங்கியேவருத்திடித்து வாழ்த்திவடிகட்டில்தயே
தாங்கியேமுன்னுன் தில்யவதாகசோத்திடு
ஓங்கியே தேனுனதொக்க ஒன்றதாகக்கூட்டு
ஏங்கியே விளைந்தநோய்கட் கின்பமாய்கொடுத்திடே. 111

மாயமாம் வயிற்றிரச்சல் மாகுகின்றதோஷமும்
காயமான சேத்துமங்க ளிப்பிலதவாய்வாய்வதும்
நோயதானவக்கினி க்ஷயங்கள் காசமந்தமும்
நேயமாகவுண்டிட நீங்குமிதுநல்லதே. 112

நல்லதானசஞ்சீவி நமக்குமெத்தவுத்தமம்
வல்லமை மருந்தினத்தைமா பெருமையாகவே
அல்லத்தீரபத்திய மில்லாமலுண்டு தேறுவீர்
சொல்லுவோமிரண்டுமிரண்டு வேளைதொந்தமாகவுன்பதே. 113

தொந்தமாக வுண்டபோது தோன்றுமே குணங்கள்தான்
வந்தநோய்கள் யாவுமேவழிவிலகிபோய்விடும்
சிந்தைதப்பி பெண்ணின்மேலாசைவைத்து கூடிடா
முந்தவேவான் நாற்பதுநாளாகின பின்போக்யமே. 114

## வெண்பா.

யோக்கியமாய் கொண்டால் நுதிங்காதுமேனியது
பாக்கியங்களாகிப் பலிதமதாய் - ஆக்கிவிடும்
பிசகாமல்கைமருந்தை பிரபலிக்கவுண்பவர்க்கு
வசமாகுமென்பார்-மதி. 115

## சட்டமுனியாரியற்றிய

### சூரியப்பிரகாசலேகியம்.

#### விருத்தம்.

மதிமிகுத்த சூரியப்பிரகாசயின்ப
　மனோதயையின் லேகியத்தை தவகுக்கக்கேளு
நிதிமிகுத்தப் பொருளிதுவாமெனச் சொல்வார்கள்
　நீணிலத்தில் பிணியாளர்பிழைக்கவேதான்
துதிமிகுந்த அவிழ்தண்சீவியீதாகும்
　துலக்கமுடன் மருந்தினத்தைப்புகலுவேன்யான்
பதிமிகுத்தமலை மூலியரிந்தபேர்க்கு
　பாங்கானயினங்கள்மிகத்தெரிவர்தாமே. 116

இனமானசுக்குடனே சோம்புமோடி
　இசையான லவங்மொடுதாணிக்காயும்
கனமானவால்மிளகு கஸ்தூரிமஞ்சள்
　கந்தமிகும் அதிமதுரம் சதாப்பூவொடு
தினமேவும் யேலமுடன் கருஞ்சீரகமும்
　திகைக்காம லவங்கபட்டை சிறுநாகப்பூ
வனமான மருந்திதனை நன்றாய்ப்பார்த்து
　வாங்கிடுவாய வகைக்கிவொருபலமதாமே. 117

ஒருபலமாய் நிறுத்தெடுத்து வருத்துநன்றாய்
　ஒன்றாகயிடித்திதனை வடிதான்கட்டி
கருவானசூரணத்தில் சேர்க்கக்கேளு
　களிக்கவேநெய்யதுவும் பலந்தான்பத்து
குருகாமல்தேனதுவும் பலம்பத்தாகும்
　குலாவியே வொருமனதாய் கலந்துகொண்டு
வுருவாகிலேகியமாய் செய்துநல்ல
　வுண்மையுடன் றானெடுத்து பதனம்பண்ணே. 118

பண்ணியதோர் லேகியத்தை நெல்லிக்காயின்
　பிரமாண முண்டிடவே தீரும்நோய்கள்
புண்ணான வயற்றுவலி சோகைபித்தம்
　பொருக்கா தமண்டையிடி கிரிமிவாய்வு
எண்ணாததலைசுழட்டில் மயக்கங்காந்தல்
　யெழும்புகின்ற விடப்புருதிகபங்கள்மற்றும்
ஒண்ணானமலங்கட்டு கிரந்திமேகம்
　ஒதுங்கிதயபோகுமப்பா வுருதிதானே. 119

உருதியுள்ள பத்தியந்தானுட்டிறச்சியாகும்
உத்தமொரு நெய்யாகும் பாலுமாகும்
பொருந்திடவே வுலர்ந்தமொருவோலைவாளை
பொசிப்பதற்கு ஆடா னுங்கிழங்காகும்
திருத்தமுள்ள சிருபருப்புத்துவரையாகும்
தெளிவான முருங்கைய த்திக்காயுமாகும்
மருவிதத்தின் பண்டங்ககாளா தப்பா
மகாபதனமாகவேதான் செய்குவாயே. 120

எதுகையாம் பத்தியத்தை தெரிந்துசொன்னேன்
இயன்றபடி செய்ததினல் குணமொன்றில்லை
பொதுவாக செப்புகிற வசனமெல்லாம்
புத்தியுடன்வர்சித்து யரியவேணும்
மதுவானலகரியிலே மயங்கவேண்டாம்
மாதருடசுஞ்சார மகலத்தள்ளு
விதுருயணேயாய் நல்ல யெண்ணேசீய்க்காயிட்டு
வென்னீரில் முழிகிவந்தால் விளக்கந்தானே. 121

## கொங்கணரியற்றிய

### சௌபாக்கிய பன்னீர்ப்பூலேகியம்.

வண்ணம் - தரு.

தானதனந்தன - தனதானதந்ததனு
தனதானதந்தன தானதந்தன தானதந்தன
தானதந்தனனு.

மைந்தமிழோர் புகழுபன்னீர் பூவின் லேகியத்தை
பகர்வாகவே சொல்லுவேன் முறைப்படியாகவே
பிணிதீரவேவேண்டி. 122

சிந்தைதெளிந்துணர மலர்சேரொருவீசையாம்
செழும்பாகமாய் முழுயோகமாய் வழுவாததாய்-
நன்னுரியின்வேரதும். 123

விந்தையதாகவே தான்விலாமிச்சையும் பட்சமுடன்
விரசான நற்படினக்குணமிகுமே திருச்சுய
காசியுமொக்கன். 124

கந்தமதான ஜெயசந்தனுதியுந்திரமாய்
கருவானதாய்குருபாகமாய்திரமானதாய்பற்பாடகமானது
இதுவிதமூலிகையோர் வீசையதாகுமே. 125

மூந்தவோர் பாண்டமதில் ஜலமான தெண்படியும்-
முறைபாகமாய் நிறையேகமாய் குறையாததாய்
விட்டானந்தமாகவே. 126

சந்ததமும்புகள் சரியான முலிகையை
சனுவாகவே யனுபோகமாய் மனுகாணவே
வுரலானதிலேயிடி. 127

பந்தமமாமெனச் சொல்லதிதாக மிக்கனவே
பரிவாயெடுத்திதுமேல் சதைத்திடவோர்மிகத்திட
பாகமதாக. 128

வந்தனமே மிகுபால்வழிபாக மோதிரமாம்
வகையாமிகுபனதாக சொற்கனயூகைநற்
குணமானவிலாசம் யெரித்திரைகால்படிரோக்குவீர்தாமே. 129

மெத்தசிரப்புள்ளதாய் நிறையானபாகமதாய்
வியல்தானதாய் சுயமேலதாய் தயையானதாம்
இணையானசரக்கது. 130

குற்றமில்லாததிரு-சுக்குகொத்த வரத்தை
குரியானதாளிசை யேலயந்திப்பிலிபோரத்தையுஞ்
சாதிபத்திரியும். 131

பற்றர்வான நல்மிளகோமஞ் சீரகமும்
பதிவானதிப்பிலிசாதிக்காயுடனே கசகசா
மாஞ்சியுஞ்சிங்கியும். 132

உற்றசன்ன லவங்கப்பட்டை யேலக்காயுடனே
உயரானதோர்கருஞ் சீரகமுடனேபலமதுவாயெடுத்திதை
எடுத்துவருத்து சூரணமதாக்கே. 133

தார்தலத்தோரருந்துந் தனியானமுந்திரிகை
தளராதெனச்சொல்லுமே பருப்பதுநாற்பதுபலமாக
துகையுடன். 134

ஆர்க்குமினிதனதாம முகானவாதுமையும்
அரிதானநற்பருப் பானதும்பலமே யெடுவது நாற்பது
காணும். 135

சேர்ந்ததொருயிணையாய் கல்வமானதில் விடுத்து
சிதாரமலெஜலமான தேவிட்டாட்டியேயதின்
பாலையெடுத்திடு, 136

தேர்ந்திடவுமியல்பாய் தேன்பாகதுபோலும்
தெளிவாயெடுத்து முன்னுன நீரினிலேசலக்கிப்
பிழிந்துவழித்திடு; 137

வெண்மையான சீலையில்வடிகட்டி
இவ்விதமா யெடுப்பீர்கள் தாமே.

## விருத்தம்.

இவ்விதமாய் செய்தபின்போர்பாகங்கேளு
இணையான கசகசாபலமோபத்து
ஒவ்விடவே முன்போலே யரைத்தரைத்து
ஒழுங்காபலமெடுத்துமுன்போல்சேர்த்து
செவ்வியேகிஷாயமொன்றுபால்தானென்று
சேர்த்தொரு பாண்டத்திலூற்றியேதான்
கவ்வியேயனல்மூட்டி மெதுகாங்கையாக
கதிர்போலே தானெடுத்து களிக்கப்பாரே. 138

களிபோலேயாவதற்கு சூரணத்தை
கடுகவேகொஞ்சங்கொஞ்சமகாத் தூவி
தெளிவாகத் தெளிவாகச் சேர்த்துகிண்டு
திரமைதப்பி செய்வீரால் பழியேயில்லை
ஒளிபோலே மின்னுமப்பா ரசத்தின்பாகு
ஓதுதற்கு யென்னாலே முடியாதப்பா
புனிபோலே யாகாமல் தீர்க்கமாக
புத்தியுடன்செய்வதற்கு புண்யந்தானே. 139

புண்ணியபேறெடுப்பதற்கு சொல்லக்கேளு
பூதலத்தில் தர்மீகமனமேவேணும்
எண்ணவொண்ணு கடவுள்தன் வணக்கம்வேணும்
யெப்போதும் தானதர்மநெறியும்வேணும்
திண்ணமது தீர்வதர்க்கு வுருதிவேணும்
தினந்தினந்தான் பூசையதில்நிலைக்கவேணும்
அண்ணலே நமக்கெல்லாந் துணைதான்காப்பு
அவையடக்க மாயிருந்தால்ஆனந்தமாமே. 140

ஆனந்தகற்கண்டு பலந்தான்பத்து
அமுர்தமுள்ள சற்கறையும் முப்பதாகும்
தேனதிலே படியரைதான் விட்டொன்றாக
திரட்டிமெள்ள லேகியத்தை பதனமாக்கி
தானதிலே நெய்யுமொருவீசைவிட்டு
தளராமல்செய்து பீங்கானில்வைத்து
வானவனைற் றெழுது மிகத்தூபங்காட்டி
வருந்தியே லேகியத்தையுண்ணுவாயே. 141

உண்ணயிலே தீருகிறவியாதியைக்கேள்
ஒடுங்காதமதிமேகம் நெடுநாள்சூடு
எண்ணவொண்ணு நீரழிவுபெலயீனந்தான்
யேதமிலாக்கை காலின்னெரிச்சல்தீரும்

பண்ணுனவாத பித்தந்தணிவதாகும்
பசியெடுக்குந் தாதுவிர்த்திமிகவுண்டாக்கும்
கண்ணடிபோலே விழித்துலக்கமாகும்
கஞ்சமலர் குளிர்ச்சியைப்போல் தேகமாமே. 142

## பத்தியம்விருத்தம்

தேகத்தின் நடையரிந்து மருந்துமுண்டால்
தீராதபிணியுமுண்டோ செகத்திலேதான்
போகத்தில் விழுகாமல் பதனமாக
பொய்விடுத்து யவிழ்தமதை வுண்ணவேணும்
ஆகமத்தோர்சொன்ன மொழியரிந்துமேலாய்
அடவுடனேநடந்து கொண்டால் நலமதாகும்
பாதத்தில்குரைவாகச் சொல்லவில்லை
பத்தியந்தான் யிச்சாவின்பத்தியங்களாமே. 143

## ரோமரிஷியாரியற்றிய
## மூலகுடாரி லேகியம்.
### விருத்தம்.

ஆமென்ற மூலகுடாரிலேகியத்தை
அதிவிதமாய் சொல்லுகிறேன் மருந்தைகேளீர்
நாமென்றவாக்கை தனிலெழுந்துநின்ற
நலமிலாநோய்களது தீர்வதற்கு
போமென்றுசொன்னபடி கேட்பதற்கு
பொலிவான மருந்தொன்றுபோதிப்போம்நாம்
தாமென்றபொன் முஷ்டை கற்கடகசிங்கி
தயையான கடலாஞ்சிநறுநிண்டிதானே. 144

நிண்டியாம் பெருபாத்தின்பட்டையோடு
நிதானிக்க ஆவாரைகஞ்சாவித்து
கண்டிக்கநிலப்பனை யாதளையின்பிஞ்சும்
கனலதீரவிளாம் பிசனிகுளவிந்தத்தோடு
பண்டிதமாம் மதிவிடையமிலவம் பிசுனும்
பலிதமுறயிவைகளோர் பலமதாகும்
தெண்டிரையோரகமகிழத் தெளிவதாக
திரமுடனே வருத்திடித்து சூரணமதாக்கே. 145

ஆக்கியபி னின்னமொரு வயணஞ்சொல்வேன்
அசையான கஞ்சாவின்னிலையைத்தானும்
தூக்கியேயுரலிலிட்டு விடித்தசாரு
துடிபெரவே அரைப்படியதாகவாங்கு

வாக்கியமாம் தயிரதுவுமரைப்படியதாகும்
வண்மையுள்ள வெள்ளாட்டின் பாலரையதாகும்
பாக்கியமாம் பாண்டத்தி லூற்றியேதான்
பரிவாக அடுப்பின்மேலேற்றிடாயே. 146

எற்றியேபெரித்திவிடுநீக்கள் வற்ற
இதையபடி சூரணத்தை யதனில்போட்டு
போற்றியேதான் கிளறிவிடுப்பதமதாக
பொங்காமல் கருகாமல் பார்த்துமெள்ள
மாற்றியேபோகாமல் மகிழ்வதாக
மதுரமுள்ள நல்லெண்ணெ அரைப்படியதாகும்
சாற்றியேதான் விட்டதனில் கலந்துகூட்டு
சபாசெனவேபாகமதாயெடுத்துக்கொள்ளே. 147

கொள்கையுடன் நெல்லிக்காயளவா யுண்ண
கொடிதானசீழ்மூலம் வுள்மூலங்கள்
துள்ளிவிழும் வரள்மூலம் வுள்மூலங்கள்
துலையாதஆசனத்தின் கடுப்புவிம்மல்
விள்ளுதற்கு நாவுண்டோயிந்தபோக்கு
விபரீதமாயான்புகன்றேன் கவடில்லாமல்
கொள்ளியைப்போல் தணல்காட்டும் பிணிகளெல்லாம்
குணமாக யிவ்விதமாய்க் கூறினேனே. 148

கூறியதோர் மருந்திற்குபத்தியமோயில்லை
கொடிதானகறப்பானின் பண்டந்தள்ளு
சீறியேபலவிதமா யுண்ணலாகா
செவ்வையாய் விழ்தமதைக்கொள்ளவேணும்
தேரியேபோவதர்க்கு சொன்னேன்சொன்னேன்
திருவருளால் குறையொன்று மணுகிடாது
மீறியேயவபத்தியஞ்செய்திடாமல்
மேன்மையாயிருந்து கதிபெருவீர்தாமே. 149

## போகரியற்றிய

### ஞானமார்க்கம்.

### கலிவிருத்தம்.

பெருமையாகிய பேருரை நேர்வழி
தருமநற்சுழிதத்துவபீடமாம்
கருமநோய் பிழையானதகற்றிடும்
சிறுமையேதுஜெகத்த வர்லாபமே. 150

லாபமுண்டு நயனத்தின்பேரொளி
தீபமல்லோ தெளிந்திடும்வாசகம்
சோபமே துசுகந்தருமைந்துரு
கோபம்நீக்கி குணங்குடிகொண்டிடே. 151

கொண்டுநின்று குலாவியே வேற்றிடில்
விண்டுபோகும் வெளிமுதலானது
தொண்டுசெய்துத் துணிவுறகாட்டுமின்
தண்டுலாவிதழைத்திடுந் தேகமே. 152

தேகசம்பந்தந்தானே தெரிகுமாம்
போசம்பந்தந்தானே மானதகலுமே
காகநற்கதை மேவிடயோகமும்
தாகமோடதிகாரமியற்றமே. 153

மியல்பதாக யிசைந்துக்கொள்ளுன்னிய
சுயப்பிரதாபஞ்சுதந்தரமிக்கன
பயங்களொன்றிலே பக்குவமாக்கைசொல்
துயன்றிடாதது சொல்வதுதானிதே. 154

## மேகநாதகதலிலேகியம்விருத்தம்.

தவாரமலேகியத்தை சாற்றக்கேளு
சாமர்த்தியரோகமது தீர்வதற்கு
அவமாகச் சொல்லவில்லைமருந்தின்பாகம்
அன்பாகயாவருக்கு முதலியாரும்
நலமானமேகநாதக்க தலியென்று
நாட்டுகிறேன் சாதிக்காய்சுக்குயேலம்
கவராமல் சீரகமும் லவங்கப்பட்டை
கனதத்தொரு யிம்மருந்தை வோர்பலமாய்வாங்கே. 155

வாங்கியேவருத்திடித்து சூரணமேசெய்து
வகையாகவைத்ததற்பின்வயனங்கேளு
தூங்கியேதிரியாமல் பசுவின்பாலும்
சுறக்கானபடிவொன்று யெடுத்துகொள்ளு
தேங்காமல் வெண்ணெயதுபலமதாகும்
தெருண்டநெய்வீசையதுவரையதாகும்
பாங்குடனே அகண்டபாத்திரத்திலூற்றி
பரிவாக சூரணத்தை யதனிற்போடே. 156

போட்டேதான்கலக்கியொன்றாயடுப்பில்வைத்து
பொங்காமலதீமூட்டியெரிக்கும்போது
ஆட்டமிடுங்கொதிகிளம்பியதிகமாகும்
அடவுடனேநீர்களதுவற்றவற்ற

தேட்டமுடன்பாகதுபோல் வருகும்போது
சேற்குகின்றவகைய்துவுஞ்சொல்வேனப்பா
நாட்டமுடன்கூகைநீர்பலமதொன்று
நன்மையுள்ளபேரீச்சம்பலமதொன்றே. 157

ஒன்றானமுந்திரிகைபலந்தானென்று
உயர்ந்ததொருஆல்பச்ருபலமதொன்று
குன்றுதசெவ்வாழையன்பதாகும்
குணமாகவிவைகளெல்லா மொன்றாய்ச்சேர்த்து
நன்றானசர்க்கரைதான் பறம்பத்தாகும்
நலமாகத்தான்கூட்டிக்கிளறியேதான்
மன்றாடியீசர்பதம்வணங்கியேதான்
மகாபெரியலேகியத்தையெடுத்திடாயே. 158

எடுத்தபின்புநெல்லிக்காயலவாயுண்ண
யேற்கனவேசூடதனைதணிக்கலாகும்
தொடுத்தபொல்லாகடுப்புரத்தம் பிரட்டல்வாந்தி
தொடாதுபித்தவிதயசதியெல்லாம்
அடுத்ததொருவாதமதை செவ்வையாக்கும்
அடங்காதசிலேர்ப்பனத்தையுருதிசெய்யும்
சடுத்தமிலேஇச்சாவின்பத்தியமாயுண்டு
ஸ்நானமதுநெய்பாசி பருப்புத்தானே. 159

பருவமுடன்தலைமுழுகி வந்தாயானால்
பார்த்துக்கொள்தாதுநஷ்டமில்லையில்லை
வருத்தமுடன்மாய்கைய்தில் சிக்கிக்கொண்டால்
வழியிதற்குவுண்டோசொல்வுபாயபேச்சாம்
பொருத்தமுடன்அவிழ்தமதை புசித்தபேர்க்கு
புத்தியதுவுண்டாகி புகழுங்காலே
தருவினிலேபால்சுரந்து வடியுமாப்போல்
தழைக்கவிதுமூட்டிவிக்குந்தனதென்றாயே. 160

பிரமமுனியாரியற்றிய

பிரவடிசோமநாதிலேகியம்.

விருத்தம்.

ஏகுமேவெகுவிதத்தின் னோய்கள்தான்தீரவேண்டி
பாகுமேசோமநாதி பலமதுயிருபத்தைந்து
ஆகுமேதாணிநீரிலாட்டியேயெட்டொன்றாக்கி
தாகுமேசீனிப்பத்து பலமதுவதனில்பாச்சே. 161

பாச்சியேபாகுசெய்து பகிர்ந்திடு மருந்தைகேளு
ஆச்சியேவெள்வங்காயம் கடுகதுமிளகுசுக்கு

வாச்சியேவோமந்திப்பிலி சீரகமதுரங்கோஷ்டம்
பாச்சியேபலமொன்றாக பசுவின்நெய்படிகால்வாரே. 162

காலதுவாகவார்த்து கிண்டியேமெழுகுகண்டால்
சாலவேவடித்துவைத்து தானதுகளஞ்சிவீதம்
ஏலவேகொள்வீராகில் யியம்புவோந்தீருநோய்கேள்
ஓலமாம்வாய்வுவாதம் மொழிந்திடுமுண்மைதானே. 163

உண்மையாமருந்துகொள்ளில் பத்தியமுரைக்கக்கேளு
கண்மையாம்மிளகுமஞ்சள் சீரகங்கருதிக்கொள்ளு
தண்மையாங்கனிவர்க்கங்கள் சாற்றுவோந்தரணியோர்க்கு
வண்மையாய்முருங்கப்பிஞ்சு வழுதலப்பிஞ்சுமாமே. 164

## கலிவிருத்தம்.

பிஞ்சதானதோர்வாழையின்காயதும்
மிஞ்சிடதத்துவரைப்பிரப்பிரண்டையும்
தஞ்சமாஞ்சிருப்பாசிப்பயரொடு
நெஞ்சமேயரைக்கீரைப்பாலாகுமே. 165

கீரையொக்கவேபீர்க்குப்வரையும்
ஆரையோடுற்சென்ன லுங்கோதுமை
சோரையில்லாசிறுகீரையானதும்
நாரைகொக்குபலவிதமாகாதே. 166

ஆகுகின்றவிதமதைக்கேள்மிக
பாகுகின்றவுடம்பொடுக்காடையும்
தாகுகின்றதோராமைபிராவொடு
வாகுகின்றதாராவதுவாகுமே. 167

தாரதம்பமதாகவிளங்குமாம்
வாரகோழிவிராலொடுமுட்டையும்
தீரமானஅயிரையுந்தேளியும்
சாரமானவுளுவைமீனுகுமே. 168

மீனதானஅயிரையுந்தேளியும்
தானமானதோராடுத்திருக்கையும்
ஈனமானதகற்றியிவைதனில்
பாணமாயுண்ணநோய்கள்பறக்குமே. 169

## சுந்தராரியற்றிய

### பஞ்சதீபாக்கினிலேகியம்.

### வேறு-விருத்தம்.

பரமானகிருபைபால் பகருகின்றநேர்மைகளே
திரமதானபஞ்சதீபமானலேகியந்தனைக்

வரமதாகச் சொல்வதே வயணமாகச்செய்யவும்
விரவதாககேட்டதில் விளக்கமாகுமுண்மையே 170

உண்பதற்குகேள் மிகவுறுதியானசுக்குடன்
கண்துலக்கமேமிகுங் கனமிளகுதிப்பிலி
தண்பதாகவேண்டுவீர் பாகமாகவோர்பலம்
பண்பதாகயின்னமுஞ் சாற்றுவேணியன்றதை. 171

என்றவீதமாகவே யெடுத்திடுநற்சீரகம்
முன்பதானயேலமு முடுக்குடனேயோர்பலம்
துன்பநீக்கவேவருத்து சூரணமாய்செய்குவீர்
பண்பதாய்வெள்ளாட்டின் பால்பலமதெட்டுநேரதாம் 172

தாம்தமில்லாமல்பனவெல்லமதுபாலிடை
நாம்சுசரிக்கவேபெருமையாகியேகொண்டாடவே
தேம்தருதலானயிந்த வீதமாமருந்தெலாம்
ஓம்குருவென்றேபணிந்துவொக்கபாண்டமிட்டிடே. 173

இட்டடுப்பிலேற்றியே யிணக்கமாகத்தீயதை
மட்டமாயெரித்தபின்பு பாகமாகக்கிண்டியே
திட்டமாயெடுக்கநல்ல லேகியமுமானபின்
சட்டமாயெடுத்துநற் பீங்கான்றனிலேவைத்திடே. 174

வைத்ததையிருபொழுது வாஞ்சையாகவுண்பீரால்
பித்தவாதவுஷ்ணமும் பிரட்டிடுமுளச்சலும்
மெத்தவும்பொருமலு மஸ்திவெட்டைசூடதும்
நத்தியேதுடருகின்ற வாந்திசத்திதீருமே. 175

சத்தியமதானதிது சாதுரிகலேகியம
புத்தியைதிருத்துகின்ற பூரணஅவிழ்தமாம்
மெத்தருமோர்மண்டல மியல்பதாகக்கொண்டிடில்
சுத்தமாகிமேலதாய் துலங்கிடுநற்றேகமே. 176

## வெண்பா.

தேகநலிநீங்குந் தெருபுதருமெபப்பொழுது
பாகமுடலுண்டால்பசியெடுக்கும்-தாகமறும்
கைத்தொழிலென்றே முனிவர்காட்டினர்மெய்நூலில்
வைத்தொழிக்காமல் சொன்னேன்வகை. 177

இதற்குபத்தியமில்லை

## இராமதேவரியற்றிய

### ஆனந்தநெல்லிமுள்ளிலேகியம்.

### விருத்தம்.

வகையானநெல்லிமுள்ளிலேகியத்தை
வளமாகச்சொல்லுகிறேன்வரிந்துகேளு
துகையாகநெல்லிமுள்ளிபலந்தானாறு
தூணிநீர்வார்த்துமிக வெட்டொன்றாக்கி
தகையாமல்வட்டிகட்டி வாங்கியேதான்
சமர்த்தியதிப்பிலியும்மிளகுசுக்கு
பகையிலாவோமமொடுகிராம்புயேலம்
பகரானதற்கோலம்வாய்விளங்கந்தானே. 178

தானானகுக்கிலொடுகொத்தமல்லி
சதுரானசீரகமுங்கூகைநீறு
தேனான அதிமதுரம் மூலத்தோடு
தென்பாகயிவையெல்லாம்பலந்தானென்று
மானானசற்கரையும் பலம்பத்தாகும்
மகிழ்வாகசூரணமாய் செய்தபின்பு
எனானகியாழத்தில் கலக்கியேதான்
யேற்கவேவடிப்புதனி லிட்டுக்காச்சே. 179

காச்சிவிடுமெழுகுபதமானபோது
கணக்காகவொருபடிநெய்யதனில்விட்டு
மாச்சியேகிளரிவிடுமகிட்சியாக
மனமொப்பலேகியத்தைபாருபாரு
வாச்சுதேநெல்லிக்காய் லேகியந்தான்
வணங்காதநோய்கள்தனைதீர்ப்பதற்கு
ஆச்சுதேபதனமாயெடுத்துவுண்ணு
அடவுடனேபாக்களவுமரைமண்டலமுமாமே. 180

அரைவீதமண்டலத்தில்மேகச்சூடு
அஸ்திசுரமழலையொடு காந்தல்வாய்வு
விரைவானபொருமலொடுயிருமல்யீளை
வினையானக்ஷயகாசங்கிராணிமந்தம்
துரையானயிவ்விதனோயெல்லாம்நீங்கும்
துயரானபத்தியமோயில்லையில்லை
நிரைபாகமாகவேதான்புகன்றோமப்பா
நினைவுடனேகைபாகத் தொழில்செய்வாயே, 181

## சந்தவிருத்தம்.

வாய்மதம் மிடும்பைமுதலானதைவிடுத்து
காய்கனிவேரான தழைவேர் பிரியாதென்றும்
தாய்மலர் சொலானபதமே தொழுவாய்நின்று
ஆய்வரவரே பெரியோராகுவர்களென்றே. 182

## தேரையரியற்றிய
### மிளகாதிலேகியம்-விருத்தம்

என்றவிதமோர்படினமாக வொருசேதிகேள்
யேர்பரவுமாமிளகு நூறுபலமானதை
நன்றெனவேதூணியணி நீரிலிதைதாக்கியே
நாடியிதை வேகமாயெரித்திடு குமிக்கியே
ஒன்றையிட்டொன்று நிறைபாகமுறவாகவே
இசையவே பரிந்துகற்கண்டு பலம்பத்தாம்
கன்றிதமாய் சேர்த்து நற்கியாழமதிலேயிடு
கருதுமலர்சீரகம் யேலம்வக்ராகாரமே. 183

வக்ராகாரமுடன் வாய்விளங்க மப்பா
வகையானதாளிசையும் நறுக்குமூலம்
மிக்கான அதிமதுரங் கோஷ்டங்கிரும்பு
மிதமாகதானெடுப்பாய் பலமதாக
தொக்காகப்போகாமல் வருத்திடித்து
துரிதமாய்க்கியாழத்தில் சேர்த்துக்கொண்டு
பக்குவமாய்நெய்நாழி தேனுந்தானும்
பாங்குடனே அரைநாழிகூட்டுவீரே. 184

கூட்டமிட்டு சிலம்புதொழில் படிப்பாரப்பா
குவலயத் திலவர்களுடன் பேசவேண்டாம்
நாட்டமுடன் திரோதாய்நகைப்பாளப்பா
நலமானலேகியத்தைப்பாருபாரு
கோட்டமதுயில்லாமல் வயணமாக
குறிப்புடனே பாக்களவுயுண்ணும்போது
ஆட்டமிட்டநோய்களதின்குணத்தையானும்
அதிவிதமாயுங்களுக்குச் சொல்லுவேனே. 185

சொல்லக்கேள் தீரும்நோய்தான் சிலேற்பனந்தொண்ணூத்தாறு
மல்லக்கேள் கபங்களெல்லா மறுத்திடு நீர்தோஷங்கள்
வெள்ளக்கேள் சிலவிஷங்கள் விரைவுள்ளின்சுரமுந்தீரும்
வல்லக்கேள் வாதந்தீரும்வளர் பித்தந்தணியுந்தானே, 186

## கலித்துறை.

தானேயிதற்கு பத்தியமேயிலேத்தனித்து வுண்ண
தேனேயிதற்கு தீரும்வியாதிகள் னந்தமதாம்
நானேயிதற்கு கண்ணுற்றுபார்த்தனநடைபொதுதான்
மானேயிதற்குமே சாட்சிகளில்லே யறிந்தவர்க்கே. 187

### மட்டுவிருத்தம்.

வருந்தினபேர்க்கு வகைதுகைமெய்ப்படும்
திருந்தினபேர்க்குச் செய்கையுமேலதாம்
மருந்தினபேர்க்கு மகாபெலனுகிடும்
பொருந்தினபேர்க்குப் புகழ்பரிசுத்தமே. 188

### பதஞ்சலியாரியற்றிய

### மகாவிந்தைலேகியம்-விருத்தம்.

பரிந்திடவே வெந்திநேந்தான்பலம்நூராகும்
படசுமுடனேந்து படிசலத்தில் விட்டு
தெரிந்திடவே கால்படியதாகச்சுண்ட
செய்தபின்பு மருந்துவகை செப்பக்கேளு
அரிதானகோஷ்ட மொடுகசகசாவும்
அதிசெயமாமதுர மொடுவிடையதானும்
சரியானசிரகமுஞ் சாதிக்காயும்
சமர்த்தானவோம மொடுசுக்குத்தானே. 189

கக்குடனே கிரும்புகஞ்சா குராசாணிவோமம்
சுகிர்தமுடன் வகைவகைக்கிபல மொன்ருகும்
ஒக்கவேவருத்திடித்து முன்பாகில்சேர்த்து
உயர்ந்ததொரு பஞ்சதாரைப்பலமேபத்து
கக்கிடாமல் படிக்கிவொன்ருய்க்கூட்டி
கருணையுடன் லேகியத்தை கிளறியேதான்
பக்குவமாய் நெய்யதுவும் நாழிவிட்டு
பதமாகயெரித்துமெள்ள யெடுத்திடாயே. 190

### கலிவிருத்தம்.

எடுத்தபின் சொல்லலானதைக்கேட்டிடு
அடுத்தநோய்களது விபரந்தொழில்
கடுத்தமூலங்கிருணி வெதுப்பதும்
தொடுத்திடாமலே தூரவகலுமே 191

தூரமாக வகலகளச்சியின்
தீரமானப்ரமாணமாயுண்டிட்

கோரமான வியாதியை நீக்கிடும்
பாரமானதோர் பத்தியமேயிலை 192

பத்தியமுடன் றின்னவர்க்கேநலம்
சுத்தமாகுஞ் சொரிசிரங்கானதும்
எந்திடும் பலவாசனைநோய்களும்
குத்திநின்ற யிருமலைதீர்க்குமே. 193

கொம்மி.

தீர்க்கமுள்ளலேகியங்களுண்டு
சேர்ந்துபத்தியமாயிருந்தால்
கர்த்தகவேமிகக்கிருபை செய்யும்தூய
கர்த்தனைப்போற்றியே கொம்மியடி. 194

அடிக்கடி நமக்கேற்றபத்திகள்
ஆனந்தமாகவே சொல்லலுற்றார்
படிக்கப்படிக்கத் தெளிவுண்டாக்கவே
பண்புடன்போற்றியே கொம்மியடி 195

கொம்மியடி நித்தம்வாதபித்தமும்
கோதகலான சிலேட்டுமமும்
அம்மியநிற்கவே வாசியிலேறியே
அன்புடன்போற்றியே கொம்மியடி 196

அமிர்ததத்துவநாடிப்பயிற்சியும்
ஆக்கைவிதங்களைக்கண்டுணர்ந்து
சுமிர்தமாகவே தேர்ந்துகொள்ளவே
சுத்தமாய்போற்றிகேள் கொம்மியடி 197

நந்தீஸ்வரரியற்றிய

கடியநாதசூரணம்-விருத்தம்

கேளப்பாசெம்முள்ளிஆடாதோடை
கெடியானசங்கன்வேர்யீயவேரும்
வாடப்பாதிரி கடுகுயேலத்தோடு
வளமான கண்டங்கத்ரி அரத்தைசுக்கு
நாளப்பாகடுக்காயுஞ் சித்ரமூலம்
நலமானகையானுந் தாளீசந்தான்
ஆளப்பாயிதுவெல்லாம் பலந்தானென்று
அப்பனே கல்லுரலில் தாளதாக்கே. 198

தாக்கென்ற சூரணத்தை வடித்துக்கொண்டு
தனதான சீனிதனில்மூனுஞ்சேரு

வாக்கென்ற சூதமொடுதாளகந்தான்
வகையானபறபத்திலெதுவானாலும்
நாக்கென்ற பணவெடைதான் வைததுவுண்ண
நயமானகடிகாச மீளபோகும்
ஆக்கென்ற பத்தியந்தான் பெண்புகையுந்தள்ளு
அடவுடனே துவரையது ஆகுந்தானே. 199

ஆகுமப்பா அரைக்கீரை வோலவாளை
அன்பானவூடானுங் கிழங்கானாலும்
தாகுமப்பா அவரையுடன் முருங்கைப்பிஞ்சும்
தளராமல் கூட்டிடவே மெத்தநன்று
பாகுமப்பா பத்தியமாய் செய்யச்செய்ய
பரிவானரோகமதை நீக்கும்நீக்கும்
போகுமப்பா செப்பியசொல் தவரிடாது
பொதுவாக யானுரைத்தேன் புகழ்துகொள்ளே. 200

## அகஸ்தியரியற்றிய

### ஜெயயெலாதி சூரணம்-கலிவிருத்தம்

கொள்ளுமே ஜெயயெலாதி சூரணம்
விள்ளுவேன் வினவாகவேயான்மிக
அள்ளுவீர் மிளகானது ரெண்டிடை
நள்ளுவீர்லவங்காதியுமோரிடை. 201

இடையதாம் சிறுநாகப்பூயெட்டிடை
தடையிலாகூகைநீர் பதினரிடை
கொடையதானதோர் சுக்கதுவோரிடை
நடையதாக அன்பதிடையேலமே. 202

ஏலமொக் கிபைந்துவருத்திடு
கோலமாகயிடித்து வடித்திடு
ஜாலமான பிணியதுதீரவே
தூலநேருற வைத்துப்புசித்திடே. 203

### வண்ணம்.

வைத்தபடியே யெடுத்துகுற்றமணுகாதபடி
சித்தர்பதமேபணிந்து நித்தமுண்ணுவீர்
வித்தையுள்ள ரோகமுதல் மெத்தகனலானதுவும்
அத்தனருளாலகலும் மித்தரையிலேதான் 204

சற்கலைசமனைக் கூட்டிகற்பனையதாகுமென
பொற்கனமதாயருந்த நற்பொருளதாமே

துற்பெலமதாக்கிவைக்கும் அற்பமுள்ளதோர் திரட்சி
சொற்பனவரட்சியதும் வெற்பலூரற்போமே. 205

ஊரலொடு குட்டமதுதீரமில்லாத சிரங்கும்
சோரல்விட மூமகலும் பாரமிலேதானே
பாரமிகும் பித்தமும் கோரமதுவாய் பினத்தல்
காரமுடனே பிரக்கும் வீரெறிவுபோமே. 206

போகுமேகாமாலேவெப்பு ஆகுமிதுநல்லவிழ்தம்
யேகுமேசூதகவாய்வு நோகுதலன்றேடும்
சோகும்விதவாய்வு களிஞ்சாடுமே யெல்லாப்பிணியும்
காகுமேகாமாலேமுதலானதுகண்காணுமல். 207

விருத்தம்.

கண்டுகண்டு மனந்தேரிநின்றபேர்க்கு
கருத்துகந்து விண்டிடுவோமருந்தின்பாகம்
திண்டுமுண்டாய் திரிந்தலேந்துபேசுவோர்க்கும்
தெளிவாகக்கனவது போற்காணுங்காணும்
அண்டர்பிரனருள் வேணுங்கியானம்வேணும்
ஐம்பூதவழியறிந்து நடக்கவேணும்
தொண்டுசெய்துபெரியோரைக் கார்க்கவேணும்
தொகுத்தபடி பத்தியமாய் குடுத்துண்பீரே. 208

குடுக்கவேதான் சொல்லனந்தமென்பர் முத்தர்
கொமிட்டிக்காய் போலிருந்தால்சிட்டேசேர்க்கார்
அடுக்கடுக்காய் குளத்தினிலே அல்லிப்பூவும்
அழகாகவிருந்ததனு லாவதென்ன
எடுத்துஜலங்குடிப்பதுண்டோ யிசைந்தகாதை
யென்றபடி பொலிருக்குமின்பம் துன்பம்
சடுத்தமதை விட்டகன்று வணங்கினோர்க்கு
சாஸ்திரத்தின் சூஸ்திரசூரணமுமாமே. 209

மச்சமுனியாரியற்றிய

தீபாக்கினிசூரணம்-தருவு.

சூரணஞ்சொல்லுகிறேன்-கேளைய்யா
சூரணஞ்சொல்லுகிறேன்
தீரமதாகத் தெளிந்தசரக்கிது
தெய்வக்கிருபையில் செய்திதைப்பாரும் சூரண

திப்பிலிசீரகஞ் சுக்குமிளகுடன்
தீபனமான நருக்குடன்முளிசை
ஒப்பனைசாதிக்காய் மாசிக்காயும்மிக
வொவ்வொன்றெரு பலமாகவும்வாங்கே. சூரண

ஆகயிதர்க்கு வரத்தைமொன்று
ஆனதோரோமங்கால் பலமாகும்
பாகமதாகவருத்து யிடித்து
பாங்குடன் கொள்ளயிடைதனை சொல்வேன் சூரண

இடைகள்குறையாமல் மூவிரல்கொண்டதை
இன்பமதாகவே சீனியுங்கூட்டி
தடைகளில்லாமலே சேர்த்துப்புசித்திட
தப்பாமல் பித்தந்தான் போகுமப்பா சூரண

போகுமே மெத்தவுஷ்ணமும்வாந்தியும்
பொங்கும்யெரிவுங் கிறுகிறப்பானதும்
நோகும்சதியுஞ் சூலைசுவாசமும்
நேர்மைபடுத்திடும் நோய்களளை தனையும். சூரண

நோய்களனத்தையுந் தீர்க்குமருந்திது
நூலிலுரைத்ததையேலவே கொண்டிடில்
ஆய்ந்திதைப் பத்தியமாகப்புசித்திடே
ஆர்க்குமிது சுகந்தோனுமேதானே. சூரண

தோணுமிது குணமெத்தவும் நல்லது
தொண்டைதனில் நிற்கும் பித்தத்தின்வாய்வதும்
காணும்விதம்புளித் தேப்பமுஞ் சோபமும்
கண்டபோதேவிடும் விண்டிடத்தானே சூரண

விண்டிட நல்லவரக்கீரையானதும்
வெள்ளாட்டிரைச்சியும் பொண்ணிலாங்கண்ணியும்
தண்டிடுமேபுளி யாரைதுவரையும்
தானேநெய்பாலுடன் வேணுமென்றேகொள்வீர் சூரண

கொள்வீர்தள்ளுவீ ரானகயப்பது
கோதகலப்புகை பொண்ணுடன்சேருதல்
விள்ளும்படியித மாகவுரைத்ததை
வேண்டியேநாளும் விளங்கவேயுண்பீர் சூரண 210

பிடிநாக்கிசரியற்றிய

திவ்விய அருகின்வேர் சூரணம்-கலிவிருத்தம்.

உண்ணபேர்க்கு வுதவியதாகுமாம்
பண்ணும்பாகம் பலிதமதாகுமாம்
எண்ணும்மேனி யிலகக்குளிர்ச்சியாம்
நண்ணும்நல்ல அவிழ்தமிதாகுமே 211

மீதுலாவியமூலியிதுசுபம்
வாதுலாவியரோயதைத்தீர்த்திடும்
சாதுலாவியசம்பிரமெனநிதம்
பாதுலாவும்பரமவேதாந்தமே. 212

விருத்தம்.

வேதாந்தகாரணியே விமலரூபி
விளங்குகின்ற தாயாகிசுரூபமான
மாதாந்தபொற்குழலே சிரமேற்கொண்டு
மதுரமொழியாயிதனை வகுக்கக்கேளு
போகாந்தமிகவருந்தி புண்யமாக
போதிப்போம் வைத்தியற்குப் புகட்சியாக
நாதாந்தமுச்சுடரைப் போற்றிபோற்றி
நாவிலுவேன் சூரணத்தைப்புகலுவேனே 213

புகலுகின்ற அருகின்வேர் பலந்தான்பத்து
பிரியமுள்ள அதிமதுரம் மிளகுசுக்கு
அகலாதசிறு தேக்குமாசிக்காய்
அழகானசாதிக்காய் சாதிபத்ரி
இகழ்தசிரகமும் லவங்கயேலம்
இணையானபத்திரியுங் கிரும்போடொக்க
நிகழாமல்வகைவகைக்கி அரைபலமதாக
நிதானமாய்வருத்திடித்துசூரணமதாக்கே. 214

தாக்கியேசூரணத்தை யெடுத்துக்கொண்டு
தப்பாமல் சீனியும்ரெட்டைதான்சேர்த்து
ஏக்கமின்றி வேறுகடியளவாய்க்கொள்ள
இதில்தீரும்வியாதிதனை யியம்பக்கேளு
ஆக்கைதனிலுள்ள கடுப்பூரல்வெள்ளை
அடங்காத மேகைகாமாலைசோகை
நீக்கிவிடும்வாய்வூரல் றச்சல்வாந்தி
நிற்காமல்பறந்தோடும்நினைவால்செய்யே. 215

செய்யிலேபத்தியத்தைசெப்பக்கேளு
தெளிவாகப்புகையிலையும்புளியிந்தள்ளு
ஐயமிலாவாட்டிரைச்சியுலர்ந்தமச்சம்
அன்பானவெண்டக்காயவரைப்பிஞ்சும்
பையவேதானத்திக்காய்துவரைநெய்யாம்
பரிவானநெல்லிக்காய்பீர்க்கன்பிஞ்சும்
தையனுடசையோகமாகாதப்பா
தயிர்மோரும்பூசினிக்காயாகாதென்றே. 216

## தன்வந்திரியாரியற்றிய

### பித்தசாந்திசூரணம்-கலிவிருத்தம்.

தென்றசொற்படிசூரணந்தன்னையே
நன்றதாகநவின்றிடக்கேள்மிக
ஒன்றதானதோர்வேம்பினின்பட்டையும்
வென்றிடச்சதகுப்பியுங்கூட்டிடே. 217

கூட்டிடுந்திருத்தாளிசையோடுற
மாட்டிடுயிதுமூன்றையுமோரிடை
நாட்டிடுவுரலானதிலிட்டுமுன்
காட்டிடுபலமாகயிடித்திடே. 218

இடியதாக்கியேகேளிதிலோர்வகை
வடிவதாகவேவோர்படிநீரினில்
நொடியதாகயிடித்ததைப்போட்டிடு
படியதாகவேசுண்டயெரித்திடே. 219

எரித்தநீரினிலேவதுசீரகம்
பிரித்துப்பத்துப்பலமநேர்மை
குரித்துநோய்த்துக்குலாவிகுலாவியே
விரித்தசொற்படியாகவுயிர்த்திடே. 220

### விருத்தம்.

உலர்த்தியபின்சம்பளச்சார்தனிலேவோர்நாள்
வொப்புரவாய்முசுமுசுக்கைதனிலேவோர்நாள்
பெலத்திடவேபொன்னுங்கணிசாரிலோர்நாள்
பேசரியகொடுப்பைச்சார்தன்னிலோர்நாள்
நிலத்திடவேயிவ்விதமாய்ச்செய்தபின்பு
நிதானிக்கசூரணமதாக்கியேதான்
தலத்தினிலேவுள்ளபிணியாளருக்கு
தயவாககொடுப்பதற்குதிடஞ்சொல்வேனே. 221

திடமானசூரணத்தில்பஞ்சதாரை
சிறக்கவேமூன்றுக்குவொன்றுசேர்த்து
தடமானபித்தமுதல் வாய்வுக்கெல்லாம்
தயங்காமல்வெருகடியளவாய்க்கொள்ள
இடமானதலைசுழட்டல்கிறுகிறுப்பும்
இசையாதமயக்கமொடுவாந்திகாந்தல்
படபடத்ததியக்கமுதல்பித்தவாய்வும்
புகராமல்நீங்கிவிடும்பாருபாபாரே. 222

பாரென்றசொல்லதனை நம்பியேதான்
பண்புடனே செய்வதற்குப் பலிதமாகும்
சாரென்ற மூலிகையின் சமர்த்துமெத்த
சாற்றுதற்கு விப்புவியில் சலுவதாகும்
நாரென்ற நாரப்பாநடக்கைகண்டு
நாட்டினல் ரோகமெல்லாம் நடுக்கமாகும்
தேரென்ற வைத்தியத்திற் சொன்னேன்சொன்னேன்
தெருட்டாத சூரணத்தைக் காணுகாணே. 223

மணிபூரகம்-வித்தம்.

காணுநீமச்சை மூளைகடுகியே உதிரம்விந்து
தோணுநீ அஞ்சுமல்லால் துலங்கியபொருள் தானப்பா
வேணுநீயிதற்குள் தானும்விரைந்து நீவாசிபூட்டி
ஆணுநீயறிவைக்கொண்டு அம்மம்மாவெளியாய்ப்போமே. 224

போமிந்த யிடத்தின்பேரு பூரகவீமிடன்பார்கள்
ஆமிந்தவிதின்மேலெட்டு அங்குலங்கடந்தாயானல்
சேமிந்ததிறிகோணந்தான் சிறந்திதழ்பனிரெண்டப்பா
வாமிந்தவடவைத்தொட்டு வழங்கியகளவுமாட்டே. 225

மட்டான நடுவேகேளு வழங்கியசிகாரம்நிற்கும்
ஒட்டாஃ நிறந்தான்செம்பு வொளிகோடி பானுவாகும்
தெட்டானரூபங் காட்டுஞ்சிவனோடு சத்திநிற்பாள்
அட்டானபுளிப்பு சோம்பல் அடவானபயமுந்தூக்கே. 226

தூங்கவே யெழுப்பிமெள்ள சுகமாகப்பெண்ணேசேர்க்கும்
ஆங்கவே அஞ்சிமீசன் மத்தியத்தொழிலைப்பாரு
வாங்கவே சிகாரவீடுவாசனை கொண்டுவூதும்
ஓங்கவேபனிரெண்டே காலுற்பனங்கேளுகேளே. 227

விசுத்தி.

கேளுநீவிசுத்தியான கெடியானதலத்தைப்பாரு
வாளுநீகோணமாறு வகாரங்காண் நடுவேயுண்டு
வேளுநீயிதழ்தானப்பா விளங்கிற்றுஈரெட்டாக
ஆளுநீஅகாரந்தொட்டு ஆகாகாவரைக்கும்வையே. 228

வைத்திட்ட நிறந்தான் கேளுவயங்கிற்றுகருப்பேயாக
கைத்திட்ட மகேசனோடு கன்னியும்மேசி நிற்பாள்
ஒய்த்திட்ட பரிசஞ்சொல்வார் வுத்தமத்தொழிலைக்கேளு
மைத்திட்ட தடத்தல் வோட்டல்மயங்கிய நடத்தல்காணே. 229

காணதுநிறுத்தலோதிகயங்காமலிறுத்தலஞ்சு
தோணதுத்தொழிலாய்ச் சொல்வார் உத்தமந்துகையைக்கேளு
பூணதுபொசிக்க லாரம்பொங்கிய கோபஞ்சண்டை
ஆணதுசமயத் தார்க ளாசானங்காரங்கேளே. 230

கேளுநீபொசிப்பைக்கண்டால் கெடியாகத்திறக்கும்வாயை
வாளுநீரு சிகளாறும் வாசலுக்கப்பாலில்லை
தாளுநீபரந்தானென்ற தனித்ததோர்பீடமையா
வேளுநீபடிதானென்று விளம்புவார் பெரியோர்பாரே. 231

பெரியோர்கள் சொல்லக்கேட்டேன் பிரட்டினகிளையைவாங்கி
அரியோர்கள்நாளில் தள்ளிஅழைக்கிறார் பாருபாரு
தெரியோர்களானாலங்கே சிக்கென அகங்கென்றாணு
பரியோர்கள் நாலுஞ்சேர்ந்து பளிச்செனத்தோணும்பாரே. 232

தோணியதனத்தின்மேலே சூழ்வுரல்பதினாறேற
ஆணியாம்அண்டம்போலே யகாரங்காண் நடுவேநிற்கும்
வேணியேவட்டவீடு விளங்கியயிதழ்தான்ரெண்டு
பேணியஅளவாவென்றுபொருள்ரெண்டுமிருந்துவாரே. 233

வாரத்தின்நிரத்தைக்கேளு மகத்தானபடி சவன்னங்
கூரிதில்சதாசிவன்றான் கொள்கியமணித்தாயோடு
தேரிலாசத்தியப்பா செய்கின்றதொழிலைப்பாரு
வேரிதுகாமக்குரோதம் விளங்கியலோபமாமே. 234

ஆமினிமேகத்தோடு அடங்கியமதத்தோடஞ்சும்
ஓமினியைந்துஞ்செய்வா வுத்தமர்திக்கில்கேளு
காமினிபிரமன்மாலுங் கடுஞ்சிவ மயேசனாகும்
சாமினிகார்ப்பாராதி சதாசிவந்தளவாயாமே. 235

தளவாயைக் கண்டாயானால் சச்சிதானந்தங்காண்பாய்
தளவாயைக் கண்டாயானால் தாயோடேசேர்ப்பார்பாரு
தளவாயைக் கண்டாயானால் சமுசயந்தீருந்தீரும்
தளவாயோடேத் தகள்ளன்சாங்கமாயுரைத்துப்பாரே. 237

## குருபதவணக்கம்-விருத்தம்.

உரைத்துநீவாசிவைத்து வூதிடவிந்தைப்பாரு
நிரைத்துநீவருணமஞ்சு நிலையாகத்தோணுந்தோணும்
இரைத்துநீபோகாவாசி யெழுத்தங்கோநாலைக்கூட்டு
மறைத்துநீவைத்தாலுந்தான் மறையாதுமணித்தாய்காணே. 238

தாய்காணுமட்டும்மப்பாச முசயமாயையாகும்
ஓய்காணத்தொழில் களைந்தும்ஓமென்றால் க்ஷணத்திலாகும்

காய்காணும் பிஞ்சுகாணுங் கவனமும்விண்ணைத்தாண்டும்
தோய்காணுந்தவரில் புக்குஞ்சூட்சத்தை யுரைக்கக்கேளே. 239

கேளுநீமணியைத்தூண்டி கெடிவீரவெட்டுமேலே
ஆளுநீகுருபதந்தான் அம்மம்ம வெளியாய்த்தோணும்
வேளுநீஅதற்குள்நின்று வீசிடுவாசிகொண்டு
வாளுநீகீழேநிற்க வரிசையுந்தோணும்பாரே. 239

தோணிடுமேலேயப்பா சுகமாக பதினென்றேதான்
ஆணிடுபாருபாரு ஆயினிமனையோடெட்டும்
வேணிடுபரையதொன்று விளங்கிய பரமதொன்று
காணிடுவதனிற் சாரங்காரணங்கண்டிலேனே. 240

கண்டிடமார்க்கமெலாங் கண்டிடவாசிநேரே
ஒண்டிலாபிடரிக்குள்ளே வுத்துப்பார்க்காணுங்காணும்
மண்டிலாவனுகலத்தில் வைத்துப்பார் தோணுந்தோணும்
தண்டிலாமூலமென்று கனிப்பதுபொன்றுகாணே. 241

காணவேமதிக்குமேலேகலந்துபார்திசைநாதத்தை
பூணவேநெஞ்சிற்பாரு புகழாவிபனிரெண்டப்பா
தோணவே மூலம்பாருசுடர்கோடித்தீயுங்காற்றும்
ஆணவே மூணும்பார்த்து அந்தந்தயிடத்தைக்கேளே. 242

## இடமறிதல்-விருத்தம்.

கேளுநீமூலங்கீழே கெடியான நிராதாரந்தான்
வாளுநீமூலமப்பா வழங்கிய துரியாதீதம்
வேளுநீசுவாதிஷ்டானம் விளங்கியபுனிதநாதம்
தோளுநீபூரகத்தைஅழித்தியேவறிந்துக்கொள்ளே. 243

அரிந்துகொள்ள நாகதத்தை அப்பப்பாகளித்தவீடு
தரிந்துகொள் விசுத்திவீடுகினு வெல்லாங்காணுங்காணும்
தெரிந்துகொள் மணித்தாய்வீட்டில் சாக்கிரமெத்தவாகும்
பிரிந்துகொள் துரியாதீதம் பேர்குருபதந்தான்பாரே. 244

பதத்தின்மேல் நிராதாரந்தான் பார்க்கின்றவல்லோர்க்கப்பா
இதத்தின்மேல் மூக்குபின்பு இருதயமுதுவே பேரு
மதத்தின்மேல் பார்த்தாயானல் வழியெலாந் தெரிந்துபோகும்
குதத்தின்மேல் குய்யங்கண்டு குழையாத சுணங்கர்கேளே. 246

சுணங்கரேவாசிபோனல் சூட்டியவாசிபொய்பொய்
சுணங்கரே பூசைபோனல் சூட்டினதுரைதான் பொய்பொய்
சுணங்கரே ஞானம்போனல் தூக்காதுகுளிகை பொய்பொய்
சுணங்கரே மயிர்தோல்விட்டு சூட்சமாய்மூலம்பாரே. 247

மூலத்தைதொட்டுசொன்னேன் முடியொக்கும்வேதமப்பா
கோலத்தை விட்டுப்போட்டு குறிகாணயெல்லாஞ்சித்தி
ஜாலத்தைவிட்டுப்போட்டு சச்சிதானந்தங்கண்டு
சீலத்தையுறவதாக்கி செழித்திடப் பொடிசொல்வீரே. 247

## புலத்தியமகாமுனிவரியற்றிய

### ஓலைத்தாமரைசூரணம் - விருத்தம்

பெடியான பொடியதொன்று சொல்லக்கேளு
புகழானசீரகமும் பலந்தான்பத்து
செடியானவோரிதழ்த் தூள்பலந்தான்பத்து
சீரானசெஞ்சந்தனத்தூள் பலந்தான்பத்து
வடிவானசாதிக்காய் சாதிபத்ரி
வளமுடனே விதுரெண்டும் பலந்தான்பத்து
துடியான அதிமதுரம் பலந்தான்பத்து
துலங்கவேயிவையெல்லாஞ் சூரணமதாக்கே 248

சூரணத்தில் சர்க்கரைதான் பலமும்பத்து
சுகுணமுடன் சேர்த்தேதான் நருநெய்தன்னில்
பூரணத்தைபொற்றியேதான் நெல்லிக்காயின்
புகழான அளவாக வுண்ணும்போது
சீரணித்தவுஷ்டணங்கள் வுள்மேகங்கள்
சூடுகனல் நீர்கடுப்புபிரமேகங்கள்
கோரணித்தவுள் காச்சல்யெரிவுகாந்தல்
கொதிப்பெல்லாம் நீங்கிவிடுங் குரியைப்பாரே. 249

குரியானயெரிகுன்மஞ் சதையடைப்புங்
குலாவுகின்ற யெலும்புருக்கி மேலினநாத்தஞ்
திரிப்பானவாய் நாத்தம்நீர்ததாரைப் புண்கள்
சினந்தேநெஞ்சில் நோய்வருத்துங் குணங்கள்மற்றுஞ்
தரிக்காமல் கண்டேதான் சுற்றப்போமோ
தனிமூலப் பெலமதனை விந்தைக்கட்டுஞ்
பரிகாசமல்லவிது பாகம்நன்று
பண்டிதற்கு விதுதிரமை பாகந்தானே. 250

தானென்ற யிச்சாவின் பத்தியந்தானுகும்
தவிராமல்பக்குவமாய் நடந்துக்கொண்டு
நானென்ற அவபத்தியமில்லாமல்தான்
நாதனடிவணங்கி மிகவுண்டபேர்க்கு
வீனென்ற நோயணுகாதிருப்பார் மேலாய்
விவேகமுடன் நின்றவர்க்கு. விவேகமாகும்
ஆனென்றஆணுவத்தை யடக்கிச்செய்ய
அருளாகிப் பொருளாகியணுகுந்தானே. 251

## புசுண்டமாமுனிவரியற்றிய

### லவங்கப்பட்டை சூரணம் - விருத்தம்

அனுபோகமான தொருபாகங்கேளு
ஆசையுள்ள ஆவின்பால் படிதானென்று
சனுவான நல்லெண்ணே யரைப்படியதாகும்
சமுசியங்களில்லாத நெய்யரைப்படியதாகும்
தனுதான முசுமுசுக்கைச் சார்அரைப்படியதாகும்
சமர்த்தாகயிதுகளெல்லா மொன்ருய்ச்சேர்த்து
பனுவலது குறையாமல் பாகமாக
பரிவுடனே வைத்தபின்பு போற்றுபோற்றே 252

போற்றியேதான் சூதமுந்தான் பலந்தானென்று
பிரியமுள்ளகுக் கிலதுவரைப்பலமதாகும்
வேற்றுமையிலாத சூடனரைப் பலமதாகும்
விருப்பமுடனென்ருக வரைத்துக்கூட்டி
சாற்றியேதான் முன்சொன்ன பாகந்தன்னில்
தவராமல் கலந்துவிடுசரியதாக
மாற்றுதலில்லாமலேதான் மகிட்சியாக
மனோரம்யப்படி தவராமற் செய்யே 153

தவராமற் சட்டியின்மேல் வெள்ளைச்சீலே
தழைக்கவேவேடுகட்டுலவங்கப்பட்டை
நவமாகப்பத்து பலம் பொடியதாக்கி
நலமாகவேட்டின்மேல் பரப்பியேதான்
கவராகசட்டிகொண்டு மூடியேதான்
களிக்கவேசீலேமண் வலுவாய்ச்செய்து
பவமெல்லாம் நீங்கிடவே வொழுகுதீப்போல்
பதமாகயெடுத்துவிடு பதமாய்த்தானே 254

பரிமளிக்க யெரித்துவரும்போதிலேதான்
பண்பாக வண்டிரச்சலாகுமாம்
சரியானபாகமென்று யிரக்கியேதான்
சாதுரிகசட்டிதனே குளிரவைத்து
அரிவாகத்தான் திறந்துயெடுத்துப்பாரு
அப்பனேயென்ன சொல்வேன் பதங்கத்தாண்மை
விரிவானநோய்கள் தனைதீர்க்குந்தீர்க்கும்
விளங்கவேசொல்லுகிறேன் விபரங்கேளே. 255

விபரமுடன் சொன்னதிந்த சூரணத்தை
வினயமுடன் விராகனிடை யிருபோதுண்ண

தவராமல்கிரந்தியொடு பவுத்திரமுஞ்சூலை
தகாததொரு வெடிசூலைகண்டமாலை
பவமான அரையாப்புதுடையின் வாழை
பதரிவருமாராத புண்களெல்லாம்
சிவஞான தேவனுடவருளினாலே
தீர்ந்துவிடு மிதுகளெல்லாந் தெளிந்துபாரே 256

தெளிந்திடவே பத்தியந்தான் சொல்லக்கேளு
தீர்க்கமுடன் பாலாகுஞ்சாதமாகும்
ஒழிப்பில்லா அவரையுடன் துவ்வரையாகும்
வோதரியமற்றதொன்று மாகாதப்பா
பழிப்பில்லாமுளகு நீரசனமாகும்
பத்தியத்தில் உப்புதனைவருத்துக்கூட்டு
களிப்புடனே பாங்காகவுண்டபேர்க்கு
கருணையுடன் சொன்னநோய் தீருந்தானே. 257

## கலிவிருத்தம்.

தீரும்நோய்களை செப்பமுடன் சொன்னேன்
பாருமிந்தப்படி விதஞ் செய்திடில்
சேருமிந்தகுணகுணமானதும்
வேருபட்டு விலகியேவோடுமோ 258

ஓடுதற்கு வுகந்தபொருள் சொல்வேன்
கூடுதற்கு குருமொழிவேண்டுமாம்
நாடுதற்கு நவின்றமொழிப்படி
சாடுதற்கு நேர்த்தியதுவோடுமோ 259

## மூலாதாரம்-விருத்தம்.

தீயதைமூட்டிக்கொள்வாள் கிறந்தபூவிதமாஞ்சத்தி
வாயதைத்திரக்காள் பாவி வணங்கிய சத்தியெட்டும்
ஓயவேசத்தியெட்டு மோங்கித்துயிதழெட்டாக
தாயதைப்பூசைபண்ணு தனிசக்திநிற்பாள்பாரே 260

நிற்பதுயேதோவன்னில் நிட்பான லகிரியாலே
இற்பதுவருஷம்பதது யிருந்தானுஞ்சும்மாகாட்டால
மற்பதுபானமத்தால் வாசலைத்திரந்துப்போட்டு
அற்பதுயெட்டுப்பேரு மவள் தனைவொத்துப்பாரே 261

ஒத்துப்பாரணிமாத்தொட்டு வேகோராகோ யெட்டுநாமம்
எத்துப்பார்நந்திகண்டால் யெண்வருமேவல்கேடபார்
உத்துப்பாரிதுவேமூலம்வுசந்திட்ட துரியாதீதம்
கொத்துப்பாரிதுக்குள்வாசி குமட்டினீமாட்டுமொட்டே. 262

மாட்டுரவரிசைகேளு வளமாகசொல்வேன்யானும்
வாட்டுரயிடத்தேவோட்டில் வங்கென்றுவுள்ளேவாங்கும்
தீட்டுரநந்திக்குள்ளே சிங்கென்றுகும்பித்தோங்கி
ஆட்டுரகோடிபானு அங்கென்றுல்கண்டமாமே. 263

அங்கென்றமூலஞ்சத்தி அவள்வாயிலோங்காரந்தான்
பங்கென்றசுழியோடாறும் பரிந்தோடிமணிக்குள்நிற்கும்
சிங்கென்றுவுத்துப்பார்க்க தெருவாறுவெளியாய்க்காணும்
வங்கென்றுவாங்கிக்கும்பி மாணிக்கவொளிபோலாமே. 264

வொளியிலேவுத்துப்பாரு வோகோகோநந்திகாண்பார்
தளியிலேகண்டாயானல் தழைக்கவேவைத்தியஞ்சித்தி
வெளியிலேபூசைபண்ணி வேதாந்தமதுவையுண்டு
களியிலேபாருபாரு கண்கொள்ளாசோதிதானே. 265

தானென்றபூமியெல்லாம் தனியொருதகளியாச்சு
வானென்றவேளையெல்லாம் வார்த்திடநெய்யுமாச்சு
கானென்றவொளியேபானு கலந்தெங்குந்தோத்திரப்போல்
வேனென்றமூலம்நந்தி விடுபட்டால்கண்கொள்ளாதே. 266

கண்கொள்ளாசோதிகாண கசடரேயெளிதோசொல்லு
அண்கொள்ளாபரமேமூல மதின்மேலேநிற்தமாகும்
விண்கொள்ளாப்பதமுங்கொள்ளா வேதாந்தமுடிவுங்கொள்ளா
தண்கொள்ளாபதத்தைநீயுஞ் சதாநித்தஞ்சாதித்தேறே. 267

ஏறிலெட்டுஞ்சித்தி யெடுத்திடுகவனமார்க்கம்
தேரினல்வாதிசித்தன் தேறுட்டால்மனுஷமாடு
பேரினல்பார்த்தேனென்பார் வெளிச்சத்தைகண்டேனென்பார்
கூறினல்மதுவைக்கொள்ளார் குலாமர்கள் சொல்லும்பேச்சே. 268

பூசைபோனமாய்கையின் செய்கையைச்சொல்லுதல்

விருத்தம்.

சொல்லியப்பூசைப்பண்ணி துஷ்டர்கள்பெண்ணைச்சேர்வார்
மல்லியதேவிபார்த்து பயக்கத்தாவழிவாயென்பாள்
எல்லியதீனிற்செல்லாற் றெழிந்திருநதாடல்செய்வார்
அல்லியயித்தைவிட்டு அப்பனேமூலம்பாரே. 269

## மூலநெரிசனம் விருத்தம்.

மூலமேபழக்கமாக முட்டிநீமதுவையுண்டு
கோலமேவெளியாய்ப்போகும்குமட்டிடாமூலமூலம்
காலமேவங்கென்றாணு கடுகவேசிங்கன்றாணு
ஆலவேயுண்டானுட்டை அம்மம்மாகாணலாமே. 270

காணலாமென்றநாலே கண்டுசந்தோஷிக்காதே
ஆணலாமதிலேநின்று வுரைத்தகால்மெத்தநன்று
தோணவேபொருளுந்தோணுஞ் சுருதியின்நகரந்தாண்டும்
ஆணலாம்பூட்டுபூட்டு அகண்டந்தான்மூலம்பாரே. 271

மூலத்தின்மேலேநாலுமுயற்சி சிங்குவையைத்தாண்டி
கோலத்தின் காலவீடு கொள்கையைநிரந்தான்பொன்னை
சாலத்திநிகழ்தாஹறு செல்வமாய்பலவாரிட்டு
வேலத்தின் செபத்தைப்பணணு வெருளாமற்ருநிருந்தே. 272

இருக்கிறவேளார்க்கெந்த எடுக்கிறதெல்லாங்காண்பார்
தருக்கிறகுசவன்கூறு சாற்றுரேன்நன்ருய்க்கேளு
மருக்கியமயிரொலும்பு வழங்கியபிறைச்சிதோலும்
செருக்கிக்நம்போடஞ்சும் செந்திலாக்கூறுதானே

## தத்துவம் விருந்தம்

கூரானபிரமன்பக்கங் கூடியேவாணிநிற்பாள்
வேரானதொன்றுமில்லை விரைந்துநீவாசிகூட்டி
தேரானசுவாதிஷ்டானங் துலங்கினபடியேபாரு
ஆரானவிரலின்மேலே அப்பனேமாலைப்பாரே. 274

மாலுக்குப்பிரையாங்கோட்டை மகாரந்தானதுக்குள்பாரு
மேலுக்குயிதழ்தான்பத்து விரிந்திட்டயெழுந்துநகேளு
சேலுக்குள்பையகொட்டு சிமந்திட்டல்வாமம்பத்தும்
ஆலுக்குளநிற்கும்பாரு அதினிரம்படிகந்தானே. 265

படிகமாம்வீட்டுக்குள்ளே பார்மேகவன்னமால்தான்
அடிகமாம்வாமம்பாக மணைத்துலட்சுமியும்நிற்பாள்
மடிகமாம்ரசத்தோடாறு மகுத்துவங்காண்பார்காண்பார்
எடிகமாம்வாதன்கூடி யேற்றுரேன்புனிதந்தானே. 276

## இலவங்கப்பூச்சூரணம்.

### ஆகிரியவிருத்தம்.

புனிதமிகுலவங்கமோடதிகதிரிகடுகதும்
புகழ்சிறுதேக்கு செவியம்
பிரியகுணதாளிசம் அதிவிடயஞ்சீரகம்
போன்றநற் சித்ரமூலம்
தனிகுணமதாகிய பத்திரியுமிக்கன
தாமதமின்றிநலமாய்
தடங்கலில்லாமலே சபாசெனவிளங்கவே
தாளெரு பலமதாக
இனிதமுறவறுத்திதை வடியதுகொண்டுபின்பு
இசையதேத்தாங் கொட்டையும்

இன்பமுடனேநீரிலூரவைத்தணையும்
மேர்க்கலரெண்டுபலமாம்
கனியவேவடி கொண்டு கரிச்சாலையின் றாளும்
கணக்குட னொருபலமதாய்
கருத்துடன் சேர்த்துபின்ச மனிடைசர்க்கரை
களிப்புடன் சேர்த்துமிகவே
பனிபோலேவருகின்ற பிணிகள தூங்கவே
பாங்குடன் பாககளவதாய்
பயற்சியாய்க்குடுததிடவயத்தின்செந்தூரமும்
பகர்குன்றி நாலிடையதாம்
நனிதமில்லாத தோர்சோகைமுதலானதும்
நவிலுவேன் மெலிக்கத்தவுடலும்
நாடாதுதேகத்தில் பித்தக்ஷயரோகமும்
நரம்பின்வலியிளைத்த வுடலும்
தணிவாக்கிமேனியேசெய்வதுமன்றியே
தற்கிக்கும் வெகுநோய்களை
தாமதிக்காதிது வேல்விழிசெவந்திடும்
தழைக்கவே பெருமையுணர்வாம்
இனிவானபத்தியம் புகையிலைப்புளியுமே
தீரவேதள்ளியேதான்
நெளியேமிளகுநீர்முருங்கைகத்திரிபிஞ்சும்
தென்புடன சனமிடுவீர் 277

## கலிவிருத்தம்.

அசனமானபின்னே தலைமுழ்கவும்
விசனம்நீக்கி விளக்கெண்ணெய்சிக்காய்
சுசனையாக வேஸ்நானமது செய்து
வசனமெய்ப்படியாகப் புகழ்ந்திடே 278

## ஞானவிருத்தம்.

புகழானஞானத்தின் மார்க்கங்கண்டால்
புத்தியதுமிகதுலங்கும் பொய்யொன்றில்லை
பகடிதமாய் படித்ததினல் வருமோஞானம்
பராபரத்தாயிருந்த விதப்பாகமெல்லாம்
செகமாய்கைதனை செயித்தால் மேன்மையாகும்
சத்துருமித்துருவென்றசரசமுண்டு
பகராதகெவுனமணி நாட்டங்கண்டு
பாலித்தால் சகலசித்துவசமதாமே 179

வாசனையால் மனவருத்தமாகுமாகும்
வழியறிந்து பக்குவமாய் நடக்கவேண்டும்
ஈசனைநாம் மறவாமலிருக்கவேணும்
இருளகற்றி வெளிகாண்க யுறுதிவேணும்
பூசனையாம் மதுவையுண்டு வெட்டிப்பார்த்தால்
போதிப்பாளாறுதலம் விளங்கவேதான்
மாசனத்தின்முன்பாக விளையாடுகின்ற
மந்தரவல்லி யிவள் ரூபமறிவதாச்சே 280

ஆச்சப்பா யிந்தவிதத்தைகாண்பதெப்போ
ஆசானலறிவுகந்து கேட்கவேண்டும்
பேச்சப்பாபேசினதால் பெரியோராமே
பெலத்தபுத்திக் காரனுக்குத் தோணுந்தெய்வம்
வீச்சப்பா வீசினதால் வருவாளோசொல்
வேதாந்தம் நிலைக்கவென்றால் நிசத்தைத்தேடு
கூச்சப்பா கூச்சலென்ற வெகுளிவிட்டு
கும்பித்தாலப்பொழுது கூடுவாளே
கூடுகட்டியிருந்த விதங்கண்டிலாயோ 281

கொஞ்சமல்ல வேட்டுவன்றான் றெடுத்தகாதை
பாடுபட்டு மனுரூபமாக்கிக்கொண்டு
பழங்கதையை யறியீரோபடித்தவல்லோர்
நாடுவிட்டுக் காட்டினிலே வலைந்தாலென்ன
நடக்குமாயெதுபொருளும் நன்மையாகா
ஏடுதனில்வரைந்தவிதம் படித்துத்தேர்ந்து
இருதயத்தை பெலப்படுத்த சித்திதானே 282

சித்திக்கநந்திபதந்தெண்டம்பண்ணு
சீலமுள்ளவழியதனைத் திறப்பாளப்பா
மத்திபங்கள்வாராதுவெளிச்சந்தோன்றும்
மகாவித்தை ஆட்டமது செய்துவைப்பாள்
நத்தினபேர்யாவர்களும் பிழைத்துப்போனார்
நமக்குள்ளே கண்டறிந்துத் தெளியவேணும்
ஒத்தியேபோகாமல் மவுனத்தாயை
வாழுங்குடனே சோதித்து நாடிப்பாரே 283

## வேறுவிருத்தம்

நாடிவிதமிகுவாகவே நயனதுரையிதுவாம்
பாடியுணரான சுபபகர்வானது நிசமாம்
தேடிமலர்மிசையானது தெளிவானதுவசமாம்
கோடிமுகமிகநாடிடு குருவாகியமொழியாம்

மொழியாகிய வாரீதனில் முயன்றேவழிபாரும்
வழியானது பெரியோர் சொலுமமிர் தநிழலூரும்
விழிசாயவே மெதுவாகவே வினவபுகழ்சேரும்
ஒழியார்நல்வச மாமிதுவோதலி துமூரும் 285

நிதமாம் பதபிதமானது கதையானதுயிலேயே
பதமாங்கலேமதநாடிடுத்தன தாமங்துதியோகம்
விதமாயுறகுதலாகிடா புனிதகுணமிகுபால்
சதமாஞ்சுதப் பதஞரிசை மிதமேலிசைவிரைவாம் 286

## திருமூலரியற்றிய

### மாவுலிங்கப்பட்டை சூரணம் - விருத்தம்.

விரைவான மாவுலிங்கப்பட்டைதானும்
வினைவுடனே தானெடுப்பாய்பலமெட்டாக
குரையாமல் தானெடுத்து வடிதான்கட்டி
குணமுடனே யிதில்சேர்க்க மருந்தைக்கேளு
வரையானவெட்டிவோர் விலாமிச்சன்வேர்
வரிதானசிறுகுருஞ்சான் மேனிவேரும்
துரையானகொளிஞ்சியின் வேர்கூளத்தின்வேர்
துலங்குசின்ற பாதிரிவேர் துளசிவேரே 287

வேரானமுசுமுசுக்கை முசுட்டைவேரும்
விசையானவிளாத்திவேர் நன்னாரியின்வேர்
தாரானகுருந்தொட்டி அமுக்கிருவும்
தயவானபரங்கிசக்கை பலமொன்றப்பா
மாராமல் வகைவகைக்குசரியாய்ச்சேர்த்து
மயங்காமல் சூரணமதாக்கிக்கொண்டு
கூரானபுண்புரைகள் மேகவெள்ளை
குடிகெடிக்கும்கிரந்திகுட்டம்குலைந்துபோமே 288

குலைந்துவிடும் பவுத்திரமும் படைகள்மற்ற
குரும்பான சூலைகண்டமாலை தானும்
அலைந்தவித குணங்களெல்லா மகண்டுபோகும்
அம்மம்மா யென்னசொல்வே னவிழ்தநேர்மை
வலைவசரிபோட்டதொக்குஞ்சூரணந்தான்
வகையானபத்திய மோகடினமாகும்
நிலையாக வுப்பதனை வருத்துச்சாதம்
மியல்புடனே வுண்ணிடவேநீங்குந்தானே 289

நீங்கவென்றால் வேருகடியளவாய்க் கொள்ளு
நிதாநிக்கவென்னீர் பாலாகுமாகும்

பாங்கான விளக்கெண்ணெய் அறப்புஸ்நானம்
பகர்வுடனே செய்யமண்டலத்தில்தீரும்
ஏங்காமல் கொண்டவர்க்கே ஆகுமாகும்
யேனென்று யிழந்துவிட்டால் வியாதிபோமோ
தூங்கியேதிரியாமல் சூரணத்தையுண்டால்
துயரகலவே நீக்கச்சொல்லுங்காலே 290

## ஞானமார்க்கதீபவிருத்தம்

சொல்லுதற்கு ஞானமென்பார் வாய்பேச்சாமோ
சுகிர்தமாய் பாலுண்டால் தோற்றிவைக்கும்
வெல்லுதற்கு விநயபரன் பதத்தைப்போற்றி
வேதாந்தவோசை யினிலிருந்துகாணும்
தொல்லுவிளையாட்டினத்தால் கெலிக்கப்போமோ
தெருவுதனில் மாணிக்கங்காண்பாருண்டோ
நல்லுதலாய் வீடுகட்டி கொள்ளவேண்டும்
நமன்றனையே லகுவாகநயந்துதள்ளே 261

நயன்றபடி ஞானவித்தை கற்கவேண்டும்
நமக்கென்ன வென்றிருந்தால் நடக்குமோசொல்
குயவனுட பாண்டவிதமறிந்திலாயோ
கோலமிட்டவர்ன மென்னசாயமென்ன
பயன்றமொழி மார்க்கமிதை பணிந்துபாரு
பாக்கியமாம்போக்கியமாம் பண்ரபேர்க்கெல்லாம்
சுயமிதுவாம் வெகுதீர்க்கந்திறமையாகும்
சோடகத்தினம் பலதைதேர்ந்துபாரே 292

## கலிவிருத்தம்

பாரெனப்படி யாமிதுதீர்க்கனம்
காரெனப்படிகற் பகவுற்பனம்
சாரெனப்படி சர்க்கரையொக்குமின்
பேரெனப்படி பெற்புறனூற்றுவாம் 293

ஆற்றிவூற்றி வுலாவியேவேற்றிடு
மாற்றிமாற்றி மடித்துவிதழ்தனில்
சாற்றிசாற்றி நினைத்துசுழித்திடு
போற்றி போற்றிப் பொருந்துவர்மெய்யரே 294

மெய்யதானதுமேல் வீடரைதனில்
பையவூட்டிப் பலிக்கசெலித்திடு
கையுமெய்யுமாய் காண்பதிதுநலம்
ஐயர்பாதம் மர்ந்துதொழுதிடே 285

தொழுதுநின்று நிழல்விதம்நீங்கியே
பழுதிலாமலே பார்த்துமுடித்திட
வழுவிலாமலே வாழ்த்துதலாகுமாம்
முழுதுஞான முறைமையதாகுமே 296

விருத்தம்.

முறையான வைத்தியத்தின் மார்க்கந்தன்னை
மூட்டினேன் லகுவாகக்கேளுகேளு
சரமானசொல்லரிந்து சாஸ்திரத்தில் தேர்ந்து
சகலருக்கு முபகாரமாய்நடந்து
அரசானதாய்பதத்தைவணங்கியேதான்
ஆசையென்ற வாய்தனிலே சிக்கிடாமல்
விரசாக வேதாந்தனிலையில்நின்று
விவேகமுள்ள பண்டிதத்தை வினவிப்பாரே. 297

சட்டமுனியாரியற்றிய

சுத்தசஞ்சீவி யாநந்த சூரணம்

தரு-இராகம்-நொண்டிசந்தம்.

ஒருவாபராபரமே-யெங்களுற்றமமே-கனவித்தகமே.

தருவாய்வரமெனக்கு-பதந்
தாளிணையே-யெனை-ஆளிணைசெய்
தவமான நற்சுடரே-திரு
தத்துவமே வுந்தன் சித்தமதே
நவதூயபொற்கடலே-சுய
நாயகனேமலர் சீலனே நீ
தயையான சூரணத்தை-இதோ
சாற்றுகிறேன்மிக யேற்றுகிறேன்
புயமானயேலரிசி-வங்கம்
பூட்டுகிறேன்பத்ரி நாட்டிடுவீர்
வில்லானசெங்கழுணி-கோஷ்டம்
வெண்ணிடவே இன்னம் பன்னிடுவீர்
சொல்லான திப்பிலியும்-மிளகு
சுக்குடனேயெடு மிக்கனவே
வளமானசித்தரத்தை-புகழ்
வாறுபலமொக்க பேருரைகேள்
தளமானதோர் ஜாதிக்காய்
தான்பலமாங்குணத் தேனினவாம்
இன்பதயையான-இஞ்சி

இரண்டுபலங்கற்கண்டுடனே
தென்பாமிவைகளெல்லாம்-பார்த்து
தேர்ந்தெடுப்பாய்கண்டுசார்ந்திடவே
ஒன்றாய்வருத்திடித்து-பொன்
ஒலையைப்போல்நிரம்வேலையதாய்
குன்றாமல்சட்டிதனி-லிட்டு
கூட்டிடுவாய்பால்மேட்டிமையாம்
நிறைதான்வொருப்படியாம்-தேன்
நேத்தியுடன்பலம்யூற்றிடுவீர்
குறையாமல்நேர்ந்ததற்பின் -சொல்
கூறுகிறேன்பாகம்-தேரிடவே 298

வேறு-விருத்தம்

தேரியேவிளங்குதற்கு செப்புகின்றநேர்மைகேள்
ஆரியர்முன்னோர்கள்சொன்ன ஆகமவிதிப்படி
தாரிடாமல்கைமருந்தை சூட்கமாகவுண்டிடு
பேரிலங்குமென்றுவாய்மைபேசினர்களப்பனே. 299

விருத்தம்.

அப்பானமூலிகைபாம்முசுமுசுக்கை
அன்பானரசமதுவும்படிகால்தானும்
ஒப்பாகவொன்றாகக்கலக்கியேதான்
ஒருமையுடனமெதுகாங்கையாயெரித்து
திப்பானதிப்பிகளை வகலச்செய்து
திரமாகவடிகட்டி யெடுத்துக்கொண்டு
தப்பாமல்கற்கண்டுசர்க்கரையுமேதான்
தயவாகவைத்துபலங்கூட்டிடாயே, 330

கூட்டியபின்தீவராட்சிபழம்பலமதொன்று
குணமாகவாயிலிட்டுதின்னபின்பு
நாட்டமுடன்பாலதனைகுடிக்கச்சொல்லு
நாதனருள்பெலத்தாலே தீரும்நோய்கேள்
வாட்டமிட்டுசிரசில்நிற்கும்பித்தந்தன்னை
வகற்றியேபுத்தியதைத்தோற்றிவைக்கும்
பூட்டியதோச்பயித்தியத்தைக்கண்டித்தேதான்
புனிதமுடன்நல்வாக்கு பொருந்துந்தானே. 311

பொருந்தவேசூரணத்தைசியங்கமென்பார்
புத்தியுடன்பார்த்தவற்குபொய்பாகாது
திருந்தவேமேனியெல்லாங்குளிர்ச்சியாகி
தினந்தினந்தான்சந்தோஷமாகுமாகும்

வருந்திஞல் யெதுவுமொருதுரும்பு போலாம்
வாய்ப்பேச்சாலாமோதான் வகுப்பதற்கு
பொருந்துருததிவுலேயில் வைத்துதீயைமூட்டி
பெரியதணலுண்டான வருகைதானே
வருவான கதையாகும் புவியின்மீது
வசனிப்பேன் பத்தியத்தைவயணமாக
கருவானயிச்சாவின் பத்தியமாய்நில்லு
காடைமுயல் கவுதாரி வுள்ளாநாகும்
சிருசானவூர்க்குருவியாமைதாரா
சிதராமல் விடையோடு நெய்பால்சாதம்
தருவானவாழைகச்சல் காய்வகையைப்பார்த்து
தடங்கலன்றி நன்ருகக்குடிக்கலாமே

## ஸ்நானஞ்செய்யபாக விருத்தம்

குடுத்தபின்பு மூன்றுநாள் சம்பளத்தின்சாற்றை
குணமாகநல்லெண்ணெயில் மத்தித்தேதான்
தொடுத்தேதான் சிரசுதனிலூரத்தேயத்து
துடியானவெந்நீர் விட்டலரவூற்றி
சடுத்தமில்லாப்படியேதான் றுடைத்தபின்பு
சலுதியாய் மிளகுரசனமூட்டு
கடுத்தபொல்லா பித்தமதை மாற்றுமாற்றும்
கர்த்தாவைப்பணிந்து செய்யக்களிப்பதாமே 314

இதில்-ஒக்காளம்-மயக்கம்-வாந்தி-நீர்க்கடுப்பு-வெறி.
நீங்கப்படும்.

## விருத்தம்.

களிப்பாருளத்திலே களங்கம்நிலேயாது
ஒழிப்பாருளத்திலே யொருகோடிகோத்து
பழிப்பாருளத்திலே பண்பதுயாதிலே
கொழிப்பாருளத்திலே கோள்விள்ளப்போமோ
விள்ளப்படாது வேதாந்தமூலத்தை
அள்ளித்திரிந்தா லவரோடுபெரியவர்
ஒள்ளியசசந்திரன் ஒளியுருப்பாதியும்
தெள்ளியறிந்துத் தேடுவீரிங்ஙனே

## இதுவுமது வீம்பர்கள்

இங்ஙனமென்று லேற்றத் தருவரோ
அங்ஙனவென்றுலவர் வசமாமோ
தொங்கனவோடித் துடுக்குடநாடிஞல்
எங்கணுமெச்சுமோ யிதுதயைவாட்டம் 317

ஆட்டமதாடுவர் அமர்ந்திடார்தன்னிலே
மேட்டிமையென்ன வீம்பெனனவீணிலே
கூட்டமென்றாற்றினல் கூடுமோஞானம்
பூட்டினசிலம்பொலி போன்றவரானதே
ஆனநற் பீடமமைப்பது தீர்க்கம்
தானத்தைத்தீண்ட சதகோடிவானந்தம்
ஞானபதின் மீன்போல வகுப்பதைத் தெண்ணிலர்
ஞானத்தைக்கற்றல நற்பெலன்றுனே

## இதுவுமதுதானம்

பெலனென்னசொல்லு பேசாதமந்திரம்
தலமென்னசொல்லுஞ் சாகாவீடது
நலமென்னசொல்லு நமன்றனை நீக்கலால்
புலமென்னசொல்லு பொருளிதுவாமே
பொருள்தன்னைக்கண்டு பொதுவினில் விள்வதார்
அருள்தனக்கேதான் அனந்தநூலாச்சுது
இருள்தனை தீர்க்கயெடுத்தது சொல்லெலாம்
தெருள்தனை செவியிற் செப்புவர்தாமே 321
தாமெனவோதுந்தனக்குள்ளே நாளும்
நாமெனவூன்றினல் நடக்கும்மோயெவர்க்கு
போமெனச்சொன்னலவர்பவம்போமோ
ஆமெனவிருக்கும் அம்பரசுழினையே 322

## மனதடக்கம் ஆசிரியவிருத்தம்

சுழினைநலமிகுபுகழ்வ திறமையதிலாசையுஞ்
சுகிர்தநவகிமையினவமாம்
வழிவகைகளிசையவொரு நிலமைசுபயூகன்
வருகையதுபெலனுனது
மொழிபரவுமேலணியா லோதுதிரையூடனுதல்
முருகவலையானெனசொலும்
பொழியுதுபாரிரவுபக லொளிகளணிவாகன்
பொய்கையில்லாதசெயலே

## கலிவிருத்நம்

செய்துபார்த்தநற் கேயுருதோணறுதல்
உய்துபோவென வாழ்த்து.மரன்பதம்
எய்துயெய்து மிசைகொளவுற்றதை
டெய்துபொன் மலராகும் மிர்தசீர்

## ரோமரிஷியார் இயற்றிய

### அழகிய சொக்கசூரணம்.

### இரட்டை யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட வானகம் புவிமுதலனைத்தையும்
    சிருஷ்டித்த சின்மயப்பொருள்
சிற்பரமவானந்த மணிமந்த்ரவசிகர
    சிரோன்மணி பொற்குழலிவிமலி
பேர்கொண்டவைந்துரு விநாற்றலிணைமாற்றிட
    பெட்பணிகளாகவேதான்
பெரிபநயனச் சுபமீதேறிசிங்குவை
    பிரியமாய்க் கமலமொப்பி
நேர்கொண்ட பிரயையே நிறுத்தியே மனையினில்
    நீடிக்கவே தமிகுவாம்
நெறிமுறைகள் தவராமல் நிட்டையிலிருந்துகண்
    நிதானிக்க வரமருளுவீர்
ஏர்கொண்ட சுக்குடன் முளிசைப்பத்திரி
    இலகுமாம் பரங்கிப்பட்டை
எழிலானவால்மிளகு லவங்கமொடு குருசாணி
    யேலமும் வாய்விளங்கம்
கார்கொண்ட தினியதொரு சீரகம்வெண்மிளகு
    கனமான நெல்லிவற்றல்
கருதரியமுத்தமோடாத்தையுமிக்கணைக்
    காணவோர்பலமுடையதாம்
தார்கொண்ட திப்பிலிவைந்துபலமானதை
    தயையுடன் சேர்த்துபின்னர்
தனியான யிருவேடிக்கசகசாவிடையதும்
    தழைக்கவேமாஞ்சிலோடு
வார்கொண்டவனமூலியானதுபிருயிநிலே
    வளர்கின்ற மருதன்பட்டை
வகையிதுவா மிருபலம்வேண்டியே கொண்டபின்
    வயணமாய்வருத்திடுத்து
தேர்கொண்ட துயிலினல்வடிகட்டி யானபின்
    செழுமையாய் வைத்துமேலாய்
தித்தித்த சர்க்கரை சரியிடையதாகவே
    சேர்த்துதான் வுண்ணுவீரே. 315

### வெண்பா.

துயரம்போம் வல்வினைகள் தூரவகன்றாவிடும்
பயமரவே கொண்டவர்க்கு பக்குவமாம்-நயமிலகும்

வல்லாறை மூலியதை விராகனிடையுஞ் சேர்த்து
நல்லாகவுண்டால் நலம்.

## திருப்புகழ்சந்தம்.

நலமாமிகவோர் மொழிகேள்மிக
நாடாததுவாம்சிரலும்
பெலமாகிய பித்தகனத்தலும்
பேராதெரு மேககிறந்தியும்
வலுவாகிய வாயினினூரலும்
வகைவேகமதான வுளச்சலும்
பெலமாய் வருவால நிலச்சலும்
பேசாமலே யகலுவதுண்மையே பொதுதானே

உண்ணார்க்கொளிவித மதுகாணுமோ
ழ ரையார்க்கனுபோக மதாகுமோ
கண்ணார்தனை பார்த்திடவேவரும்
கணிதப்படியா மெனவேவகை
எண்ணார்க்குளதோ திருவருளடி
என்றுநதுணையது நிலைகெதிமதி
பண்ணுகியமொழி யுணராகிய
பரமப்பதம் வதுமிகுவாருதி வதுதானே 318

## கலிவிருத்தம்

அதுவிதத்தினில் நின்றுவுருக்கமாய்
பொதுவிதத்தினில் பெற்றிடுவுத்தமம்
மதுவிதத்தனை நீக்கியேநெல்லிக்காய்
சதுவுதத்தனை யூட்டிடுநல்லதே 319

## இதுவுமது பத்தியம்.

நல்லதாகுமிதற்கு நேர்பத்தியம்
சொல்லுவேன்மிக வுண்மையதாகவே
வெல்லுவேன் நெய்யும் பால்மிகவாட்டும்
கல்லுவேன் வாழைபிஞ்சதுவாகுமே 320
பிட்சதான முருங்கையவரையும்
வஞ்சமில்லா வழுதலைவற்றலும்
நெஞ்சமே மகிழானதோர் சுண்டையும்
கஞ்சமாம் புளியாரையாகுமே
ஆரையோடு துவரைப்பருப்பதும்
கீரையில்லா கிழங்கானின்வற்றலும்

வேரையொன்றும் விகடமாய்க்கூட்டிடா
பேரைபாரினி பேசுவனப்பனே 322
அப்பனேயிளங் கடையதாகுமாம்
ஒப்பமாய்திரு வூர்க்குருவியதும்
தப்பிலாமுய வுள்ளான்கிளுவையும்
செப்பமாய்நெய்யில் தானேபொரித்திடே 323

விருத்தம்.

பொரித்தகறி கறுக்காம லெடுக்கவேணும
பொன்மயம்போ லானபின்புபார்த்துக்கொள்ளு
தரித்திரத்தால் செய்யாமல் விட்டிடாதே
தவறினலென்பேரில் குற்றமில்லை
அரித்தவிதநோய்களைத்தான் நீக்கும்நீக்கும்
அனல்கொள்ளா திருக்குமப்பா ஆய்ந்துபாரு
விரித்ததனில்பொய்யல்ல விவேகமாக
விளங்கவேசொன்னபடி விதஞ்செய்வீரே 324

ஸ்நானம்.

விதமாகஸ்நானமது செய்வதற்கு
விருப்பமுடன்சொல்லுகிறேன் வினவாய்க்கேளு
பதமாகநெய்யதுவும் பலந்தானென்று
பக்குவமாய்சிரசுதனிற் றேய்த்துக்கொண்டு
இதமானசீயக்காய் வெந்நீர்விட்டு
இசைவுடனேமுழுகிவரப் பிணிகள்நீங்கும்
நிதமுனைத்தான் கெடுக்கின்ற சூடணைத்தும்
நிதானமதாய்நீங்கிவிடும் நிதந்தென்பாமே 325

வேறு கலி விருத்தம்

பட்சணிநோக்கால்
தென்புதரும்பாரு
முன்பதத்தைக்கோறு
பன்புநெறியூறு
இன்பவரும்யேறும் 326

மயிர்ப்பாலம்
ஏறுவதுகண்டு
தேறுவதுகொண்டு
மாறுவதுவிண்டு
சாறுநிதம்பண்டு 327

ஞானவிதி
:பண்டகையின்சாலே
விண்டிலர்கள்சோலே
கண்டவர்கள்வாலே
அண்டிடுவோர்கோலே 328

அங்குலம்நாலு
கோலேயெடுத்தாட்டு
நூலேதொடுத்தாட்டு
வேலேயிலேதீட்டு
பாலேநிதமூட்டு 329

திறந்தல்
மூட்டிவிட்டாலாகும்
கோட்டியெலாமேகும்
சாட்டிநிலைப்பாகும்
ஆட்டிலறயூகும் 330

இடமிதுவெனல்
யூகையுடன்வைதது
தாகையிடுமுத்து
சாகையெனப்பற்று
தோகையர்சொல்லற்று 332

கைத்தொழில்
சொன்னவழிநித்தம்
வன்னமொழிப்பத்தம்
கன்னலிதுசத்தம்
நன்னுமதிசித்தம் 333

கருதத்துவம்
சித்தமதுமாட்சி
அத்தனருள்காட்சி
சுத்தமுள்ளசூட்சி
வித்தையிதுசாட்சி 334

ஞானப்பெண்
ஆச்சியவள்தானே
பேச்சில்நடைதேனே
வாச்சிடுவாள்பானே
ஏச்சுடுவள்மானே 335

அவையடக்கம்
மானுபமாயற்று
தானுமதிலொன்று
தேனுமுருங்கற்று
நானுமெனப்பற்று 336

மூலதெரிசனம்
பற்றியுணரையன்
உறறபதமெய்யன்
கற்றவர்க்குகையன்
குற்றமிலாதுய்யன் 337

பரிசுத்தவகை
துய்யகலைமாது
செய்யுள்வகைபாது
மையலிலாகாது
வையமலர்தாது 338

குற்றமற்றது
தாதுகுணராசி
வாதுசொலாள்நேசி
கோதுவுராசூசி
போதுமிவள்வாசி 339

ஆனந்தவொளி
வாசிமலரேற்றி
பூசிவிடுவூற்றி
நேசியினக்தேற்றி
பாசிவிழலாற்றி 340

தோற்றும்புகழ்
ஆற்றிபூசைதன்னில்
ஏற்றிடுவீர்முன்னில்
தோற்றிவிக்குங்கண்ணில்
போற்றிடுவீர்நன்னில் 341

தோத்தரித்தல்
நன்னிலத்தோர்காணே
கன்னிகையைப்பேண
சொன்னமுறைத்தோண
அன்னமுறையூண 342

## திறமைபெற்றல்.

முறையுனக்குவுண்டு - திரையுனக்குள் கண்டு
வரைவின் நெறிபண்டு - துரைமொழியார் விண்டு

## கொங்கணர் இயற்றிய

### சூட்சாதி சூரணம் - விருத்தம்.

ஒழியாத பவுத்திரங்க ளொழியவென்றால்
உரைக்கிறேன் மேனியிலேசமூலமப்பா
நெளியாமல் நிழலுலர்த்தா யுலர்த்தியாட்டி
நேத்தியாய்வடிகட்டி வேருகடிதான்வாங்கி
கழியாதவெண்ணெயிலே குழப்பிவுண்பீர்
காங்கனது வுலந்தரோய் கடினமரனல்
அழியாமல் மண்டலந்தா ணுண்ணச்சொல்லு
அப்பனே நீர்பாச்ச லாறுந்தானே. 343

ஆறமப்பா யிம்மருந்தை நிசமாய்சொன்னேன்
யாவருக்குஞ் சொல்லாதே ஆத்தாள்சொன்னாள்
மீறியதோர் கொஞ்சநாள் வியாதியென்றால்
விரைவுடனே யிருபதுநாள் கொள்ளச்சொல்லு
வேறுபடும் வியாதியென்றால் மண்டலந்தானூட்டு
விளம்பினேன் சூரணத்தா லுண்மைவுண்மை
பாருமொரு பதார்த்தங்க ளருந்தவேண்டாம்
பகர்வான நெய்பாலும் அசனமாமே. 344

### கலிவிருத்நம்

அசனமுற்றிட ஆக்கைக்குறுதியாம்
விசனமாற்றிடா விதமறிந்துண்டிடில்
வசனமொப்பிது வல்வினைப்போகவே
சுகனையாகவே சொற்குணமைந்ததே. 345

### வேறு-விருத்தம்

ஐந்துடனைந்து மறிவீரேயாகில்
கிந்தைத்தெளிந்து செவ்வையுருப்படும்
தந்தையினாலே தவமதுபெறலாம்
நிந்தைநீக்கி நிறைவழியாமே. 346

### கேழ்வி,

ஆமெனச்சொல்லு மவைகாண்ப தெவ்விதம்
போமெனச்சொல்லிபுலம்புவர் கேட்டிலார்
தாமெனச்சொல்லி தயையுள்ளமுன்னர்
நாமெனச்சொல்லி நாட்டினர்தானே. 347

### வெகுளி,

நாட்டினர்பெரியோர் நவின்றதுவெல்ல
ஆட்டித்திரிந்தா லாகுமோயெதுவும்

மேட்டிமைக்கண்ணை விட்டனப்போக்கு
தாட்டிகமாமெனசாற்றுவர்சாற்றியே 348

## குணவெழுத்து,

சாற்றுதுரெண்டு வெழுத்தைக்கண்டு
யேற்றுதுமூன்று வெழுத்ததினால்யீது
போற்றுதுபாருபுகழ் பஞ்சகர்த்தாள்
வேற்றுமையில்லை விடிந்ததைக்கேளு 349

## கனவினவல்,

விடிகாலை வாரணம்விழித்தது சொல்லுறும்
படித்ததைக்கண்டு பகரிதமாக
வடித்துவடித்துவாய் மதம்பேசினால்
முடித்தசொல்வருமோ முனைகண்டபேர்முன் 350

## கங்குலகற்றல்.

பேரென்னவென்று பெருமையில் கேட்பர்
சீரென்னவென்று தேர்ந்திடார்தேர்ந்திடார்
காரென்னவென்று களித்துப்பின்றன்னிலை
ஊரென்னவென்று வுகந்தவராரிலை 351

## உலகவழக்கு,

ஆரிலையெனவும் அரியாமல் சொல்வதோ
பேரிலையெனவும் பெருமைகொண்டாடுவர்
தாரிலை தருக்களவை யினக்காதையாம்
நேரிலையென்று நிதம்நிதமெண்ணிடீர் 352

## பெரியோர்களுயர்வு

எண்ணிக்கையுண்டோ ஏகசுயாநந்தம்
ஒண்ணிக்கைகற்றிலார் யிடும்பையின் வார்த்தையால்
உண்ணியபேர்க்கு பொருள்நெறிகாணுமாம்
திண்ணங்களில்லை தெய்வச்செயல்தாமே 353

## தத்துவம்

தாம்தனியாகி தனித்ததுமுத்தொளி
தேம்தனிப்பின்றிருமலர் திருபொற்பதம்
நாம்தனில் நாமேநாடியே பார்த்தால்
காம்தனிற் கையினால்காண்பது யூகியே 354

## அறிவுள்தெளிதல்

யூகியாய்நின்றால் வொன்படும் மெய்பொருள்
ஆகியவார்த்தை அவனிவள் வொன்றித்து

தேதியாமவர்க்குத் தெரிதலாமிக்கனம்
மோகியர்க்கெல்லாம் பொய்யெனக்காட்டுமே 355

## கொங்கணவரியற்றிய

### அதிவிதகன்கசூரணம் - கலித்துறை.

காட்டில் முளைத்த வனமூலியெல்லாங் கனக்மதாம்
பாட்டில்படித்தப்படியே யிருக்குயாம்பார்ப்பவர்க்கு
மாட்டியிழுக்க வகைவகையா மிதுமாபெரிது
ஏட்டிலிசைந்தது கண்டவர்க்கே பொருளெய்துமென்றே, 356

### ஆசிரியவிருத்தம்.

என்றிசையுமொன்றினம தாகமயமாகவே
எப்பொழு தொருநெறியதாய்
நன்றியுணராமெனப் புனிதமாய் விர்த்திக்க
நறுபொழிவு பொற்சுயமென
கன்றிதமிலாமல் நிர்க்கமிர்த வொளிபபிரகாச
கழல்தனை சிரமீதினில்
ஒன்றியே சொலுதலிது கனகநிறை சூரணம்
ஒழுங்குடன் பின்வருகைகேள் 357

### வேறுவிருத்தம்.

கைப்பொருளிது வென்கணக்குடன் கேள்மிக
பொய்ப்பொருள் கற்றிபூட்டுது சூரணம்
மைப்பொருளிலை யிதுமாகுணமுற்றிடுந்
வைப்பொருள் மிக்கவசனிக்கு மின்பமே 358
இன்பமாம் தாளிசை இசைவுள்ள கோஷ்ட்டமும்
நன்பெழில்திப்பிலி நலமானசுக்குடன்
பொன்சுயமின்புகழ் சீரகமாஞ்சி
முன்னணிசோம்பு முயற்சிவால்மிளகு 359

வால்மிளகத்தித்திப் பிலிகிரும்பு
பால்நிரமான பரும்வெண்மிளகு
வேல்குலசாதிக்கா யொடுத்தாணி
மால்பெல நெல்லிவற்றலுந்தானே 360

வற்றலுங்கடுக்காய் வதிதமாம்பத்திரி
உறறதோர் கொற்றமல்லியுமாக
பற்றதுவில்லாவக்ரு காரமுலவங்கம்
குற்றமதில் லாபட்டையோர் நிறையே. 361

நிறையொருப்பலமாய் நிதானிக்கவெடுத்து
குறைவிலாதாகக் குணம்பெறனேதான்
மறையவருரைத்த மதுரசொல்போலே
முறைபடியேதான் வருத்திடிப்பாயே 62

இடித்தபின் வடிதானியல் புடன்கொண்டு
படித்தனர்ப்படியே பாங்குடனேதான்
துடித்திடாதெடுத்துத் துல்லியமாக
வடித்ததைப் பீங்கான்றனில் மிகவைத்திடே 363

வைத்ததைப் பார்த்து வகையுடன் சர்க்கரை
கத்தனைப் போற்றிக் கடுகவே சேர்த்திடு
பத்திரமாக யிடைக்கிடைக் கூட்டியே
உத்தியதாக வுயர்வுடன்காலையே 334

காலையுமாலையுங் கணக்குடனுண்டால்
வேலைபோல் நிற்கும் வெகுவிதப் பிணியதை
கோலைபோலாட்டிக் குணங்குடிக்கொண்டிடும்
ஆலையமான அய்யனின் சித்தமே 365

சித்தப்படிக்கி சீர்வழியானால்
புத்தியுருமாம் பொன்மயம்போலே
மத்திபமாகா மனோரம்யம் பொற்பதம்
வெற்றிக்கொடியென விளக்கமதாமே 366

தாமெனநின்றால் தடுக்குங்கனவது
வாமெனப்பூசை வர்த்திக்க வர்த்திக்க
சோமனுக்குள்ளே தோற்றிடுங்கதிரது
காமனை நீக்கிடில் கைகண்டதாமே 367

## நோய்தீரல் குயிற்பாடல்

கண்டதைச்சொல்லுகிறேன்மிகவே யேலலக்குயிலே-யான்
விண்டதைப்பார்த்துக்கொள்ளு ஜெயஜெய யேலலக்குயிலே
பித்ததின்வெட்டைய துங்கிருணி யேலலக்குயிலே-கனல்
வித்தாரபாண்டு விக்கலனல்முதல் யேலலக்குயிலே
அஸ்தியின்வெட்டை சுரமரோசிகம் யேலலக்குயிலே - மிக
சொஸ்தமதாக்கிடுமாம் புகழுற யேலலக்குயிலே
புண்ணாகும்நெஞ்சுதனிலியற்றும் ஏலலக்குயிலே-விம்மல்
எண்ணாமல் நீங்கிவிடும் மிடும்பை யேலலக்குயிலே
தாகம்புரட்டலுடன் வருத்தும் யேலலக்குயிலே-அன்னம்
தேகத்திரேஷமெல்லாந்தணிக்கும் யேலலக்குயிலே
கைகால் யெரிவுகளும் பழம்பிணி யேலலக்குயிலே- நிலம்
மெய்வழியாக்கிவிடும் அவிழ்தம் யேலலக்குயிலே

இவ்விதநற்குணத்தின் மருந்தை யேலலக்குயிலே - கண்டு
செவ்வியதாகவுண்ணவசப்படும் யேலலக்குயிலே

## பத்தியம்.

பக்குவமாகவேதான்வுரைக்கிறேன் யேலலக்குயிலே - கண்டு
மிக்கவேவாட்டிறைச்சிவற்றல்கேளு யேலலக்குயிலே
கத்திரிபிஞ்சுடனே முருங்கை ஏலலக்குயிலே-கிழங்கான்
வுத்தகருவாடாமிதற்கு யேலலக்குயிலே
நெய்யுடன்பாலாகுமிதற்கு யேலலக்குயிலே-அசனம்
பையவேபார்த்துவுண்பீர் பண்பாக யேலலக்குயிலே
அவரைபிஞ்சுடனே துவரையாகும் யேலலக்குயிலே-இதற்கு
நவரையின்பழமாம் பஞ்சதாரை யேலலக்குயிலே
காடைகவுதாரி முயலோடு யேலலக்குயிலே-இன்னம்
பேடையின் குஞ்சாகுமறிந்துக்கொள் யேலலக்குயிலே
மஞ்ஞசகறியாகூ மிகவும் யேலலக்குயிலே-நீங்கள்
அஞ்சாமலுண்ணிடுவீர் நிதம்நிதம் யேலலக்குயிலே

## ஸ்நானஞ் செய்ய.

பார்த்துதலைமுழுகு நெய்சீயக்காய் யேலலக்குயிலே - இதை
சேர்த்துக்கோ ளிவ்விதந்தான் ஜெயஜெய யேலலக்குயிலே
வென்னீரில் ஸ்நானஞ் செய்வாய் மகிட்சியாய் யேலலக்குயிலே
பன்னியமாக நீதான்தெரிந்துக்கொள் யேலலக்குயிலே

## சம்பிரதாய சூரணம் விருத்தம்,

தெளிப்புற்றசம்ப்ரதாய சூரணமென்றே
களிப்புற்றுசெல்லுது கருணையினின்பமாய்
ஒளிப்புற்றுப்பார்க்க வுண்மையீதென்பர்கள்
விளிப்புற்றுசெய்வக மகிழ்வாமே. 369

மகிழ்வர்கள்நன்று மதுரநல்வாக்கியம்
புகழ்வர்கட்குண்மை புண்ணியகீர்த்தியாம்
இகழ்வர்கள் துட்டரை யாதொன்றுமிலையென
துகழ்வர்களாய்ந்து தோய்ந்ததைப்பாரே. 370

பாருயர்சிவதைவேர் பலமுமேபத்தது
பேருயர்வாகப் பெட்புடன்பாலினில்
சேருயர்வாகச் செழுமையாய்க்காச்சிபின்
நேருயராக வெடுத்துமுன்னிணையே. 371

இணையதுவாகவே ரவியினிலிட்டு
அணையவேவுலர்த்தி அடவுடனேதான்
துணையிதற்கான தொடர்ச்சியைக்கேளு
பிணையுறமருந்தை பேசுவோம்பார்த்திடே 372

பார்ஜெயலவங்கம் பகரிதகடுக்காய்
சீர்ஜெயவேலந்திரி கடுகோமம்
நேர்ஜெயநெல்லிவற்றல் வர்ய்விளங்கம்
தேர்ஜெயரோகணி வகைக்கொருபலமே 373

பலந்தரும் நிலாவாரைப் பாகமதாக
கலமிலாப்படியே பலமதுசேர்த்து
நலமுடனெக்கவே சேர்த்துநயன்றிட
பெலமுடனிடித்து பேர்பெறவாங்கே 374

வாங்கியேவடிகொண் டிசையவேநீதான்
தாங்கியேபீங்கான்றனில் திவிதமாய்
காங்கிஷமதானல் மேலுறசட்டியே
ஓங்கியேமூடி வொருவாரம்வைத்திடே 375

வைத்ததில்நேரிடைச் சீனியைக்கூட்டு
உத்தமஞான வொருபொருளப்பனே
மெத்தவும்வேண்டி வியல்புடனிந்துப்பு
குற்றமில்லாமல் சேர்ப்பதோர்பலமே, 376

சேர்த்ததில்வேரு கடியளவாகவே
பார்த்திடவுண்டு பண்பெறவேதான்
தீர்க்கமாய்வென்னீற் றுன்மிகக்குடித்து
கார்த்திடவேணுங்கால் நாழியொன்றே 377

ஒன்றபின்னிணக்க மாகவேசொல்லுது
குன்றிடாதிளப்பு மில்லாமலேசரியாய்
அன்றிதுபேதித்த டவுடனுகும்பார்
வன்றியேவாய்வை மடக்கியேகீழ்விடும் 378

கீழ்நோக்கலாக்குங் கெடும்பழமலத்தை
தாழ்வதுவாய்வைத் தணித்திடும்பித்தத்தை
ஊழ்குணவைய மொடுங்கியேநிற்கும்
நீழ்புகழாக நினைவுடன்சொன்னதே 379

சொன்னதுநிசந்தான் சூதுசெய்யாதிரு
பன்னியக்கிராணி புளித்தேப்பம் வாய்வதும்
உன்னியேநீக்கும் உளச்சலும்வாந்தியும்
பின்னிடாதெனவே பெரியோருரைத்ததே 380

உரைத்ததைப்பார்த்து நீவொழுங்குடன்சனஞ்செய்
விரைவுடன்மிளகுநீர் மேலானகாய்வகை
குறையறப்பார்த்து கொண்டிடுயின்பமாய்
புறையறவேதான் புகன்றதுதானே 3›1

## ஞானமேசுயம்பு.

புகன்றதுஞானம் வெளிப்படையாகுமோ
அகண்டமேமெய்வழி யானந்தரூபமாம்
விகண்டிலார்க்கொருவழி விற்பனசெய்கையாம்
நகண்டனற்குண்டோ நாதர்மகுத்துவம் 382

நாதவிந்ததிலே வுருவானசொல்லது
பேதமித்திரத்தால் வந்ததுயாவற்கும்
மாதவமுனிவர் மாபெரியோர்கள்
வேதமென்றேதி விளங்கினரென்றதே 383

## கலிவிருத்தம்

என்றதானதோர் கேழ்வியும் சிட்டையும்
ஒன்றதாகினல் வூக்கமதாகுமாம்
குன்றினலவைத் தோற்றினும்தோற்றிட
மன்றில்தேர்ந்த வராயிரத்தொன்றதே 384

ஆயிரத்தி லவரெவரோ நிலை
பாயிரத்திலுரை தருமிப்பொருள்
வாயிரத்திலூற்றின லேற்குமா
தாயிரத்தவில் தங்குவதேபெலன் 385

பெலத்தசாத்திரங் கற்கினுமென்பலன்
சலத்தின்மீதிலுலாவு பார்வழி
தலத்தில்ஞானி முன்னிற்பவரார்கனம்
புலததினலதுபோது மென்றெக்குமே 386

ஒக்கும்வொக்கும் வொளிவெளிகண்டபின்
திக்குமாமேல் வழிப்பூட்டைத்திறந்திடு
தக்குமாமிகவே ரேசகக்கும்பகம்
நக்குவோன்றனக்கே வருளதுகூட்டுமே 387

கூட்டுமாம்பொழிந் தாட்டமிடந்தனில்
நீட்டுமாம்சுய திவ்வியவேதாந்தத்தில்
மேட்டியூட்டி விளக்கொளிகண்டபின்
வாட்டமொன்றில்லை வாய்ந்துகனிந்திடே 388

## வேறு கலி விருத்தம்

கனிந்திடும்பேர்க்கு கருணையமூர்த்தமாம்
முனிந்திடும்பேர்க்கு முயற்சிநின்றூடிடும்
தணிந்திடும்பேர்க்குத் தாயுறுவாகுமாம்
தொணிந்திடும்பேர்க்குத் துயரதுவெல்லுவே 389

## சுந்தரர் இயற்றிய
## ஜெயபூரண சூரணம்
## ஏலப்பாட்டு,

ஏலேலோ ஏலேலோ - தத்தெய்யா
ஏலேலோ ஏலேலோ

திருக்கடவுள் கழல்தனையே-நிதமும்
சிந்தைதனிலேற்றியேதான்
தருவான மூலிகையை-தத்தெய்யா
சாற்றுகிறேன் நேத்தியுடன் ஜரூர்

உருவானவனமூலியானதைக்கண்டு
உத்தியாயகின்பேரில் ஞாபகங்கொண்டு
தருவானநேர்சரக் கென்றதில்நன்று
தயவுடனேபேர்பெற தழைக்கவேபார்த்து
குருவானவஸ்துவை குணர்ந்திடுங்கப்பல்
குறியானபடினமதை நெறியாகசொல்வேன் ஏலே

ஏலமிகலவுங்கமுடன்-கிரும்பு
இசைந்ததொரு கார்போகும்
கோலவர்ன சிரகமும்-தத்தெய்யா
கொத்தமல்லி அக்கிருகாரமுடன் ஜரூர்

சீலமதாகிய தக்கோலம்பத்திரி
சேர்ந்ததிருநாகப்பூ ஜாதிக்காய் சோம்பு
தாலமிசையோர்புகழ் நன்னாரிவேரும்
தனதான தாளிசை நெல்லிபின்வற்றல்
ஜாலமில்லாதொரு நெற்பொறிவோமம்
சரியானவாலுளுவை யானதைப்பாரே ஏலே

பார்த்தடுப்பாய் சித்தரத்தை-சுக்கும்
பதமான மிளகுடனே
சேர்த்தெடுப்பாய் திப்பிலியும்-தத்தெய்யா
செழுந்தவல்லி கிழங்குடனே ஜரூர்

நேர்ந்திடும் லவங்கப்பட்டையுடன்மோடி
நிலையானசிங்கியும் மாஞ்சியொடு கோஷ்டம்

தேர்ந்தபடியா முத்தக்காசதுமொக்க
தெளிவாகயிவை யெலாமொருபலமதாக
சீர்பெறவேதாங்கியே வருத்திதையிடித்து
திரமாகவடிகட்டி வுறவாகவேச் செய்ய ஏலே

செய்தபின்பு பாகமதைசெழிக்க
செவ்வையுடன் புகலுவேன்யான்
ஐயமில்லா பேரீச்சையும் தத்தெய்யா
அறிவுடனே முந்திரியும் ஜரூ

பையவே யிதுரெண்டும் பலமெட்டதாக
பாங்கானசர்க்கரை யிடைக்கிடைக்கூட்டி
கையினல் பிசைந்துநெய் விட்டதையெடுத்து
கவனமுடனெல்லிக் காயினளவாக
மெய்யினிலுள்ளபிணி நீங்கிடவேவேண்டி
மேலாகஅவிழ்தமதை யேலவேகொள்வீச் ஏலே

கொள்கையிலே தீருகின்ற-வியாதி
குணமுடனே கூறுகிறேன்
துள்ளுகின்ற பித்தமுதல்-தத்தெயயா
தொடர்ந்துவரும் க்ஷயரோகம் ஜரூர்

கள்ளமுறுங்காங்கையு மஸ்தியின்வெட்டை
கனமானவெள்ளையு மந்தமொடுகாச்சல்
மெள்ளவேபகட்டிடும் வாய்வூறல்நாற்றம்
மேல்கொண்ட வசதிபசி தீபனமதாகும்
வள்ளலருளால் கபம்யீளைவலிசோகை
வனந்தநோயணுகாது குணநலமதாமே

## பத்தியம்.

நலம்பெறவே பத்தியத்தை-இதற்கு
நாட்டுகிறேன் கேட்டிடவே
புலம்பெறவே நெய்துவரை-தத்தெய்யா
பகர்வுடனே வெண்ணெயாட்டிறைச்சி ஜரூர்

கலநேகக்கத்திரி பிஞ்சுடனே கூட்டு
கனிக்கவே வெண்டைபீர்குடனே சேரு
விலகாமல் சர்க்கரை கற்கண்டுமாகும்
விளாம்பழம் நவரையுங்கொடி முந்திரியாகும்
பெலமான அன்னுசிசேர்த்திடப்பாரு
பிரபலமதாகவே விருபொழுதுண்பீர்

இருபொழுது வருந்திடவே-சுகமாய்
இதையமது மகிட்சியதாம்

திருந்திடவே கனலாற்றி-தத்தெய்யா
செவ்வையதாயாக்கிவைக்கு

மருந்திதுயாவர்க்கு நல்விஷயமாகும்
மாறுதவல்வினை வழிவிலகிபோகும்
பருதியைக்கண்ட பனிபோலவேநீங்கி
பால்போல மேனியைபக்குவமதாக்கும்
கருதியதில் சொன்னபடி சூட்சமீதாகும்
சுந்தரவினிதமொழி மந்திரமிதாமே. ஏலே

மந்திரமாய் பாய்விரித்து-கப்பல்
மகத்துவமாய் வாரியிலோடுகையில்
அந்திரமாய் தொண்ணூற்ருறு பேரில்-தத்தெய்யா
அடவுடனே நின்றமூன்றுபேர்கள் ஜரூர்

கொந்தகளிப்பாகிய கடலலைப்போலே
கோவிற்றெழுந்தவிதப் பாகத்தைக்கண்டு
சிந்தைகனலூடாமற் றெய்வதத்தைநம்பி
சிக்கிரங்கப்பலிலேற்றி சரக்கை
அந்தமுடன் பீரங்கி வெடிகுண்டுதீர்ந்து
ஆய்ந்துசூரணத்தைத் தோய்ந்துசெய்வீரே

தொய்ந்தஜெய பஞ்சகர்த்தாள்-தனையே
துதித்திரைஞ்சி பூசைசெய்வாய்
சாய்ந்திடாமல் கப்பலது-தத்தெய்யா
சனுவுடனே சுக்கான்றனைப்பாரும் ஜரூர்

பாய்ந்தவர் கோபமது வாராமல் நித்தம்
பலபேர்கள் நாடாமல் வாசலில் நின்று
ஆய்ந்துமுன் சுழிநாடி ஆனந்தங்கொண்டு
அஞ்சாதனஞ் சயனின் கொடிதனையே நாட்டி
காய்ந்தனல் கொள்ளாமற் றெண்ணூற்றூர்பேர்க்கு
கருணைபெறநீனென பெருமைசொல்லலாமே ()

வெண்பா.

பெருமையுள்ள நன்மருந்தை பேசிவைத்தே னுண்மையதாய்
கருமமெல்லாம் நீங்கிவிடும் காசினியிற் றருமமிது
ஞானத்தின் போக்கை ஞயம்படவே - சொல்லுகிறேன்
தானத்தைக்கண்டு மகிழ்ந்தான்

விருத்தம்

தானான நீதிமார்க்க மொன்றுகேளு
தப்பாமல் சமரசத்தை வுண்ணவேணும்

மானனபராபரத்தை யறியவேணும்
　பார்த்தறிந்து செய்யாட்டாமலொன்றுமில்லை
மானனமாதருட வலையில்சிக்கி
　மயங்கிவிட்டா லெத்தொழிலும் பலிதமாகா
தேனனதிருவடியைத தினமும்போற்றி
　தெளிந்தவற்கே கைத்தொழில்போல் பலிக்குந்தானே. ()

பலித்துதென்று வாணுவத்தால் பேசவேண்டாம்
　பாவமென்றும்புண்யமென்றும் ரெண்டுங்கண்டு
சலியாமல் மனதினிலே யெண்ணியேதான்
　சத்தியமாயுத்தமதில் நிற்கவேணும்
கலிகாலகலியுகத்தில் கவடோரொம்ப
　கனவுபோல் பார்த்தறிந்து நீங்கவேணும்
வலியானமாந்தருடன் பேசவேண்டாம்
　வாசித்துத் தெளிந்துணர்ந்து அடக்கஞ்செய்யே 393

அடக்கமில்லா வெகுளியற்கு ஆகாதொன்றும்
　ஆனந்தாய் சொல்லுகந்தாள் தீதந்தன்னில்
கடக்கவிடாள் கைகொடுத்து அணைத்துக்கொண்டு
　கடாட்சிப்பாள் மனதுவைத்துக் களிப்பதாக
விடக்கெடுத்துத் திரியுகின்ற வீணர்தம்மை
　விரும்பியே தன்னிடத்தில் சேர்க்கவொட்டாள்
நடக்கையிலே யிவள்ரூபஞானக்கன்னி
　நாதாந்தபேரொலி நாயகியுமாமே. 394

ஆமேதானிவள் குறிப்புச்சொல்லக்கேளு
　அலங்காரத்தாமரை பொன்னிதழ்போல் நின்று
தேமேதான் மூட்டிவைப்பாள் திறக்கவேதான்
　திருநடன கூற்றெல்லா மவளாலாச்சு
காமேதானிருவிரலா லிடிக்கியூட்ட
　கனகமணிபோலேதா னேறிக்கொள்வாள்
கோமேதான் குருவருளின் றியானஞ்சொல்லி
　கோதகலவாசனையை குடிப்பாள்தானே 395

தானென்ற யிவ்வளவு மாசானலே
　தவராது கேள்விபெற்று யறியவேணும்
வானென்ற மடவார்கள் சிந்தையற்று
　மன்மதனை யோர்வழியாய் நிலையதாக்கி
வேனென்ற வீண்பகட்டில் விழுந்திடாமல்
　வேதாந்தசாத்திரத்தி லிதமாய்நின்று
பானென்ற பயோதரம்போல் முடுகின்ற
　பவமதனை வெறுத்துதவமிகச் செய்வீரே 396

செய்வதற்கு லகுவான சூட்சங்களே
சின்மயத்தினருள் பெருமையாலே காண்பாய்
மைவிடுத்து பெரியோரை வணங்கிக்கேட்டால்
மனதுகந்து வுனையழைத்து யருகில்வைத்து
ஐயமுள்ள காரணங்களின்னதென்று
அறிவித்தசாஸ்திர சூத்திரமும்தந்து
வையகத்தின் வழக்கத்து மயக்கந்தீர்த்து
வாழ்ந்திரவென்றே புகல்வர்வயணந்தானே 397

## தேரையர் இயற்றிய

### அஷ்டபாலகர் சூரணம் விருத்தம்.

திருமாதவர்கள் புகழ்ந்தினிதாய்த் தெளிவாபுகந்த
மொழியதுகேள்
வருளாலசிறந்ததமிழ் நடைசொல்வனுபோ
தொருநாட் குறைபாது
கருவாமிவர் மூவருடன் களிக்கவொருவ
ருடன் சேர்த்து
பொருளாமிங்குவாரி தத்துடனேபோன்றே
முடிப்பீர் சூரணத்தை 398

### கலிவிருத்தம்.

சூரணத்தில் வெகுநன்மையாகுமாம்
பூரணத்தில் பொருந்துவர் தாமிக
ஆரணததி லவையிவை யென்றிடார்
காரணத்தின் மலர்பதம் போற்றுவாம். 399

### விருத்தம்.

வாய்மைற்றணியாகியதோர்
வதிதமாலின் சூரணத்தை
ஆயமேவாடிலகச் சீனியதில்
அணைத்தோரிடையின் பாகமதாய்
காய்ந்தப்பழயப்பிணியகல
கனக்கவேருகடியளவாய்
தோய்ந்தேபுசித்துப் புனலருந்த
தோற்றம் வாய்வையகற்றிடுமே. 401

அகற்றுமந்தக் கிறுகிறுப்பும்
அசைக்கும்பித்த விஷமதனை
இகற்றுமையமேல் மூர்ச்சை
இணைக்காதிருக்கும் நோய்கள்தனை

புகற்றிப்புகற்றி நுவலுவதோ
புனிதத்துடனே மெய்யுணர
வகற்றிமெத் தவியாதிகளை
வறிந்துமெய்யாய் செய்திடவே 401

மெய்மைகனத்தைக் கலாநிதிபோல்
மினவியிதனைக்கைதொடுத்து
பொய்மையதனை நீக்கிநிற்க
பொன்போலாக்கை பொருதலுறும்
ஐயமறுத்துப்பழமலத்தை
அகற்றிக்கீழே மிகவிடுக்கும்
தூய்யவீசர் கிருபையினற்
றுலங்குந்தலங்கும்வைத்தியமே 402

## இச்சாபத்தியம் விருத்தம்.

வைத்தியம்பார்க்கும்போது
வகுத்தபத்தியந்தான்சொல்லு
கைத்திரமிகுக்தவாட்டின்
கனத்ததோரிரைச்சிசியாகும்
பைத்திரவோலைவாளை
பகர்கருவாடதாகும்
மைத்திரவுடானகும்
மகிழவேவெங்ரோமே 403

## வேதாந்தம் விருத்தம்.

ஆமொருவார்த்தைதன்னை - அடவுடன்கேழ்ப்பீர்மிக்க
தாமொரு விபரமாக - தளராமல் செய்பவேணும்
காமொருசாஸ்திரத்தின் - கலாபமுங்கோபந்தீர
தேமொரு யெழுத்தைக்கண்டு தேர்ந்துகொள்ளுனக்குள்தானே 404

தானதத்தனதானே மருத்துவம்
ஞானதத்துவமான கிருத்தியம்
வானதத்தனவாய்மை யூடாடுது
தேனதத்தனதித்ததருளதே 405

## தேரையரியற்றிய

### வச்சிரவல்லிசூரணம்.

### வேறு-விருத்தம்.

அருளும்பொருளுமன் புடன்கண்டு
தெருள்தரகமக்குநல் சூரணஞ்சொல்வேன்

குருவருளாலே குணங்குடிமேவுலோம்
தெருளுறவென்றே சிந்தைசூரணமே. 406

## தரு-ஞானவெட்டி சந்தம்.

### பல்லவி.

சூரணத்தைச் சொல்லுகிறேன்கேள்-விபரமாக
சூரணத்தைச் சொல்லுகிறேன்கேள்.

### அநுபல்லவி.

காரணபாரியை கருத்தினிற்றுனினைந்து
பூரணவேதாந்த குருபொற்பதத்தை போற்றியேதான்

### சரணங்கள்.

வச்சிரவல்லியெடுத்து வுச்சிதமொன்றேதொடுத்து
அச்சமின்றியேதரித்து பட்சமுடன்செய்வதற்கு (சூர)
மோருதனிலே யவித்துக் காருகின்றதையெடுத்து
பாரும்ரவியில்விடுத்து சேரும்வகைமேல் புகல்வேன்
சித்தரத்தையோர் பலந்தானுத்த கிருப்போர்பலந்தான்
புத்திசுக்கு வோர்பலந்தான் மெத்தப்புகழாயெடுப்பீர்
திப்பிலி பலந்தான்ரெண்டு வொப்பனையதாகக்கண்டு
செப்பினபடியே விண்டு தப்பிடாமல்சேர்க்கையைக்கேள்
சுத்திசெய்த வச்சரமூலிபுத்தியதிற் சேர்ந்தசாலி
வெத்தியுள்ளதாகக்கோலி நித்தநித்தங்கொள்வதற்கு
சொல்லிடும்பவமோ பத்து வல்லபமதாயெடுத்து
நல்லிணையதாய் நிறுத்துமெல்லெனச் சூரணஞ்செய்வீர்

### விருத்தம்.

செய்பாகங்கை பாகங்கவரிடாமல்
சேர்ந்தசரக்கத்தனையு மிடித்துத்தூளாய்
துய்யவேவடிகட்டிப் புதுப்பாண்டத்தில்
ஒழுங்குடனே வைத்தேதான் வேடுகட்டி
பையவேதான் வேண்டியபோதெடுத்துக்கொண்டு
பரம்பரையினருளால் வேருகடியதாக
தொய்யாமற்றேனதிலே கலந்துநன்றாய்
துலங்கவே நோய்தீரவுண்ணக்கேளே. 408

கேளப்பா வாதத்தினல் தொடுத்து
கிளறுகின்ற வயிற்றிரைச்சல் பொருமல்மந்தம்
கேளப்பாசெய்யுகின்ற கிறுகிறுப்பு
கொடியதொருகைகாலின் குடைச்சல்பாச்சல்

வாளப்பா சந்துளைச்சல் நீரின்பற்றும்
வழுவான திரைச்சல்குலை நோய்களெல்லாம்
ஆளப்பா சேவகன் போலுலாவியே தான்
அம்மம்மா குணமாக்கு மறிந்துபாரே 409

## வேறு விருத்தம்.

பாக்கியமின்பம் பகர்விதசூரணம்
ஆக்கியேமுடித்தாலது குணந்தந்திடும்
வாக்கினலோ நிஜலது நிசந்தோற்றுமோ
யோக்கியத்துடனே நுவலுவேனிதமிதே. 410

## பத்தியம்-வேறு விருத்தம்.

இதமுடன்றுவரை நெய்பாலானதோராட்டிரைச்சி
பதமுடன் புளியாரை கொத்தமல்லியின் கீரையாகும்
விதமுடன்சுண்டவற்றல் விருப்பமாம்னூடான் வற்றல்
நிதமுடன் யெலிச்செவியும் பாசிப்பயறுடன்கூட்டநன்றே 411

நன்றாயுண்டு குணம்பெறவே நலமாய் வெந்நீர்மிகக்கொள்வீர்
முன்புசொன்ன வியாதியெல்லா முடிக்கிப்பலமாய் நீக்கிவிடும்
சொன்னேன் சொன்னேன் குறைவில்லை சூட்சமானமருந்கினந்தான்
உன்னிதநெய்யுஞ் சியக்காயிட்டொழுங்காய் ஸ்நானஞ்செய்யேல். 412

## வேறு-விருத்தம்.

எலவேவெந்நீர் தன்னுடைசையவே முழுகுங்காலே
தூலமுஞ் சௌக்கியமாகித் துலங்கிடும் நேத்திபாக
பாலகற்கமுர்த மூட்டிபட்ச மோடணைத்ததாய்போல்
சீலமாம்பெரியோரா சீர்வாதமென் றிசைந்தசொல்லே 413

## கமலமுனியாரியற்றிய

### மகுடாதிபர்சூரணம்-ஆசிரியவிருத்தம்.

சொற்புகழுலாசமாய் சுதந்தரவிர்த்தாந்தமாய்
சொகுசான லிகிதவிதமாம்
சொலித்தகதிரெழுபரியோனிடு விதமலங்கிர்த
சூட்சகனலவை நீங்கிட
பொற்புகழவாசரொடு கரிபரிகள்சேனையும்
பொருநிழலில் தங்குவர்
போர்வைகொள்ளனப் படிவசனமிது வுத்தம்
பொதுவான ஆலம்விரையாம்
நற்புகழுவோர் படிதேடியே குணர்ந்தபின்
நயன்றதைச் செய்தலுரைகேள்

நனிதமுறதேய்த்ததின் றவடகலசேர்த்திடு
நாகரிகவரிசையுடனே
துற்புகழிநோயகல விடியுரலில்மாவுபோல்
துல்லியவயணமிணைசீர்
தூற்றிடாதே கலையினல் வடிகட்டியே
துதிபுரிவீர் கடவுள்தனையே. 414

விருத்தம்.

கடவுள்தனை மிகப்பணிந்துச் சொல்லக்கேளு
கணக்காக கொட்டிப்பு நெய்தலாம்பல்
திடம்பெறவே வொக்கவேதான் பலமைந்தாக
சீர்பெறவேதானெடுத்து சேர்த்துக்கொள்ளு
கடல்திறந்த வெள்ளமதை யடைப்பதற்கு
கருத்துடனே அந்திசந்திரெண்டுவேளை
அடவுடனே தேனதிலே கலந்துமிக்க
அதிகபுன்னைக் காயளவா யுண்ணுவீரே 415

புன்னைக்காயளவாக வுண்டுவெந்நீர்
புகழாகக்குடித்த பின்புஅசனஞ்செய்வீர்
நன்னயமாம் நீரிழிவுள்ரணங்களெல்லாம்
நாடாமலோடிவிடும் நன்மையாகும்
மன்னவர்கள் புகழ்ந்திடு வருணைக்கொண்டாடி
மனதுகந்துபத்தியத்தை யியம்பக்கேளு
பன்னியதோர் முருங்கைக்காய் முருங்கைப்பூவாம்
பகர்வானயெலிச் செவின்கீரையாமே. 416

கீரையதில் பொன்னுங்காணிக்குணமதாகும்
கிளராமல் காடையாட்டிறைச்சி யாகும்
விரையான பூவினத்திலா வாரையாகும்
வினிதமுடனே யுரைத்தார்முனிவரெல்லாம்
குறையாமல் பாலமுளகுவரைத்துக்காச்சி
குணமாகத்தலை முழுகமெத்த நன்று
நிறையாகச் செய்தவர்க்கு பலிதம்மாகும்
நேர்ந்திதனைலகுவாக நினைவாய்ச்செய்யே 417

நினைவாகமண்டலந்தான் வுண்டபேர்க்கு
நிசமாக சொன்னதெல்லாம் வாய்க்குமப்பா
கனமான மூலிவித்துப் பெருமைதன்னை
கவடமொன்றில்லாமல் சொல்லினேன்யான்
இனமானவரிசை முதலனந்தபாக்கியம்
ஈந்திடுவர் வைதியற்கு புகழ்ச்சியாகும்

தனம்பரித்தல் சிந்தைதனை நிறுத்தவேணும்
தலமதனிற் றெரிந்ததொரு சொற்சாற்றுவேனே 418

## மெய்க்குருக்கள்.

ஒருவர்பொருள பகரியார்பொய்ச் சொல்லார்கள்
உண்மையுடன் றிருக்கடவுள் பதத்தைப்போற்றி
வருமையது நீங்கிடவே பூசைசெய்து
வணங்கியே நிட்டைதனிலிருப்பார் மேலோர்
கருமபிணிய கற்றிடுவார் கருதியேதான்
கண்காணபுல்லருடன் யிணங்கமாட்டார்
திருவருளின் சித்தமென்றே தவசெயபதாக
தினமிருப்பர் பெரியோர்கள் சிறந்தோர் தாமே 419

## பொய்க்குருக்கள்.

சிறந்தவர்போல் வேடமிட்டு வாய்ஜாலனைக
சிரித்துமெள்ள பொய்பேசிப்ணம் பரிப்பார்
திறந்தவர்போல் வாயில்வந்தசிறிதுபாடல்
தீர்க்கமென்றே வொன்றுரெண்டாய்க் குளறியேதான்
அறந்தழைக்கவனந்த வித்தையெனக்குள்ளென்று
ஆச்சரியவார்த்தையினுல் பகட்டுவார்கள்
சுறந்ததிரு அகண்டவழிக் காணிடாதான்
சொல்லகற்றிக் கிறுதமதைகூறுவேனே. 420

## நந்தீஸ்வாரியற்றிய

### பிரசன்னகிருதம்-கலிவிருத்தம்.

கிருதமிங்கனஞ் செய்யவேகேள் மிக
பொருதபுட்களமே மிகுவாகுமாம்
கருதநற்பொருளா மெனப்பலலரும்
துருதலென்று ளஞ்சீர்த்துவமாவரே 421

மாமிகுப்புடனேசொல்லலானபின்
நாமிகுப்புடனே வழிகூறுவேன்
தேமிகுப்புடனே யுரைதந்துநன்
மீமிகுப்புடனே கனமேற்றுவோம். 422

## வேறு-விருத்தம்.

எற்றுவேனிலப்பனே யிலக்குங்கருங்காலி
நேற்றியேநாவல் நிறைந்ததோர் வேந்தனும்
சாற்றினரிதையுஞ் சமன்பலம் பத்துடன்
ஆற்றிடாப்படியே அடவுடனிடித்திடே 423

இடித்துநன்றாக யிருதூணிநீரில்
சொடித்ததைச் சேர்த்துத்துலங்கவே பசுவின்
படித்திடப்படியாய்பால்படிரெண்டாப
வடித்திடமாக வளர்புளியாரையே 424

ஆரையுங் கோவைத்தண்டொடுமொக்க
தீரமாயோர் படித்திகழவே சேர்த்திடு
சீரவில்லாத முசுட்டைசிறு காஞ்சொறி
வீரமதான திரிகடுகுவிள்ளாம்பிசினியே 425

பிசினிகொத்தமல்லி பேர்திருபலாதியும்
வசிகரமான பேரீச்சமுந்திரிகையும்
சுசிகரகற்கடகம்சொல்லுமரம்பருப்பும்
பசிவரச்செய்யும் பகர்ரோரத்தையே 426

விருத்தம்.

அரத்தைக்காட்டாத்திப்பூ அழகியக்கிளாக்காய்நெல்லி
உரைத்ததோர்விடையமின்ப வச்சிதக்கூவளத்தின்பிஞ்சும்
நிரைத்ததோர்விளாவின்மிக்க நோந்திடும்பிஞ்சுதானும்
சுரத்தின்மாதளேயிற்றேர்ந்த சுகிற்தநற்பிஞ்சுதானே 427

பிஞ்சியும்சாஸ்திரபேதி பிரபலசந்தனமுமேலாம்
வஞ்சகமில்லாதுற்றவளர்புளி விரையின்றேனும்
ரஞ்சிதகுறேசானிவோமம் நலமுள்ளமுத்தக்காசும்
நெஞ்சுரசிறுநாகப்பூநிதானிக்கயினஞ்சொல்வாமே. 428

ஆமப்பாலவங்கப்பட்டை யமுக்குறவேரிநேடும்
தேமப்பாவகைக்கிரெண்டு கழஞ்சியின்வீதமாகும்
போமப்பாஆவின் பாலால்புனிதமாயறைத்துநன்றாய்
கோமப்பா வதனிற்கூட்டு குழப்பியே வுரைப்பீர்தாமே. 429

தீரும்நோய்கள்.

தாமதமில்லாமற்றுன் றயவுடனடுப்பிலேற்றி
தோமிலாபடியேநீயும் துலங்கவே யெரிந்தபின்னர்
ஆமிதுமெழுகதாகும் அடவுடன் வடியதாக்கி
காமிதுபரணிசேர்த்து கணக்குடன் களஞ்சிக்கொள்ளே. 430

களஞ்சியின்வீதங் கொள்ளகழறுவேன் பாகந்தன்னை
அளஞ்சிடும் பெரும்பாடுமூலம் அவட்டிடும் யெலும்புருக்கி
விளைந்திடும் பிரமியங்கள் மேலாக்கிறுணிமந்தம்
இளைப்பிலாப்படியேவித்தை யிறுக்கிடும் பெலத்தைப்பாரே. 431

பாரப்பா சடம்வெளுக்குந் தணல்புகைகைகால் காந்தல்
பேரப்பா நீர்கடுப்பு யெரிவதுந்தீருந்தீரும்
சீரப்பா பத்தியமாயுண்டு செழிக்கவேயின்னங்கேளு
நேரப்பா சீரகக்கஷாயம் நினைவுடன் கொண்டுதீரே 432

இதற்கு இச்சாபத்தியம்-நெய்-சியக்காயிட்டு வெக்ரோல்ஸ்நானஞ் செய்யவும்

## அகஸ்திரியற்றிய

### குணந்தருங்கிருதம்-விருத்தம்

தீர்க்கமாம் பொன்னிலாங்கணி பெனுங்கிருதங்கேளு
ஊர்க்கமாம்படியொன்றப் பாவுயர்ந்தபொற்கை யான்சாறு
யேர்க்கவே படிதானென்று யிலகவே பழச்சார்தானும்
கார்க்கவே அரைப்படியும் விட்டுகருதுவீராவின் நெய்யே 433

நெய்யதுபடிதானென்று நேராவின்பால் படிதானென்று
வுய்தலாமதூரம் ரெண்டுப்பலமது வாகச்சேரே
பையவேபர்லாலாட்டி பதராமலொன்றதாக்கி
செய்யவே பதமாய் காச்சிசெழிக்கவே சிறந்துவாங்கே 434

### மேல்விருத்தம்.

லாங்கிபின் வடித்துக்கொண்டு வயணமாய்சாதிக்காயும்
தாங்கிடச்சாதிபத்திரி தழைக்கோரோசனமுமாக
நீங்கிடாப்படியே கண்டிசையுறக்களஞ்செய்பாகும்
பாங்குடனரைத்துத் தூவிபண்பெறவிராகன்ரெண்டே 435

ரெண்டிடையாகக் கொள்ளநிற்கின்ற வியாதிசொல்வேன்
கண்டிதழலச்சுடும் கனக்கின்ற சூதகத்தின் வாய்வு
திண்டுள்ள யெரிவுதீருந் தெருளாதமேகந்தீரும்
பண்டுள்ள சுரம்வுள்வெக்கை பண்புடன் வயரெரிவுபோமே 436

எரிவுடன் போவதன்றியிலகவே நேத்திரந்தானும்
பரிவுடன் குளிர்ச்சியாகும் பகர்வாயின் நாற்றம்போகும்
திரிவுள்ளப் பிரமியங்கள் தீர்க்கமாயகண்டுபோகும்
விரிவிலாகிருதமென்றே விளம்பினேன்பெருமைதானே. 437

### பத்தியம்.

தானிதில் பத்தியங்கேள் தனித்ததோர் நெய்பாலாகும்
மானிதிலாட்டிறைச் சிமலபொடு முருங்கைப்பிஞ்சாம்
தேனிதிலவரையாகுந் தெனிவுள்ளக் காடையாகும்
நானிதில் நுவல்வேனப்பாநன்மைகிச்சடியுமாமே 438

## மச்சமுனியாரியற்றிய
## புளியாரைக்கிருதம்.

### கலிவிருத்தம்.

தானதாய் முளைத்தச் செழுமூலிகை
யானதோர் புளியாரையும் வள்ளிநீர்
காணபொன்னிலாங் கண்ணிவல்லாரையும்
தோணவேவகைக்கோர் படியாகுமே 439

### வேறு-விருத்தம்

ஆமேயிளநீர ளவதைக்கேள்மிக
தாமேரெண்டரைத்தான் படியாகும்
வாமேஆவின் நெய்யதுசேர்த்துபின்
கோமேபசுவின்பால்படியைந்ததே 440

தேமாஞ்சீரகஞ் சிறந்தசாதிக்காய்
ஆமாம்பாலிலறைத் திடுக்களஞ்சிதான்
வாமாமிதினில் மாட்டிகலந்திடு
பூமாமெரித்தெடுத்துபுனல்தங்கிடாமலே 441

புனலில்லாப்படியே போன்றபின்கேட்டிடு
தனநயயேலமும் தழைத்தபத்திரியும்
கனமிகக்களஞ்சி கருதிரைத்ததை
இன்பமுடன் றாவியிருந்து வைப்பாணியில் 442

### தேறு-விருத்தம்.

பரணிதனிலே யடைத்தபின்பு பாகங்கேளு மிகுவாக
தரணிதனிலே பிணியாளர்தானே வருந்தும்போதுமப்போ
திரமாய்கற்கண் டொருபலந்தான் றென்பாயரைத்துத் தூவியேதான்
வரமாய்கரண்டியள விரதம் வகையாய்க்கொள்வீர்வறிந்தின்றே. 443

வரிந்தியுண்ண விருநேரம் வளர்ந்தபித்தவெட்டையொடு
பரிந்தபித்தவாய் வெறிச்சல்பலநாள் செய்யும்நீர்சுருக்கும்
திரிந்தமயக்கம் வாயூரல் தேராதிருக்குமரோசிகமும்
விரிந்த பொல்லாவாந்தி முதல்விட்டே பதுங்கிநடுங்கிடுமே. 444

நடுங்கும் பித்தகுணங்களெல்லாம் நலமாயிருக்குஞ் சரீரமது
இடுக்கங்கொள்ளாதொருநாளும்யெல்லாப்பிணியும்யிதில்தீரும்
தொடுக்கத்தொடுக்மப் பெலந்தருமாங் தூயக்கடவுள்கிருபையினால்
கெடுக்கும்ரோகம விலகுமிந்தக் கிருதப்பெருமைச்சொல்லறிதே 445

### மண்டலமருந்துவும்இச்சாபத்தியம்.

## பிடிநாக்கீசரியற்றிய

### வல்லாரைக்கிருதம்-வேறுவிருத்தம்

செல்லுமிந்தவல்லாரை சூக்ஷமகந்தம்பேர்பெறிது
நல்லயிந்சமூலிரசம் நலமாய்ப்படியொன்றெடுத்தபின்னர்
அல்லலில்லாக்காணியது அன்போடெடுப்பீர்பொடுதலேயும்
கல்லப்பழத்தின்சாரதுவுங்கணக்காமிதுவரைப்படியாமே. 446

படிகண்டிவையோடாவின்நெய் பதமாய்ரெண்டுபடிவிட்டு
துடியாம்பசுவின்பால்படிரெண் டிலங்கச்சாதிக்காயதுவும்
வடிவாம்பத்திரிமாசிக்காய் வதிதசிங்கிவால்மிளகு
நடினயேலக்காட்டாத்திப்பூ நயன்றகிரும்புமதுரமுமே 447

மதுரமுடனேயிருகளஞ்சி வகையாய்நிறுத்துபாலாலரைத்து
பொதுவாய்கலக்கியெரித்துமிதம்பொருசயிரக்கிவடித்தபின்னர்
பதுமாமலர்போல்கற்கண்டு பண்பாய்ரெண்டுபலந்தானும்
இதுவாங்கிருதமெனவேதான் இசைந்தேகலந்துகொள்வீரே. 448

கலந்ததிதனேக்கரண்டிநிறை களிக்கக்கொள்வீர் மண்டலந்தான்
பலத்தமேகவடிதடிப்பும் பற்றியிருக்கும்வெடிரணங்கள்
அலேத்தசரீரம்வெப்பதுவும் அடரும்பொல்லாகிரந்தியதும்
குலேத்தேநிற்கும்பிரமியஞ்சீழ் குறிப்பாய்தீர்ந்துகுணமாமே. 449

### கலிவிருத்தம்.

தீர்ந்துபோமிதிற் சொன்னவிதிப்படி
பேர்ந்துபோம்குஷ்ட சூலேயும்மேகமும்
நேர்ந்துபார்மிகச் சிங்குவைநோயது
கூர்ந்துமிக்கக் குலாவுங்கிருதமே 450

மேலிலுற்றவிடத்தின் றழும்பதும்
கோலிநின்ற வஸ்தியின்புண்ணதும்
பீலியோடுக் கடுப்புநெறிகுறி
மூலியானதில் யோனிப்புத்தேகுமே 451

புத்தியாகவருந்த மகிழ்ச்சியாம்
தித்திப்பாகத்திரண்டெழும்மீாது
சுத்தஞானமகத்வரருளினல்
ஒத்திரீங்கி வொருங்குகளாகுமே 452

ஒருங்கதாகவிதற்குகோானது
தீருந்தலான ரசபற்பஞ்சேர்த்துநன்
மருங்கதாக மகிழ்வுடனுண்டிடில்
கருமமெல்லாங்கலங்கியகலுமே. 453

## தன்வந்திரியாரியற்றிய.

### கூழ்பாண்டகிருதம்-கலிவிருத்தம்

அகலுமென்றசொல்லானந்தமெய்மொழி
புகலுமிந்தவிதந்தனைச்செய்திடில்
பகலுதித்திடுமாதவன்போல்குணம்
இகலுமேபணிபென்றவிதமிதே. 454

தேசரானவர்களின்பமாய்ப்புசித்
தாசைமேவியகூழ்பாண்டமென்பர்கள்
வாசமாகியநற்பெலகாயின்சார்
நேசமாகவேரெண்டுப்படியெடே 455

யேட்டில் சொல்முறையாகவே செய்யவே
நாட்டிற்றுழை விழுதுடன் றென்னன்பூ
மூட்டுவீர் யிளநீர்படியோர்வகை
கூட்டிடுக்குமரிக்கிணையீடாதே 456

ஈடதாகவே ஆவிநெய்நல்லதாய்
கூடவேவிடுரெண்டுப் படிக்கிசை
நீடதாஞ் சாதிபத்திரிசாதிக்காய்
யூடமாசக்காய் சீரகமேலமே 457

ஏலம்வால் மிளகோடணி சிங்கியும்
பாலர்க்கேற்றக்கு ரோசாணிவோமமும்
சீலமல்லித் திரிகடுகாட்டாத்தி
மாலதாகவுமிந்துபகிர்ந்திடே 458

பகிர்ந்தநற்களஞ்சி நிறைமூன்றதாய்
சுகர்தமாகப் பசுவின்பாலானதில்
விகிதமாகவரைத்து பின்னுவின்பால்
மகிமையாகப் படிரெண்டு சேர்த்திடே. 459

சேர்த்துவொக்கயிவைமுதலானதும்
கோர்த்துமெள்ளவே யுத்தப்பதமதாய்
பார்த்துயின்பவடி தனைச்செய்தபின்
தீர்த்துகற்கண்டிருபலந்தூவிடே. 460

### வேறு-விருந்தம்

தூவியேயீசற்றுணைப் பதம்நம்பி
மேவியே பரணியில் மிக்கவேவைத்திடு
கோவிகடங்கட் கூட்டமதகற்றி
ஆவியைகார்க்க அன்புடன் வேண்டுவீர் 461

## கலிவிருத்தம்.

வேண்டில்செய்திட வூஷ்லணயெரிவதும்
தூண்டிடாதது காந்தற்பொருமலும்
தாண்டிடாதது வஸ்தியின்வெட்டையும்
பூண்டிடாததுப் போன்றகாமாலேயே 462

மாலேகண்களும் மீறுரணங்களும்
மூலநோயு முழித்துப்பதுங்கிடும்
காலமெல்லாமிருக்கும் கனலதும்
ஓலமிட்டாது வோப்ந்ததுநீங்குமே 463

ஓய்ந்துப்போகுமே வஸ்தியுருக்கலும்
தேய்ந்திடச்செய் யெலும்புவலிகளும்
பாய்ந்தவெப்புக்காமாலேயும்பித்தமும்
சாய்ந்திடாமல் தருங்குணங்கண்டிடே 464

## வேறுவிருத்தம்.

கண்டதிந்தக் கிருதந்தன்னில் காரியமதாகவே
தண்டமிழ்ப்புகழ்வல்லோர்கள் தான்மகிட்சியாவர்கள்
உண்டுவப் ரோகத்தூயவுண்மை சேர்செந்தூரத்தை
பண்டுள்ளதோர் மேகமற்றுபண்பதாகு முண்மையே 465

## புலஸ்தியரியற்றிய

### தூதுவேளைக்கிருதம்-விருத்தம்

உண்மையான தூதுவேளையானதோர் கிருதத்தை
தண்மையாகச்சாற்றுவேன் றனித்தசார்வோர்படி
பண்மையானக் காஞ்சொரிவேரான கண்டகத்திரி
கண்மகிழவாடாதோடைகாணவே யெடுத்திடே 466
எடுத்திடித்த சாரதுயிணையுடன் வரைப்படி
தொடுப்பதாக திப்பிலிதுலங்குகல்மிளகுடன்
விடுத்திடாமலே கடுக்காய் மேலதாய்த்துராயிலே
அடுத்தநாலுகற்பலம் அடங்கலுமிடித்திடே 467
இடித்ததூணி நீரினிலிசைத்து வொன்றதாக்கியே
தடுத்திடாமலே யெரித்துதான்வடித்துகொண்டபின்
முடித்தலாக சொலலுவேன் முயற்சினுவிநெய்யதும்
வெடித்தலில்லாதே படிக்கிவேண்டும் ரெண்டுபடியதே 468
ரெண்டுடனே ஆவின்பாலிணக்கு விரிருபடி
யிண்டிடுத்திரிகடுகும்மேன் மையானதாளிசை
கண்டிடுந்திருப்பாலாதி வாய்விளங்கவோமமும்
கொண்டிடுவீர் கோஷ்டமுங்குலாவுவக்ருகாரமே 469

காரமோடு சீரகங்கனத்ததோரரத்தையும்
தீரமான வால்மிளகு யேலமுங்கிரும்புடன்
ஆரமானசாதிக்கா யலங்கிருத நேர்பத்திரி
காபலன்றி யிவ்வகைக்களஞ்சியாகு மூன்றதே 470

விருத்தம்

மூன்றெனச்சொல்தப்பாமலாவின்பாலால்
முடுக்காகவிட்டாட்டிக் கலந்துகொண்டு
யேன்றபதந்தப்பாம லெரித்துவாங்கி
இணைபெறவே பீங்கானில்வைத்துக்கொண்டு
போன்றிடவே தாளகநீர்வைத்துக்கொள்ள
பொறுக்காதக்ஷயமெட்டும் போகும்போகும்
ஆன்றலும் பீளையொடு யிருமல்காசம்
அடங்காத தொண்ணூற்ருறு நோயடங்குந்தானே 471

## வேறு-விருத்தம்.

அகலுமேமேக மடங்காதவுஷ்ட்ணமும்
இகலுமேயிளைப்புயிசைந்த தோர்வாய்வதும்
புகலுங்குடல்வாதம் பொருமலுந்தாகமும்
சுகபரனருளால்சுபமிதுவாகுமே 472

## புசுண்டரியற்றிய

சுவையானந்தக் கிருதம்-வேறுவிருத்தம்.

ஆகவேயின்னம் அன்புடனேதான்
யோகமாஞ்சுவையினுச் சிதக்கிருதங்கேள்
பாகமாஞ்சுக்கு பகாத்தித்திப்பிலி
தாகமாமிளகு தசையுடனெடுப்பீர் 473

தயவுள்ளத் தாணிநெல்லியுங் கடுக்காய்
மயமுடன் பலமொன்ருக வெடுத்திடு
வயமுடன் யிவையையவழக்கமாய் செய்ய
சுயமுடன ரைத்துசொற்படியாக்கே 474

சொற்படியாகக் கலந்திடுநீ நில்
விற்பனமாகவிளங்கவேகாச்சிடு
கற்பகம்போலேகருணைசேர்கிருதமாம்
பொற்புடன்பீங்கான்றனில்வைத்தடைத்திடே 475

அடைத்தபின்கேளுஅடவுடனேதான்
நடையிதிலொன்றுநாட்டுவேன்பாரு

தடையிலாசீரகந் தழைத்திடுவோமம்
விடையதாய் பொடித்திட்டு வேண்டியபோதே 476

போதுநாள்முன்செய் புனிதநேர் கிருதத்தில்
யாதுடநெய் விட்டிழைக்கியோர் கழஞ்சி
வாதுசெய்யாமல் வருந்திடமேலாய்
மாதுருகுஷ்டம் வசீரணம்போமே. 477

போமென்றதனல் கிரந்தியுமூலமும்
பாமெனச் சொல்லால் படராதுகிறமிகள்
மாவெனச் சொல்லால் மடராது கரப்பான்
ஊவெனச்சொல்லால் வுகந்திதைப் பார்த்திடே. 478

சருவூராரியற்றிய

வேகநாதக்கிருதம் வேறுவிருத்தம்.

இதையமகிழ யியம்புவேநன்றாய்
கதையெனவெண்ணி கணக்கிடாதிருப்பீர்
உதையவன்போலே வுயர்ந்தநற்கிருதம்
கிதைவிலாபுளிப்பு மாதளே யென்றதே. 479

மாதளேச்சதைச்சார் வகையொருப்படிதான்
பேதமில்லா துளசியுமோர்படி
பாதமாம் விஷ்ணு கிருந்தியுமோர்படி
தீதிலாநீருஞ் செழுமைப்பால்படியே. 480

பால்திரிடுகு பகர்யேலவோமம்
வால்மிளகரத்தை வதிதசீரகமும்
ஆல்விழலகல அன்புடனேதான்
வேல்வகைக்களஞ்சிவிதமுடன்கூட்டிடே. 481

கூட்டியேபொடித்துக்குலாவவேபாலால்
வாட்டரைவின்றிவரைத்திதைச்சேர்த்திடு
தேட்டமாய்நீயுந்தெளிந்திதைப்பாரு
கோட்டமில்லாமல்குணமாயெரித்திடே. 482

திடனுடனெரித்துத்திரமுடனேதான்
அடவுடன்பரணியானதில்வைத்திடு
கடவுளைப்பணிந்து கருதியேநிதமும்
சடமதுக்கேற்றப்படிதனேயேற்றிடே. 483

தனதொருக்கரண்டியடவுடனுண்டால்
சினதணல்வாய்வுசிதறியமூலமும்
கனல்சுரமந்தங்கனத்ததோர்சீழறும்
தினமுமேதேனிற்றெளிவுடனுண்டிடே. 484

தெளிவுடன்சாதிக்காய்பத்திரிபொக்கன
களிப்புடன்களஞ்சிசுருதிப்பொருந்திடு
ஒளிபெறகற்கண்டுயரிருப்பலந்தான்
விளிப்புறச்சேர்த்துமிக்கவுண்பீரே. 485

## திருமூலரியாரியற்றிய

### நன்னாரிவேர்க்கிருதம் வேறுவிருத்தம்.

மிக்கக்கொடுப்பைமிகுத்தப் பொடுதலை
தக்கவேரெண்டுபடியதுவாகும்
ஒக்கப்புளிமாதளைச்சதைச்சாருமுக்கு
சிக்கநன்னாரிவேர்சேர்பலமைந்ததே. 486

ஐந்துடன்சதைக்குப்பியானதோரேலமும்
விந்தைசேர்லவங்கப்பட்டையரத்தையும்
கந்தமதாககணக்குடனேர்மையாய்
முந்தவேரெண்டுகளஞ்சிடைவிரும்புவீர். 487

விருப்பமாய்பாலால் விசையாயரைத்திதை
பொருப்புடன்கலந்துபுகழுமெரித்திடு
திருத்தமாய்வடித்துசேர்த்திடுபரணியில்
உருக்கமாம்பச்சைவுயர்பூரந்தூவிடே. 488

தூவிடுகொஞ்சந்துடுக்குள்ளவாய்வுக்கும்
மேவியேபிததம்விரணநோய்கட்கும்
கோவியதானகொடுங்கனலினைப்பிற்கும்
பூவினம்போலேபொருதுவீர்மண்டலம். 489

மண்டலமொன்றுவகையுடனுண்டால்
தெண்டமாம்ரோகந்தெளிந்திடும்பாரு
கண்டிடக்கரண்டியது நிறையளவாய்
விண்டசொற்படியேவினைநீங்கும்பாரே. 490

## சட்டமுனியாரியளறிய

### கொடிமாதளைக்கிருதம்-வேறுவிருத்தம்.

எல்லார்க்குமாசுமிது ஜெயக்கிருதமே
நல்லார்க்குச்சொல்லினல்கண்டுசெய்வார்கள்
வல்லமையிதின்குணம்வருக்கப்போகாது
வுல்லாசமாதளைவுயற்சிப்பேராகுமே. 491

வுயற்சியதானவுத்தசதைச்சாரது
பயற்சியாய்ரெண்டுப்படியதுவாகும்
முயற்சியாய்துளசிப்படியொன்றதாகும்
நயமுடநாவின்பால்படிவொன்றதே. 492

ஒன்றதாயசேர்ப்பீருயர்சுக்குத் திப்பிலி
நன்றதாயோமமும் நல்லபேராரத்தையும்
சுன்றிதமில்லா கண்டுபரங்கியும்
வென்றியக்கிரும்பு மிகவகைக்களஞ்சியே 493

வகையிது யெடுத்துவயணமாய்ப் பாலில்
துகைபுடன்மிளகது துலங்கவேகூட்டி
பகையறவரைத்துபகர்வுடன்சேர்த்திடு
தகைவிலாப்படியே தானிதையெரித்திடே 494

யெரித்துவடித்து யிணங்கிடக்கண்ட பின்
தரித்திரம்நீங்கதானதோர் நெய்படி
பரிமளமெடுக்கப் பாகமாய்க்கூட்டி
விரித்திடக்காச்சிமேல் படிவாங்கிடே 495

வாங்கியேவைத்து விராகனின் நேரிடை
பாங்குள்ளக் கோரோசனமதைப் பொடித்திடு
தாங்கிடக் கற்கண்டிருபலந்தாக்கிடு
ஓங்கிய நோய்கட்குயர் பெறயீந்திடே 496

ஈந்திடப்பித்தம்யீளை யிருமலும்
காந்தலும்வெப்புங் கனத்தவயிர்வலி
சாந்தமதாக்குந் தசையாதவெள்ளையும்
ஏந்தலினருளாலிது முதல்தீருமே 497

## ரோமரிஷியாரியற்றிய

### நயகுணப்படலாதிக்கிருதம்-வேறுவிருத்தம்.

முதல்வகைக்கேளு முனிவர்கள் சொன்னது
இதமுறுநிம்பைச் சார்படியொன்றது
பதமுள்ளதுத்திப்புனலது முருங்கை
விதமுடனேர் படிவிளங்கிடவாங்கே 498

விளங்கிடுந் திப்பிலிகருஞ்சீரகங் கோஷ்டம்
களங்கமில்லாத சதகுப்பிக்கிரும்பு
பளங்கனிதூரும் பக்குவமதுரமும்
தளங்களோர் களஞ்சித்தான் மிகப்பொடித்திடே 499

பொடித்து ஆவின்பாலால் புகட்டியரைத்தபின்
யெடுத்துக்கலந்திடு யிலகவேதானும்
தடித்திட நீருந்தயவுடனேதான்
மடித்துமேவொன்ற தாய் வாகாகக்காச்சிடே 500

வாகாகக்காச்சி வழித்துப்பரணியில்
பாகாகவைத்து பண்புடனேதான்
யோகாதியாகவுயர்ந்த கற்கண்டும்
சோகா திநீங்கத் தொடுரெண்டுபலமதே 501

பலமதைநன்ருய்ப்பரிந்ததையூட்டு
பலனிலாசா திக்காய்க் களஞ்சிபொன்ருக
பெலனுடன்பொடித்து பொற்புடன்றாவிடு
இலகவேபணிந்து யேற்கனச்செய்குவீர் 502

செய்ததில்கரண்டிசிறப்புடன் கொண்டால்
எய்திடுஞ் சிலேற்பனமிருந்த கிறுமியும்
ஐயமதானவாத முந்தாகமும்
பையவேதோஷம் பகர்சுரம்போமே 503

போகுமேமூலச்சூட னு காந்தலும்
யேகுமேசன்னியிருமலும் வாந்தியும்
பாகுசேர்கிருதத்தால் பலவிதநோய்களும்
வாகுடன் றீரும்வதிசெயம்பாரே 504

## கொங்கணரியற்றிய

### க்ஷயகுலாதிக்கிருதம்-வேறுவிருத்தம்.

செயகற்பூரவள்ளி யினிலைச்சார்
சுயமதாயபடியதுத் துலங்கவெடுத்திடு
நயமுடனுடுதின்னப் பாளையுந்தானும்
வியலுடனரைக்கால் படியதுகூட்டே 505

கூட்டுவாய்க் குப்பைமேனியுமரைக்கால்
நாட்டமாய் நல்லநீர்படிரெண்டதாம்
வாட்டமில்லாம லாவின்பாலோர்படி
தாட்டிகமாகச் சம்பளச்சாரதே 506

சாரதுகால்படிக் கணக்குடன்சேர்த்து
வீரமா யெரித்து விபரமதாக
தீரமாயாவின் நெய்ப்படி ரெண்டினில்
சேரவேயூட்டித் தெளிவுடன் காச்சிடே 507

சாச்சிவடிக்கையில் கனத்தகற்கண்டு
வாச்சிதுவெனச்சொல் வழங்கவேயிருபலம்
மாட்சிமையாக வரைத்துப் பொடித்திடு
கூச்சமில்லாமல் குங்குமப்பூவதே 508

பூவதிகாசது பொடித்ததைற் றாவிடு
மேவவேசெய்தபின் விபரீதமாக
காவவேபரணியிற் கருதியடைத்திதை
ஆவலாய்நோய்களகலவேயூட்டிடே 509

ஊட்டிடவாய்வு ஊஷ்ணமுங்கிருமியும்
காட்டிடும்போதேகரந்தப்புழுக்களும்
ஆட்டமதான அநந்தலின்பித்தமும்
ஓட்டமதென்றே வுடனேவிட்டேகுமே 510

விட்டிடாதிதனைவிவேகமாய்ச்செய்திடு
குட்டமும்நீங்கிடுங்குருவருளாலே
திட்டமாங்கருணீகரத்தெளிந்தகிருதத்தால்
சட்டமாய்ச்சொன்ன சமர்த்திதைப்பாரே 511

## போகரியற்றிய

### கருணீகரக் கிருதம்-வேறுவிருத்தம்

பார்தழுதாளை பண்புடன்சமூலமாம்
பேர்பெருமுக்காவேளையுடனேதான்
நேர்பெறத்தூதுவேளையுமொன்பட
வார்பெறவகைக்கிச்சார்படி யொன்றே 512

ஒன்றதாய்க்கூட்டி வுணர்வுடன்பாரு
நன்றதாய் நிம்மைச் சாரதுவரைப்படி
வென்றிடநீரும் விளங்கவே யோர்படி
குன்றிடாதிதுதான் குருமுறையாமே 513

குருமுறைக்கேளீர்க் குணமுடனேதான்
பெருமறையேலம்பிலத்ததோர்சுக்கு
தருசிறுதேக்குத் தருந்தவாலுளுவை
திருசிறுகார் போகுத்தெளிதல் பத்திரியே 514

பத்திரிநாகப் பூபகர்ந்தமஞ்சிட்டி
உத்தியயிவையெலாமொரு நிறைக்கழஞ்சி
சித்தியாய்பாலில் சேரவரைத்திடு
வெத்தியாய் கூட்டிவிளங்க யெரித்திடே. 515

யெரித்துவடித்து யிரக்கியபின்னர்
விரித்ததைச்சொல்வேன் இன்பமாய்நெய்ப்படி
தரித்திரநீக்கத்தான் மிகக்கூட்டிடு
முரித்துவிடாமல் முனேகண்டெரித்திடே. 516

கண்டசொற்படியேக் கருதியேயீயும்
விண்டபுனலது விரவிஙிற்காமலே
தண்டிடப்பாரு சமர்த்தியமாக
அண்டர்கோன் கிருபையது ஜெயமாமே. 517

ஜெயமுடனேதான் சேவிப்போஞ் சுவாமிமுன்
தயையதினுலேத்தடங் கலில்லாமல்
வயமுடன் நெய்யைவடித்துப் பரணியில்
சுயமுடன் வைப்பீர்சுகிர்ததிருத்தமே. 518

திருவருளாலே தெய்வத்தைப்பணிந்து
வருமைகள் நீங்கவளர்சாதிக்காயும்
கருணையாய்ப்பொடித்து களிப்புடறாவி
பெருமையாய் கற்கண்டிருபலந்தானே. 519

தானிதில் பொடித்து சமர்த்துடனேதான்
யானிதில் சொல்வேனின்பதமாக
மானிடர்க்கிதனை மகிழவோர் கரண்டி
தேனினிலூட்டி தென்புடனீந்திடே. 520

தென்புடன் கொடுக்கத் தீருநோய்தனைகேள்
முன்புள்ள சூலைமுதிர்ந்திடும் வாய்வதும்
இன்பமாய் நின்றிடும் யிரைச்சலும்வாந்தியும்
துன்பசூனியமுந் தொடராததானே. 521

துடராதுசுரமுஞ் சுழட்டுமலக்கட்டும்
படராது சுவாசமும் பார்பித்தஜபமும்
விடமுதலானதும் விரண்டிடும் மேமிக
கடந்திடும் ரத்தக்கபஞ்சொரிகுட்டமே. 522

குட்டவிரணந் தொடுக்காதுநாட்டமாய்
சட்டமாயிதனை தயையுடன் கொடுத்திடில்
தட்டளைப்படியே கடந்திடும் ரோகங்கள்
நட்டம்வராது நானிலந்தன்னிலே. 523

## பிரமமுனியாரியற்றிய
## கைவல்லியக்கிருதம்.

### வேறு-விருத்தம்.

தன்னிலே குற்றந்தான் கண்டகற்றிட
பன்னிடாதெந்தப் பவப்பிழையானதும்
இன்னமோர்க் கிருதமியம்புவேன் கேளு
வன்னமாம் வெண்முள்ளிவகை யதுபடியே. 524

வகைப்படிச்சாருவாங்கிய பின்பு
துகையில்லா நெய்சுண்டி துலங்கவேவோர்படி
தகையாமல் நீர்படித்தாணுங்கச்சேர்த்து
பகையார ஆவின்நெய்ப்படியது வாஞ்சையே 525

வாஞ்சையா யெரித்துவடித்திதில்சேர்த்து
காஞ்சிடாப்படியே கடுகெனவேதான்
மாஞ்சிசீரகமு மதுராதிகோட்டமும்
ஒஞ்சிடாப்படியே வுயர்பத்திரிமிளகே 526

மிளகொடுசுக்குவிறைவுள்ள திப்பிலி
அளவுதான் களஞ்சியதுநிறைகொண்டு
குளப்பிடவரைத்து குணமுடன்பாலால்
முளக்கமதாக மூட்டியெரித்திடே 527

யெரித்தபின்னேதான் இயல்புடன்வடித்து
குறியதாய் பரணியில் கொப்பெனவைத்து
பரிவுடன் பச்சைகற்பூரந்தூவியே
சரியானப் பாகந்தனைமிகச் சாற்றுவேன் 528

சாற்றுவேன் கேளுசதிசெய்யும் வெள்ளையும்
மாற்றுதலான யிலைத்தல்கனத்தலும்
ஆற்றுவரிகுறல் அஷ்டகுணங்களும்
ஏற்றிடாதவை நோயிணங்காதுதானே 529

இணங்காதுபித்தம் யேப்பமுஞ்சுவாசமும்
குணங்காதுமுன்பு கொடுங்கனலெல்லாம்
பணங்காசியிதற்குப் பண்புடன்வேண்டுமோ
மணந்திருமூலிகை மாசுலுவாச்சுதே 530

## சுந்தரரியற்றிய

### சிந்தாமணிகிருதம் வேறுவிருத்தம்.

வாச்சுதே யிச்சிவளரிதமொன்று
சூட்சமாவில் வைபத்திரிவொன்று
மீட்சியதாக மிகரெண்டு படியதாய்
ஆச்சுதென்றெடுப்பீரதற்கினங்கேளே 531

இனமதாய் லவங்கம் யேலமுஞ்சாதிக்காய்
கனமிளகரத்தை கதித்தநன்னரிவேர்
வனகொத்தமல்லி வழங்குங்கிரும்பு
வினைவுடனிவைகள் வேண்டுவீர்களஞ்சியே 532

யென்றதைப் பாலாவியல்புட ளூட்டி
நன்றெனப்பாகில் நலமுடன் சேர்த்து
கன்றிதமின்றிக் கணக்காக நெய்ப்படி
வென்றிடக்கூட்டி விளங்கவெரித்திடே 533

எரிததுவடித்து விணங்கபரணியில்
வரிததசொற்படியேவினவோடனடத்திடு
பிரியமாய்கரண்டி பெட்புடன்கொடுக்கில்
சிறியதோர் நோய்கள் சிதறிடும்பாரே 534

பார்சீழுமூலமும் பணிவிலாவறட்சியும்
நேர்படாவெள்ளையும் நிதந்தவிர்வலியதும்
கோர்க்கின்றளைச் சலுங்கொடுங்கனல் வாய்வதும்
ஏர்க்கெனயிவை முதலெல்லாமகலுமே 535

அகலுமேசிலேற்பனம் க்ஷயமுமீளையும்
இகலுமேபித்தமிளைத்தலும்பினத்தலும்
சுகமதுவாகசொல்லிய நேர்ப்படி
பகலவன்போல் கண்பலித்திடக்கண்டதே 536

கண்டதுங்கேட்டதுங் கவனமாய்ச் செய்தால்
விண்டதுமெய்தான் மேலானதெல்லாம்
பண்டுடன் பழகிபைந்தமிழுணர்ந்து
தெண்டிரைமீதிற் றெளிந்தவர்சித்தரே 537

## இராமதேவரியற்றிய

### இனிதரஜக்கிருதம் - வேறுவிருத்தம்

சித்தர்களனந்தஞ் செப்பினர்மேலாய்
கற்றவர் வாசித்துக்களிப்புற்றாப்பா
உற்றசொல்லெல்லாம் வுறுதியாய்வைத்து
பற்றறநின்றுபகர்ந்திடப்பாரே 538

பாரென்றுசொன்னால்பாற்பரோநன்றாய்
காரென்றுசொன்னால் கண்ணேக்காரையா
நேரென்றுசொன்னல் நிறைமமாறிசொல்வரோ
சீரென்று சொன்னல் தெளிந்துதெளியாரே 539

ஆரென்றுகேட்டு அடவுடனேதுவர்
பேரென்றுகேட்டு பிரியம்வைத் தழைத்து
கோரென்றுநாளுங் குணமுடன்போதித்து
நாரென்ற நூலையன்று முனைப்பதே 540

முனைகண்டதாரோமுச்சுடர்வட்டத்தில்
தனைகண்டபின்னர் தலமதில்புக்குவர்
வினைகண்டு நீங்கவேதாந்தபாதத்தில்
மனைகண்டு வொன்றிவாழ்த்து வருய்யவே. 541

உயர்ந்தகிருதமொன் றெருங்குடன் கேண்மிக
வணவமாஞ் சின்னிவாசை நேர்நெரிஞ்சியும்
நயனமாஞ் செப்புநெரிஞ்சியுமிக்க
சுயரசமோர் படிசுருக்குடன் வாங்கே. 542

படியது ஆவின்பால் நிறைநேராம்
துடிவிதமாக சொன்னமுறைசுக்குடன்
வடிவுள்ளமோதகமாஞ்சியோடேலம்
கடினமதில்லாலவங்கப்பட்டையுங்காணே. 543

பட்டைநற்சீரகம் பகர்சிறுதேக்கு
திட்டசாதிக்காய் செண்பகப்பூவுடன்
ஓடிடப்பத்திரி உயர்ந்தவால்மிளகு
மட்டிடக் கூடாதிவை முதல்களஞ்சியே. 544

முதலணிநிறையாய் முனிவுடனப்பாலால்
பதமுடனரைத்து பாகத்திறசேர்த்து
விதனமில்லாமல் வேண்டியெரித்திதை
அதனமாய் வடியுற்றுகங் குளிர்ந்தெடுப்பதே. 545

எடுவினவாக யிரண்டுபடிநீரில்
விடுவினவா கமேற்கண்டதனையே
முடிகிடாப்படியே முயன்றுவெரித்துநற்
கடுகிடாபரணியில் கவனமாய்வைத்திடே. 546

மாயவுபாயமனக்குறங்கதனை
ஓயவேசெய்து வொருபொருளேர்க்கவே
தூயநற்குணமாய் துதித்துப்புகழ்வீர்
நேயநற்கிருதம் நேத்தியாமென்பரே 547

நேத்தியாய்க்கேளு நின்மனப்படியே
சூத்திரவிதமாய் சுவையாங்கற்கண்டு
வேத்துமைநீங்கவே ரெண்டுப்பலந்தான்
போற்றிப்பொடித்து பொருந்தசெய்வாயே 548

செய்ததிலோர் கரண்டிசீர்பெறவெடுத்து
உய்தலாமென்று வுண்மையாயுண்டிடில்
பையவேயெழுந்த பகர்காங்கைச் சூடதும்
தொய்யவே க்ஷயமுந்தீரும் பாரே. 549

துலைவதாம் பித்தக்கபமூதல் நடுக்கலும்
கலைவதுங்காட்டுங் கண்புகைநோயதும்
தலைநோய் விரணமுந் தானந்தவாய்வும்
சூலைநோய்கடுக்கலுங் கோபமும்போமே. 550

கோபமுந்தணியுங்கோலமதாக
தீபமுந்தெளிந்து திருநலம்போன்று
பூபரிவனம்போல் பொன்னிறமேனிதாய்
சாபமும்நீங்கி சகலநோய்போகுமே. 551

போவது யெப்படி யென்றுணர்ந்தேறு
நாவதுவழக்கம் நாடிடலாபமாம்
காலதுதன்னால் காண்பதேசித்தத்தில்
தாவதுதன்னால் சார்ந்தவர்முத்தரே. 552

முத்திதனில்சிறந்த முனையொளிநாட்டம்
எத்தினில்வருமோ இராப்பகலற்றது
புத்தியில்தோந்து போதனைக்கேட்டிடு
சத்தியில்நின்று சாதித்தாலம்மதே. 553

அம்மெனயெப்படி யென்றுணர்ந்தேறு
உம்மெனமொழிதலுயர்வுடன்பாரு
தம்மெனத்தானுத் தனிமுதற்கிருபையாம்
சம்மெனயிருந்தால் சகலமுஞ் சித்தியே. 554

## தேரையரியற்றிய

### சீவராஜக்கிருதம்-வேறு விருத்தம்.

சித்தியதான சீவராஜக்கிருதங்கேள்
உத்தியாந்திப்பிலி மோதகவிளங்கம்
அத்தியின் திப்பிலி அதிகதோர்விடையமும்
வெத்திசேர்சுக்கு வெண்மிளகாமே 555

வெண்மையிருவரத்தை விலாமிச்சுவெட்டிவேர்
உண்மையாம் நருக்குமூலஞ்சிறுதேக்கு
பண்மையாயிதுவெல்லாம் பாரோர்களஞ்சிடை
தண்மையாய் பாலால் தானரைத்தெடுத்திடே 556

எடுத்திதைப் பொன்றிசைத்த புனல்தனில்
அடுத்திடக் கலந்து ஆவின்பாலோர்படி
தொடுதிதிடச் சப்பழச்சாறது வோர்படி
முடித்திடவொன்றாய் முயர்பெறக்காச்சிடே 557

காய்ந்ததை வடித்துகண்ணுடிப் பரணியில்
ஆய்ந்ததைவைத்து அளவுகேள் சாதிக்காய்
தோய்ந்திடக்களஞ்சி துல்லியகற்கண்டு
பாய்ந்திடப்பொடித்து பரிந்திதைத்தூவிடே. 558

தூவியோர் கரண்டி துடுக்குள்ள நோய்கட்கு
மேவியேகுடுக்கும் விதமத்தைப்பாரும்
கோவித்தபலநோய் குறிப்பறிந்தேதான்
பாவித்திதனைப் பலாபலன்பாரே. 559

பலாபலனுண்டு பட்சமோடிதனை
சலாபமதாகச் சாதித்துசெய்யில்
நிலாததுநோய்கள் நேர்ந்தசொற்படியே
கலாபமுமில்லை கனசீலசெளக்கியமே. 560

## கமலமுனியாரியற்றிய

### சீலசெளக்கியகிருதம் - வேறுவிருத்தம்.

செளக்கியச்சங்கம் பழத்தின்சார்கண்ணியும்
கெளவிடக்காணிக் கருதிடுமுசுக்கையே
பெளவிடவகைப் படியதுவாகும்
தெளவிட்ச்சம்பளம் பளச்சார்படியரையதே. 561

அரைந்தசொற்படியே அதிவிதசுக்கு
முறைவிதத் திப்பிலிமுசித்தசிறுதேக்கு
குறையளக்களஞ்சிக் கூட்டிடுரெண்டரை
துரையிதின் வகைசொல் சூட்சமிதாமே. 562

சூட்சியாம்பாலால் சுகுணமாயரைத்து
தாட்சியதாகத் தாமதிக்காமல்
மீட்சியதென்ன விட்டிடுபால்படி
காட்சியாயெரித்துக் கனவடிகண்டிடே. 563

கனமெனவுற்று கதித்ததோ ராவின்நெய்
வினவுடமாட்டி மிக்கவெரித்திடு
தனமெனவெடுத்து தான்பின்னிருத்திதை
மனமெனப்பரணியில் வாய்த்ததைவைத்திடே. 564

வாய்த்ததைஞானவளர்ச் சிவப்பூசையில்
காய்த்துபழுத்த னக்கைகதுவாக
சாய்ந்திடீர்பதத்தைதழைக்க ஜெகத்தில்
ஆய்ந்துமுன்னின்று அன்புடன்போற்றே 565

போற்றியெடுத்துப்புகழ்ந்தகற்கண்டு
யேற்றிடுவைத்துப் பலமிதிலேதான்
சாற்றியிடித்திடும் சம்பிரமாய் நோய்கட்கு
யூற்றியோர் கரண்டிவுகந்து நீயீந்திடே. 566

ஈய்ந்திடுரெண்டு வேளையுமேதான்
காய்ந்திடுமீளக் கனத்ததோர்தோஷமும்
பாய்ந்திதுநீங்கும் பரம்பரையருளால்
தோய்ந்திடப்பார்த்து தோத்தரிப்பீரே. 567

தோத்திரத்துடனே சொல்லுவேன்கேள் மிக
ஆத்திரமான சுவாசஅனத்தலும்
நேத்திரங்கொண்ட நிதானமதாக
சூத்திரப்படியே துலங்கிடும்பாரே. 568

## நந்தீஸ்வரரியற்றிய

### சுகந்தப்பிரகாசநெய்-வேறுவிருத்தம்.

துய்யசுகந்தப்பிரகாச நெய்தனை
செய்யவே ரோகந்தீர்ந்திடுமேப்பா
பையவேநீயும் பகர்வுடனேதான்
உய்யவே பாருவுயர்ப்புளியாரையே. 569

ஆரையின் சார்படி அளவதுயெட்டு
கோரையில்லாதக் குணமுள்ள நெய்படி
வாரையநான வளர்த்திரிகடுகுடன்
மீரையில்லாதவிளங்கும் இந்துப்பே. 570

இந்துப்புஇங்குமேவச்சாரஞ்சாதிக்காய்
சிந்தைவிளங்குஞ் செழுந்தவெட்பாலை
கந்தமதானகனத்ததோர்மூலமும்
விந்தைகிரும்புமுச்சிதலவங்கமே. 571

லவங்கத்துடனேமாதளைப்பிஞ்சதும்
தவங்கலில்லாமல் தானிடைக்களஞ்சியாய்
கவனமதாகக்கணக்குடன்வாங்கியே
மவுனதேசிகன்பால் வாழ்த்தியிடித்திடே. 572

இடித்துரசத்தில்யீடாய்கலந்திடு
படினமாய்தயிர் தான்படியொன்றுவிட்டு
நடினமதாகயமுடனெரிததது
வடிவுறயிறக்கி வகையுடன்பார்த்திடே. 573

பார்த்துவடித்துப் பரணியில் வைத்திதை
சேர்த்துவோர்கரண்டித் திகங்காலையுண்க
ஏர்த்திடாக்கிராணி அறுவகையானதும்
கொர்த்திடாதென்றுங் குருவுரைத்தாரே 574

குருவருள தனல்குலைநோய்மயக்கமும்
பருக்கள்சீழ்வினைகள் பதுங்கியேநீங்கும்
பெருமையாயிதனை பெரியவர்சபையில
அருமையரயோதி அறிந்துகொள்வீரே 575

## அகஸ்தியரியற்றிய

### திவ்வியசந்தானநெய் - வேறுவிருத்தம்.

அறிந்ததைக்கேளு அடவுடனேதான்
பரிந்ததோர்கோஷ்டம் பகர்சிறுதேக்கு
விரிந்ததோர்மதுரம் மேன்மைவாய்விளங்கம்
சொரிந்ததோர்தனிப்பிசுகவாலுளவரிசியே 576

அரிசிவாலுளுவை அதிகவெட்பாலை
திரிவிலாவசம்பு சேர்த்திடுவுள்ளி
பரிவுள்ளவரத்தைபாங்குள்ளசதகுப்பி
தெரிவுள்ளகெந்தந் தேர்ந்ததோர்விடயமே 577

விடையங்கருஞ்சீரகம் மேன்மைநன்னாரிவேர்
தடையிலாப்பூலாப் பட்னபொன்முசுட்டை
நடையுறுமின்மப்பெருமரப்பட்டையும்
கொடையுறவெண்துத்திக்கூட்டுவீர்திட்டமாய் 578

திட்டமாய்பிலப்பனைசேர்ந்தநற
கட்டளையாகக்கணக்குடன்பத்திரி
சட்டமதாகமிளகுசுக்குடனே
நட்டமதில்லாதிரிபலைவில்வமே 579

வில்வைபாதிரிவேர்நேர்கடுகுரோகணி
சொல்லிசைவானக்குமேருசானிவோமமும்
நல்லிசைவாகநவின்றதோர்களஞ்சிதான்
வல்லமையாகவகைபார்த்தெடுத்திடே 580

எடுத்துஇடித்து இணையவேசேர்த்து
தொடுத்துநீயாவின் நெய்ப்படிசேர்த்து
கடுத்துவிடாமற் கமலமாயத்தீமூட்டி
அடுத்துயெரித்துஅன்புடன்வாங்கிடே 581

அன்புடன் வடித்து அதிஜெயப்பாணியில்
தென்புடன வைததுதீர்க்கமாய் களஞ்சி
நன்புடன்கொடுக்க நவில்வதைக்கேளு
முன்புடன் பீனிசம்முயன்றிடும் வாதமே 582

வாதம்பெரும் பாண்டுமெயக்கக்காமாலே
பேதமதான பித்தத்தின் பாண்டதும்
காதலிப்பெருவயிறு கனத்திடுங்குன்மம்
நாதனின் னருளால் நாடாதுதானே 583

இந்துப்புவோர்களஞ்சிகூட்டவும்

மச்சமுனியாரியற்றிய

இராட்சிதசிந்தாமணி நெய்-வேறுவிருத்தம்

கண்மணிப்போலே கருததினிலுணர்ந்து
தண்பெறநிறைந்து தததுவநிலையில்
பண்பெறவுற்றால் பரிசுததஞானமாம்
விண்ணொளிபபார்க்க விருப்பமுமாமே 584

விருப்பமதான வினிதசொல்நெய்தனை
கருதிடவிதனிற் கணக்குடன் புகலுமேன்
அருமையதான அலங்கிர்தயிஞ்சியும்
பெருமையதான பேர்ம்பெறறமேலமே 585

ஏலமுமாஞ்சியும் விசைந்தசிறுதேக்கும்
மூலமரத்தை முயர்ந்ததோர் தாணிக்காய
சீலவதான செழுந்தககிரும்பதும்
கோலமாயிவைமயல்லாங கொண்டிடு நிறையதே 586

கொண்டிடுவோர் பலங்குண் மிஞ்சியெண்பலம்
விண்ட சொறபடியே மிக்கவேவுரலினில்
கண்டிதமாக விட்டிடித்துக் கவனமாய்
குண்டமதான நறசட்டியிலிட்டிடே 587

இன்டமுடனே யிணங்கிட ஆவின்நெய்
திட்டமுடனேத் தெளிவுடனேர்படி
சட்டமுடனே சரிப்படவூற்றிடு
நட்டமுடனே நாதனைவாழ்த்திடே 588

நாதனைப்பணிந்து நலமுடனேதான்
வேதனைநீங்கவினவியேநீயும்
கோத்து வகலைக்கொப்பெனப்பார்த்து
தீததுவகலத்திகழயெரித்திடே 589

எரித்துப் பதந்தான் இசைந்த கடுகது
பரிநத கீழ்நின்று பகர்வ ன தினபின்
தெரிநது விறக்கிச்சீர் பெறவைநது
முரிந்து விடாமல முன்பாய் வடித்திடே 590

முன்பாய்வடித்திதை முயர்ந்தபரணியில்
அன்பாய்விடுத்து மேலாகியபாககேள்
நன்பாய்தீவராட்சிசிறுபழம்
பொன்போலிதனை பூட்டுவீர்மிக்கவே 591

மிக்கவேபல்மைந்து மிசைவுறக்கூட்டி
கைக்கிடாப்படிக்கி கற்கண்டுயெண்பலம்
ஒக்கவேபொடித்து வுகந்துகலந்திடு
தக்கசொல்லா மெனத்தானிதை யுகந்திடே 592

உகந்திதைச் சுகுணமுயர்பெறவேதான்
அகந்தழைத்திடவே அன்னையின்பாதத்தை
சுகந்தாப்போற்றி சுவையிதுவென்று
மிகந்தனமென்று விரும்பியுட்கொண்டிடே 593

கொண்டிடுரெண்டு வேளையுங்குணமாய்
விண்டிடும்படியே விருப்பமாய்களஞ்சி
அண்டிடக்கொள்ளு அனலினுலெடுத்து
கண்டிதக்ஷயத்தைக் காணவேநீக்குமே 594

நீக்கிடும்நீசுகிடும் நேந்தசுவாசத்தை
போக்கிடும் போக்கிடும் பொருமலும் யித்தத்தை
ஆக்கிடும் ஆக்கிடும்மசதிகளேங்கிட
தாக்கிடுந்தாக்கிடுஞ் சபாசெனச் சொல்லவே 595

சொல்லுக்குச்சொல்லு அச்சொல்லுவென்றிடும்
வெல்லுமிருமலை வெகுதூரம்வைத்திடும்
நல்லுணர்வாக நாதனைநினைத்துசெய்
நில்லுணரே நேர்ந்தமண்டலமே. 596

மண்டலங்கொள்ளமனது செவ்வையதாம்
தெண்டிரைமீதில் தெளிந்தநற்பாகம்
தண்டமிழ்பெரியோர்சாற்றினர்தீர்க்கமாய்
கொண்டல்போல் காட்டுங் கொடும்பகைப் போகுமே. 597

நல்லதேன் இதில்விட்டிறக்கிக்கொள்ளவும்,

பொன்னடிக்கமலம்புகழ்வுடன்றுதித்து
நன்னடியுண்ணல் நடையதுமேலாம்
முன்னடிதனன்ன முடிகியுணர்ந்திடில்
தன்னடிக்கண்டோர் தனையமறையோரே. 598

மறையது வன்னவளம் பங்கேளுநன்னுள்
நிறையதுமணியொலிநிற்குமை இளையமே
முறையமையமீது நின்றுவெளிக்கணடுணர்
துறைமுகமோடியாய்சொல்லமுடியாதே. 599

யாவருங்கண்ணுகடையுண்டோமகள
தேவருமுனிவருஞ் செவ்வையுருப்படி
நாவுமேவமறினர் நமன்றனைச்சயிக்க
பாரிருமுச்சுடர் பணிரெண்டுகாலமே. 600

நாசியினோட்டம் பதினாறுப்பார்ப்பர்கள் நித்தம்
கனிரெண்டு பூதுவக்கமலவிதழ்பணி
தொனியொன்று கூறுதுத்துணடிடார் நின்றதை
இனியென்று பூசிதமேறிக்கொள் நாசியே. 601

நாசியினோட்டம் நயனத்தில்வைத்திடு
பூசியினோட்டம் புத்திமிகுத்திடும்
காசிக்கிப்போவதேன் கனவிருள்நீக்கினால்
ஆசக்கிலொக்க அமர்ந்தது தன்னுளே. 602

உள்ளத்தைத் திருத்துவொருவழி மூப்பெண்
கள்ளத்தைத்திருத்துக் கவடமுஞ்சாராது
வெள்ளத்தைத் தாண்டிவினவாயடித்திடு
பள்ளத்தில் விழாமல் பரிவாய்திறந்திடே. 603

திரமையிதுதான் றெளித்துக்கொள்ளப்பனே
அரம்பொருனின் பமென்றுட்டினார் நூல்களில்
பரம்பரை வொன்றுக்குள் பதிந்திடுபுத்தியை
புரம்பினிலாகாமல் போதித்தவுக்கமே 604

## பிடிநாக்கீசரியற்றிய

### இராஜசேகரநெய்- வேறுவிருத்தம்

ஊக்கமதென்னவென் றுணர்வுடன்யூர்ந்து
ஆக்கையின் செல்வத்தை யறிந்துதெளிந்திடு
நோக்கையிற்கண்டு நுடங்காதிருந்திடு
தாக்கையிலெல்லாந் தளராதுதானே 605

தாலமிசையில் தழைத்திடத் தேகந்தான்
காலமிசையிற்கண்டு வுண்டவர்க்கு

ஆசமிசையில் அடர்ந்ததோர் நோய்கட்கு
சீலமிசையில் சீர்த்துவமென்னதே 606

மெண்ணிடச்சுக்கு யிலகுஞ் சதகுப்பி
வண்ணமாங்கிப் பிலிவதிசெயமாஞ்சியும்
கண்ணலங்கார சருஞ்சீரசமும்
தண்ணிடநற்சீ ரகந்தான் குரோசாணியே 607

குரோசாணிபத்திரி குணமுள்ளயேலக்காய்
விரோதமதில்லா வியலுமஞ்சாக்கதை
நிரோதயமதாக நிருப்பதோர்களஞ்சிடை
சிரோகனமாக சேர்த்துவருத்திடே 608

துவளப்பொன்னிறம் போலாக்கிப் பொடித்து
தவளமதான ஆவின்நெய்வரைப்படி
பவளமருந்தைப் பதமாகத்தாவியே
நவளம்பெருகநடத்தி யெரிப்பதே 609

தீயேகொடுத்துத் திரமாய்வடித்தபின்
நீயேமெதுவாய் நிதானித்துசெய்திடு
தாயேபணிந்து தாரெருப்பரணியில்
ஆயேநினைத்துவடைத்து மகிழ்ந்திடே 610

மகிழ்ந்தொருவார்த்தை வசனித்தல்கேளு
முகிழ்விதமான முயன்றதீவராட்சி
புகழ்சிறுசான பழம்பல மைந்து
இகழ்விலாகற் கண்டிசைப்பதோரினிதே 611

இனிப்புறவைந்துப் பலமதுவாகும்
கனிப்புறயாவுங் கலங்கிவைதனிலே
முனிவுடனூட்டி முயற்சியதார
தனிவுடன்களஞ்சி தன்னளவாமே 612

தன்னிறைக்கொண்டால் தடுத்திடும்பித்தத்தை
வன்னிறையான வலிமையின்னலும்
சொன்னிறைப்படியே துலைவதுநீயாயம்
பொன்னிறையென்று போதித்தலாகுமே 613

போதித்தல்குன்மம் பொருமலிரைச்சலும்
சாதித்தவர்க்கு க்ஷயத்துக்கோரோணியாம்
மாதித்தலாகவருஷிக்கும் பாதத்தால்
சோதித்தலாகச் சொல்லுமிப்பாகமே 614

### கலி விருத்த .

பாலுநெய்யும் பலன்பெறவுண்டிடு
மேலுகந்தப் பிணிபழல்சேரலும்
ஏனுகனேவென்னவே யெழலாகிட
நூலுஞ்சொல்லும் நுவன்றிடயாவுமே 615

### வேறு-விருத்தம்.

யாவெனவென்று யருளதைத்தேடு
கோவெனவொன்றுக் குடிமொண்டிருக்குதாம்
தாவெனநித்தந் தனித்ததுபேரின்பம்
போவெனநாமத்தால் புகாததுவினைகளே 616

### தன்வந்திரியாசியற்றிய.

#### திருப்பகழானந்த நெய் - வேறு விருத்தம்

வினைப்பயன்தீர்ந்திட மேலானநெய்யொன்று
தனைப்பிரோமிக்கத் தழைக்கவேயுகலுவேன்
அனையருள்நாட்டம் அறிந்துற்றெழுகுது
உனைக்கண்டுக்கொள்ள வுற்றப் பொதுவிதே 617

பொதுவாகவோதுதல் சண்ணியத்தொழிலிதாம்
விதுருணையான விகசிதசாதிக்காய்
சதுரங்கராஜ சதாப்பு வெண்மிளகு
மதுரம்நல்யேலம் மஞ்சிட்டிவிலாமிச்சனே 618

மிச்சையதான சந்தனம்நன்னாரிவேர்
மச்சிதமான கசகசாசுக்குடன்
வச்சிரமெனச்சொல் வால்மிளகோமமும்
அச்சியின்றேன்போல் அளவதுக் களஞ்சியே 619

களஞ்சியதாகக் கணக்குடனெடுத்து
விளஞ்சிடவருத்து விடுத்திடுநெய்யது
உளஞ்சிடாதாக வுயரொருப்படியினில்
நுளஞ்சிடவூட்டிய நுணுக்கமறிந்திடே 620

நுணுக்கமுறையாய் நூற்படிவெரித்துபின்
அணுவதுக்குரையாத வைப்பார்த்தெடுத்துமேல்
எனுங்குறையாம விசைந்ததொருப்பாணியில்
மனுடர்க்காணமல் வைத்திடுப்பதன்மே 621

பத்னப்படுத்தி பண்புடனேசிறு
விதனமிலாதிரு வெழில்தீவாட்சி

அதனப்பலம் பத்து அன்புடனிட்டு
இதனமதாக இணையுறகற்கண்டு 622

கற்கண்டுவைத்துப் பலமதைப் பொடித்து
நற்கண்டைத தூவினாதனைப்போற்றிடு
சொறகண்டெடுத்து சிறவொருகளஞ்சி
முற்கண்டினிவுற முயன்றுகொடுக்கலாம் 623

கொடுக்கலாம் பார்மிகச்குணமிலா நோய்நீங்க
நடுக்கம் பெலயீனமநாடியவாய்வுக்கும்
கெடுக்கின்ற பித்தங் கிளம்பிடுஞ்சோகைக்கும்
தொடுக்கின்ற க்ஷயத்துக்கும் சூட்சமறிந்திடே 624

அரிந்தவித முன்னமாக்கிடும் ரோகத்தை
தெரிந்தசிலவிதஞ் செய்கின்றிணக்கமும்
பரிந்துநீநாடியிம் பார்க்கபயிற்சிகள்
முரிந்ததைக்கண்டு முற்றமுறைநதிடே. 625

முறையினங்கேள் மிகமுதிர்ந்தனல் வைபத்தை
உரைந்தேநெருங்க வொட்டாது விம்மாலே
அரைந்தேவிழலாக்கும ஆனந்தவாய்வது
புரைவழிக்கண்டு பேர்புகழ்நல்லவரே. 626

## புலஸ்தியாரியற்றிய

### பலிதாசிதநெய்-வேறுவிருத்தம்

வல்லமையென்ப தோவைதீகந்தனக்கு
நலலவராக நாடியேகற்றிடில
சொலலரும் பரமசுவையதுநீடினல்
எல்லையிலகுற்றம் மியற்கனம்வெற்காவே 627

### சுடரொளி.

எற்கனமாகவிசைந்து வறுதலம்
கோத்கனமாகக் குவிந்துக்குலாவிடு
பாற்கனவிம்பம் பளிச்சென்று தோன்றிடும்
மூற்கமனதை முயன்றுதிருததிடே 628

### உண்மை.

இருவினைபபயனைவெஞ்ஞான்றகற்றிடும்
கருவினையென்ன கனவதுபோலநீக்கு
அருள்தனை யொட்டிஅம்மெனநின்று
பொருள்தனைத் தேடம்பான்னலங்காரமே 629

பொன்னிரம் வில்வைவேர் போன்றிடுஞ் சங்கம்வேரும்
மின்னியவேளை வேர்மிகுப்புள்ள சங்கன்வேரும்
நன்னயசித்தா முட்டிகலமுள்ள பேராமுட்டி
உன்னியவிலாமிச்சை ஒழுங்குள்ள சீந்திதானே. 630

சீந்தியாம்பொன் முசுட்டை சீர்த்துவநன்னாரியோடு
சாந்தமாமிவைகள் தானுஞ்சமனிடைப் பலமொன்றப்பா
வேந்தனுஞ்சுக்கு யேலம்விய லுள்ள கிரும்புவோமம்
காந்தலைத்தணிக்கு கின்ற கனகசீரகமுகந்தானே 631

சீரகவரத்தைப் பத்திரிதெளிவுள்ளக் கொத்தபல்லி
நோரகவக்கிருகாரம் நிறைதிருலவங்கப்பட்டடை
பேர்சுய்தப்பிலி வால்மிளகொடு சாதிக்காயும்
ஓர்சுயவசைகவசைக்கி வுயர்வுள்ளகளஞ்சியொன்றே 632

உயர்வுள்ளகளஞ்சிதன்னை வொருமித்துவருத்துவாட்டி
வியருள ஆவின்நெய்யோர் படிதனிற்கலந்துசூட்ச
மயமுளவெரித்து வாயகுவபணமாய் கடுகுதன்னி
சுயமுளவிருந்துநல்ல சீர்க்குணப்பரணிச்சேரே 632

சேர்ப்பதில் திடமாயூன்றிசெழிக்கவே தீவராட்சி
யேர்ப்பதுசிறுசாமங் தபழமதுபலந்தானைந்து
கோர்த்திடக் கலந்தபின்பு கோதிலாகற்கண்டப்பா
போர்த்தினிபொடிப் பீரஞ்சுபலமது தூவிடாயே, 634

பலமிதுக்கணக்கதாக்கி பெரின்பப்பூசைசெய்து
நலமிதுவாக யோதிநாதனைப் பணிந்துவாஉத்தி
தலமெலாம் புரக்குந்தேவதத்துவகியானரென்றே
பெலமெலாவுமக்கு ளென்றுபேசிமுன் சொல்லக்கேளே 635

பேசுவதே தென்றுக்கால் பிரபலயமனத்தைத்தேற்றி
மாசுவில்சேர்த்திடாமல் மலரடியேற்றிபோற்றி
தேசுலாவியப் ரகாச்சின்மயக்கடவுளற்கு
வீசும்பொற்பதத்தை நம்பிவேண்டியே யவிழ்தம்வாங்கே 636

வாங்கிடுகளஞ்சிவீதம்வயணமாய்பிணியைக்கண்டு
தாங்கிடக்கொடுத்துப் பாருதாமதமின்றியேதான்
ஏங்கிடச்செய்யுகின்றஇசைபவிலா,பித்தவைட்டை
ஓஙகியபாண்டுதானும் வொடுங்கிடும் க்ஷயங்கள்தானே 637

சிறுகரண்டி யளவானாலும் அல்லது வொருகளஞ்சி இடைக்கொள்ளலாம்.

க்ஷெயமெட்டுங் குன்மமெட்டுந் தவரியகிருணியாறு
நயமனவெழுந்தவாய்வு நடத்திடும் வாய்கசப்பு

துயர்செயும்வெள்ளோக்காளந் தோற்றியவாயினூரல்
வியலிலாமுடக்குசூலை விழலான காந்தல்போமே. 638

காந்தலும்பித்தவாய்வுங் கடல்கடந்தேகுமப்பா
ஏந்தலுங்கிருபைவைத்து எப்போதுங்காத்தல்செய்வார்
வேந்தர்க்குமெத்தநன்று விருதையஞ்சுத்தம்வேணும்
சாந்தமாய்குடிக்கமேலாஞ்சகலர்க்குநிலமையாமே 639

## புசுண்டரியற்றிய

### கண்ணோட்டக்குணநெய்- விருத்தம்.

நிலைமைசேர்நெய்தானென்று நேற்றியாய்ப்பகலக்கேளு
மலையைப்போல்வளருகின்ற மாவிதக்கிருணிதீர
தலைமையைக்கவங்கமாக சமர்த்துடன்செய்வீராகில்
அலைவிலாப்படியேயாகும் ஆசித்துபுகழுவீரே 640

ஆசிக்கசம்புநாகப் பழமதுபடிதான்ரெண்டு
நேசிக்கஆவின்நெய்தான்நிறையதுபடிதானென்று
பூசிக்கசாதிக்காயும் போன்றிடமாசிக்காயும்
யோசிக்கப்போஸ்தக்காயும் உயர்திருவிடயந்தானே 64

விடையங்கற்கடகஞ்சிங்கி விகிதமாமதுரயேலம்
நடையதுபெறவோர்பாக மாக்கிடுக்களஞ்சியொன்று
இடையதுகுறையாவண்ணம் யிணங்கவேயிடித்துநல்ல
கடைமருந்தாகுமிந்தக் கப்பொடிதன்னைச்சேரே 642

செழுமையாய்சேர்த்துக்காச்சித் திரமுடன்வடித்துப்பாரு
வழுமைகளிவாதநெய்தான் வதிவிதபொன்னிறமதாகும்
ஒழுகிடாப்படியேயீயும் உயர்ச்சியின்பரணிதன்னில்
நழுவிடாப்படியேயூற்றி நயன்றிடுமொழியைக்கேளே 643

மொழியதுயென்னவென்னில் முளகுபோலிருக்குகின்ற
விழிநயதீவராட்சி சிறுபழம்பலமெட்டாகும்
இழிவிலாகற்கண்டெட்டு பலமதுப்பொடித்துப்போடு
அழிவிலாநிறைநேர்சேர்த்து அன்புடன்கொடுப்பீர்தாமே 644

கொடுத்திடுக்களஞ்சியொன்று குணமிலாமனிதருக்கு
எடுத்திடும்வயறூளச்ச லிசைவிலாசீழ்மூலத்துக்கும்
கொடுத்திடுக்கிருணிநீங்க கோத்தரோயதீரவேதான்
சடுத்தங்கள்வாராதென்றுஞ் சறுவுடனறிந்துபாரே 645

## இராசிப்பொருத்தம்.

பாக்கியம்பெற்றராசி யானவர்க்கெல்லாஞ்சித்தி
யோக்கியஞானசித்தி யுயருள்ளமந்த்ரசித்தி
வாக்கியவாசிசித்தி வளர்திருயாக்கைசித்தி
நீக்கிடா வவிழ்தஞ்சித்தி நிலைபெறுமருந்துதானே 646

பெருமையாய்மருந்தைச்செய்து பேசியேயீந்தபோது
வறுமைகள்நீங்கிப்போமோ மனக்கறைபகலவேணும்
குருமுறைப்பாகங்கண்டு கொடும்பிணிதீர்க்கவேணும்
திருமுறைகண்டபேர்க்குச் சகலமும்விளங்குந்தானே 647

விளங்குதுஎன்று சொல்லிவெகுளிபோலிருக்கலாகா
களங்குளமெடுக்கலாகா கபடத்தைப்படிக்கலாகா
இளகுணத்தோரைச்சேர்ந்து யேர்க்கனச்சேரலாகா
குளங்கினவுளவைவிட்டு குருவருள்பதத்தைநாடே 648

நாட்டினுலல்லோநன்மை நாயகாருள் தானுண்டு
காட்டினிலலைந்துத்தேடி. கருப்பொருள்காணலாமோ
வீட்டினிலிருந்துகொண்டு விளக்கொளிதன்னைநாடி
ஆட்டினுல்ராசிசித்த ரவர்தமக்கெய்துந்தானே 649

தானெனச்சொல்லிக்கொண்டால் தரணியோர்புகழ்வதுண்டோ
வீனெனவறிவுமாறும் வேதாந்தம்நிலைக்கொட்டாது
தோனெனப்பெரியோர்சொல்லுந் தோற்றிடாகனவுமாமே
யானென துலங்கிடாமல் நடக்கலாம்வெகுநாள்தானே 650

நாள்களின்பேதம்பாரு நடவடியின்னதென்று
கோள்பாருவுச்சம்பாரு குணங்குறிவித்தைபாரு
ஆள்பாருநடக்கைபாரு அவரவர்செய்கைபாரு
மீதௗமனமுறைந்தபேர்கள் சேர்க்கையுமாகாதென்னே 651

### கருவூராரியற்றிய
### பூபதிநெய்-வேறுவிருத்தம்.

ஆகாதபிணிகள்நீங்க அடவுடன்சொல்லக்கேளு
ஏகாந்தரோகமுண்டோ யிடறதால்வந்தகுற்றம்
சாகாதவரத்தோர்சொல்தான் றப்பாதுதபபாதப்பா
போகாதவினைகள்நீங்கப்போற றுவநந்தத்தாயே 652

வாதம்பருப்புப்பலம்பத்து வறுத்துஎடுப்பீர்மிகுவாக
பேதமில்லாவக்குருட்டு பெட்பாயெடுப்பீரொருபலந்தான்
சேதமில்லாப்பூசினியின் செழுந்தபருப்புஒருபலந்தான்
யாததது டனேரேவல்சின்னி நன்றாயெடுத்திடுபலமே 653

பலந்தான் கவாப்பசின்னிய துங்களித்தப்பரங்கிப்பட்டையதும்
நலந்தான் தாலின்சின்னியொன் றுநன்ருய்பார்த்துயெடுத்தபின்பு
பெலந்தான் ஜாதிக்காய்விடையம் பெட்பாமதுரம்பலமதுவாம்
தலந்தான்சாரப்பருப்புடனே சார்ந்தேயெடுப்பீர் மிகத்தானே. 654

மிகவேயெடுத்து வொன்ருகமேலாயிடித்து வடிகட்டி
சுகமாயாவின் நெய்படியில்சுகமாக வேகலந்து
ககவேயெரித்து வடிகட்டி தயையாய்பரணித்தனிலிட்டு
அகமேகுளிர் சிறுதீவராட்சி அதிதபழமோர் பத்தாமே. 655

பத்துபலத்தினூடேதான் பாங்காய்கற்கண்டாறுபலம்
முத்துமுதல்போல்தான் கூட்டியமுன்றேகளஞ்சியளவாக
நித்தங்காலேத்தனிலூட்ட நேத்தியாகத் தாதுவிர்த்தி
மெத்தவருத்தமேலான வித்தைவாய்ந்துதெளிந்திடுவீர். 656

தெளிவாந்தேகமிகுவாகித் திருமாதவகதிர் முகமதனில்
ஒளிவாய்நின்று பெருமைபுறவுகந்தே நாடிநின்றிருந்து
வழியாய்நாமும் நடக்கைதனில் மேலாய்பார்க்கநிசமாகும்
ஒழியாத்துனபம் நீங்கிவிடும் வுண்மைவுண்மை யிவைதானே. 657

## திருமூலரியரியற்றிய

### நவப்பழத்தின் நெய்-வேறு-விருத்தம்

இவைசொல்லதிக நேர்மையதா மியம்பக்கேளுக்குணமாக
சுவையாயிருக்கும் நவபழந்தான் சுபமாய்பலமும்பத்தாகும்
கவையென்றெண்ணியிருக்காதே கவனமாகச்செய்திடவே
நவையாயிருக்கும் நலமாகநாடி யெடுப்பீர்நெய்தானே. 658

நெய்தானுவினினந்தனிலே நேத்தியானதொரு படிதான்
கைதானிதுபேர் வினவோடெடுத்து கலந்துகொள்வீர்நிதானிக்க
செய்பாகங்கள் தவருமல்சேர்ந்ததனையெரித்துமிக
ஐயமின்றிவடித்ததனை அளவாய்பரணிதனிலடைப்பீர். 659

அடைத்தபின்பு தீவராட்சிபழத்தை யெடுத்துவிரைபோக்கி
துடைத்தே சேர்ப்பீர்கற்கண்டுத் துலக்கமாக சேர்த்துபின்னர்
நடையாய்கரண்டிதானருந்த நலமில்லாதயிருமலது
தடைசெய்கின்றகக்கல்முதல் தானேபோகுங்கண்டீரே. 660

நவபழத்தின் ரசமெரித்துக் கொள்ளவும் தீவராட்சிப்பழம் பலம்-5 கற்கண்டு பலம்-5 கூட்டிக்கொள்ளவும்.

## சட்டமுனியாரியற்றிய

### கெந்தகநெய் - வேறுவிருத்தம்.

கண்டபடியே கேட்பீர்கள் கனத்தயிந்தகெந்தகநெய்
விண்டபடியே செய்திடவே விட்டேபோகுமேகமெல்லாம்

எண்ணிபெடுப்பீர் பத்துபலம் விசைந்தேநீரில் சுத்திசெய்து
தெண்ணிரகற்றி பொடியாக்கித் திரமாய் வைப்பீரொருவகைகேள்

வகையாம்புழுங்கலரி சியதுவாகாய்வருததுமாவாக்கி
துகையாம்பலந்தானைந்தாகும்தொக்கித்தொன்ருய் நெய்தனிலே
தகையாதிகனை யெரித்தெடுத்துதானே பரணிதனிற்சேர்தது
பகைகள்நீங்கக் கால்களஞ்சிபண்பாயிரு போதருந்திடுவீர். 662

அருந்தும்போதுகற்கண்டு அன்பாய்கொஞ்சந் தூவியேதான்
திருந்தும்படிக் கியுண்டிடவே தீரும்நோய்கள் தனையேகேள்
பொருந்தும் வெள்ளைமேகமது பொடிபோலகலுமிகலாமல்
மருந்துவிருந்து மறிந்தவற்குமலர்போல் குணங்கள்தெளிவாமே 663

குணங்களாக்குந் தப்பாதுகொடுமையான வரட்சிரெணம்
இணங்கயிட மொன்றிருக்காது இதுவோர்பாகமெய்யாகும்
மணக்குமணக்குமகா பெருமைமனதுக் கேற்றபடிசெய்யில்
வணங்கித்தேவப்பதம் போற்றவனந்தகுணங்களுண்டாமே. 664

உண்ணவிதற்குக் கிச்சடியாம் ஒழுங்காய்ப்புசித்துவருந்திடவே
எண்ணப்படியே நடந்தேறும் இனிதாயிருக்கும்பயமின்றி
அண்ணனருளால் பலபிணிகள் அகலுமிதார்த்த மறிவீர்காள்
பண்ணப்பலிக்கும்பாகமெல்லாம் பரிந்தேயுணர்ந்துயுகந்திடுவீர், 665

நெய்சிறுபருப்பு ஆட்டிறைச்சி கிச்சடியில் சேர்க்கவும்.

## ரோமரிஷியாரியற்றிய

### அடம்பிநெய்-வேறுவிருத்தம்.

உகந்தசுக்கு அதிவிடைய முயர்ந்தபோஸ்தக்காயின் ளுேடும்
அகந்தான்மகிழுஞ்சாதிக்காய் அடவாயெடுப்பீரொருபலந்தான்
மிகுந்தேவிடித்துமாவாக்கி வினவாய் நெய்யும்படிகாலாம்
தகுந்தேயிட்டு யெரித்தெடுக்க தப்பாதுண்மைநெய்தானே. 666

தானேயிதனில் கற்கண்டுதயவாய் பலந்தான்பொடித்திடுவீர்
தேனேயிணையாம் தீவராட்சிசிறந்த பழந்தான்பலமைந்து
மானேகேளாயிட்டிளக்கி மனம்போல் களஞ்சியளவாக
நானேசொன்னேனருதிந்திடுவீர்நலமில்லாதவயிருளச்சலுக்கே. 667

உளச்சல்கடுப்பு வயரெரிவுதிரப் பாச்சல்கீழ்வருத்தல்
அளைச்சல்காந்தல் ஆசனத்தில் அனலும்பெலத்தவிம்மலதும்
முளைத்தலான ரோகமெல்லாமொழிந்தேபோகும் நெய்தனக்கு
களைத்ததேகஞ் சவுக்கியமாய் கண்டுகொள்வீர் சுபமினதே. 668

இச்சாபத்தியம்.

## கொங்கணரியற்றிய

வயிர்கொட்டலுக்கு சூட்சமாகியநெய்

வேறுவிருத்தம்.

இன்பப்புளியுங்கொட்டையின்றேல்
இணக்கமாகப் பலம்பத்து
நன்றாய்ப்பொடித்துமாவாக்கி
நலமாயாவின்நெய்யதுதான்
தென்பாய்ப்படியென்றதனிலிட்டு
தெளியவெரித்துப் பரணிதனில்
மூன்பாய்விடடுதீவராட்சி
முசிதப்பழந்தானறுபலமே 669

பலந்தானைந்துங் கற்கண்டும்பண்பாய்ப் பொடித்து கலந்ததற்பின் நலந்தானெனவே களஞ்சிசிடையன்று குடிக்கவயிறு கொட்டல் கலந்தேநோய்கள் காணுமற்கடந்தே போகுங்கனவதுபோல் மலர்ந்த பூப்போல் வாசனையாய்மனமே தெளிந்து மகிழ்வாயே.

மகிட்சியாகும் புவிமீதில் மசந்தேநடுங்கும் பிணிகளெல்லாம்
புகட்சியொன்றே விட்டகலும்புனிதச் சொல்பார்பிழைப்பதற்கு
இகழாதிருப்பீரிமமருந்தை இசையாதருந்தப்பலிதமுறும்
நிகழாதிவையை நிதானித்துநேத்திபுடனே செய்திடுவீர் 671

வெங்காயம் வெண்ணெயில் பொரித்துச்சாப்பிடவும்.

## போகறியற்றிய

நெய்வேறுவிருத்தம்.

நேர்த்தியுள்ளதாளிசையும் நேர்ந்தசுக்குதிப்பிலிபும்
போததியெடுப்பீர் தாணிக்காய் பொன்னும்விடையஞ் சாதிக்காய்
யேற்றியெடுப்பீர் சித்தரத்தையெழில் சேர்மிளகுகடுக்காயும்
சாற்றியிரைப்பேன் சிறுதேக்குசமர்த்தால் வகைக்கோர் பலமதுவே.

### வேறுவிருத்தம்.

சோர்வையுடனே காஞ்சொறியின்
குணமாகியதோர்பட்டையதும்
பார்வையுடனே யிருபலந்தான்
பகர்வாய்சேர்த்துயிடித்தபின்னர்
யேற்கஆவின்நெய்படியில்
இனிதாய்கலந்து யெரித்துவிடு
மார்க்கமுடனேவடிகட்டி
மகில்பரணிதனிலடைப்பீர் 673

அடைத்தபின்னர்குங்குமப்பூ
அதுவோர்பலந்தான் கற்கண்டு
புடைத்தேபொடித்துயிட்டேதான்
வுயர்ந்ததீவராட்சிபழம்
தொடர்ந்தேபலந்தான்பத்திதனில்
தொய்யக்கலந்துவோர் களஞ்சி
அடர்ந்தேக்ஷயக்துக்கேற்றபடி
அன்பாய்குடுக்கக்குணமாமே. 674

கக்கல்விக்கல்கப மீளைக்கனத்தஜயமயக்கமொடு
சொக்கல்தியக்கலீளைப்பு முதல்சொல்லாதோடு மண்டலத்தில்
கக்கநாகப் பற்பமிட்டுதயவாய் கொடுக்கசம்பிரமதாய்
மிக்கவிலகிலகுவாகும் மென்மேலான மருந்திதுவே. 675

காஞ்சொறியின்வேர் பட்டையின்றேலை வுரித்துக்கூட்டவும்.

பிரமமுனியாரியற்றிய

பவளமாணிக்கநெய்-விருத்தம்

இதுநற்பழநெய்யென்று இனிதாய்ப்புகல்வேன் ஜெயமாக
பொதுநற்பெலமாம் நோய்தனக்கு பொழியும்பொழியுமீக்கிடவே
மதுவேயுண்டு லாகிரியினல் மலர்ந்தோர்பெருமைசொல்லறிது
அதுகளிதுவென்றலையாதே அகலாதிருந்துக்குணம்பெறுவீர் 676

வேதாந்தசாரம்

பெருவீரைந்து மொருவழியாய் பெலமாயிருக்க நயந்துணர்வீர்
வருந்துப்பஞ்சபூதகர்த்தாள் வகையின்றுகையை தேர்ந்துவொரு
கருவுமுருவுங் கண்காணகாட்சியின் பஞ்சீர்படுத்தல்
தருமமாகபுகலுகிறேன் சரிதானிது நேர்பாகமதே. 677

மனமேசெவ்வை

பாகப்படியே செய்திடவேபலனுண்டெந்த வனகதனிலும்
யோகப்படியே யிருப்பவர்க்கு யொன்றுமவர்க்குக்குறைவில்லை
யூகையிருந்தால் குருவுரைத்த நுணக்கம்யாவுங்கண்டுணர்வீர்
சாகைதனையே திருத்தலுற்றல் சந்தானங்கள்நிறைந்தனவே
நிறைந்தபாசந்தனைச் சொல்வேன்நிலைமையான நெய்பெரிதாம் 678

சுறந்தசாதிக்காய் பலமாஞ் செழுந்தயேலக்காய் பலமாம்
வுறைந்தநல்ல கசகசாவும் வுயர்வாயெடுப்பீர் பலநிறையாய்
விறைந்தயின்பப் பனங்கற்கண்டெடுப் பீரைந்துபலந்தானே ()
பலந்தான்குறையாமற்படிக்கிபண்பாய்வொன்றாயாட்டியேதான்
சலந்தான்விட்டுபிசைந்தேவழித்துசரிநேர்பசுவின் நெய்கலந்து

பெலந்தானிதற்குசட்டிதனிற் பேணிவிடுத்துஅவிழ்தமதை
கலந்தேயெரித்துப்பதமாகக் கணக்காயெடுப்பீர்நெய்தனையே. 680

தனையேவெடுத்துப்பரணிதனில் தயைபாய்வைத்துசுகமாக
வினைகள்நீங்கதீவராட்சி விகிதப்பழந்தான்பலமைந்து
முனையாய்க்கலந்துஒருகளஞ்சி முயர்ச்சியாகவுண்பீராய்
கனைபோனூற்றும்ரத்தமதும் சுழட்டுங்கடுக்கல்மிகப்போமே. 681

போகும்வயிற்றினுளைச்சலதும் பொருமல்நடுக்கல்சீதமுமே
யேகும்இந்தவிதநோய்கள் யிசைபாதோடுபரிந்துசெய்வீர்
தேகசவுக்கியமிகவுண்டாம் தென்பாயிரிக்குமநதினிற்கு
பாகமிதுவோர்நடையிதுதான் பண்பாய்மகிழ்ந்துசெய்வீரே 682

செய்வீரிதற்குப்பத்தியந்தான் சேர்ப்பீர்வாழைப்பிஞ்சுடனே
உய்பநெய்யும்பசுவின்பால் உகந்தப்பூச்சியிருலாகும்
அய்யமில்லாகொத்தமல்லி அதிதபொன்னுங்கணிக்கீரை
துய்யவெண்ணைபோஜனமுந் துலங்கவுண்டுவெந்நீர்குடிப்பீர் 683

குடித்துமெதுவாய்பார்த்திடவேகுணமாம் சொன்னநோயகலும்
படித்தப்படினங்குறையாதுபால்போலுரைத்த மொழியிதுவாம்
முடித்தபொருளில்நிலைமையுறும்முன்னோன்பதத்தைமறவாதே
தடித்தபிணிகளடராது தேயாத்தாயாம்தற்பரமே. 684

சுந்தரரியற்றிய

குறையிலாதநெய்-வேறுவிருத்தம்.

தேயாதின்பம்பேரின்பந் தெளிந்தால்ஞானசுகம்பெறலாம்
தோயாதிருந்தால்வருவதுண்டோ துலக்கந்துலக்கந்துல்லியமாய்
சாயாதொருநாள்கலக்கமின்றி சர்வப்பரமக்கிருபைதரும்
வாயால்சொன்னுலாகாது வருந்தநத்தைஅழைத்திடுவீர். 685

பெரியோர்கள்வுண்மை.

அழைத்தால்வந்துபேசாதோவம்மென்றணிசொல்நிறையாதோ
பிழைத்தேயிருக்கபேசுவதுபெரியோர்கருத்துக்கெதிருண்டோ
தழைத்தேவாழ்வோம் நீடித்துதலைமைதனக்கு ஆண்டவர்தான்
குழைத்துகந்தந்தனைபூசுங்குணங்கண்டிசைபோல்குறிப்புளதே.

குறியாய்த்தெளிந்துசொல்லுகந்தேன்குணமாங்கொடுப்பைவல்லாரை
நெறியாம்விஷ்ணுகிறுந்திஅத்திநேத்தியானபட்டையொடு
பிரியமானபுரசுடனேபேர்பெற்றேருங்குந்துளசியுடன்
சரியாஞ்சித்திரபாலாடை நாவல்கொழுந்துஞ்சமன்றுனே. 687

சமன்மூன்வோரிதழ்த்தாமரையும் நேராயெடுத்தோர் பாகமதாய
நமனும்பிணியைத்தீர்க்குகின்ற நலமாகியதோர்மாசிக்காய்
இமையோர்கின்பகிரும்புபத்ரி இசைந்தவிடயகுருசாணி
நிமைபோலெடுப்பாயேலக்காய் நிறைதான்சுக்குதிப்பிலியே 688

பிலிக்கித்தொடுக்கும்நேர்மைக்கேள்பிலமாகியதோர்கச் சோலம்
நலிக்கிசெய்யும்வினைநீக்கும்நற்சீரகமும்விடையமது
குலிக்கித்தொடுக்கும்பிழையகறறும் கோலநெல்லியிருசந்தநமும்
விலக்கியேற்றுகருஞ்சீரகமும் வினவாகியபேர்சொல்லாதே 689

சொல்வேங்கொத்தமல்லியுடன் சுகுணமானஜாதிக்காய்
நல்லாய்தொடுப்பீர்கூகையினீர் நயநம்போலே இவைகளெல்லாம்
வல்லாய்வகைக்கோர்பலமாகவாழ்த்தியிடித்துவொன்றுக்கி
எல்லாம்வணங்கநெய்படியொன்றிலேகச்சேர்த்துஎரித்தெடுப்பீர் 690

எரித்தேபாகமுடனேதான் இயல்பாய்வடித்துப்பரணிதனில
நிறுத்துவடைததுதீவராட்சி நேர்ந்தபழந்தான்பலம்பத்து
குறித்துக்கலந்துகளஞ்சியிடை குணமாயருந்தக்ஷயமீளை
வெறித்துபித்தயயக்கமுதல் விட்டேயகலும்சுரந்தானே 691

கரமுங்கணையும் வாய்வதுவுஞ் சொல்லாதடுக்குங்கனல்தணலும்
கரமீதிற் சொல்நிசமாகுவ கதித்தவனந்தவினைப்பயனும்
திரமாமிதுவோர் சஞ்சீவிதான் தீயாகியசொல்லகற்றிவிடும்
வுரமாய்விளங்கும் வெகுவாக வுகந்தேயின்னம் நெய்கேளே. 692

## ராமதேவரியற்றிய

### வேறுநெய்விருத்தம்.

இன்னமகிடசியாகவேதான் இயல்பாய் கேட்பீர்மிகுவாக
வன்னமனியாந்தாளிசமும் வதிதக்கிரும்புஞ் சிறுதேக்கு
கன்னலசுவையாம் அதிமதுரம் கனத்தகொத்தமல்லியொடு
நன்னலமாங்கருஞ்சீரகமும் நாடியெடுப்பீர் நற்சீரகமே 693

எடுப்பீரேலஞ்சாபத்திரியும் வியன்றதிப்பிலி மூலமுடன்
தொடுப்பீரிதுகள் வோர்பலமாகதுலங்கவருத்துசெய்தபின்னர்
கொடுப்பீர்மகிழபகர்வாயிடித்துக்குணமாய்நெய்யைக்கூட்டுவீர்
முடுக்கும் வல்லோரகமகிழமுயர்வாயிடித்து நெய்கூட்டே. 694

கூட்டுஆவின்நெய்படிதான் கோதில்லாமல் தானெடுத்து
ஆட்டிககொண்டமுன்பொடியைஅடவாய்சேர்த்துயெரித்துவிடு
நீட்டுமனல்தான்சிறுசாக நிதானததுடனே பார்த்துக்கொள்வீர்
பூட்டும்மருந்து பொன்னிறமாம் புகழ்வாயறிந்துவடிகொள்வீர் 695

வீரமுள்ளநெய்யதனல்விசைந்தவாய்வுமேகமதும்
பாரமுள்ளபித்தமதும் பகட்டும்வயற்றின்பொருமலதும்
தீரமில்லாவகந்தவிதத் தெளியாதிருக்கும் நோய்களெல்லாம்
ஆரமதுபோலறிந்தறிந்து அடவாய்க்கொடுக்கத்தூய்தலென்றே.

தேரையரியற்றிய

புஷ்பராகநெய் வேறவிருத்தம்.

தூயபதத்தைத்தொழுபவர்க்குத் தோற்றிருக்குந் துற்பெலன்கள்
நேயக்கருணைநெய்யொன்று நினைவாய்ப்புகல்வேன்பிணிகளுக்கு
காயம்பெலக்கும்வல்லாரைகருவேல்பட்டைகொழுந்ததுவும்
ஆயநல்லதினுசானவதிகவிலங்கைகொழுந்ததுவே 696

கொழுந்துமத்திப்பட்டையுடன் குலாவுஞ்சித்திரப்பாலாடை
வழுவில்லாச் சிறப்புள்ளடியும் வதித்ததகரைப்பழப்பாசி
நழுவில்லாத ஆவாரைநயன்றபட்டைக் கொழுந்துடனே
செழுத்தவெட்டிவேர் நெரிஞ்சிசிறந்தக் கொடுப்பைக்கற்றாழை 697

கற்றாழையுடனே செங்கழுநீர் கணக்காயெடுப்பீர் வகைபடிதான்
உற்றவுள்ளிரசம் படிதான்உகந்தே சேர்த்துமிகுவாக
பற்றமதுரந்தற்கோலம் பசர்வாகியதோர் பத்திரியும்
ஒன்றாய்கொத்தமல்லி சுக்குவுயர்ந்த விளங்குந்திரிபலையே 698

பலையோடுயர்ந்த சீரகமும்பாங்காகியதோர் யேலமுடன்
நிலைத்தேதேவதாரஞ்சதகுப்பி நீண்டவசம்புத்திரிகடுகு
பெலத்தசந்தனப்பூலாவின்வேர் பிறியசிறதேக்குவாய்விளங்கம்
தலத்தோர்கின்பத்தேத்தான்விரையுந் தழைத்தவருகு வேரறபலமே

ஒருநேர்பாகஞ்சரியாக வுயர்வாயெடுத்திடித்திதனை
கருவாய்முன்சொல் பாகமதில் கலந்தேநெய்தானிருபடியும்
பெருமையாகயெரித்திருத்து பெலமாகியதோர்பரணிதனில்
அருமையாகவூற்றிபின்னர் அடவாய்சொல்வேன்மிகக்கேளே 700

மிகவேதீவராட்சிபழம் இடுவாய்பலந்தான் வொன்பதரை
தகவேகலந்துசிறுகறண்டிதானே கொண்டுவெந்நீருந்த
சுகமாம்க்ஷயங்கள் வாதகுணம்சுபமில்லாத பித்தமுதல்
அகமாகியவேறனகனல் அனத்தல்பினத்தலகலுமென்றே 701

என்றமருந்தால்கண்டுகண்டு யேந்தப்பிணிகளானதர்க்கும்
நன்றாய்குடுக்கத் தீருமப்பாநயன்றே பார்த்துத்தெளிந்துகொள்வீர்
ஒன்றாய்நிற்கும்பராபரத்தை நன்மையுடனேபணிந்துகொண்டால்
நின்றப்பலவினகருமமெல்லாம் நீங்கிநீங்கிவொதுங்கிடுமே. 702

கடைச்சரக்குகள் வகைக்கோர்பலம்

## மலமுனியாரியற்றிய

### திருமலரின்பநெய்-வேறுவிருத்தம்

ஓதுங்கியின்னம் புகழாகவுயர்ந்தநெய் யொன்றுரைபுகல்வேன்
மதுரங்கிராம்புசாதிக்காய் மணியாம்யேலந்திப்பிலியும்
இதமாகியதோர்கொத்தமல்லி யிசைந்தவோமம்பத்திரியும்
பதனமாகக்கருஞ்சீரகமும் பகர்வாய்சேர்ப்பீர்நற்சீரகமே 703

நற்சீரகமுஞ்சிருதேக்கு நன்றுயெடுப்பீர் வகைவகைக்கி
பொற்பாய்பலந்தானென்றுகும் புகல்வாயிடித்து நெய்படிதான்
முற்பாய்கூட்டியெரித்து மிகமுயற்சியாக வடித்தெடுத்து
கற்கரனெனிலுமறிந்துவொரு கநத்தப்பரணிதனிற்சேரே 704

சேர்த்துதீவராட்சிபழம்தெளிவாய்பத்துபலமிதனில்
கோர்ததுகொள்ளயிட்டடேதான் குணமாய்களஞ்சிகொள்வீராய்
ஏர்த்துங்கிற்கும் வயிரெரிச்சல் யெரிவுகாந்தல் க்ஷயமீளை
தீர்த்துவிடுமென்றிசைபெறவேதினமும்நின்னினைவாமே. 705

நின்னினைவுட் கொண்டேற்றி நிதானித்திடச் சொல்தவராது
நன்னினைவாகுமெப்போதும் நாதன்றுளைபணிந்துணர்வீர்
மின்னார்கன்னி மயக்கம்விட்டால் மிகலுமகலுமகப் பேய்தான்
பொன்னில்கரையற்றதுபோல் பொதுவென்றேற்றுப் பண்ணுவீரே

### வேறுவிருத்தம்,

பன்னியேசகலநூலும் பார்த்தல்லோ தெளியவேணும்
மின்னியேபேசுங் கிள்ளைமேல் வார்த்தைவிளம்பல் கேட்டீர்
உன்னியே வொழுகமாகி யோதினல் பலநோய்போகும்
அன்னியர்சிநேகம்போலே ஆகும்பார் நூற்றெரியார் பேரே 707

## மேற்படியாரியற்றிய

### முயலநெய்-வேறுவிருத்தம்.

தெரிதலாய் நெய்தானென்று செப்புவேன்பெரியோர் முன்பு
பிரியமாய்ச்செய்வோர்க்கெல்லாம் பேர்மிகசிலாக்கியமாகும்
வரிபுலித்தோ லுடுத்திடுவாய் மதம்பேசலாகா
நெறியதுபாகங்கண்டு நிதானித்துசுடரில்புக்கே 708

புக்கிபின்றெளிதலாகி பொறுமையுஞ் சாந்தமாகி
கக்கிஷவீட்டில் நின்றுகருதினல் யாவுமெய்தான்
தொக்கினல் சிவத்தினட்டம் தோற்றுதுவிவேகமாக
முக்கியமுறையாய்ப்பார்த்து முழுதுமேசாந்தமாமே 709

இதுவுமது மூயல்-நெய்-வேறுவிருத்தம்

சாந்தமதானசமர்த்திய நெய்யொன்று
வேந்தருமான் பருமிகமகிழ்வாகுவர்
காந்தலுஞ்சூயமுங் கனலதுநீங்க
எந்தலைப்பணிந்து இயம்பமேலாகுமே. 710

மேலான தொன்று விளங்கியேசெய்திட
பாலானசொல்லென்று பார்மிகவெண்ணியே
தூலானதேவத் திருவடிக்கொண்டிட
ஆலானதுநீங்கவரைந்தனர் முத்தரே 711

முத்தர்கள்யெவரோமும் மலமாற்றினர்
சித்தர்கள்வர்தாஞ் செப்பினர்தக்கவே
பத்திரமாகப்பறித்திடு வுள்ளத்தில்
உத்தியதாக வூக்கமொன்றாய்ந்திடே 712

ஆய்ந்தவிதத்தை அறிவுடன்கேட்டிடு
தேய்ந்தவிதத்தைத் வெளிவுறநிதலமும்
சாய்ந்துகொண்டேங் குந்தன்மனமாக்கி
காய்ந்துயெட்டாமல் கருணையாயப்பார்த்திடே 713

கருணையதானக் கனத்தமுயலொன்று
தருணமதனிலேதா னதைக்குணர்ந்து
பெருமையாய்ப்பார்த்து பிசகிலாக்குடலும்
அருமையாய் நீக்கிவதுண்டைகேளே. 714

நடைதனைநன்றாய் நாடியேகேண்மோ
உடையநற்றசையை வொதுக்குவீரப்பனே
விடைமொழிகேளு விறைந்துகழுவியே
துடைமுதலெல்லாந் துணிக்கிசதைத்திடே 715

சதையுமெலும்புஞ் சரிவரக்கண்டித்து
அதையொருபாண்டத்திலட வுடனிட்டு
கதையதுவுண்டோ கணக்குடனேசலம்
சிதைவுலாப்படிக்கி சேரவேவூற்றிடே. 716

வூற்றிவீரைந்து மடிபுனல்தானும்
யேற்றுவீரடுப்பிலெரித்துப்பதமதாய்
காற்றதுவீசாமல் கவனமாய்மூட்டிடு
மாற்றமையின்றிமகிழ்ந்து விறக்கிடே 717

இறக்கிவிறைச்சியை யிசைந்துபிசைந்திடு
உறக்கவெலும்பை வொக்கவகைத்திடு
நிறக்கவடிகட்டி நேத்தியதாகவே
சிறக்கவோர்படியாக வெடுத்திடே 718

யெடுத்துபின்னுவின் நெய்படி ரெண்டு
கொடுத்திதில் லூற்றிசொற்றவராமல்
அடுத்தசரக்கு ஆனதோர்சுக்கு
சடுத்தமில்லாதயையின் திப்பிலியே 719

திப்பிலிநெல்லி சிறந்தமிளகது
ஒப்பனையானத்தாளிசைப்பத்திரி
தப்புகளில்லா சமர்த்தியமாஞ்சியும்
எப்போதும்புகழ்வோ மிணைதிருவோமமே 720

ஓமந்தாணிக்காய்வுயர்ந்தநற்கடுக்காய்
நேமமாமூலம் நிறைந்தசித்திரத்தை
நாமமாமதுரம் நல்லதோர்கிரும்பு
தாமதமின்றிச் செழுஞ்சந்தனமாமே 721

செழுங்கண்டங் கத்திரிவிரையதுவோர் பலம்
வழுவிலாதா துவேளையுஞ்சமூலமாம்
பழுதிலாவாதுமைப் பருப்பதுயெண்பலம்
நழுவிலாதாக நயன்றசரக்கதே. 722

கதையென்ன யினிமேல்கண்டசரக்கதை
இதையமேல் மகிழயிசைத்திடுவகைக்கு
உதையமத்துபோல் வொருபலங்கூட்டிடு
எதையுமேவெண்ணிடா தெடுத்துமுன்னிடித்திடே 723

இடித்துமுன் பாகத்திலேற்றிக் கலந்தபின்
நொடித்துயெரித்திடு நுண்மைதாக
தடித்துபெங்காமல் தனிவுறப்பார்த்து
முடித்துவிறக்கிடு முன்பதங்கண்டிடே 724

பதங்காண்கவேணும் பதிந்தஜலமது
விதங்கண்டு வற்றவிரானதிணர்ந்து
அதனப்படாமலறிந்து யெடுத்திதை
வதனமலர்ந்திட வடித்துவோர்பீங்கானிலே 725

பீங்கானில்வைத்து பேர்பெறகர்த்தாவை
ஆங்காரம்நீங்க அவையவமொடுங்கி
தாங்கியேமூன்றுத்தயை திறிகாலமும்
ஓங்கியேபணிந்து வுயர்பேறவேண்டுவீர் 726

வேண்டியதூபம் விளங்கவேசெய்தபின்
மீண்டிடக்களஞ்சி மிகஅளவாக
தூண்டிடும்நோய்கள் துலைந்துவகலவே
ஆண்டவரென்கிர அடவுடனருந்துவீர் 727

அடவுடனுண்டிட அகலும்வியாதிகேள்
தடமெனவெழுந்த சமர்த்துள்ளரோகத்தை
கடந்திடச்செய்யுங் காரணமாக
தொடந்திதுப்பேசுஞ் சுகிர்தமதுகேளே 728

ஆகளாய்க்குறல் கம்மலகொடியமெலிவதும்
ளோகிநிற்கு மனத்தல்பினத்தலும்
தோளானமூற்சைத் திடுக்கிட்டெழுதலும்
கோளானவாந்திக் கொடுமைபாமன்னரே 729

அன்னத்தின் ததிவிஷமடர்ந்தவிரணமும்
பன்னுதல்விக்கல் பகரிலா யீளையும்
நன்னுஞ்சயமெட்டும் நாடாமலோடிடும்
என்னுமிதனையேற்கவே நோக்குவீர் 730

நோக்கிவிதனில் நுட்பமாய்த்தாளகம்
ஆக்கிடேபாரு அளவாய்ப்பணவிடை
தாக்கியேவுண்டிடக்ஷயமுண்டோதேகத்தில்
நாக்கென்று சிரகம்நன்றாகும்பாரே 731

நன்றாகயின்னம் நவிலுவேன்மக்களே
குன்றாதநாகங் குவிந்ததோற்பற்பத்தை
மன்றாடிஐயனைமலர்போல் பணவிடை
ஒன்றாகக்கூட்டி வுண்மையாய் கொண்டிடே. 732

உண்மையாய் வுண்ணவொடுங்குஞ்சுவாசமும்
கண்ணுற்றதூக்கங் கதித்தச்சுரங்களும்
பண்ணுறவான பலசிந்தைவெப்பமும்
எண்ணும்விதமெல்லாம் யேங்கிவிட்டோடுமே. 733

ஏங்கிடச்செய்யும் விசைந்தக்கனலதும்
வீங்கியவுடம்பு மெலிவுமசதியும்
பாங்கியர்பணிந்தபண்பதுபோலே
தாங்கியேநெய்யுந் தழைத்திடயேர்க்குமே. 734

யேர்க்கையதான யெலும்பினுருக்கியும்
தீர்க்கமில்லாத சிலமலக்கழிச்சலும்

மூர்க்கவிரோத முயல்வலிவாய்வதும்
பார்க்கவிதனில் பறந்தோடுமூலமே 735

மூலமுமையமும் முயன்றசுரமுதல்
கால தென்றே கடுத்தலுளேத்தலும்
ஞாலகுணங்கள் சமுசியமின்றியே
ஏலயிவையெல்லாம் யிகலுமிகலுமே. 736

தாளகக்கட்டுவொருகுன்றியிடை நெய்யில்கூட்டிபுசிக்கவும்

## நந்தீஸ்வரரியற்றிய

### மாகதரசாயனம் - வேறுவிருத்தம்.

இகலுமென்றே தானியம்புவேன் கேளுமிக
புகலுமேவெகுநூலில் பொன்மயம்போலே
அகலுவெகுரோகம் அதிவிதமாகவே
பகலுமிசைந்த னப்பாருயரின்பமே. 737

இன்பமாம்வாது மையிலகவோர் வீசைதான்
அன்புடனெடுத்து அரைத்திடுநீர்விட்டு
பன்பெறகரைத்து பகர்ந்துவடிகட்டி
புன்குணம்நீக்கி பொலியவோர் பாண்டமே. 738

பாண்டத்திலூற்றிப் பகரிதமாக
தாண்டவம்போலே சமர்த்துடநாவிநெய்
வேண்டியேவோர்படி வினியவிதனில்
மீண்டிடக்கூட்டு விளங்கிடும்பூவே 739

பூவதுமுருங்கைப் புசழ்பலமைந்து
மாவதுபோலே மடக்கிவரைத்திடு
நாவதுபொருந்த நல்லதோர்சாதிக்காய்
பாவதுசொல்முறைப்பாகபறிந்திடே. 740

அறிந்தவிதப்படி வரைப்பலங்கூட்டிடு
தெரிந்தகிரும்புதிர முள்ளபத்திரி
பரிந்தோர்நெல்லிமுள்ளி வொருநிறை
செரிந்ததோர் வகைக்கிசேற் பதுக்களஞ்சியே. 741

களஞ்சிவிதத்தைக் கடுகவரைத்துபின்
வளஞ்சியமாக மாட்டிடுநெய்தனில்
தளஞ்சியவராகத்தா னடுப்பேற்றிடு
இளஞ்சிடாப்படியே யெரித்தெடுப்பீரே 742

எரித்துப்பதமாய் யிசைந்தநல்நெய்தனே
பிரித்துவடிகட்டி பெலனுறவேதான்

குறித்ததின்வாறு கொள்கைபீங்காணில்
அறித்திரிப்படிக்கி அவைகண்டுவைத்திடே. 743

வைத்தபின் தீவராட்சிச்சிறுபழம்
உத்தமமாகவீட்டு நேர்ஜம்பலம்
பத்திரமாகப் பாச்சிடுகற்கண்டு
வெத்திபெறவே விட்டிடுத்தேனதே. 744

விட்டிடுத்தேனே வினவிமனப்படி
ஒட்டிடயூட்டு வொழுங்காய்க்குலிக்கிடு
சட்டமெனச்சொல்வேன்சிலாக்கியமாக
கட்டளேயாகக்கணக கொருக்கரண்டியே 745

ஒருநிறையாக வோயாமல்மீயும்
திருநிறைமேவச் செழிப்புடனுண்டிட
குருவுரைச்சொற்படிக் கோத்துநீங்கும்
வருவுரையேற்றவாழ்த்து மெய்பாக்கியமே. 746

பாக்கியமாகப்பண்பெறத்தாதது
யோக்கியமாக வுயர்ந்துவிளேந்தபின்
ஆக்கைநரம்புவது கெட்டியாகிடும்
நோக்கையிலெல்லாம் நொடிதனில் சித்தியே. 747

சித்திக்கும் விந்துச் சிதாரமற்கட்டிடும்
புத்திக்குமின்பம் பொருதுமகிட்சியாய்
வெத்திக்கொடிகட்டி விளக்கொளிப்பூட்டலாம்
அத்திக்குமேல்பலம் ஆகுமிழ்வாரிதே 748

இவ்வாரெனமிக யெவர்களுக்காகுமாம்
மூவ்வாரெனப்பலமுடுக்குள்ளநியாயத்தை
சிவ்வாரெனப்படியாகச்சிறந்திட
ஒவ்வாததுகூடிவொக்கும் பயன்பாரே 749

## அகஸ்தியரியற்றிய

### ஆதியானந்தரசாயனம்-வேறுவிருத்தம்

பாரென்றுயிப்போ பகருமோரசாயனம்
பேரென்னவென்றுப் பெரியோர்கள் கேட்டால்
சீரென்றவிபாக்கியானஞ் செப்புவர்நற்படி
நேரென்றவிழ்தம் நிறைந்திடும்பிரபல்யமே. 750

பிரபல்யசுக்கு பெட்பானதிப்பிலி
திரநலமிளகுதிருவளர் சிறுதேக்கும்
விரசுடன்யெண்பலம் விளங்கயெடுத்திடு
அரசுசெலுத்தும் அகமகிழ்பண்மையே. 751

பண்மையைக்கேளு பார்த்துபிடித்திதை
கண்ணெதிர்பார்த்து கணக்குடனேதான்
உண்மையதாக வுயர்ந்ததோர்பாண்டத்தில்
தண்மையாயிட்டு தண்ணீர்படியதே 752

படியதுவிட்டும் பாகமதாகநில்
கொடிதனிலெரித்து நுட்பமாய்கால்படி
வடிவுடனுக்கி மகிழ்படி ஆவின்நெய்
துடிபெறவிட்டுத் துலங்கவெரித்திடே 753

எரித்துவடித்து யிலகவோர்பீங்கானில்
தரித்துயிருக்கத்தளராமல் விட்டபின்
கரித்துப்போகாமல் கற்கண்டறுபலம்
பரித்தியல்போற் கண்பார்த்துபொடித்திடே 754

பார்த்துமிகவே பலனுறதீவராட்சி
சேர்த்துகொள்ளப்பாதிறமுடனறுபலம்
யேர்த்துவிடவே யிளக்கிக்கலந்திதை
கோர்த்துக்குளாவிடகுவிப்புடன்செய்யே 755

செய்தபின்வோர் சிறுக்கரண்டியிளனவாய்
உய்தலப்பெருக வுள்ளுக்கிசைத்திடே
எய்தலின்களிச்சல் யிறைச்சலின்வாய்வு
பொய்தலின்சளியும் பேசாமல்நீங்குமே 756

நீக்கும்வயற்றின் வலிமுதல்பித்தமும்
ஓங்குசிலேஷ்டுமம் வொழிகிடும்நோய்களும்
தாங்குமிவைமுதல் தானனசஞ்சீவி
பாங்கும்பணிக்கைபோல் பலனுறவாகுமே 757

பலனிதில்மெத்த பயச்சித்தெரியலாம்
கலனில்லையாதுங்கண்டு கொண்டாய்ந்திடு
பெலனிதுமேன்மை பேசினர்மிக்கவே
நலனிதுப்பண்டிதர் நயன்றதொழிலிதே 758

சுக்கு-மிளகு-திப்பிலி - மூன்றுமுகல்வைத்திக்கு முதல்சரக்கு

மச்சமுனியாரியற்றிய

விலோசனரசாயனம்-கலிவிருத்தம்

தொழிலென்னவென்று துலங்கவேகேளும்
வழியென்ன மெத்தமார்க்கமிருக்குது

அழிவில்லாஞான வருள்தனைக்கண்டிட
பொழிவுள்ளமாகிப்போதிக்குமப்பனே. 758

போதிக்கும்பாவும் புத்திமதியத்தை
சாதிக்கும்பொல்லா சகடைவிதங்களும்
ஆதிக்குமுதலோன் அடியிணைப்போற்றிட
நீதிக்கிசைந்திட நிறைமொழியாகுமே. 759

ஆகுமாமிகுந்த அதிஜயரசாயனம்
பாகுடன்கேண்மீன் பகர்வாயிதனையே
யேகும்பலவித இடரூனநோயது
நோகும்விதமெல்லாம் நுடங்காதுகண்டிடே. 760

கண்டவாநந்தம்பேர் கருணையாய்சொல்லிடார்
விண்டிடுமென்று விருப்பமாய்க்கேழ்க்கினும்
தண்டமிழ்முனிவர்போல் சாற்றிடாரிவையென
தெண்டராய்நின்றால் சூக்ஷமுறைப்பரே 761

உறைப்பார்கள்நியாயம் வுகந்தவிதப்படி
மறையவர்வாக்கு மனுப்போதுந்தப்பாது
விறைவுடன்பேசிடார் மெதுவினிலறியலாம்
அரைனிலாடி அவையிவையெண்ணுமே. 762

எண்ணுமோர்வெந்தயம் இலங்கியசீரகம்
நண்ணுங்கசகசா நயன்றசிறுநாகப்பூ
பண்ணுவோமம் பகரிதசிங்கியும்
கண்ணுருபோலேகருகியெடுத்திடே. 763

கருதியெடுத்திடுகநத்ததோர்பேஸ்தக்காய்
பொருதிடவகைக்கோர்போன்றொருபலம்
உறுதிதாக வுகந்தேவறுத்தெடு
இழுதயமகிழ வின்பமதாகுமே. 764

இன்பமாய்ச்சொல்ல ஜலமதுவோர்படி
அன்புடன்சேர்த்து அனலிட்டெரித்திடு
நன்புடனேதான் நன்றாயிணைக்கியே
முன்பொன்னிறம்போல்முயன்றுஇறங்கிடே. 765

இறக்கியோர்பீங்கானிலிணையாய்வடித்திடு
திறமையென்சொல்வேன் சேர்த்திடக்கேளு
குறைவிலாதீவ ராட்சியுமெண்பலம்
நிறைவுடன்கற்கண் டிடுபலமைந்தே. 766

ஐந்துபலத்தைஅடவுடன்சேர்த்து
சிந்தைமகிழச்சேர்த்துக்குழப்பியே
பந்தையமாகப் பாங்குடனேதான்
நிந்தையகலநிறையொருகாண்டியே. 767

ஓமையாய்காண்டிவொக்காலிருவேளை
பெருகியமூலாத்தக் கிருணிக்கி
சொருகிடுரசாயஞ்சுயட்டிகழட்டிடும்
தகுகிடுஞ்சீழுந்தான் விட்டுப்போமே. 768

சீழுமகலுந்தினமேழுநாளையில்
நீழுமிதுரோகம் நேர்மையதாகிடும்
வாழுவரனந்தநாள் மிகயோக்கியமாய்
தாழுதலில்லைததயைச் சுகம்பாருமே. 769

## மநோரம்மியப்பெருமை

சுகந்தரும்ரசாயனஞ் செப்புறமுறைமைக்கேள்
அகந்தெளிவாகும அடர்வினைநீங்கும்
மகிட்சியுண்டாகும் மனோரம்யஞ்செவ்வையாம்
புகட்சியுண்டாகும் பொறகுணத்தேகமே 770

தேகஞ்சௌக்கியஞ் செய்பவர்யோக்கியர்
தாகஞ்சௌக்கியஞ்சற்றும்நிலைத்திடா
ஆகமந்தோணும் அறிவிபபதென்னசொல்
யோகமதொன்றே நுணுக்கமென்றார்களே. 771

என்றார் முத்தர்இரேசகம்பூரகம்
ஒன்றாய்ச்செய்தால் வொன்றுங்குறையிலை
நன்றேநலமிக்கநடத்துஞ் சுழிதனில்
நின்றேநிலைக்கநேர்மை கண்ணுண்ணுமே. 772

உண்ணினால்வந்து வொருமிக்கும்வீடது
பண்ணும்பசுவும் பால்கட்டியூட்டுமாம்
விண்ணுக்குள்ளாடி வியன்றுபெருகினால்
கண்ணுக்குங்காட்சி கலக்கமுமில்லையே. 773

## பிடிநாக்கிசரியற்றிய

### குசம்பாகர்ரசாயனம்-வேறுவிருத்தம்.

இல்லையொன்றென்று யேங்கிடாதேதினம்
வல்லமையாக வளர்நகரசாயனம்
சொல்லறிதாகச் சூட்டுவேனப்பனே
நல்லநினைவேடறிந்து நீசெய்திடே. 774

செய்யவேவாதுமைசிறந்தபருப்பதுங்
ஐயமில்லாமலன் பதுபலமதாம்
துய்யமதுரங் துலங்குங்கசகசா
பையவெடுத்திடு பணபோர்பலமதே. 775

பலமதுஜாதிக்காய் பகிர்ந்தநேர்பத்திரி
நலமதுவாகநலலோமயேலமும்
கலனதுயில்லாகன்னலுமிக்கவே
பெலனதுகொள்ள பேர்பெற்றஇஞ்சியே 776

இஞ்சியிதுரெண்டும்இசைந்தெடுநாற்பலம்
நெஞ்சமகிழ நிறைபடிதப்பாமல்
பஞ்சிபோலிவையெல்லாம் பணிந்துயெடுத்திடு
கொஞ்சியே தீவராட்சியெண்பலமிட்டிடே. 777

எண்பலமாட்டி யிசையவேமையதாய்
கண்ணிடுமைபோல கதிக்கவரைத்துபின்
ஒண்ணிடப்பாண்டத்தில்வொமுங்குடநிட்டு
டண்ணியநீரோர்ப்பாங்காக விட்டிடே. 778

பாங்காக்கூட்டிப் பார்த்துக்கலக்கியே
ஆங்காரநோயகளகண்டதுநீங்கிட
தூங்காமல் நீயுஞ்சுகமாயெரித்திடு
தாங்கிடமுன்பாய் ஜலமதைப்பார்த்திடே. 779

ஜலமதுப்பாத்து சார்ந்துகண்ணூன்திடு
பெலமதுவாகவே பேர்பெறவாக்கும்
சொலமிகவேண்டுமோ சுமுத்திரைபோக்கு
தலமிகவூக்கமுஞ் சாற்றுவரையனே. 780

ஐயனைப்போற்றி அன்போடிவைதனை
மெய்யனைப்போற்றி மேலாயவடித்கெடு
கையனைவாழத்தி கருணைசேர்பீங்கானில்
துய்யனைநினைந்து துலங்கவேவூற்றிடே. 783

ஊற்றியபின்பொரு வுகந்திடும்பாகங்கேள்
பேற்றிடுகற்கண்டிடித்ததுயெண்பலம்
தூற்றிடுகுங்குமப்பூவதுகாலபலம்
போற்றிசிவப்பதம் பூசித்துவாழ்த்திடே. 782

வாழ்த்துமுன்றெய வதத்தைவணங்கிவணங்கியே
தாழத்தும்பலபிணியானதென்றேசொல்லும்
ஊழ்வினைக் கபடுவொக்கவகண்டது
சூழ்த்திடாதிருக்கத் தோத்தரிநன்றதே. 783

நன்றதுவாக நமக்கென்னவொன்றுதான்
ஒன்றெனநம்பிவொழுங்குடநீதான்
கன்றிதப்பிழைகள் கழண்டிடவேதான்
வென்றிடரசாயனம் விருப்பமாயுண்டிடே. 784

விருப்பமாய் கரண்டிவிகித நிறையதாய்
குருவருளாலே குவிந்துவுட்கொண்டிட
பெருகின்றவாய்வும் பினத்தலினபித்தமும்
உருக்கின்றவதிகார மோய்ந்துவகலுமே. 785

வதிசாரங்காந்தலான வரட்ச்சியும்
சதியாகநிற்குஞ் சஞ்சலமானது
மதியாதபேதமயக்கந் தியக்கமும்
பதிமீதிலேதுபகர்ந்துத் தெளிந்திடே. 786

தெளியத்தெளிய தென்புதருங்குணம்
களிப்புகளாகுங் கருணைக்கடாட்சத்தால்
விழிப்புறப்பார்க்க மேன்மைத்திறப்படும்
பழிப்பதுயிலையே பழக்கவழக்கமே. 781

வழக்கமதாகினுல் வாராதொன்றுண்டோ
முழக்கவீடானதில் முயன்றுநிறுத்திட
தழைக்கவிதமுண்டு தத்துவநேர்மிலே
தழைக்கவழைக்க அம்மெனச்சொல்லதே. 782

தேன்-அரிக்கால் - விராகனிடைகூட்டிபுசிக்கவும்

செங்கரும்பு கூட்டவும்.

## தன்வந்திரியாரியற்றிய

### மணிமந்திரரசாயன சுத்தவிதம்-வேறு விருத்தம்.

அம்மெனரசாயனம் அன்போடுரைதரும்
மும்மனங்களிப்பாம் முன்மவத்தாய்துணை
விம்மியிளைக்காமல் விவேகநடையிணில்
செம்மித்தெழுமலர் சிரொக்கும்வாசியே. 789

வாசியைப்போற்றும் வணங்கும்ரசாயனம்
ஆசிலாதென்று அரிந்துக்கொள்ளானந்தம்
வேசிமேலாசை விட்டவர்க்கேசிசம்
மாசிலாவழக்கு வந்ததுநீட்டுமே. 790

நீட்டினுல்புத்தி நிலைத்துக்குணமுறும்
காட்டினுல்வீம் புகலக்காதொருநாளும்
மேட்டிமையாளர் விதமிஞ்சுபெண்பலன்
பூட்டித்திறந்தவர்பிரபலயோகியே 791

யோக்கியமெல்லாமுயன்று வணங்கிடும்
போகிக்கிசொல்லல்பொய்யெனக்காட்டுமாம்
தேகிக்கிநன்மனஞ் சேர்ந்ததுப்பார்க்குமாம்
வாகிக்கினுலாவது வளம்புகழாகாதே. 792

ஆகாதகுணத்தை வகற்றிச்சடலத்தில்
போகாததாகினும் பெருமையைவூற்றி
வேகாததலையை வியல்புடனறிந்து
சாகாபுனல்கண் டனுசரிப்பீர்மிகே. 793

அனுவளவறிந்தாலாகுந் திறவுகோல்
பனுவலசொல்யாவும்பரிந்துத்தெளிவுறும்
சனுவுடன்கற்றோர்க்கது வுரைமசகமாம்
மனுவுருவாகினும் மனமதுசெவ்வையே. 794

## புலஸ்தியரியற்றிய

### மணிமந்திரசுத்தரசாயனம்-கலிவிருத்தம்.

செவ்வையதான சிறந்தசம்பளத்தின்
ஒவ்வியப்பழச்சா றொருபடிதிட்டமாம்
கவ்விடசக்கு கருணைசோதிப்பிலி
பவ்விடமிளகுப் பலமதுவொன்றதே. 795

ஒன்றதாயிடை நிகரொக்கவேகூட்டி
நன்றதாய்வருத்து நாட்டிரசத்தினில்
என்றிதும்விளங்க யிதிலிடு முந்திரி
பன்றெனவைந்துப் பலமதுசேர்த்திடே. 796

சேர்த்தபின்வெண்ணைசீராரிருபது
கோர்த்ததிலொன்றாய் கூட்டிக்குழப்பியே
பார்த்திடுபத்திரமாக வெரித்தபின்
யேர்த்தஜலம்விட்டிலக விரக்கிடே. 797

விட்டதைக்கண்டு வெடுத்துவொருநல்ல
சட்டமதாகத் தன்மைபீங்கானில்
கட்டளைப்படியே கருதியிருத்துவை
திட்டமாமிதன்மேல்திருமொழியொன்றுகேள். 798

திருமொழியாக செப்புதநூல்வழி
கருவுருமேவிடக் கணக்கிதுக்கில்லைதான்
பருவமாப கஸ்தூரிப்பலமது வரையதாம்
நருவதுக்கால் படிநடத்தியே யேற்றிடே. 799

நசித்திக்கடவுளைநன்மனமாகவே
கடத்தும்பிணியெனக் களிக்கப்பணிந்தபின்
சடத்தினமுறைபடிற் றுனிதிலே யெடு
விடத்தினபிழைநீங்க வேண்டுங் கரண்டியே. 800
வேண்டுமொரு சிறுகரண்டிவிபரீதம்
மீண்டுங்குணமென வியல்பாவிருநேரம்
தாண்டும்பழம் பிணித்தானெனச்செப்பிடு
ஆண்டுக்கொண்டாளென வருள்தான்சிறந்ததே. 801
ஆண்டெப்பொருளென அகமெனும்வீடதில்
மீண்டவரெனவேற்று மிருக்கவேபித்தமும்
தீண்டியவாய்வுந் திரச்சியினீளையும்
தாண்டிகுதித்திடுஞ் சகலநோயானதே 802
நோயானசன்னிநடங் குமுடக்கலும்
தேயாத்பலவிதச்சிர் கெட்டவிம்மலும்
ஓயாமல்நிற்கு வுள்ளினதிரட்சியும்
பேயானக்காற்றும் பேசாமல்நீங்குமே. 803

தேன் அரிக்கால்விராகனிடை கூட்டிக்கொடுக்கவும்

இரசாயனத்தில் கொஞ்சஞ்சலம்விட்டுக்கொள்ளவும்,

## பத்தியம்

நீங்குமிதில்பெற்றநெடியவிதங்களும்
யேங்குவதில்லையிறைவரருளினல்
பாங்குடன்நெய்பால்பலனுறமுருங்கையும்
தாங்கும்நல்லரிசிசமைத்துப்புறத்திடே 804
புசிப்பதுக்காடைபுகழ்புளியாரையும்
உசிதமதானவுயர்ந்தபெலிச்செவியதும்
விசிதமதானவெண்ணைசர்க்கரையும்
கசிதமதுபோல்கண்டுகண்டுண்டிடே. 805
உண்டிடுக்கிச்சிடிவொருவேளைரொட்டியும்
விண்டிடக்கேளுவிகிதநீவராட்சியும்
கொண்டிடுச்சீனியுங்குறைகளில்லாமலே
வண்டப்பிணியெல்லாமவகண்டதுபோகுமே. 806
போகுமப்பா அனந்தவிதநோய்களெல்லாம்

## விருத்தம்

பொறுக்காததாகமொடுமூச்சைகோபம்
ஆகுமப்பாரசாயனத்தாலாட்டிபார்க்க
அம்மம்மா சொல்லறியோ மவனிமீதில்

யேகுமப்பாதெண்டைகம்மல்வோசைதானும்
யென்னாலேசொல்ல முடியாதுபாரு
பாருமப்பாபாகான அவிழ்தப்போக்கு
பார்த்தறிந்து செய்திடவே பலிக்கும்பாரே. 807

பலிப்பதற்கு விசுவாசநடக்கைவேணும்
பண்டிகத்தின் நடையறிந்துபேசவேணும்
கெலிப்பதற்குவனுதினமுந் தயாகம்வேணும்
கிஞ்சுகத்தின் புத்திதனையகற்றவேணும்
சலிப்பில்லாபூசைநெறி தெரியவேணும்
சமுசாரியானாலுங்குற்றமுண்டோ
லலிப்பானத் தொன்றுமில்லை சாஸ்திரத்தில்சேர்ந்தால்
வாழலாம் பூரணத்தைமருவிப்பாரே. 808

பாரென்றுபெரியோர்கள் சொல்வதல்லால்
பரிகாசஞ் செய்வதில்லை பண்போர்தானும்
காரெண்றகடவுள்பகமபணியச்சொன்னார்
கைகாட்டிவெகுநூல்கள் பாடவைத்தார்
யேரென்றுமாட்டிவைத்தார் யேணியாக
யேறாமல்நின்று விட்டாலவரென்செய்வார்
சீரென்றுவனுதினமுந் தேர்ந்துகொண்டால்
செகமபக்கமற்றுவுனைத்தேறாருந்தானே. 809

புசுண்டரியற்றிய

மகத்துவரசாயணம்- விருத்தம்.

தேற்றுதற்குயின்னமொரு ரசாயனத்தைக்கேளு
செயவதற்குவெகுவான லகுவதாகும்
ஆற்றுமப்பா சடத்திலுள்ள நோகள்தன்னை
அதட்டிநிதமகலவிடு மருந்துபாரு
போற்றுவர்கள்நிதமுனையே புகழ்ந்துமேலாய்
பொய்யாதுக்கை பாகமாகச்செயல்
வேற்றினங்களாகாது வேகாந்தத்திற்கு
விருளகலதேபனை முன்பணிதலநன்றே. 810

பணிந்துமிகச் சாற்றுகிறேன் பண்பதாக
பாங்கானகொட்டிமலர் நெய்தலாம்தல்
துணிந்துஜெயவகைக் கொன்றுபலம்பத்தாக
துலங்கவேதானெடுத்துமைபோல்

அணிந்ததொரு சந்தனம்போலாட் டிடேதான்
 அடவுடனேபாண்டத்தி லிட்டன்பாக
லணிந்ததிருநல்ல ஜலம்படியொன்றன்பால்
 வாகாகவூற்றியதில் வயணங்கேளே. 811

வயணமுடன் மிருவாகயொன்றதாக்க
 வதிவிதமாய்கலந்து விடுதீவராட்சி
நயனமக்மகிட்சியுறற் பலந்தானெட்டு
 நன்றாகவரைத்தேற்று வயணமாக
மயமுடனே சீனியதுயரைவீசையாகும்
 மாட்டிவிடுஜாதிக்காய் கால்பலமதாகும்
வியனமில்லையெறித்து விடுபதந்தான்கண்டு
 வியல்பாகத்தானிறக்கி வைத்திடாயே. 812

வைத்ததற்பின் பீங்கானில்வடித்து மேலாய்
 வதிசெயிக்க பச்சைகற்பூரம்வராகன்கால்தான்
சுத்தமுடன் பொடித்திதிலே தூவிக்கொண்டு
 சுகுணமுடன் போதித்தபடியே செய்து
பெற்றவளே மனோன்மணியே ஞானப்பெண்ணே
 பெரியோர்க்கு வமூர்தனித்ததாயே யென்று
நற்றவத்திலாண்டு நித்தங்கார்க்குகின்ற
 நவமணியேயென்று பதந்தொழுகுவாபே. 813

தொழுதுமனவருக்கமுடன் வுபசரித்து
 சொற்கடங்காதூபமலரேற்றியேதான்
வழுவகஅவிழ்தமதிலோர் கரண்டி
 வல்லபமாய் தானெடுத்துக்குடிப்பீராகில்
பழுதானபிரமியங்கள் அஸ்திவெட்டை
 பலநாளும்நிற்குகின்ற யெலும்புருக்கி
தொழுதுகொண்டு துலைந்துவிடுமண்டலத்தில்
 துற்சனலட்சணத்தை மாற்றிதுலங்குங்காணே. 814

துலங்கவே யிதற்குத்தான் யிச்சாபத்தியம்
 துணிவுடனே நன்றாகப்புசிக்கவேணும்
பெலனுகுஞ் சூடணைத்துங் கழண்டுபோகும்
 பெரியோர்கள் செப்தமுறைந் பேணிப்பாரு
கலஞனமனதுகந்து அவிழ்தமுண்டால்
 காட்டுமப்பா பலவிதத்தின்புத்திபோல்
தலமறிந்துழுதவர்கள் நடக்கையுற்று
 தவராமல்செய்தவந்கேசம் பிரமாமே. 815

தேன்-அரிக்கால்விராகனிடைக் கூட்டிப்புசிக்கவும்.

## கருவூராயரியற்றிய

### பூரணதிரசாயனம - வேறுவிருத்தம்

சம்பிரமுடன்செய்யுகின்றரசாயனத்தைக்கேளு
சமர்த்தியமோஇதில்மெத்தசெப்பப்போமோ
வம்பருக்குத்தெரியாது இந்தமார்க்கம்
வயணமுடன்படித்தறிந்துசெய்யவேணும்
தம்பியென்றவுபசாரவார்த்தைசொன்னால்
சடத்திலுள்ளப்பிணிபோமோசார்ந்துகேளீர்
தம்பிரான்ருட்பணிந்துவணங்கினோர்க்கு
சகலமுதல்வகைவரிசையாகுந்தானே 816

ஆகுகின்றசித்தர்மல்லி கீழ்க்காய்நெல்லி
அன்பானகண்டங்கத்திரியின்வேரும்
பாகுகின்றநாருண்டின் வேம்பின்பட்டை
பகரிலகுகோஷ்டமொடு கடுகுரோகணி
வாகுகின்றமுருங்கைப்பூ யானைத்திப்பிலி
வளமையுள்ளநெல்லிமுள்ளிஅதிவிடையத்தோடு
நோகுகின்றபிணிதீர்க்கும்விலாமிச்சைசிறுதேக்கு
நேர்வையுடன்வகைவகைக்கி விருகன்றனே 817

வகையதனைத்தப்பாம லெடுத்துக்கொண்டு
வயணமுடன்ரன்பொடித்துமாவதாக்கி
துறைபடியேமீராமல் பாண்டத்திலிட்டு
துலங்கவேநல்லசலம் படிதானிட்டு
பகையகலதீமூட்டிப் பதமாய்க்காய்ச்சி
பாலகனேயிறக்கிமிகவடியதாக்கி
நகையாமல் பீங்கானிலடைத்துக் கொண்டு
நாதனடித்தொழுதுசுபமாக நில்லே 818

சுபமாகபராபரத்தைப் பூசைசெய்து
சுகுணமுடன்செய்து கொண்டால்நிசமதாகும்
தபமாகயிருபோது வுண்டபோது
தரியாதுவாயினல் விமூரத்தங்கள்
கபமாகமூக்கில்நிற்குந்தோஷம்யாவும்
கனமாகவிழும்ரத்தந்தப் பாதோடும்
உபமானமாக யிதைசொல்லவில்லை
ஒழுங்குடனே செய்லதற்கு வுண்மைதானே 819

உண்மையிதுதப்பாது கைபாகத்தை
உறுதியுடன்செய்து கொண்டால்நிசமதாகும்

கண் துலங்குந்திருநாடிபெலமதாகும்
கர்த்தாவின்றுணைநமக்குகடாட்சமுண்டு
விண்ணிலிருந்தே புனல்தான்விழுந்தபோது
விறைவுடனேபுற்பூண்டுத்தழைத்தல்போல
அண்ணலுடக்கிருபையினால் தேகநோய்கள்
அகலுதற்குச்சந்தேகமில்லைதானே 820

## பத்தியம்.

சந்தேகப்வையாமல் நெய்பால்வெண்ணை
சாந்தமாய்வழங்குகின்ற கறிகாய்வர்க்கம்
நிந்தைபிழையகல நல்லரிசிசாதம்
நினைவுடனோவுண்டிடவே நேர்மையாகும்
சிந்தையதைப் பலநெறியில் விட்டிடாதே
சீராகநிலைநிறுத்தி செபத்தில்நில்லு
கந்தமலர்வாசனையாஞ் சீரவாழ்க்கை
கசடறுமாய் யோகமதுக் கதிக்குந்தானே 821

## போதகம்.

கதித்தசொல்லை யாராந்துபார்க்கவேணும்
கவடற்றமனம்பொருந்தி நிலைக்கவேணும்
மதித்தபுத்திபிசகாமல் தேவாதிதேவன்
மலர்ப்பதமே செயலெனவேயிக்கநன்று
சதியானயிடும் பகற்றிசாந்தமானால்
சகலசித்துங்கைவசமாஞ் சலுவதாகும்
விதியாளநாவலர் சொல்தேற்றமாகி
விளக்கினால் நல்லபிள்ளையெனச்சொல்வாரே 822

சொல்லுதற்போல்நடக்கையதுயிருக்கவேணும்
சூத்திரத்தை படித்ததினாலாபமென்ன
புல்லுதனில் தவடிறைத்தவாறபோலே
பொடியதுநேர் சாத்திரத்தைத் தூவிவிட்டார்
கல்லுதற்குப் பெரியோரைக்கேட்டுநின்று
கருத்தறிந்தால் வயித்தியமுஞ்சித்தியாகும்
அல்லுமேபகலுமப்பா அறிவைத்தேற்றி
அன்புடனேநடந்தனர்க்கே வருளுண்டாமே 823

அருளாகும் பொருளாகும் ஆசான்றன்னால்
அம்மம்மாயவர் நடக்கையாரறியப்போரார்
குருவிருக்கும் விடங்காட்டிகுறிப்புங்காட்டி
கோதகலச் செய்யுகின்றோர் மூத்தோராவர்

இருள்பிடித்துப் பணத்தாசைபெண்டிராசை
  இகலாமல் காமநோய்பிடித்தபேர்க்கு
கிருபைவழிமார்க்கமதுத் தெரிந்திடாது
  கிட்டவேநீசேர்க்காமல் தெளிந்துப்பாரே. 824

பார்க்கையிலே முகக்குறியிலறியலாகும்
  பதட்டம்விட்டு நடக்கையதுபாங்காய்ச் செய்வார்
ஏர்க்கையிலே தொழிலெல்லாம்படித்துக்காட்டி
  இணையாகக்கையாக செய்பாகத்தை
ஊர்க்கமுடன் ஒருழில்செய்பென்றுரைத்துநல்ல
  வொழுங்காண வார்த்தையினல் வோதுவார்கள்
காற்கவிதுநல்லபொருளெனக் சொற்சாற்றி
  கனமாகச்சதய வானுயிருப்பர் தானே. 825

சத்தியமேபராபாமே அதற்குமேலோர்
  சுவாமியுண்டோயிலேலேறுசாற்றவில்லை
நித்தியமுமவர்பதத்தை பணிந்தபேர்க்கு
  நீணிலத்தில்குறைவுண்டோ யில்லையில்லை
பத்திவிசுவாசமது யிருந்தால்சுத்தம்
  பாக்கியவானென்பார்கள் பாவம்போகும்
சித்திபெற்றவாசினிலே குருவைக்கார்த்து 826
  சீர்பெறவேமனதடங்கி சேவிப்பீரே.

## திருமூலரியற்றிய

## குணவசிகரரசாயனம்தொகுப்பு விருத்தம்.

நவமணிபோல் துலங்குகின்றதிவ்பஞான
  நாதாந்தபொற்பதத்தைப் பணிந்தன்பாக
தவமணியைமன தேற்றப்பலிதமாக
  தழைத்திடவேகுணவசிகாரனத்தை
பலமகலப்புகலுகிறேன் விவரமாக
  பண்டிதரே மிகவிதனைப்பணிந்துசெய்வீர்
அவமகலும்பிணிநீங்கும் குறைவொன்றில்லை
  ஆனந்தாயருள் பெருகுமவரவர்க்குத் தானே. 827

## குருவடிபணிதல்

தானென்றரசாயனத்தின் சமர்த்தியத்தைச் சொல்ல
  தடங்கலில்லே நாவடங்காத்தரணியோர்க்கு
நானென்ற கர்மபிணிநீங்கும் நீக்கும்
  நல்லகுணமாக்கி விக்குஞ்செய்தோர்க்கப்பா

வீணென்ற குழிதனிலே விழுந்திடாமல்
விவேகநெறி தவராமல் நடக்கவேணும்
சொனென்ற குருவருளால் தெரிந்துணர்ந்தால்
கோதகலதொழிலெல்லாஞ் சித்தியாமே. 828

## பொய்நீக்கலிலரிதம்

சித்திசெய்த பெரியோர்களனந்தம்பேர்கள்
சின்மயத்தின் நாட்டத்திலுயர்ந்தாரையா
புத்தியதிலவர்முனிவர் யெத்தொழிலுஞ்செய்வார்
புனிதரவர்க்கெதிருண்டோ பேசப்போமோ
சத்தியத்தின் நிலைதவரார்பொய் சொல்லார்கள்
சாதுரிகவார்த்தையினல் போதிப்பார்கள்
வெத்திகொடி கட்டிநின்றுஆடுவார்கள்
வேதாந்தமனென்மணியின்வியல்புதானே 829

## நயன்நாட்டம்.

இயலானவசிகரராம் சித்தாந்தயோகி
இணையாகயிவர்க்கெதிரி வுண்டோசொல்லு
மயல்புரியார்கெறுப விதநாட்டஞ்செய்யார்
மதுரநலவாசியதில்மகிழ்ந்துநின்று
புயலபோலத் தொடருகின்ற மாய்கைதன்னை
பிறிந்துமெள்ள நயனத்தால் நீக்குவார்கள்
சுயமானதிருக்கடவுள் பொற்பாதத்தை
சுபமாகத்தோத்தரித்து சொல்வர்தாமே 830

## முந்நூல்சாட்சி.

சொல்லுகந்தால் நாம்பிழைக்க வழியுண்டாச்சு
சுத்தமனநாட்டமதைப் படிப்பாரப்பா
வெல்லுதற்கு அவர்கள்நடையெவராலாகும்
விருதுதொழில்கற்றறிந்த மானுபாவர்
மல்லுவரோ சிறியகுணமானபேர்கள்
மகாவருத்தம்மகாவருத்தம்மனமேசெவ்வை
புல்லுதனில்தவடிறைத்தவாறுபோலே
பூட்டிவிட்டார் சாஸ்திரத்திற் புகழத்தானே 831

## பெரியோரறிவு.

புகழ்ந்தவிதநூல்மறைப்புதொடர்ச்சியெல்லாம்
புண்ணியவான் வுரைதெரிந்துப் புகல்வாரப்பா
மகிழவிந்தரியாமதைக் கவனமாக
மனதில்வைத்துப்பெரியோரைவணங்கிக்கேளு

அகந்தனாவீணுகப் பேசிடாதே
அம்மம்மாநல்லபுத்தி யுனக்குள்வேண்டும்
செகந்தனிலே ஞானவித்தைக்கற்றுக்கொண்டால்
செவ்வையாயிருக் காலந்தினமுந்தானே 832

## இடமறிதல்

தினந்தினந்தான் பூசையது செய்யவேணும்
திறிகாலேமறவாம லொழுக்கம்வேணும்
மனந்தனிலேக் கரைபிடித்துவிருக்கலாகா
மாதாவைதோத்தரித்து மனக்குறங்கைநீக்கு
வனந்தனிலேபோயிருந்தாலாபமுண்டோ
வளர்ந்தமலேமீதில்லென்னக்குகையிலென்ன
சினத்தநிழல்தனை நீக்கியில்லறத்தில்நின்று
சிறக்கவொரு பராபரத்தைத் தொழுகலாமே 833

## அழுக்கறுத்தேற்றல்

தொழுதுகொண்டு அந்திசந்திநிதானித்தேதான்
தோசைபிறட்டானவஞ்ச வலேயைநீக்கி
முழுதுநமக்கேயொருசொல்கடவுள்பாதம்
முயற்சிசெய்தாலாபமுண்டு காத்தலாகும்
வழுவானகாரியங்களகலுமப்பா
வஞ்சனைகள்செய்யாதே வொருவர்தன்னை
அழுதுசிறுபிள்ளையதுத் தாயைத்தாவி
அன்புடனே பால்கேட்குமடவுதானே 834

## மெய்வழியுருத்தல்

அடவுடனே சொல்லுகின்ற மொழியைப்போலே
அதிசெயநற்கடவுளரை கேட்டபேர்க்கு
அட்மிலேயென்றெவர்க்கு மதுசொன்னதுண்டோ
இயம்புகின்றநூல்களிலேபடித்துப்பாரு
மடமதனைலறிவதனை விகலச்செய்த
மார்க்கமதால் புன்வழிகளநச்சுதப்பா
கடைவிழியால்ஐயர்நமை நோக்கிப்பார்த்தால்
கலாப்பிழைக்கலியணைத்தும் நீங்கிப்போமே. 835

## வாசிப்பிரகாசம்.

நீங்குமப்பா வினைகளெல்லாஞ் சுவாமியென்றால்
நிதானத்தில் பேர்சிறக்கும் வாழ்வுண்டாகும்
ஏங்குமப்பா வினைகளெல்லாஞ் சுவாமியென்றால்
யேற்கையிலான் சேர்க்கையிலான்யெக்காலராசன்

தாங்குமப்பா இதுதானே தத்வாதிதன்னைத்
தானுணர்ந்துநன்னெறியில் சார்ந்துநில்லு
ஓங்குமப்பா வுயர்ந்துநில்லு வாசிமீதிலேறி
வுரைத்தபடி வொருபொருளை நாடுவீரே! 839

## அகண்டதயானந்தம்.

ஒருவருக்கு மெட்டாதசோதிபாதம்
வொளியனந்தவிளக்கமதுநித்யானந்தம்
சருவருக்குமதுதானே சிவமூர்த்தி
சச்சுதானந்தமயப் பிரகாசபாக்கியம்
பெருமையிது வல்லாமல்வேறுமுண்டோ
பெலத்தபுத்திக் காரனுக்குத்தோணுந்தெய்வம்
அருமையுள்ள பாதமதை நினைத்தபேர்க்கு
அகண்டவழி யெய்வருந்தலர்வுங்காலே. 837

## சட்டமுனியாரியற்றிய

### பித்தசாந்தி இரசயானம்-விருத்தம்.

காலானரசாயனத்தைச் சொல்லக்கேளு
கருணையுடன்விளாம் பழந்தானிருபத்தைந்து
மேலானதோடதனை நீக்கியேதான்
மேன்மையுடன் பாண்டத்திலிட்டுப் பின்னர்
சீலானநல்லசலம் விட்டடுப்பிலேற்றி
சிறக்கவேதான் தீமூட்டியெரிக்கும்போது
கோலானகோலதனல் கிளறியேதான்
கொடுவகனல் விஞசாமல் பதத்தைப்பாரே. 838

பார்த்துமெள்ள வெந்ததற்பின் யெடுத்துவாற்றி
சேர்த்துயிந்தரசமதனைகோப்பையொன்றில்
சிதராமலளவாக வைத்தபின்பு
கோர்த்துவிடபாகமதை செப்பக்கேளு
குணம்பெறவேவிவரமுடன் நன்றாய்ச்சொல்வேன்
யேர்த்துமிகசெய்வதற்கு லகுவதாகும்
இன்பமுள்ள சர்க்கரையுமரைவீசைதானே! 839

அரைவீசைசர்க்கரையைப் பாண்டத்திட்டு
அதிவிதமாய்த் தண்ணீரையதனிலூற்றி
குறையாமல் கோழிமுட்டை ரெண்டிணையதா
குறிப்புடனே போட்டிதனில் பிசைந்துநன்றாய்

நிறையாகசெய்தபின்பு யெரிக்கும்போது
நீர்மேலேவழுக்கதுவும் படரும்பாரு
கரைந்துவிடுங்கட்டி நின்றசர்க்கரையுமேதான்
கண்பார்வைவிடாமலே தானகலத்தள்ளே. 840

தள்ளிவிடுஆரவைத்து வடிகட்டிக்கொள்ளு
தனித்தரசமுன்னீரைபோல் நிறுத்தெடுத்து
கொள்ளியென்றமாண் பருக்குக்காட்டவேண்டாம்
கூசாமல்ரெண்டிடையு மொன்றாய்க்கூட்டி
தெள்ளியசீர்மணியெனவே பாண்டத்திலிட்டு
திரமைபெறவடுப்பினில் வைத்தெரிக்கும்போது
துள்ளிரசம் விழுகாமல்பதத்தைப்பார்த்து
துலங்கவேகைவிரலால் தொட்டெடுப்பீர்தானே. 841

எடுத்ததனைப்பார்க்கையிலேபிசினியைப்போல்
ஏற்கனவேயிருக்கின்ற விதத்தைப்பார்த்து
தொடுத்தகுணம் பாகினமாயாகும்போதுந்
துல்லியமாய்சொல்லுகிறேன் கடைசரக்கையானும்
கடுத்தவிதமாகாமல் வகைக்கோரின்பந்
அடுத்தநல்லசாதிக்காய் சாதிபத்திரி
வதிகதிருயேலச்காய் சீரகமுமேலாய்
கணக்குடனே பலங்காலாய்யெடுப்பீர்தாமே 842

கால்பல மொயடுத்தகனே வருத்துப்பொன்போல்
கவனமுடன்றாவியேதான் கிளரியாட்டு
நூல்வல்லோருரைத்தமொழித்தவரிடாது
நுணுக்கமுள்ளத் தொழிலிதுதான் செவ்வையாகும்
பால்குடித்தால் யெவ்விதமாயிருக்கும்பாதம்
பண்பதுபோலிந்த முறைபயிற்சியாகும்
கோல்கமக்குகை விருதுவான்தென்றே
குலாவியேதான் விறக்கிமெல்லவைத்திடாயே 843

வைத்ததனைவழித்தெடுத்து வெண்மையான
வகண்டமொரு பீங்கானிற்பதனம்பண்ணி
உத்தமொருபன்னீர் தான்வோர்பலந்தானூற்றி
உண்மையுடன் மூடிநன்றாய் தீபதுபம்
கத்தனருள்கிடாட்சமென்றேச் செபமுஞ்செய்து
கருணையுடன் காலைதனிலிருக்களஞ்சி கொள்ள
மெத்தவிதமயக்கமொடு தலைசுழட்டல்
மேலானகனலதுதான் மிகலுந்தானே 844

சிறுதீவராட்சிபழம்-வ-வாராகனிடைகூட்டியுண்ணவும்

இகலுமென்றவார்த்தைதனை விணைக்கலாகா
இதையமதைத்திருத்தல்செய் துயெத்தொழிலும்பாரு
அகலுமென்ற தாரையென்றுய்ப் புன்குணத்தோர்தன்னை
அணுபோதும் சேர்க்காதே அமர்ந்துநில்லு
பகலுறவில் நாட்டமுதசேவகத்தில் நின்றால்
பரிவுடனேவயித்தியத்தின் திரமையாகும்
புகலுவார்பெரியோர்தான் போதித்தாக்கால்
புத்திவளர்ந்தேமிகுவாய்ப் புகழுந்தானே 845

புகழ்ந்துவொருபாதத்தைப்போற்றியேதான்
புலம்பாமல்விவேகசிந்தையாகநில்லு
அகந்தளர்ந்துத்திரியாமலடக்கமாக
அனுதினமும்போய்வருந்திடாமல்பாரு
சுகந்தருதலானவழியுபயோகமென்று
சுகுணநடைமேவிவிட சுத்தமின்பம்
பகர்ந்ததனைவூடாடித்தியானங்கொண்டு
பராபரத்தைதொழுதுமிகப்பணிவாய்ச்செய்யே 846

செய்துயெந்தமருந்துகளில்தீர்க்கமான
சிறந்ததொருநற்சரக்கைச்சேர்த்துமேலாய்
உய்தலுறத்தவராமற்பாகந்தன்னை
உறுதியுடன் கைவரிசையாகச் செய்தால்
அய்யமறுங்குறைகளது வாகாதென்று
அவரவர்கள் சாஸ்திரத்திலுரைத்தாரப்பா
துய்யபரன்றனக்கே பயந்துதொழில்களாட்ட
துலங்குமாம் பேர்விளங்கித் துதிப்பார்தானே 847

துதித்துநிதம் நின்றவர்க் கேசகலவித்தை
சொன்னதல்லால் மற்றோர்க்குச் சொன்னதல்ல
பதித்துமனப்பெட்டி யினில்யெழுதினோர்க்கு
பலாபலன்களுண்டாகும் பலிதமென்பார்
கதித்துநின்று பேசாமல் கபடம்விட்டு
காரணத்தின் பூரணத்தைக்கருவிடையாக
மதித்துவளர்ந்தே பெருகிமகிமைபெற்றால்
மனக்கண்ணினால் வருத்தமனோரம்பமாமே. 848

ஆமப்பாவித்தை யென்றுமேலென்ன விதனை
அதிதமுள்ளவே தாந்தவிதத்தைவேணும்
போமப்பாபவமுதலாயனந்தகுற்றம்
பொடிபொடியாயாகிவிடும் புவனமீதில்

நாமப்பாவென்றிருந்தால் யென்னலாபம்
நடக்குமாயெப்பொருளும்நாட்டமாகா
காயப்பால்வித்தையறிந்தேற்றினோர்க்கு
கலைமுதலாய் தன்னிலையில்தரிக்குந்தானே. 849

தன்னிலையில் தானாகநின்றசோதி
தனித்தபொருள்கிருபையினால் நன்மையாகும்
அன்னவர்தன்னருளதனாலியாவுமுண்டு
அதுவிதுவென்றெண்ணுமலமர்ந்துநில்லு
சொன்னமொழிதெரிந்தவர்க்கேசிறந்தவார்த்தை
செப்பினேன் இதுவயணமிகுத்ததிட்டம்
பொன்னிலகும்பூசித்தோர்க் குண்மையாகும்
பிழையகலுஞ்சவுக்யமுண்டுப்புகழ்ச்சிதானே. 850

## வேறுவிருத்தம்.

உண்டிடமுன்னேசொன்ன வுயர்ந்ததோரசாயநத்தை
விண்டிடமேலதாகும் விசையானசூட்சமப்பா
கண்டிதக்கனலைநீக்கும் கநத்ததோர்வாட்சிபோகும்
பண்டிதமுறையீதென்றுபகர்வுட னுரைசெய்வாமே. 851

## ரோமரிஷியாரியற்றிய

### மனோகரஜீவாஜிரசாயனம் விருத்தம்.

உரையானமனோகரஜீவாஜிரசாயனத்தை
உண்மையுடன்சாற்றுகிறே னுகந்துகேளு
நிறையானமதுரம்ளிலாதிச்சிலியதென்ற
நேர்ந்தபழம்நூறுநலமாகவாங்கி
திறையானநற்றோலதனையெடுத்துநல்ல
தினிப்பானபாண்டத்திலிட்டேமேலாய்
குறையாமல்நல்லசலமதனில்விட்டு
குறிப்புடனே பதமாகவெரிபபீர்தாமே. 852

எரித்துமிகக்தானிறக்கியாரவைத்து
எழில்பெறவேகைபதனாற்பிசைந்துநருய்
சிரித்துவிளையாட்டதனிலிருந்திடாதே
செவ்வையதாய்ப்தபார்த்துநற்றுயிலாலப்பா
பிரித்துவிடுரசமதனைப்பெலமதாக
பேர்பெறவேபிழிந்ததற்பின்பேணியேதான்
விரித்தவகைரசமதனையோர்பீங்கானளவததாக்கி
வினவுடனேவைத்து இன்னம்பாகங்கேளே. 853

பாகமுடன்சீனியது அரைவீசைதானும
பக்குவமாய்ப் பண்டத்தில்லிட்டேநல்ல
ஆகவேதான் சலமதனை அளவதாக
அடவுடனே யூற்றிமெள்ள கலக்கும்போது
தாகமுடன்ரெண்டு முட்டைவுடைத்துப்போடு
தவராமல்ரேசிக்கப் பிசைந்துநீட்டு
யேகமாய்வடுப்பேற்றி சிறுவனலேமூட்டு
யேங்கிநின்றால் பொங்கிவிழும் யிதார்த்தந்தானே. 854

விழுகாமல் கண்பார்த்து யிருக்கும்போது
விரசானக்கசடழுக்குமேலே நிற்கும்
ஒழுகாமல் தானிரக்கிமுன் ரசநேர்பாகம்
வொருமையுடன் நிறையதுவோர் பாண்டத்திட்டு
வழுகாமல்மறுபடியுந் தீயைமூட்டு
வகையானப்பிசினியைப்போலாகுமையா
முழுதுமிதுசரிதானென்றே யுணர்ந்து
முயற்ச்சியுள்ளபழரசத்தை விடுவீர்தாமே. 855

விட்டுமெள்ள கரண்டியினல் பாகைப்பாரு
வெகுவான பொன்னிரம்போல்கட்டிநிற்கும்
தொட்டுவிடுசாதிக்காய் சாதிபத்திரித்
துணையான யேலக்காய் திப்பிலியுமப்பா
திட்டமுள்ளயேலரிசிவகைப்பலங்காலாகும்
தென்புடனேவருந்துவடித்துண்மையாக
நட்டமுள்ள நோய்கலற்றாவியேதான்
நலமுடனேரேசிக்குங் குணத்தைப்பாரே. 856

குணமானரசாயனத்தில்தேன்பலந்தான்மூன்று
குலாவிடவே விட்டுமெள்ள விறக்கியேதான்
மணமானஅவிழ்தமென பீங்கான்றன்னில்
மயங்காமல் விட்டிதனைப் பதனமாக்கி
வணங்கிடுவாய் பராபரத்தை பூசைசெய்து
வாகாகக்காலை தனில் விருகளஞ்சியுண்ண
இணங்கிநிற்கு மூலவிதக்கடுப்புக்காந்தல்
இசையாது கைகாந்தலெரிச்சல்போமே. 857

போகுமப்பா காலெரிவுவயிற்றின்காந்தல்
பொலிவானவிரணமதுவகண்டுபோகும்
லாகுமப்பாகண்குளிர்ச்சி யாகுமன்பாய்
வளர்பெரிய விந்தூரி கல்போல்கட்டும்

யேகுமப்பாநாள்கொண்ட மேகமெல்லாம்
 யென்னாலேமுடியாது சொல்விதற்குமேலாய்
பார்குமப்பாபெரியோர்தானெனக்குரைத்தவாக்கியம்
 படியேதானிந்நூலில் விளம்பினேனே 858

கோழிமுட்டையின் செவப்பானகருவைநீக்கி வெண்கருவுத் தோடுங் கூட்டிக்கொள்ளவும்.

## ஆக்கைநிறுத்தல்-வேறு-விருத்தம்.

விளக்கமதாக விவேகமாய்செய்திட
உளமகிழ்வாகும் வுத்தமமாண்பரே
களங்கமதகலும் கண்ணெதிர் தானே
இளமைபோலாக்கையை இணக்குவதுண்மையே 859

## கொங்கணரியற்றிய

அன்னாசிப்பழத்தின் அதிவிதாரசாயனம்-ஆசிரியவிருத்தம்
எங்கணுமோரதிசெயமெனநிறைபொருளாகிய சுபகனமே
யெஞ்சிடாதிருமறை பொழிலுபரக சியவினையிலாவாருதியே
திங்களலங்கிர்தசத்திய நித்தியசெயலதிலுயர்புகழே
திருவருளுமது பேரறிவதோமனமது சிறியவரடிட்வர்கள்
பொங்கவிளைந்தெழுமங்கல நவமணிபெலபெண்குணகனியே
பொலிவதுமலருறுமகிழவே வியல்பெறும் பொற்கமலபதமே
அங்கமதின்குணபிழை விழலகலசெய ஆண்டகையேதனியே
ஆதியேசோதிவேதாந்த சுதந்தரஅய்யனே நின்றுணையே. 860

## வேறு-விருத்தம்.

நின்பெருமையல்லாதுவேறுமுண்டோ
 நிகரில்லாபேரின்பமகத்துவதூயா
பன்மைதனை சொல்லரிது மனதிலெண்ணி
 பலமகமைஅனுதினமும் பணிந்துநில்லு
நன்னயமாய் நின்றவர்க்கு கைவல்லியமாகும்
 நமன்றனையேசெயித்து கொடிநாட்டலாம்பார்
வன்னலங்காரபதம் வாழ்த்தினோர்க்கு
 வாய்க்குமப்பா முத்துமணிகையிற்றானே 861

## செய்பாகம்.

முத்துமுதல் விளைந்துநின்ற சோதிபாதம்
 முயற்சியுடன்றான்பணிந்து ரசாயனத்தை
உத்தமமாய் விளம்புகிறேன் விவரமாக
 உச்சிதமாய் செய்தவர்க்கு மகிட்சியுண்டாம்

நத்தியேதான் அன்னுசிப்பழந்தான்பத்து
நலமானதாய்ப் பார்த்துவாஙகிவந்து
புத்தியுடன் மேலிருக்குந்தோல்களெல்லாம்
பிரித்ததனைசீவியேதான் சிறுசாகக்கொய்தே 862

## பழத்தின்பாகம்.

சிறுசாககொய்ததெல்லாம் யிடித்துக்கொண்டு
சேர்த்துவிடுவோர்பாண்டந்தன்னிலேதான்
திருவாகநல்லசலம் வார்த்தடுப்பிலேற்றி
திறமாகயெரித்துவிடுப் பதனமாக
கருவாகவெந்ததற்பின் யெடுத்தாரவைத்து
கையதனல் பிசைந்துவடிகட்டியேதான்
உருவாகபீங்கானினளவதாக்கி
வுயர்த்தியதாவைத்தபின் போர்பாகங்கேளே 863

## சர்க்கரைபாகம்-

பாகமென்ன அறைவீசைசர்க்கறைதான் வேண்டி
பரிவுடனேபாண்டத்திலிட்டன்பாக
வேகமுடன்நல்லசலமதனிலூற்றி
வெழில்பெறவேதீமூட்டியெரித்திடாயே
ஆகிநிற்கும்அழுக்குமுதல்கசடானதெல்லாம்
அனல்கண்டவுடன்மிகவேநிற்கும்நிற்கும்
யூகியாய்க்கீழிறக்கிஆற்றிமெள்ள
யுசிதமுடனவடிகட்டிக்கொள்வீர்தாமே. 864

சக்கரைகாச்சுகிறபாகத்தில் கோழிமுட்டைரெண்டு மஞ்சள்
கருநீக்கி வெண்கருவுத்தோடுஞ் சேர்க்கவும்.

கட்டியபின்மறுபாண்டந்தன்னிலூற்றி
கருத்துடனேயெரித்துவிடுப்பதத்தைக்காண
ஒட்டியதுபிசினியைப்போலொழுங்கதாக
வொருமையுடன்வருகின்றநேரந்தன்னில்
முட்டியதுவுட்கொள்ளமுன்ரசத்தைவார்த்து
முறவாகக்கரண்டியினல்துலாவிமேவு
குட்டியதுப்போட்டெடுத்தகுறங்கைப்போலே
குணமாகவொன்றித்துகவ்வும்பாரே. 865

வொன்றித்துபோனதற்பின்பெருமையாக
வுணர்வானசாதிக்காய்சாதிபத்திரி
வன்றித்துயேலக்காயமாசக்காயும்
வகைவீதம்கால்பலமாயெடுத்தபின்னர்

கன்றிதங்கனில்லாமல் கிறுத்திடித்து
கருத்துடனே வடிகட்டிப்பாகிற்றாவி
லென்றிடவே பதங்கண்டுலிரக்கியேதான்
வினவுடனே பீங்கானில்வைத்திடாயே. 866

வினவுடனேஆயிபதம் பணிந்தன்பாக
வினியதொரு தீவராட்சிப்பழமோபத்து
மனவருங்கத்தேனதுவும் பலமரிக்கால்
மங்களமாய் வோர்பாகமாய்க்கலந்து
கனமானவீண்மாய்கை யதனைநீங்கிக்
கவலையறரசாயனமுங் கருஞ்சியொன்று
தனமாகவெண்ணியேதான் சேர்த்துண்ணும்போது
தழைத்ததிருபாகமதை விளம்புவேனே 867

விளம்புகிறேன் கனல்கொண்டேதேகத்தோர்க்கு
வியல்புடனே குளிர்ந்துமிகலகுவதாக
கிளம்புகின்றயிருமலதை நிற்கசெய்யும்
கீழ்நோக்கும வனந்தபிணியான தெல்லாம்
தலம்பியதோர் கடுகனல்கள் வேகமெல்லாம்
தானடங்கித்தேகமதை சவுக்கியமாக்கும்
குளம்பியேமனமதனைப் பலவிதமதாக்கி
கூட்டாமல் தேவனைமுன்வைத்துசெய்வீர் 868

வையகத்தில் சென்னமதுவெடுத்தாலென்ன
வர்மகர்மத்தொழிலதனைப்
ஐயமுள்ள காரியத்தில்நுழையலாகா
அறிவுகந்துப்பேசாமலிருக்கவேணும்
கையதனல்மனமறிய வொருகாரியத்தைக்
கண்ணாரச்செய்யாமல் பொருதவேணும்
பையதனல் மனமறியவொருகாரியத்தைப்
பார்த்துநிதம் நடந்தவர்க்குப் பலிதந்தானே 869

## போகரியற்றிய

மகாசுயகொடி யெலுமிச்சங்காய் ரசாயனம்-வேறுவிருத்தம்

பலிதமுள்ளகொடி யெலுமிச்சை அன்பதாகும்
பண்பாக அவித்ததனை பிழிந்தேதானும்
கலியகலவோ ரளவின்சாசர்தன்னில்
களிக்கவேநிதான மதாயூற்றிக்கொண்டு
மலியவேதான் கிளாப்பழத்தினரசம்நேராக
மதித்துவிடு முன்ரசத்தில் பாகமாக

சலியாமல்சர்க்கரை தானரைவீசையாகும்
சாதுரிகமாகவொருபாண்டமதி்ஙிட்டிடுவீர்தானே 870

மதியாகவெள்ளமதை யூற்றிவொன்றாய்
மிகலாமலிரண்டுமுட்டைவெண்கருவுந்தோடும்
நிதியாகவொன்றிக்கப் பிசைந்துநன்றாய்
நிதானமதாயடுப்பினிலே யேற்றிபேதான்
துதியாகயெரித்து விடுக்கவனமாக
துவண்டவழுக்கான தெல்லாமேலேநிற்கும்
நதியாகபூர்க்குடுன்ற பாகுதன்னை
நன்மையுடன்வடிகட்டிமறுபாண்டத்தேற்றே 871

எலிமிச்சங்காய்த தோல்நீக்கிக்கூட்டவும்

ஏற்றியேபின்னெருக்காலெரிக்குமபோது
இசைந்தபதம் பிசினியதுபோலேகாணும்
போற்றியேமுன் ரசத்தைபிகனில்வார்த்து
பொங்காமல்கரண்டியினுலிளக்கவாட்டு
மாற்றியதுசிவந்தமலர் பொன்போலாகும்
மயங்காமல் சாதிக்காயேலவோமம்
சாற்றியதோர் லவங்கமதிவிடையஞ்சுக்கு
சாரித்துதிப்பிலியுமொக்கக்கூட்டே. 872

கூட்டுகிறவிதபாகம் வருக்கிடித்துச்சேரு
குறைபாதுகை பாகந்தலரிடாது
ஆட்டுகிறதொழிலிதுதான்வருத்துக்கொண்டு
அடவுடனே பீங்கானிலடைத்துமேலாம்
நாட்டமுடன் அய்யர்பதம் பூசித்தேதான
நலமில்லாப்பிணியாளர்க்கேற்றவிதம்
யூட்டிடுவீரொருகளஞ்சி ரசாயனமுந்தேனும்
வுருத்தலுள்ளமேகவெட்டையொடுங்குந்தானே. 873

வெட்டையொடு மேககனல்மேகச்சூடு
விலவிலத்து நீங்கிநிற்கும் விளைந்திடாமல்
கிட்டைதனில் தாயுரைத்தாளதிவிதமதாக
நிதானித்துப் பண்டிதத்தைப்பார்க்கச்சொன்னாள்
கட்டளைதான் தவறாமற்றியானஞ் செய்யில்
சனகமென்ன யிதற்கீடோ கவிஞ்சபிள்ளாய்
குட்டையெனும் வாசையதைநீங்கிஞான
குருவருளைநம்பியேதான் நிற்பீர்தாமே. 774

## உண்மை நிறுத்தல்.

நிர்மலமாய் யெப்பொழுதும்நிறைந்தசோதி
நிகரில்லாபொற்பதமே வுண்மைவுண்மை
கற்பகமாமதியமூர்த மேலானந்தம்
கருணையுள்ள சுபசெயமேசச்சிதானந்தம்
பொற்பதமே சுதாகரன்போல்விளங்குந்தூய
பூரணமேசிவஞான மகுத்துவபோதம்
அற்புதமேயிதுவிகித மெவர்க்குநன்மை
அணைத்துமிகவாதரிக்கும் அளவில்லானே 875

## வேறு-விருத்தம்.

அளவிலாதொரு ஆறினட்சணம்
தளர்வில்லாதிரு தன்னிலேநின்றது
களவுவஞ்சனை காண்கிலார்க்கேநலம்
உளமகிழவே உற்றவர்மெய்யதே 876
மெய்யதுவழியான பின்வேறென்ன
பொய்யது நிலையாகிடாதேமிக
அய்யர்பாதமெக்கால வணியினில்
துய்யர்சேறக்கற்றெருகுத்து வணங்கிடே 877

## விருத்தம்.

வணங்காதபேர்தமக்கு வாதமுண்டோ
வயித்தியத்தின்பலிதமுண்டோவகுத்துச்சொல்லு
குணங்காமல் ஆதிபொருளொன்றை நோக்கி
கோதகலதொழுதுநின்றுலிசைந்ததாகும்
பணமீதிலாசைவைத்து அன்பன்பாதம்
பரிவுடனே நினையாதால் குற்றமாச்சு
மணமாமோயல்லவது வீணனசொல்லு
மார்க்கவழிதெரிந்துணர்வர் பெரியோர்தாமே 878

## வேறு-விருத்தம்.

பெரியவரென்று சொன்னல் பிரபலமாயோயின்னம்
சிறியவரென்று சொன்னல் சீர்புகழார்க்குந் தோன்றும்
அறிவிலாரென்று சொன்னல் அவைநடைக்காண் கிலார்கள்
குறியதோர்யாவுந் தேர்ந்துக்குணங்கண்ணிலுபர்ந்தோர்தாமே 879

தேர்ந்தவர்நடக்கைமெ ய்யாம் தெளிவுகளுற்றோர்மெய்யாம்
தேர்ந்தவர்புரிதல் மெய்யாம்நின்றபேரானோர் மெய்யாம்
சார்ந்திடாரெதிலுமெய்யாம் சனுவுடனிருப்போர் மெய்யாம்
ஊர்ந்தபொறகோளர்மெய்யாம்உண்மைமாதவத்தோர்மெய்யா

## கொச்சகம்.

மெய்யானவாக்கியத்தை மேன்மையுடனேபடித்து
பொய்யாதேதுர் விஷையஞ்செய்திதனிலூடாமல்
செய்யாதேதுர் விஷையஞ் செய்திதனிலூடாமல்
அய்யாவெனப்பணிந்து அமர்ந்துகொள்வீர் வாசிதனில் 881

## வேறு விருத்தம்.

வாசிகொண்டுப் பண்டிதத்தைப்பாருபாரு
வாசிகொண்டுமலர் தூவிபாருபாரு
வாசிகொண்டு வழியறிந்துபாருபாரு
வாசிகொண்டுபதம் பூட்டவயணம்பாரே 882

## விருத்தம்.

பூட்டியதோர் வயித்தியத்தின்மார்க்கந்தன்னை
புகழ்வுடனே சொல்லுகிறேன் பாகமாக
மேட்டிமையதான திருமணியைப்போல
விளங்கவே புகலுகிறேன் மதிவல்லோரே
காட்டில்தனம் புதைத்தலைப்போல் சொல்லவில்லை
கருதியேமுன்செய்திட வேலகுவதாகும்
நாட்டில்நல்லமருந்தினத்தை பாராபரியின்சொல்லால்
நடத்துகிறேன் தீர்க்கமுடன் நயன்றுதானே 883

நயன்றதொரு வயித்தியத்தை யேழைபானும்
நவிலுகிறேன் தெரிந்தமட்டும் லகுவதாக
வியன்றதனைபெரியோர்கள் படித்துமேலாய்
விபரிப்பாரென்று சொல்லில்குற்றம் பார்க்கார்
முயன்றதெனைகைகொடுத்துவணைப்பாரப்பா
முனையான்கேசரத்திலாடிநின்றோர்
வயணநெறியின்ன பொருளாமாவென்று
வல்லமையாய்ப் போதித்துவாழ்த்துவாரே 884

வாழ்த்துதலால் வாழுமப்போமிகவும் நீதான்
வணங்கியேதான் கர்த்தாவைப் போற்றிசெய்து
தாழ்த்துதல்செய்யாமலெனைக்காக்கவென்று
தனித்துமெள்ள வுபசாரசோடசமதாக
ஆழ்ந்தக்கருத்துடன் கமலத்துணைத்துமிக்க
அறியாதபிள்ளைதனை யீடேற்றுமென்று
ஊழ்வினைகள்நாடாமல் செய்வீரென்று
உகந்துனக்குள் கொண்டாடிநிலைப்பீர்தாமே 885

நிலைத்திடவேகிர்மவினைநீங்குதற்கு
நிதம்நிதமும்பூசைதனைச்செய்தால்நன்று
அலைத்திடத்தில்மாறுகின்ற வயங்கள்தன்னை
அம்மம்மாயகண்டுவிட்டப்பிரகாசிக்கும்
துலையாதவினைகளெல்லாமாறிப்போகும்
துய்யதிருநல்வழியாலதுயரம்நீங்கும்
கலைஞானமணிவீட்டிலமூர்தமீறி
கதித்துகடல்போல்நிறைந்துஇருக்குந்தானே 886

இருவிதத்தால்மநமதனை யிணைக்கவேண்டாம்
யிகத்தில்நன்றாய்நினைவுவைத்திருக்கவேணும்
குருவிருந்தவிடங்கண்டுயின்பங்கண்டு
குறிப்புடனேவாய்மைதனைநிதானித்தேதான்
வருமைபலவீண்புரட்டில் சிக்கிடாமல்
வளர்ந்தமணியொலிபுறக்கும்வகையைத்தேர்ந்து
அருளிருக்கும்விடமதனைத்தேடிக்கொண்டால்
ஆச்சரியவித்தையெல்லாமாடாலாமே 887

ஆடியேநிற்பதற்கு சூட்சங்கேளு
ஆசானைக்கண்டறிந்து வாசிபூட்டு
தேடினுலாயிரத்திலொரு வரப்பா
தேர்ந்தவர்களிருப்பார்கள்தெளிந்தவல்லோர்
நாடினல்சொல்லுவர் களாதியந்த
நடபடிகள்தவராமல் போதிப்பார்கள்
மோடிசெய்தே யிருந்தாக்கால்வருவதேது
முன்மனைத்தாயடி வணங்கிமுழுதும்நில்லே 888

பிர்மமுனியாரியற்றிய

இஞ்சிரசாயனம் - வேறுவிருத்தம்.

வணங்கியேசொல்லுகிறேன் வதிசெயமதாக
வகையானஇஞ்சியது பலந்தான்பத்து
குணங்காமலிடிததனை யெடுத்துக்கொண்டு
குறிப்புடனே பாண்டமதிலூற்றியேதான்
வணமாக சீனியதுபலந்தான்யெட்டு
மதிவிதமாய் முன்சொன்னபாகம்போலே
இனமாகவோர்நிறையாய்சேர்த்துப்பின்பு
இசைவுடனேயெரித்துவிடு முன்போல்தானே 889

முன்னனக்கடைசரக்கைச் சொல்லக்கேளு
முயற்சியுள்ள திரிகடுகுசீரகமும் பத்திரி

கன்னனதாளிசையுந் தேவதாரம்
கருணையுள்ள வோமமொடு பரங்கிபட்டை
தன்னனயிவையெல்லாம் வருத்துக்கொண்டு
தான்வடித்தேபாகுதனில்தூவியேதான்
பன்னனமொழிபடியே கிளரிநன்ருய்ப்
பதராமல்தேன் படிகால்சேர்ப்பீர்தாமே 890

சேர்த்துமிகச்சரியான பாகமாக்கி
சிதராமல்வெண்மையுள்ள சாசர்தன்னில்
பார்த்துமிகவூற்றியேபின் பூசைசெய்து
பத்திரமாயெடுத்துனலி கொண்டபேர்க்கு
பூர்த்தியாயொருகளஞ்சிக் குடுப்பீராகில்
பிழைகள்செய்யும் கபம்புளித்தேப்பம் பித்தம்
கோர்த்திருக்கும் வாய்வுகளெல்லாமப்பா
குணமாகிமந்தமெல்லா மகன்றுபோமே 891

மந்தமொடு வயிற்றிரைச்சல் சலித்தல்செய்கை
மனதாரநீக்கி விக்குமறிந்துபாரு
சுந்தரமாய்ப்புகன்றசொற்கள் பிசகாமல்
சுகுணமுடன் பண்டிதத்தைப் பெலமாய்ச்செய்து
வந்தபிணியாளருக்கு அவிழ்தமீய்ந்து
வாகாகபத்தியமும் புத்திசொல்வீர்
தந்தைபதம் பணிந்தேற்றி நடப்போர்க்கெல்லாம்
தடங்கலன்றிக் கைப்பலிதமாகுந்தானே 892

## பாவிட்டு இஞ்சியை அவித்து ரசமெடுக்கவும்.

ஆகியக்குணத்தைவல்லோர்அறிந்துணர்ந்திணைத்துச்சொன்னர்
யோகியாமுத்தோர்வித்தை முனிந்துகற்றவர்க்கே சித்தி
பாகினிலினித்தபண்மை பயற்சியைத்தெளிதலாக்கி
யூகியாநின்றுகார்த்தால் யுத்தியும்பெருகுந்தானே 893

## மீண்டியல்-விருத்தம்.

பெரிகியதோர் தானந்தவீட்டில்மேவி
பிரியமுடநடந்தவர்க்கே வயித்தியஞ்சித்தி
அரியாமலிருந்துவிட்டா லாபமுண்டோ
ஆண்டவரின் பெலத்தாலேபழக்கம்பண்ணு
துரியவொளிக்கண்டவர்க்கு சுபமதாகும்
துய்யநடைவேறு விதமானதல்லா
திரிபொருளின் மீண்டவிதமெனதல்லா
தினம்நாடிப் போற்றிடவே'தெளியுங்காலே 894

காலறிந்துதலையறிந்து முடிக்கவேணும்
கவலையற்றுசாத்திரத்தைப் பார்க்கவேணும்
கோலறிந்து வூன்றிமெள்ள நடக்கவேணும்
கோதகலபொய்யதனை யகற்றவேணும்;
பாலறிந்துகுடிக்குகின்ற விதமும்வேணும்
பசியாற்றியிருக்கவேதான் பானம்வேணும்
வேலறிந்துவில் பூட்டசாயல்வேணும்
வித்தையிதுகற்றுணர்ந்தோர் மேலோர்தானே. 895

சுந்தரானந்தரியற்றிய

தெளிவுள்ள வில்வாதி ரசாயனம்-விருத்தம்.

யேலானவில்வாதி ரசாயனத்தை
மிக்கவேசொல்லுகிறேன் மேன்மையாக
நூலானசாத்திரத்திற் படித்துத்தேர்ந்த
நுணுக்கமதை கண்டறிந்தபடியேசொன்னேன்
காலானவார்த்தைதனை யுணர்ந்தபேர்க்கு
கடாட்சிப்பாள் திருஞானதாய்தானப்பா
ஆலானவிடமதனை தீர்க்குகின்ற
அதிசெயரசாயனத்தை யறைகுவேனே. 896

அறைந்தமொழி பிசகாமல்பாருபாரு
அன்பானவில்வாதி பழந்தானப்பா
குறையாமலிருப்பத்தைந் தெடுத்துநன்றாய்
குணம்பெறவே தோடதனைநீக்கியேதான்
விறைவாகபாண்டத்தில் சதையைபபோட்டு
வின்பமுடன்சரியான தண்ணீர்விட்டு
நிறைவாகயெடுத்துவிடு வேகவேதான்
நேத்திடயுன்றுனெடுத்து பிசைந்திடாயே. 897

பிசைந்துவெள்ளைச் சீலையினுல்வடிதான்கட்டி
பிறியமுடன் சாசரென்ற பீங்கான்றன்னில்
விசையாகஅளவுநிறை யாகவைதது
வதின்பின்போர் பாகமதைவறையக்கேளு
நிசமாகசர்க்கரைதா னரைவீசையாகும்
நிதானமுள்ள பாண்டத்திற் போட்டபின்னர்
வசமாகநல்லசலம் சரியாய்ப்பார்த்து
வயணமுடன் ரெண்டுமுட்டைவுடைத்துப்போடே. 898

போட்டுநன்றாய்த் தோடதனைப்பிசைந்துசேரு
போன்றவனல் மூட்டியேத்தீபத்தைப்பாரு

நீட்டுகிறேன் மேலழுக்குக் கரடுகட்டி
திரைபோலே சூழ்ந்திருக்குமெடுத்துப்போடு
நாட்டுகிறேன் முன்னிறைபோலெடுத்தொன்றாக்கி
நலம்பெறவே மறுபடியுமடுப்பிலேற்றி
கூட்டுறவாயிருக்க யெரித்தசைவதாகக்
குறிப்புடனேபிசினிபதமாகுந்தானே. 899

ஆகினதோர்ப் பதந்தனிலே யின்னோர்பாகம்
அடவுடனே சொல்லுகிறேன் அமர்ந்துகேளீர்
யூகினதோர் திரிகடுகுபரங்கிப்பட்டை
வுயர்ந்தசுரியஞ்சீரகமூலவங்கப்பட்டை
பாகினதோர் பெறவாலுடு சக்கைப்பத்திரியுமேலம்
பரிவானபூமிசர்க்கரை காட்டாத்திப்பூ
தாகினதோர் நற்சீரகமுஞ் சீந்திசர்க்கரை
தயவாகவகைவகைக்குப் பலமொன்றதாமே. 900

ஒன்றாகயிதுவெல்லாம் வருத்திடித்து
வுயர்பெறவேமுன்சொன்ன பாகிற்சேர்த்து
நன்றாகரேசிக்கக்கலந்தபின்பு
நலமாகபொன்மணிபோல் சிவந்துகாணும்
குன்றாமல்குங்குமப்பூ விராகன்மூன்று
குறையாமல் பொடித்ததனை விரவியேதான்
மன்றாடியீசர் பதம்வாழ்த்தியேதான்
வழித்துவடியாக்கினதை வைப்பீர்தானே. 901

சீந்திசர்க்கரை ஒருபலம் பின்புகலந்துகொள்ளவும்.

வடித்தயிந்தரசாயனத்தைப் பரணிதன்னில்
வரகாகமூடியே பின்வயணமாக
நொடித்துவிடு மேகமென்றதெல்லாத்திற்கும்
நொந்தவுடல் மெலிவுமுதலானதிற்கும்
வடிந்துவிழும்வெள்ளை கனலானநோய்கள்
வஞ்சனைசெய்யாமநிதம் வகலச்செய்யும்
முடிந்தகுணமிதிலனந்தமாகும்மாகும்
முச்சிதமாயிம் மருந்தைசெய்துபாரே. 902

பத்தியம்.

பார்க்கையிலே மெய்யான வார்த்தைதோன்றும்
பண்பானக்குணங்காணும் பார்ப்போர்க்கெல்லாம்
கார்க்கையிலே பத்தியமாயிருக்கச்சொல்லு
கறிகாய்க்களின்மறிந்து வுண்ணச்சொல்லு

ஏர்க்கையிலேஸ்நானமது வெந்நீரால்முழுகச்செய்து
யெடுத்துரைத்தவராமலிருக்கவேணும்
சேர்க்கமுனேபிசகாமலிருந்தபேர்க்கு
சீராருங்குறையாமலிருக்குந்தானே. 803

## நன்மார்க்கம்.

இருக்கின்றமார்க்கத்தின்வயணந்தனனே
இன்பமுடன்சாற்றுகிறேன்தர்மமாக
கருக்கள்நடைவெகுவானசாத்திரத்தில்
களிப்புடனேதபத்தோர்களெழுதினர்கள்
திருக்கமழின்மலர்மிசையிலேற்றிப்போற்ற
திலர்தமிடப்போட்டதுபோல்துலக்கமாகும்
தருக்கமில்லேசமூசயங்களொன்றுமிலலே.
தலைமைதனையின்னதென்றுசாற்றுங்காலே. 904

## ஆசிரியவிருத்தம்.

சாற்றுங்கால்தொடுத்து சந்திரசூரியனை
சமரசத்தினிணைப்பாக்கியே
நாற்றுங்காலத்தொத்து ஒன்றதாக்கிநல்ல
கருணையைந்துருவிலாவியே
மாற்றுங்காலத்தொடுத்து மந்திரபீடமதில்
மானடியின்வொளிகண்டபின்
ஏற்றுங்காலத்தொடுத்துநின்றதாகினபின்
யெங்கணுமயங்களொன்றதே. 905

## இராமதேவரியற்றிய

### சுவிகிரதீவராட்சிரசாயனம்-வேறுவிருத்தம்,

ஒன்றானரசாயனத்தையியம்பக்கேளு
ஓகோகோவதின்பெருமையென்னசொல்வேன்
நன்றானபெரியதீவராட்சிப்பழம்பலந்தான்பத்து
நலமானசிறுதீவராட்சிப்பழம்பலந்தான்பத்து
குன்றானப்பாண்டத்திற்போட்டன்பாக
குவிப்பாகசுத்தசலம்நேர்நிறையாயூற்றி
கன்றானதுபால்தான்குடித்தபண்மை
கனிரசத்தையிரக்கிவிடக்களறுவேனே. 906

தளறுகிறேன்எரித்துமெள்ளஉறக்கியாற்றி
கண்மணிபோல்பிசைந்துவடிகட்டியேதான்
தளராமல்முன்னிதைபோல்யெடுத்துவொன்றாய்
தழைக்கவேரெண்டுமிகக்கலந்துகொண்டு

அளவதுநேர் குறையாமல்பாண்டத்திட்டு
அதிவிதமாயெரித்துவிடுப்பதமதாக
இளகியது பிசினியைப்போல் கம்பிபோலே
இசைந்தபதந்தனைக்கண்டு இணக்கக்கேளே. 907

கேளப்பாசதகுப்பி சீரகமுமேலம்
கெடியானதிரிகடுகு லவங்கப்பட்டை
வாளப்பாநன்னரிவேர் முத்தக்காசு
வகையானசித்தரத்தை சாதிபத்திரி
நீளபபாஅத்திதிப்பிலித் தேவதாரம்
நிறைந்ததொரு சந்தனமுமாஞ்சியேலம்
தேளப்பாயிம்மருந்துப் பிணியைத்தீர்க்க
தென்புடனேதானெடுப்பீரோர்பலமதாமே. 908

பலமதென்றமுறைப்படியே தவரிடாமல்
பக்குவமாய்வருத்திடித்துவடிதான்கட்டி
நலமதென்றபொடியதனைப்பாகிறகூட்டி
நயன்றிடவேரசாயனமாய்ச் சேர்த்துக்கொண்டு
பெலப்படுத்தியிரக்கியபின் ஆரவைத்து
பெருமையுடன் பீங்கானிற் பதனம்பண்ணி
சிலப்படுத்திசேர்ந்தகனல் மேகத்துக்கு
சீர்பெறவே குடுத்திடவே தீருந்தானே. 909

தீருகிறவியாதிதனை செப்பக்கேளு
தினைவுவனல் கைகாலி ஞேச்சல்மெத்த
சோருகிற வாய்வுபித்த அஸ்திவெட்டை
சொரிவிரணங் கண்ணெரிச்சல் வயிற்றின்காந்தல்
மாறுகிறபுத்திவன்னத்தி ரேட்சமெல்லாம்
மனோன்மணியின் கிருபையினால்மகனுமப்பா
ஏறுகிறவிதம்பார்த்து யேறிநின்றால்
ரெத்தொழிலுங் கைக்கூடியிசையுந்தானே. 910

## கலிவிருத்தம்.

உத்தவாக்கியமெய்யதுவாகுமாம்
மெத்தவர்க்கிதுமிக்கனபுத்தியாம்
சுத்தவாக்கியம்சொற்பிழையற்றது
மத்தவாக்கியமாக்கிடாதென்றதே 911

## வேறுவிருத்தம்.

ஆக்கியோன்பதத்தை யநுதினம்போற்றி
நீக்கிடுமெலா நினைவுகளானதை
பாக்கியமென்று பரலோகநாதனை
போக்கியமாக நுவன்றுகொளின்பத்தை. 912

## தேரையரியற்றிய.

### வலுவுற்றசாலாமி சரிரசரயனம் விருத்தம்.

இன்பமுள்ள ரசாயனத்தைத் தெளிவதாக
இதையமது மகிழவாகப் புகலக்கேளு
முன்புபெரியோர்கள் செய்தபாகந்தன்னே
முயற்சியுடனென் ஆசான்மிகுவதாக
பண்புபெறவுபதேசஞ்செய்தபாகம
பரிவுடனேயேழையுந்தானறிந்தமட்டும்
அன்புடனே பண்டிதர்கள் செய்யவேண்டி
அடவுடனே மிகப்புகல்வே னறிந்துபாரே 913

அறிவுகந்தபெரியோர்கள் புகட்சிபாகி
அதிவிதமாமனந்தனிலேகபடம்வையார்
பிறியமுடன் சாலாமிசரிப்பலந்தான் பத்து
பேசரியகசகசா பலந்தானைந்து
வரிசையுள்ளசாரப்பருப்புபலந்தானெட்டு
வாகானகச்சூர்க்காய் பலந்தான்மூன்று
உரிசையுள்ள சலமதனில் விட்டுபின்னர்
ஒகோகோயப்புதனில் வைத்துக்காய்ச்சே. 914

காய்ந்ததணல்பத்தாமல் மெதுகாங்கையாக
கருதியேயெரித்துபின்பு யெடுத்தாரவைத்து
சாய்ந்தவிதஞ் செய்யாமலரைத்து நன்றாய்
சாரித்துப்பாலதனைவடிகட்டிக்கொண்டு
தோய்துபடி சாசாளவாகவேதான்
துரிதமதாயளந்து வைத்துப்பின்போர்பாகம்
பாய்ந்திசைக்க விளம்புகிறேன் பண்பதாக
பகர்வுடனே சர்க்கரையரைவீசைதானே. 915

### சர்க்கரை பாகம்.

சர்க்கரையைசட்டிதனிலிட்டன்பாக
சாரித்துத் தண்ணீருமுட்டையிட்டேபிசைந்து
வர்க்கமுடனடுப்பேற்றி யெரிக்கும்போது
வகண்டிடும்பார்க்க சடுபலதானதெல்லாம்
நற்புகழாய்வடிகட்டிப் பாண்டத்திலேற்றி
நலமாகவெரித்திடவே கட்டும்பாரு
பொற்புகழாய்ப் பிசினிபைப்போலாகும்பாரு
புனிதமுள்ளகடைமருந்தைப் புகலக்கேளே 916

முன்செய்துவைத்த ரசத்தைபாகில்சேர்த்துக்கொள்ளவும்.

புகலுகிறேன் திரிகடுகுசடாமாஞ்சிவோமம்
சிறுதேக்கு அதிமதுரம் லவங்கப்பட்டை
தகலுவேன்நான் யேலரிசி சிறுநாகப்பூ
சந்தனமும் சாதிக்காலவங்கப்பூவும்
சுகமாகப்பலங்கால் தான்கூட்டிக்கொண்டு
சிந்தரமாய்வருத்திடித்து வடியதாக்கி
இகழாமல்பாகதனில் போட்டுற்றாவி
யிணைபெறவே பதமாகவிரக்கிடாயே. 917

இரக்கியேசித்தியனைப் போற்றிநல்ல
நேத்தியுள்ளபீங்கானிலூற்றிவைத்து
வுரக்கவினைநோய்நீங்கசெபத்தைச்செய்து
வொழுங்குடனே வொருகளஞ்சிவுண்டபேர்க்கு
சிரக்கவேதான் தாதுவிர்த்தியாகுமாகும்
தினந்தினந்தான் விந்தூரிகல்போலாகும்
திரக்கவழியான திதுதப்பாதப்பா
செய்துகொண்டால் சுளுவாகயிருக்குந்தானே 918

வெகுவானபத்தியமே யில்லையில்லை
விருப்பமுடன்பால்குடித்துக்கொண்டால்நன்று
சொகுசாலேபனமுண்டாகி நிற்கும்
சொல்தவராதிருக்குமப்பரசூட்சசூட்சம்
மிகுவானஅவிழ்தமிது தெளிதலாகும்
மேலானகாரியத்தை அறியவேணும்
பகுத்துயிந்த சொல்லறிந்துவயித்தியத்தில்நின்று
கைபார்த்து பண்டிதத்தை பண்பாகச்செய்வீர். 919

பண்பானயிதுவித்தைப் பெரியதென்று
பராபரத்தைமறந்துவிட்டாலொன்றுமில்லை
கனமாகயெண்ணவியே தன்னைத்தானே
கருதினல்கனவதுபோல தோற்றும்தோற்றும்
இனமாகயெப்போதும் சாததிரத்தின்பேரில்
யிதையமதைவைத்துப் படித்தேறவேணும்
சினமானபேர்களுடன் சோராமல்நின்று
தெய்வசெயல் நமக்கென்றேயிருப்பீர்தாமே. 920

## வேறு விருத்தம்.

இருந்தவர்க்கெல்லாம் யீடேற்றமாகும்
திருந்தவர்நாளும் திருவருளாலேதும்
மருந்துங்குணமும் மலர்நெறியாகும்
பொருந்துமெடுத்த சொலபூரணமென்றதே. 921

கமலமுனியாரியற்றிய

மகாவினிதசீர்மை அத்திப்பழத்தின் ரசாயனம் விருத்தம்.

பூரணத்தின் செயலதனைவினிப்பதானப்
புகழ்சிறந்த ரசாயனத்தைப் புகலக்கேளு
காரணத்தைமனதிலுறச் செவ்வையாக
கருத்துடனே செய்தவர்க்கு மேன்மையாகும்
ஆரணத்தில்பிணியாளர் சவுக்கியமாகி
அவ்விதமாயிருப்பதற்கு சூட்சமாகும்
தீரகுணமாகிநிற்கும் பெரியோராவர்
திவ்யபதமெந்நாளுந் துணையதாமே. 922

துணையாகநோய்தீர சீர்மைபத்தி
துல்லிபமானதொருப் பழந்தானூறு
அணையவேவாங்கியே வோர்பாண்டத்திட்டு
அன்புடனேநல்லசலம் வூற்றியேதான்
இணையானவடுப்பிலிட்டு யெரித்தபின்னர்
இயல்பாகவெந்த பதந்தனிலிறக்கி
திணையாகவூரவைத்துப் பிசைந்துநன்றாய்
தெளிதலுறவடிகட்டி பீங்கானில்வையே. 923

பீங்கானில்நிறைபார்த்து அளவதாக்கு
பிரியமுறயிதற்குநேர்ப்பாகங்கேளு
நீங்காதசர்க்கரைதா னரைவீசையாகும்
நிதானித்து முன்சொன்ன பாகம்போலே
தூங்காமல்செய்து மிகாரசத்தின்பாகம்
சேர்த்தடுப்பில வைத்தேற்றியெரிக்கும்போது
பாங்குடனேபிசினியைப் போலாகுமப்பா
பண்புடனேவித்திற்போடு மருந்துகேளே. 924

மருந்துவகையான தினிசெப்பக்கேளு
மதுரமொடு சாதிக்காய்சாபத்திரி
பொருந்திடவே யேலமொடு மாசக்காயும்
புகழவேகால்பலந்தான் சூரணமதாக்கி
திருந்தவே தூவியேதான் கிளரியாட்டு
தினகரன் போல்சிவந்துநிற்குந் தயிலம்போலே
விருந்தானரசாயனத்தைப் பதனம்பண்ணி
விளங்கவேவுண்பதற்கு விவரங்கேளே. 925

முன்ரசாயனங் கூட்டும்போதுபாரலி அரிசிபலம்மூன்றுவி
ளாம்பிசினி பலமொன்று சேர்த்துக்கொள்ளவும்

20

விவரமுள்ளரசாயனத்தில் வேர்களஞ்சிவாங்கி
மேலாசிறுதீவராட்சிப் பழத்திற்கொஞ்சம்
சிவமயத்தின் பாரமெனறே வுண்ணச்சொலலு
சினந்ததொரு வெள்ளைகனல்மேகத்திற்கும்
தவர்ந்துவிடும் பிறமியங்களான தெல்லாம
சண்டாளநோயதுவும் சாந்தமாகும்
சிவந்தகுணமாக திருமேணியெல்லாம்
செப்பமுடன் குளிர்ந்துவனல் நீங்குந்தானே 926

மண்டலம் அல்லது அரைமண்டலம் கொள்ளவும்.

## வேறு-விருத்தம்.

வனலதுநீங்கும் வறிந்தநற்பாகத்தால்
கனலதுநீங்கும் கண்ணது துலங்குமாம்
புனல்கடும்வெள்ளை போகுமிவைதனில்
இனமிதுவென்றதே இயம்பினேன்செய்யவே. 927

## திரவுகோலூக்கம்.

செய்யவேவேணும் திருந்தியமருந்திதை
உய்யவேவேணும் உண்மையினாலே தான்
அய்யனைப்போற்றி அருள்பெறவேணும்
துய்யரில்லாமல் துணையிலையெங்குமே 928

## திருத்தலணிகொள்ளல்

எங்கணுமோர் சுடாஇலக நிறைந்தது
அங்கெனுமிங்கென அமர்ந்திலாதேதிரு
திங்களிலமேல் சுடர்தோர்ந்து வுலாவுது
உங்களிற்கண்டு வுணர்ந்திடசித்தியே 929

## மெய்மருந்திதுகொளல்.

சித்தித்தஞானதிவ்ய மருந்திது
சித்தித்தநன்மை சிறந்தமருந்திது
சித்தித்தமதுரந்தெளிந்தமருந்திது
சித்தித்தத்தேவ சீவமருந்திதே 930

## பாகநிறைந்தேறுதல்.

சீவனேதந்தசிற் பரவானந்தம்
சீவனேதந்தசெழுமலரானந்தம்
சீவனேதந்த சின்மயவானந்தம்
சீவனேதந்தசீர்திருவானந்தமே 931

## கைபிடிகோல்நடை

வானந்தயின்பம் வகுப்பதாரிங்கனே
வானந்தசொல்லே வரைவதாரிங்கனே
வானந்தபேரதை வசனிப்பாரிங்கனே
வானந்தபோதத்தைத் வாழ்த்துமிங்கெங்குமே. 932

## இடைக்காடரியற்றிய

### விளக்கொளியானந்தம்

எங்கள்குலம் விளங்கவந்த ஞானப்பெண்ணே
வீடேற்றிகார்க்குகின்ற வமுர்தப்பெண்ணே
துங்கமதாய் நிறைந்தசிந்தைச் செல்வப்பெண்ணே
சுந்தரமாய்நிறகு மொளியானந்தப்பெண்ணே
மங்களச்சொல்லதிகார விளக்கொளியின்பெண்ணே
மாராவமுர்தசுப நவமணியின்பெண்ணே
தங்கபதமாய் சிறந்தசாகரத்தின்பெண்ணே
தத்துவத்தை நிலேபடுத்து மதமாய்ப்பெண்ணே. 933

## மனவருந்தினைத்தல்

நிலேத்தபொருள் நீயல்லால் வேறுமுண்டோ
நீணிலத்தில் கார்க்குகின்ற அம்பரத்தின்றாயா
கலேத்தகுணமனநாட்ட மினத்தைநீக்கும்
காரணமேபூரணமே நல்லோர்க்கெல்லாம்
பெலத்தைதந்தாண்டு விழலிகற்றுஞ்சோதி
பெரியநவசெயரூபமானவேதா
நலமையெனக்காதார முயற்சியான
நாதாந்தபாதமலருண்மையாமே. 934

## நூல்வழிகூறல்

ஆமென்றுமருந்தினங்கள் வரிசைதன்னே
அறிவதனுலூன்றிமிகச் செய்தல்நன்று
போமென்றவுடனே நோய்போவதற்கு
புண்ணுயத்தின் நாட்டத்தில் பொருதவாகி
காமென்ற காமதனேத் தொட்டபோதே
கடந்துவிடும்வயித்தியன்பேர் சொல்லுமுன்னே
நாமென்றஆணுவத்தை நீக்கியுற்ருல்
நலமானசாத்திரச் சொல்மெய்சீராமே. 935

## மேகராசாங்க - சண்டமாருத எண்ணெய்

## கும்மி.

தந்தனதான - தந்தன - தனதான
தந்தன - தாளுை

சீராறுமெய்யப் பொருள்கர்த்தாவைப்போற்றி
சிந்தைமலர்மிசை யேற்றியேதான்
நேராரும்மேகராசாங்கத் தெண்ணெய்சொல்ல
நித்தியர்பொற்பதங்காப்பாமே 936

நித்தியமேபரிபூரணமே யெங்கும்
நேத்தியாய்நிற்கும் பரம்பொருளே
உத்தியேகந்தருளேற்றுகின்றசுய
உன்னதரின்றுணேகாப்பாமே 937

போற்றிமகிழ்ந்துமனம் நிடச்செய்து
பொங்கமதாக வயித்தியத்தை
யேற்றியுரைத்திட யெப்போதுமய்யன்
இன்பதுணைகைக்க காப்பாமே 938

கைபாகமான அவிழ்தமதால்பல
காரியநோய்கள்கண்டுவிடும்
மெயபாகங்கற்றுசெய்கின்றபேர்க்குநேர்
மேலானந் தன்றுணேகாப்பாமே 939

தன்னிலே தாமாய் நிறைந்த திருப்புகழ்
சச்சுதானந்த விளக்கொளியை
நண்ணினவாகப் பணிந்தோர்க்குநிதம்
நற்கருணை மிகுங்காப்பாமே 940

நற்கருணையுள்ள மானவர்க்குக்குணம்
நன்மைசிறந்துப் பலிதமூறும்
பொற்கருணே பதமானந்தமாகவே
போற்றிக்கொள் நித்தமுங்காப்பாமே 941

நித்தியனே சத்தியவேதாந்தம் நிலை
நீக்கமில்லாத பரம்பரையை
உத்தியில் வைத்து பணிந்தோர்க்குபெலன்
உண்மைதிருப்புகழ்க் காப்பாமே 942

உண்மையை நாடியே கைப்பிடித்தால் ஜெயம்
ஓதுதலாகுமா மெத்தொழிலும்
பண்மையைப்பார்த்து உறுபெற வளர்
பாக்கியமாமிகுங் காப்பாமே 943

பாக்கியம்வந்த துக்கை கூடும்சிவன்
பாதந்துணையதுநேர்ந்து நிற்கும்
வாக்கியவேதந்தனைப் பிடித்தால்அய்யன்
வாழ்த்துதல் மேன்மையின் காப்பாமே 944

வாழ்த்துதலான் பின்மாயவிதங்களின்
வஞ்சகம்வந்து அணுகாது
தாழ்த்துதலில்லை அண்ணலர்சித்தத்தின்
தன்மலர் பாதமுங் காப்பாமே. 945

எண்ணெய் பாக விதம்

நொண்டிச்சந்தம்

ஆதிபராபரத்தை-மனதன்புடனே மிகுத்தென்புடனே
நீதியுடன்பணிந்து - நித்தம்-நிட்டைதவராம - லுற்றமமாய்
வேதியர்தான்புகன்ற-மேகத்தெண்ணெய்விதமதையின்னதென்
ஓதியிதையறிய சற்று-வுண்மையுடன் மிகச்சொல்வேன். 946

சொல்லுமுறைகேளீர் நல்லசுத்தவிளக்கெண்ணெய் - வோர்படியாம்
நல்லசீர்மையி - னகத்திச்சார்நாட்டினது - மிகவோர்படியாம் சல்லாப
மாகவேதான் - சம்பத்தான மருந்தாமிகு - மேல் மருந்தாம் உல்லாச
மானதிவை-தனை-வோதுதற்குக்குண-சாதுவென்றே. 947

கிணமானவெட்பாலை-திருகார்போகரிசி-நற்சீரகமும்
மணமாகவேயிருக்கும்--மகிழ்வாயதோர்-கரியசீரகமும்
இனமாகரோகணியும்- மிசையானபெருமரப்-பட்டையுடன்
தனமாகப் பார்த்தெடுத்தே-மிக-தப்பிவிடாமல் பட்டைதனை. 948

பட்டையுடன்மருந்து- வொருபாகமுடன் பலம்நேர்நிறையாம்
சட்டமுடனேதானிடித்தாசையுடன்-வெகு-நேசமுடன்
கட்டாயநோய்தனையே-நீக்கும்-காரியரோகணிவோர் பலமாம் தட்டா
மல்சேர்ப்பதின்னது கொஞ்சம்சாற்றுகிறேன் மிகயேற்றுகிறேன். 949

ஏற்றம்விதந்தனையே-யான்- யெண்ணிக்கையாகவே சொல்லுகிறேன்
போற்றுவோம் நீரடியின்-முத்து- பொங்கமுடனெடுசங்கையுடன்
தோற்றம்படிக்கிதனை சேர்த்திட்ட முடன்பலம்-மூன்றதுதான் வேற்றி
னஞ்சேராமல்-வெகுவித்தையென்றேநல்லபத்தியஞ்செய். 950

நல்லவிதத்துடனே-நவமானது யிப்புவி யானதிலே
சொல்லானதேங்காயின்-பால்-சூட்சமுடனிட்டுவோர்படியை
கல்லாரறிந்துணர்வர்-மேல்-காட்டுகிறேன் கூட்டிடுவீர்
அல்லாவைத்தான்பணிந்து அடுப்பில் அம்மெனவேசொல்லிநம்பியே
தான். 951

நம்பித்தொழுதுகொண்டுத்-தீயைநாட்டிக்கொள்வீர் கொஞ்சம்பூட்டிக் கொள்வீர்-தம்பிரான்ருள் றுணை தான்-நமக்குதஞ்ச மென்போம்-நிதம் வஞ்சமற சமபிரமமுடனே தான் யெரித்தாசையுடன் பார்-நேசமுடன்-வெம்பிவிழுகாமல்-யெண்ணெய்மேல்வருகாமலே-நூல்முறைகேள், ()

நூல்போலணிவரிசை - கண்டு-நோக்கிக்கொள்வாய்-பெலனுக்கிக்கொள் வாய் பால்போல் பதமறிந்து-கடுகு-பற்றிவருமிதம் வெற்றிபெற மால் போலிதை தெரிந்து-சட்டியானதை கிழேவிட்டேயிரக்கி கால்போலற் றெளியவைத்து-களங்கற்றிடவே-புகழுற்றிடுவீர். 953

உற்றதோற் பீங்கானின் சாடித்தனுனிலே நீடிட பெண்ணை தனைமெற் றப்புகழாகும் சொல்மேன்மைபெறும் நன்மையாகுமப்பா குற்றமணு காமல் நல்ல-குங்குமப்பூவுடன் மங்ளமாய்கற்ரூரகமகிழ-ஆவின் கோ ராசனுக்குணம்-பூவினமாம். 954

இனமானகஸ்தூரி பச்சைப்பூரணமுடன்-சொட்சமாமெனசொல் கன மாமிவைகளஞ்சிய யிடையாய் நிறுப்பீர்-அடவாகவேசினமான துவகல யெண்ணெய் யானதிலேசேர்-நாணயமாய் [தான் தனமானவோர்பொ ருளை-மெத்ததான்நிணைப்பீர்மிசுமிண்டிடவே. 955

மீண்டபரம்பரியே-யெங்குமெய் விளக்காநந்ததுய்யமலரே ஆண்டகையேபெலனே யெங்கள் அப்பனே யொன்றுசொல்வொப்பிட வே-தூண்டாமணிவிளக்கேசுத்தசுந்தரமே திவ்யமந்திரமே நீண்டக்கட வுளரே-யென்றும்நித்தியனே-ஞான-சத்தியனே. 956

சத்தியமுத்தியெனுஞ் சர்வதற்பாமே மேல்பொற்பதமே
உத்தியுடன்றுதித்து சொல்லோதிடுவோம் நில்லாதியென
வெத்திபொவெணெய்க்குணம்-வேண்படிநிதமுணிட்வே
மத்திபமாகாமல்-பிணி-மாரிடவே. 957

## வேறுவிருத்தம்.

பேற்கையுள்ள யெண்ணை தனைவோர்காண்டி
இயல்பாகமே கபடையானதற்கு
சேற்கையுடன்ருன் கொடுக்க மண்டலத்தில் தானும்
தீர்வதற்குத் தேகம் யில்லே யில்லே
கோற்கிறேன் பார்நோயனைத்துந் தளர்ந்து விழ
கொடுமையுள்ள வியாதியது நீங்கவேதான்
மூற்கமுனிணங்காமல் செய்தோர்க்கப்பா
முறைபாகந்தப்பாது முயற்சிதானே. 958

## கும்மிப்பாடல்.

தப்பாதிந்தயெண்ணெய் தனோநோய்
　　தானுவறிந்துக் குடித்திடவே
மப்பாகியதோர் மேகமெல்லாம்நீங்கும்
　　மகிழுவேநீங்கள் கும்மியடி 959
அடிக்கடிகனல் கொண்டதுவும் வெள்ளை
　　ஆகடியபுண்களானதுவும்
படிக்குமேய்க்குஞ் சொரிசிரங்கு நீங்கும்
　　பக்குவமென்றேகும்மியடி 960
என்றயலவிதத்தின் தடிப்பும்மெய்யில்
　　யேற்கையிலாம லெழுந்தசில
கன்றிதமாகவே தீர்த்துவிடுமிந்த
　　காரணயெண்ணெயின் பாகமிதை 961

## நிலையுற்றணிதல் வேறு விருத்தம்.

பாகத்தினில்குறையாமலே பர்வகாகசெய்திடவேணுமே
யோகத்தினிலுணர்கொண்டிட யொருநாளுமோவகமீறிடா
தாகத்துடன்பவமானதில் தடுமாறியேதிரியாமலே
ஏகத்துவமொருநாதனை யியல் பாகவேதொழுமென்றதே 962
தொழுதல்லவோ நிதமநிற்கவும் துயரேகிடுமவருள்கூடிடும்
முழுதல்லவோ மனமீதினில் முறையாகவே வழிதேடிடு
வழுமென்றசொல்லணுகாத துவகையாகுமால் பகைநீங்கிடும்
தொழுகர்த்தனைப்பிழையற்றிட துணைகொண்டிடு நிதமென்றதே

## பாகம் நிறுத்தலின் முறமை விருத்தம்.

நிதனிதந்தானெண்ணை தனைக்குடிக்கலாகா
　　நேத்தியதாய் சொல்லுகிறேன்நினைவாய்க்கேளு
பதமாகவைந்துநாள் குடித்தபின்பு
　　பதராமல்நிறுத்திவிடு பண்பதாக
இதமாகபழமலத்தை அகலத்தள்ளும்
　　இசைந்திருந்தமேகமதை வுதைத்துத்தள்ளும்
விதமானமேனியதுக் குளிர்ச்சியாகி
　　மெலிந்தவுடல் பாரிக்குங்குணத்தைப்பாரே 964

## தீரும்நோய்.

குணமாகும் வயிற்றிரைச்சல் குன்மம்சோகை
　　குலாவுகின்ற சூதகத்தின் வாய்வோடொக்க
கணமயக்கம்பித்தவெட்டை சோகைதானும்
　　களருகின்ற பெருவயிறுப்பித்தப்பாண்டம்

சினமானக்கைகுடைச்சல் மேகவாய்வும்
சீக்கிறத்தில்கண்டுவிடும் தெளிவதாக
இனமாகச்செய்தவர்க்குப் பெருமையாகும்
இன்பமுள்ள பண்டிதர்க்கோ ரெண்ணெய்தானே 966

பத்தியம்

பண்டிதர்கள் மெத்தவிதயெண்ணெய்தானும்
பகர்வுடனேபார்த்தறிந்து செய்திட்டாலும்
விண்டதிந்தயெண்ணெயலத நுட்பமாக
விருப்பமுடனுகந்து செய்தால் மேன்மையாகும்
தென்டிரையிலிதுவு மொருநல்லபாகம்
தெருண்டதென்றே மனதில் வைத்து வாய்ந்துயர்ந்தால்
கண்டபடிக்குறையொன்று மணுகிடாது
கருணையுடன் கர்த்தாவின்றுணை யுண்டாமே 966

உண்ணயிலே பத்தியமாயிருக்கச் சொல்லு
வோடியெங்கு மலையாமலிருக்கச் சொல்லு
அன்னையெனுமாதா வைபூசைபண்ணு
அனுதினமும் பூசையதைமறந்திடாதே
சண்ணிவிடும் நோய்களெல்லாமிந்தயெண்ணெய்
சமர்த்தியமாய் செய்வதற்கு இதுதான்வேணும்
கண்ணிவைத்திக் குருவிகளைப் பிடிக்குகின்ற
காரியம்போல் அவிழ்தநிரைக்கண்டு பாரே 967

நிறையானப் பாகமதைக்கண்டுசெய்தால்
நிற்காதுபழமையுள்ள நோய்கள் தானும்
மறையவர்கள் அந்தந்தசாத்திரத்தில்
மகாபெருமையாகவேதான்விவரமாக
பறையடித்தவாறது போல் புகன்றுரப்பா
படித்தவர்க்குமகா தெளிவுபண்பதாகும்
குறைகளது வொருநாளுமணுகிடாது
குவலையத்தில் பெரியோர்க்கு வணங்கிநில்லே 968

நில்லென்று துஷ்டருக்குப்புத்திசொன்னல்
நிலைக்காது வேதாந்தம்மொருபோதுந்தான்
சொல்லென்றுபா லூட்டிப்பழக்கினலும்
சுகிர்முடன்காரார்கள் வெகுளியானேர்
கல்லென்றுஞானவித்தை வுரைத்திட்டாலும்
கபடமன சாதனத்தாலுறுதியாகா
மல்லென்றசண்டை யிட்டுப்பரிகாசஞ்செய்யும்
மாக்களுடன் பேசாமலிருக்கநன்றே 969

நன்ருனபத்தியந்தான் நெய்பாலாகும்
நன்மையுள்ள வாட்டிறைச்சி முயலுமாகும்
குன்ருததுவரை சிறுபயறுமாகும்
குணமானபீர்க்கு வெண்டைக்காய் பிஞ்சாகும்
ஒன்ருனசர்க்கரையும் பாலுங்கூட்டி
உச்சிதமாய்த் தாகித்தால் குடிக்கலாகும்
மன்ருடிபெரியோரை வணங்கிக்கேட்ட
மருந்துவகையான படிவகுத்திட்டேனே. 969

வகுத்தவிதமறிந்தவர்க்குப் பத்தியத்தைப்பாரு
வகையாகவெந்நீர்தான் குடிக்கச்சொல்லு
தொகுத்தசொல்லின் முறைப்படியேபண்டிதர்கள் செய்தால்
தோஷகுணமணுகாது நோயாளர்க்கு
செகுத்துவத்தில சீர்பொருந்தும்செழிப்பதாக
செவ்வைமனநாட்டமதால் பகர்ந்துநின்ருல்
பகுத்தநிறைக்கை வரிசையுணர்ந்துகொண்டால்
பலாபலன்களின்னதென்று பகருங்காலே. 970

## வேறு விருத்தம்

பகர்புகழ் நன்மைபெறுமப்பா
அகமதைதேற்றி அகமகிழ்ரிற்றிட
சுகமதுவாகுஞ் சுந்தரப்பெருமையாய்
மிகபெரநடையில் மினவியேயுற்றிடே. 971

## வேறு விருத்தம்

மினவுறவாகக்கேளு மிளகோடுமஞ்சள்பூண்டு
தனமுறகறியவேப்பிலை யொடுசங்கம்வேரும்
பணவுறவகைக்கோர் கால்பலமது வாகவாங்கி
இனமுறவரைத்துக்கொண்டு யிதற்குநல்லெண்ணெய் கேளே()

## வேறு விருத்தம்

எண்ணெய்தான் பலமுமைந்துஇயல்புடநெய்புஞ்சேர்த்து
பண்பெறவொக்கக்கூட்டி பகர்வுடனெரித்துவாங்கி
கண்பெறசிரசிற்றேய்த்துக் களிக்கவேவெந்நீரில் ஸ்நானம்
தண்பெறச்செய்வீராகில் தலையகுணமாகுந்தானே. 973

மகாவியாதிகளனைத்திற்கும் பார்த்துபெண்ணெய் குடிக்கக்குண மாகும் சீயக்காய்தேய்த்துத் தலைமுழுகவும் இப்படிக்கிமண்டலம் எண்ணெய்த்தவராமல் குடித்தபேர்களுக்குச் சொன்னபடியே வியாதி களெல்லாம் நீங்கும்.

## நன்னாரிவேர் கியாழம் விருத்தம்

தானென்ற நன்னாரிவேர் பலந்தானொந்து
தழைத்ததொரு பரங்கிபட்டைப்பலந்தானென்று
கானென்ற யிருசரக்கும் யிடித்துநனாய்க்
கணக்காகப் பசும்பாலின்கலந்துமேலாய்
வேனென்றமாய்கைதனில் விழுந்திடாமல்
வினவாககாய்ச்சிமெதான் கற்கண்டிட்டு
பானென்றபடியேதான் குடிக்கச்சொல்லு
பகட்டிநின்ற மேகரெணம்படைகள்போமே. 974

போமப்பா இந்தமுறை அந்திசந்திப்
புகழ்வுடனே குடித்திடவே மெத்தநன்று
நாமப்பாகண்டபடியிந்த நூலில்
நலம்பெறவேச சொல்லினதை நயன்றபாறு
காமப்பாலாகாது அவபத்தியமதாகா
கருதியேமனதில் வைத்துக்காணுகாணு
வாமப்பால்மதியமூர்தவ் கொண்டுமுத்தர்
மார்க்கம்போல் தானிருந்து சீர்கொண்டேற்றே. 975

அதிமதுரம் கால்விராகனிடை கூட்டிக்கொள்ளவும்.
இதற்கு இச்சாபத்தியம் ஏழுநாள் குடிக்கவும்

## அழுகண்ணரியற்றிய

### ஸ்நான எண்ணெய்-வெண்பா

சீராருமஸ்நானசிறந்த சுயவெண்ணெய்தனை
பேராரும் அன்பாய்ப் பிரபலிக்க-நேராகும்
சொல்லுதற்கு நலவாக்குச் சுகிர்தமுடன் தந்தருள
நல்லுதற்கு நாயகன்றாள் நன்று. 976
நன்றாகவேபணிந்து நானிலத்தோர்த்தான் பிழைக்க
குன்றாமல்சொல்வேன் குணமாக-ஒன்றாக
தீருமனந்தவிதச் செய்கையிலாநோய்களது
மாறுமனந்த நோய்மற்றும். 977
நோய்தீருஞ் செய்தவாக்கு நடுங்காது மேனியது
பேய்போகும் விட்டுப்பிழைத்தனென்றே-ஆய்வர்கட்கும்
அறிந்து யெண்ணெயின்னமென்று ஆசரித்தாலாகுமப்பா
திரிந்து வலேயாமலிதைசெய். 978
இதையமதைத்தேர்ந்து யெப்போது நன்மையுடன்
கதைவிடுத்து யித்தொழிலைக்கைப்பிடித்து-பதையாமல்
ஒருவழியாய் நின்றுவுகந்துசிறந்தவர்க்கு
மருந்துவழியாகும் மகிழ்ந்து. 979

மகிழ்ந்தவிதத்தை மனதுகந்துசெய்தவர்க்கு
புகழ்ந்தவிதப்படினமனப் பொருதலுறும் இகழ்ந்தே
விடுகாதேசொன்னேன் விவரமுடன்பார்த்துநிதம்
நடுவாகநேர்ந்துகொண்டால் நலம். 980

நலமாகசொல்மருந்து நாடிஞலெப்பொழுதும்
பெலமானகாரியங்கள் பேசலாம்-தலமான
தத்துவத்தைக்கண்டுணர்ந்துதற்பரமேயென்றுசொல்லி
சித்துவினைநீக்கி விடுத்தினம். 981

நீக்கியேமுன்னேர் நின்றதனலேபிழைத்து
ஆக்கியோனென்றே அடிவணங்கி-பாக்கியமாம்
பாலித்துவாழ்ந்து பட்சமுடனேயிருந்து
சீலித்துவாழ்ந்தார் தினம. 982

தினமுங்கபடமற்று திருவிறக்கமுண்டாக
மனமும்பொருதியுற மங்கலமாம்-கனமாக
காவலணிமேவிக்கருணையுடன் சீர்த்துவமாய்
மேவலணியுண்டாமிக 983

மிகவருள்கள்நீடும் வேதாந்தமீதிலுற
ஆகவருளொன்றென்றென்று ஆசையுற-தகவேதான்
ஞானக்கண்ணூற்றி நயனத்திநின்றவர்க்கு
தானகக்கண்ணெம்பர் தவம். 984

தவத்தால்வயது தடங்களன்றி வந்துபுகும்
பவத்தாலெடுத்தகுணம் பற்றுது-சிவத்தால்!
எல்லாமருந்தும் பேற்கனவேபார்த்தறிந்து
நல்லாயெடுத்துரைப்பார் நயந்து. 985

நயந்துகொண்டால் துற்குணம்போம்நாதாந்தசொல்லதனல்
பயந்துகொள்ளல் நாடாதுப்பாருலகில்-துகந்து
காலனற்றுபோவான் கணக்குண்டோயான்புகல
பாலனுற்றுப்பார்ப்பான் பயன். 986

பயன்படுத்தி சாத்திரத்தை பாகமுடன் பாராமல்
வியன்றெடுத்துநின்றுல் விளங்காது-சுயமான
சூட்சநடைத்தெளிந்து சூதகலவெந்நாளும்
மீட்சிநடைபெறுவர்மேல். 987

மேல்வரிசையுண்டு மிக்கபலன்றந்துதவும்
பால்வரிசைகற்றுப் பயன்படுத்தும்-கோல்வரிசை
ஆர்க்குமொருகடவுள் அப்பனவர்பொற்பாதம்
தீர்க்கும்பிழையனைத்தும் தினம். 988

பிழைக்கவழியோர்க்கடவுள் பிதாவாகுமெவ்வுயிர்க்கும்
தழைக்கவழிநூல் முறையைசாற்றுதுபார்-செழிக்க
ஆதியென்றுநின்றால் அனந்ததொழிலாகுமப்பா
நீதியென்றுசொல்வாய் நிறைந்து. 989

நிறைந்தமொழியை நின்மனதில் வைத்துகந்து
விறைந்ததனையுன்னில் விட்டகற்று-குறையிலது
சீர்பூற்றமங்களம்போல செய்துநிதங்கார்த்தருளும்
பேர்பூற்றமங்களமாம் பெட்பு. 990

மங்களமாய்வாழ்வர் மனதுதளராமல்
எங்குலத்தெய்வமென யேற்றிடுவாய்-பொங்கமுடன்
பணிந்துயிருந்தோர்க்கு பாக்கியச்சொல்லுண்டாகும்
அணிந்துக்கொள்ளுன்னில் அறிந்து. 991

அறியாமல்செய்த அகந்தையணியாயமதை
தெறியாதெனவிடுக்குஞ் சித்தமது-விரிவான
வார்த்தையிதென்ன வயணமுடனேதானும்
சீர்த்துவமாய்நிற்குஞ்செயல். 992

நிற்கும்பரப்பொருளை நீணிலத்திலெப்பொழுதும்
கற்கும்வழிகாட்டி கற்பகம்போல்-பொற்ப
புண்ணியமாய்த் தேற்றும்பூரணக்கடாட்சமது
விண்ணிலுரைக்தோன் மொழியுமேல். 993

உரைத்தப்பாதிந்தமொழி உத்தமர்க்கு நல்லவழி
விரைத்துவசனமிக மெய்ப்படுமாம்-மறைத்த
தெல்லாம்நிசப்படுமாம் யெஞ்ஞான்றுமேபுகழ
சொல்லால்வசப்படுமாம்சுகம். 994

சுகப்படவேநெஞ்சை சூதாட்டஞ்செய்யாமல்
மிகப்படவேநாதாந்தி மேன்மையுற-புகலறிய
வீட்டுக்குளோர்மணியை விசைந்துவரிந்துதொழ
பாட்டுக்குளாகுமலருறநேர்பான். 995

பானுகலைகோடிப் பதவரிசைகண்டவர்க்கு
மீனுகலையனந்த மிக்கனவாம் நானும்
நீயுமொருமித்தால் நிலைக்கும்பரவழி
பேயும்பறந்தோடும்பெலன். 996

பெலனமக்குவுண்டாகும் பேரின்பநாயகரால்
கலனகன்றுபோகு மிந்தக்காசினியில்-நலமுறவே
காணாதப்பொருள்தனக்கே கார்த்துற்றெழுதவர்க்கு
தோணாப்பொருள் கொடுக்குந்துணை. 997

சுபசவுக்கிய ஸ்நானஎண்ணெய்

விருத்தம்.

கொடுமையுள்ள வியாதிதனைதீர்ப்பதற்கு
கூறுகிறேன்லகுவான சூட்சமொன்று
கடுமையுள்ளகர்மமெல்லா நீங்கிப்போகும்
கபடம்விட்டுநல்மருந்தைச் செப்பக்கேளு
இடுமையில்லாசங்கன்வேர் பலந்தானைந்து
இணையானவசம்பதுவும் பலந்தானிரண்டு
வடுவகலநாணலுடக் கிழங்குதானும்
வகைபெறவே யிரண்டுபலந்துகையதாமே. 998

துகையானகஸ்தூரி மஞ்சள்வோமம்
துணையானகரியசெம்பைப் பூவினோடு
வகையிதுகளொருக்களஞ்சி யாகவாங்கி
வயணமுடனொன்றாக யிடித்துமைபோல்
தகையாமல் நல்லெண்ணெய் அரைப்படியதாக
தவராமல்சட்டிதனிலூற்றியேதான்
பகையாமல்மருந்ததனை கூட்டிவொன்றாய்
பணிவாகயெரித்துப் பதமாகவாகே. 999

பதமாகயெரிக்கையிலே பொங்கிவீழும்
பார்த்துமெள்ள குரிகண்டுயிறக்கியேதான்
விதமாகஆரவைத்து பீங்கான்றன்னில்
விட்டிதனைசாரமிருக்களஞ்சிபோடு
சதமாகவெண்ணியே தீபதூபங்காட்டி
சத்தியமாய்நிற்குகின்ற பரத்தைப்போற்றி
இதமாகவொருத்தலைநோய்க் கொண்டபேர்க்கும்
வொடுங்காதமண்டைவலிக் கெடுத்துப்பூட்டே. 1000

பூட்டுமென்றசொல்லதனைக் கேளுமப்பா
புனிதமுடன்தலைமுழுக சொன்னநோய்கள்
ஆட்டமென்ற வியாதியதுவுகண்டுபோகும்
அம்மம்மாயாராலு முரைக்கொண்ணாது
தேட்டமென்றேயிதைவிட்டா லிகிதமில்லை
தேர்ந்தபடியெண்ணெயதில்குணமோமெற்ற
வாட்டமென்றவலி நீங்கிவழிப்பாடாகும்
வையகத்தில் வயித்தியர்க்குப் பெருமைதானே. 1001

பத்தியம்.

பெருமையுள்ள பத்தியந்தான் தலைமுழுகும்போது
பேசறியமுருங்கையொடுத் துவரைதானும்

அருமையுடன்கறிசமைத்து தாளிதந்தான்செய்து
அடவுடனே அசனமுறையாகச் செய்வீர்
கருமறைப்புவொன்றுமில்லை வெளிவாய்ச்சொன்ன
காரணத்தைதேர்ந்துகொண்டால் போதும்போதும்
திருவிறக்கமாகவேதான் றெழுதுநின்றால்
தெய்வசெயல்சித்தமது சிறக்குந்தானே. 1002

ஸ்நானம்வெந்நீரில் செய்யவும் இரண்டுமூன்றுநாலு நாள்விட்டு ஸ்நானஞ்செய்யவும்.

கனல்கொண்டதேகத்துக்கு-வேறுவிருத்தம்.

எண்ணெய்.

சிறந்ததொரு பொன்னாங்கணியின்வேரும்
செழிப்பானகீழ்க்காயி னெல்லிவேரும்
நிறைந்ததொரு ஆதண்டையின்வேரும்
நிதானமாய்த்தானெடுப்பாய் பதம்பத்தாக
உறந்ததொருபாண்டத்திலிட்டன்பாக
உசிதமாய்நல்லசலம் தன்னைவார்த்து
புறந்ததொருவேர்வகையை யிடித்துசேர்த்து
பிரபலிக்கயெட்டொன்றாக் காய்ச்சிடாயே. 1003

ஒன்றாகக்கிழாயத்தி நல்லெண்ணெய்தானும்
உண்மையுடனறைப்படிதான் கலந்துமேலாய்
நன்றாகவடுப்பிலிட்டு யெரிக்கும்போது
நகலாமல்பொங்காமல் பதத்தைப்பாரு
குன்றாமலிறக்கியதை வோர்பீங்கான்றன்னில்
குணம்பெறவே வூற்றியபின்புகலக்கேளு
பன்றாகசீனியதுகால்பலந்தான்போட்டு
பக்குவமாய்பூசைசெய்து தீபங்காட்டே. 1004

தீபமொடுதூபமிட்டு கனல்கொண்டபேர்க்கு
திறமைபெறஸ்நானமது செய்யச்சொல்லு
பூபருள்பெலத்தாலே முழுகும்போது
பொல்லாதகண்ணரிவு கைகால்காந்தல்
தாபமொடுமயக்கமுறும் வேகமெல்லாம்
தரியாமலகைண்டுவிந்தப்பாதுப்பா
சாபமெல்லாமகண்டு திருமேனியாகும்
சரியானப்பாகமிது சார்ந்துசெய்யே. 1005

எண்ணெய்காச்சும்போது நன்னாரிவேர்-பலம்வொன்று-நற்சீரகம் பலம்-கால் இடித்துப்போடவும் வேண்டியபோது முழுகிக்கொள்ளலாம்

## வேறு விருத்தம்

பாகத்தைத்தவறிடாமல் பார்த்தறிந்துணர்ந்து செய்தால்
தேகத்தில் நிற்கும் நோய்கள்தீர்ந்து நற்குணமதாகும்
வேகத்தையாற்றவேண்டி வினவுடன்புகழ்வீராகில்
யோகத்தைபெற்ருரென்று யுண்மைபேர்ப்பரி மளமுமாமே. 1006

### அழூகண்ணரியபற்றிய
### பரிமளவில்வாதி எண்ணெய் விருத்தம்.

பரிமளிக்கும் வில்வாதி யெண்ணெய்தன்னை
பண்புபெறப் புகலுகிறேன் மகனுக்காளே
சரியானபாகமிது செய்தவர்க்கு
சகலவினைநோய்களெல்லா மகன்றுபோகும்
விரிவானதில்லையப்பாசுளுவுமெத்த
வினவுடனே பண்டிதர்கள் செய்யநன்று
திரிலோகநாதருள் கிருபையாலே
திறந்திதனைப் பாடுகிறேன் சூட்சங்காணே. 1007

சூட்சமுள்ள வில்வாதிப் பழந்தான்ரெண்டுபத்து
செவ்வையதாய் பார்த்தெடுத்துத்தோடுபோக்கி
காட்சியுடன் நல்லசலம்படி யொன்றப்பா
தயவுடனே பாண்டத்திலூற்றியேதான்
கயமின்றிப்பழமதனை விட்டுகாய்ச்சி
குறுகினபின் வடிக்கட்டிமற்பாண்டத்திட்டு
காட்சியென்றே யெள்ளெண்ணெய் படியொன்றப்பா
கணக்காக வீட்டடுப்பிலேற்றிடாயே. 1008

ஏற்றியேபதமாக யெரித்துவாங்கு
யேங்கிவிட்டால் பொங்கிவிழும்பருவம்பாரு
மாற்றியேபோகாமல் மனதில்வைத்து
மகிழ்சியதாயிறக்கிவைத்தோர் பீங்கான்றன்னில்
ஆற்றியேஹூற்றியேதான் சர்க்கரையுமப்பா
அடவுடனேவொருபலந்தாளிதனிற்போடு
போற்றியேதேவிபதம் பூசைசெய்து
பொலிவுடனே பொருதுகின்ற வயணங்கேளே. 1009

வயணமென்னபீங்கானிலடைத்துக்கொண்டு
வளமாகஆண்டகையைத்தோத்தரித்து
மயணமதைசிரசிலிட்டு முழுகும்போது
மாருதகண்ணெரிச்சல் மாப்போகும்
பயமான கைகாலின்காந்தல்தீரும்
பளிச்சென்றுக்கண்குளிர்ச்சியாகுமாகும்

சுயமானத் தயிலமிது விரிவோ இல்லை
சூட்சமிது சூட்சமி தூலகுவுதானே. 1010

உருவாக்கும்மேனியதைக் குளிரப்பண்ணும்
ரத்திநமுமிதுக்கீடோ சொல்வர்மேலோர்
தொகுப்பானவார்த்தைதனை யெண்ணிப்பார்க்க
துலையாதுவயித்தியத்தின் போக்குதன்னை
மிகுப்பானசொல்லறிந்து நுட்பங்கண்டால்
யினையுண்டோ மருந்துவகை யனந்தமாமே
பகுக்காதே கேணியென்றே சாரறலாகுவ
பரிந்தசொல்லை யுத்தியினால் தெளிந்துநில்லே. 1011

எட்டுநாளைக்கொருதிரம் ஸ்நாளஞ்செய்யவும்

பத்தியம்.

நில்லென்றபத்தியத்தை விளம்பக்கேளு
நிறையானமுருங்கைக்காய் துவரையாகும்
வல்லென்றவரைக்கீரை வாழைக்கச்சலாகும்
வகையாகசொன்னதெலாம் பதமாயுண்ண
சொல்லென்ற நெய்யாகும் வெந்நீர்தன்னில்
சுகமாகஸ்நானமது செய்யவேண்டும்
மல்லென்ற வார்த்தையுண்டோயிதனையாரும்
மகிழ்வாகசெய்துகொண்டால்மதுரமாமே. 1012

அவிழ்தம் புசித்தபின் பலவகைக்கறிக்காய் சாப்பிடலாம்

## தொழுகண்ணரியற்றிய

மருந்தீடிகற்றலின்-சுகந்தபாகு

மதுரமொழியாகவேதான் பெரியோர்முன்பு
வணங்கியேபுகலுகிறேன் வயணமாக
விதுரயிலங்கார கூழ்பாண்டந்தான்
வினவுடனே வோருகாய்த்தானெடுத்துக்கொண்டு
பொதுவானத்தோலதனை சீவிப்போட்டு
புனிதமுடன்கொய்து வொருபாண்டத்திட்டு
சதுவானநல்லசலம் விட்டவித்துநன்றாய்
சரியாகப்பார்த்தெடுத்தோர் வயணங்கேளே. 1013

பார்த்துமெள்ள ஆரவைத்து யிசைந்துநன்றாய்
பக்குவமாய்துணியில்வைத்து வடிகட்டியேதான்
சேர்த்துவொருநிறையளவின் சாசர்தன்னில்
சிறப்பாகவைத்தபின் போர்பாகங்கேளு

ஏர்த்துமிற்கவெண்மையுள்ளசர்க்கரைதானப்பா
இணைபெறவே அரைவீசைநெய்தான் மிக்க
கோர்த்துயிதைபாகமதாய் செய்யவேதான்
கூறுகிறேன் மேலாகவாய்ந்தினைப்பீர்தாமே. 1015

## சர்க்கரைபாகம்.

இணையானசர்க்கரைதான் அரைவீசையாகும்
இன்பமுடன் பாண்டத்திலிட்டபின்னர்
துணையானநல்லசலம் நேரதாக
துரிதமாய்வார்த்து ரெண்டுமுட்டைதன்னை
அணையவேவுடைத்துத் தோடோடொக்க
ஆகவேதான் பிசைந்துமிக்கலந்துநன்ருய்
தணைந்திடவே பிரியமுடனடுப்பிலேற்றி
தாமதங்கள் செய்யாமல் யெரிப்பீர்தாமே, 1016

எரிக்கையிலே கொதித்துவிழும் பொங்கியேதான்
யேற்கனவேபதம்பார்த்து மூறிந்தபின்பு
பிரித்திதனைவடிகட்டி யெடுத்துவேறு
பெலமானபாண்டத்தில் ஊற்றிக்கொண்டு
சரிக்கிநிகரானதொரு முன்ரசத்தைச்சேர்த்து
தயையுடனே யெரித்துவிடுபண்பதாக
கரிகிவிடாப்படியேதான் பிசினியான
கனத்தவிதம்போல வேதானிருக்குமென்றே. 1017

இருக்குகின்றநிதானத்தை யறிந்து நன்ருய்
இசையவேசாதிக்காய் சாபத்திரி
பெருக்குகின்ற அதிவிடையம் பொன்முஷ்டைவேரும்
பிரபலிக்காஞ்சொரியும் நன்னறிவேரும்
சருக்கனுள்ளவாய் விளங்கம்சித்தரத்தை
கணக்கான அருகன்வேர் சித்தாமுட்டி
திருக்களுள்ள தேதாரமிவைகளெல்லாம்
திருவாகவகைவகைக்குப் பலமதாமே. 1018

## வேறு விருத்தம்

பலமதணையே பாங்குடனிடித்து
நலமையாய்வடிதானி நன்ருகச்செய்து
கலனடப்பாகில் களிக்கவிரவிடே
புலனெனக்கண்டுப் போற்றியெடுத்திடே. 1019

## கொச்சகம்.

எடுத்துவொரு பீங்கானில்யேற்கனவேஹூற்றிவைத்து
தொடுத்து செபபூசை செய்துத்தோதரித்து அய்யர்தனை
கடுத்துவிடசெய்யுகின்ற கனததப்பிணியாளருக்கு
கொடுத்துவிடும்பாகமதை குறிப்புடனே யானபுகல்வேன். 1020

புகலுமுறைகேளீர் போன்றபித்தவாய்வதும்
இகலுமனசூடும் இலசந்தம் தாருவாய்வதும்
அகலுமெனவிளங்கும் ஆசரியவிம்மருந்து
பகலும்பொழிலநிறைபோல் பக்குவங்களாகுமென்றே. 1021

பக்குவமாய் பித்தமுதல் பரிந்தக்ஷயத்தினைத்தல்
தொக்குசெய்யும் மேகவனல் தோயாதுமேலெழுந்து
சுக்கும்விஷவோக்காளம் கதித்ததொருவெட்டையதும்
சிக்கும்விதநோயனந்த சேராமலோடுமென்றே. 1022

சேராதுக்கொண்டிடவேத்தினமும்பத்துநாளியினில்
வாராதுயிந்தவிதவலுத்த பிணியானதெல்லாம்
பாராதுநெஞ்சுவலிப்பாக மிதைக்கண்டவுடன்
தீராதுந்தீருமென்றே செப்பினர்களேமுனிவர். 1023

### பத்தியம்

செப்பிடுவேன் பத்தியத்தைச் சீர்சிறந்தபேர்துலங்க
ஒப்பிவீரிச்சாவின் வோதறியப்பத்தியமாய்
தப்பிவிடாமற்படிக்கி சாற்றிடுவீர்பண்டிதரே
துப்பிதுதான்தேர்ந்து நிற்கத்துலக்கமுடன் சொன்னதென்றே.

## ஸ்நானஞ்செய்ய எண்ணெய்விருத்தம்.

துலக்கமுள்ளநல்லெண்ணெய் சடாமாஞ்சியோடு
துயரகலத்தானிசைத்துக் காய்சிகொண்டு
பெலக்கவேசிரசுதனில் தேய்த்துநன்றாய்
பிணிநீங்கசீயக்காய் வெந்நீர்விட்டு
கலக்கமறஸ்நானமது செய்யச்சொல்லு
கபடமதாய்நிற்குகின்ற மருந்தீடெல்லாம்
அலக்காகப்போகுமப்பா வறிந்துபாரு
ஆனந்தபராபரத்தினருள்மெய்யாமே. 1025

வெண்மிளகுபலர்-வ கூட்டிக்கொள்ளவும்.

## மேலோர் சாட்சி.

மெய்யானசொல்லுக்குட் கலன்றானுண்டோ
மிரட்டினால் பொய்யதுவும் யெதிற்குமோசொல்

அய்யமறநூல்வடி யிலாய்ந்தபேர்கள்
அணுகாலன் றனக்கவர்களஞ்சுவாரோ
வெய்யோன்முன்னால் நிற்கலாகுமோதான்
வெளிதனிலே திரிந்தலேந்தால்வீணதாகும்
பய்யவேமனமதனை நிறுத்திக்கொண்டு
பரமபதந் துணையெனவே பகருங்காலே. 1026

## நம்பிக்கையிணைத்தல்.

காமநோய்தன்னாலே மயங்கவேண்டாம்
கதித்துதென்றால் பூரணமேயென்னசொல்லு
தாமதங்கள்செய்யாதே வடிக்கடிதானப்பா
தபநிலேயில்சாட்டி விட்டுநீயேயென்போன்
ஏமவித்தையிதற்கிட்டோ பிழைப்பதற்கு
என்னாலேமுடியாது விளம்புதற்கு
சோமன்ரவுகலேயில் நின்றுபொருந்துங்காலே
சோடசமாமிசைந்தமொழிசுகிர்தமாமே. 1027

மோழியானமொழிதெரிந்து தேறவேணும்
முன்வழியும்பின்வழியும் அறியவேணும்
சுழியானரகசியத்தைக்காணவேணும்
சொல்லுகந்தால் யெவ்வழியுந்திறக்கலாகும்
தொழிலறியவெகுநாள்தான் சொல்லுமப்பா
தேர்ந்ததிது நுழைந்துகொள்ளசாத்திரத்தில்
எழிலானவிர்த்தாந்தந் தன்னைப்பெற்றால்
எப்போதுங்குறைவில்லாப் பாக்கியந்தானே. 1028

## வேறுவிருத்தம்.

குறையிலாதெனு மொருக்குணங்குடிமேவிட
திறையிலாதேற்றம் திருவருளற்புதம்
யறைவிலாபேர்க்கு மதுரவிண்ணனந்தம்
அறையினுங்கொள்ளாதனந்தசொல்லாகுமே. 1029

## புலிகாலரியற்றிய

### புங்கம்பாலெண்ணெய்-வேறுவிருத்தம்.

சொல்லுகிறேன் புங்கம்பாலெண்ணெய்தன்னை
பிரியமுடன்வயித்தியத்திற்றிறமையாகும்
வல்லமையாயிதனை மிகச்செய்தபேர்க்கு
வனந்தவிதநோய்களது மிகவேபோகும்
நல்லவர்போல் நானிலத்திலிருந்துஞான
நடபடியைகற்றறிந்து செவ்வையாகி

புல்லருடன்கூடாமல் வோர்புத்தியாக
பொருந்தினல்கைற்றெடுத்ததெல்லாமானே. 1030

ஆமப்பாயெண்ணெயதி லனந்தமுண்டு
ஆராய்ந்துபார்த்தவிதன்படதாகும்
கோமப்பாயிப்பொழுது சொல்லுகின்ற
குணமானயெண்ணெ யிதைகூறப்போமோ
வேமப்பாவிகடமதாய் வெறுன்டிடாமல்
விததகமாய்க்கைத்தொழில்போல்செய்தாராகில்
நாமப்பாசொன்னபடி வியாதியாவும்
நாடாமல்கண்டும் நன்மைதானே. 1031

## வெண்பா.

நன்மையுறும்ஞானம் நலமிலதுமேபுவியில்
தின்மையுறும்வஞ்சத்திடனணுகாதுசொன்னபடி
சுத்தமனமாயிருந்தால் சொல்லொன்றுந்தப்பாது
வித்தைகதையோதிடினும்வீண். 1032

எண்ணெய்-வேறுவிருத்தம்.

## தொகுப்பலங்காரம்.

வீணெனநினைத்துவிருதாவில் பேசாமல்
காணெனச்சொன்னக் கணக்கதின்படியே
தோனெனநின்று துலக்கமதாகினல்
கோனெனபுத்தியைக் குலாவிடதென்பதே. 1033

என்பதின்புங்கம்பால் யேற்கையின்றெழில்கேள்
பன்பதின்குணந்தான் பகர்ந்திடப்போமோ
சொல்வழியாகும் சுகுணமுறையிது
நல்வழியாகநயன்றுக்கொள்ளப்பனே. 1034

கொள்கையின் புங்கம்பால் சொடுமையின்ரணத்தை
துள்ளிப்பிடிக்கும் தோற்றியபுண்களை
அள்ளித்தெளித்திட வகண்டிடும்பேகங்கள்
புள்ளியின்றேகம் பொன்போலிலகுமே. 1035

இலகுமேமேனி இணையுண்டோசொல்லிட
நலமிதுபோலநாட்டுவேனப்பனே
கலனதுநீங்கும்கண்காணப் பார்க்கலாம்
பலன்றனையிப்போ பகருவேன்பாரே. 1036

பார்க்கவேபாலால் பளிச்சென்றமேகத்தை
தீர்க்குமிதுகுணம்செய் விதந்தன்னிலே

ஏர்க்குமிசைந்து யெப்போதுஞ் செய்யலாம்
பேர்க்கும் பிரபலம்பேரின்பம்நாடிடே. 1037

நாடியேபார்க்கநற் பெலனுகிடும்
பாடியேபடித்தப் பாகத்துரையிது
வாடிமயங்கி வழங்கித்திரியாமல்
கூடிக்குலாவிகுரிப்புடறுற்றிடே. 1038

புங்கம்வேர்-எண்ணெயின்

## வண்ணப்பா.

உறயுங்கயெண்ணெயை
கற்ருேர்ப்புகழவேதான்
சற்றுவிதனில் சொல்ல
குற்றமணுகிடாது
சித்தர்பாடல் மெத்தநீடல்
சுத்தநாடல் வித்தையானதுதேடல் 1039

தேடிக்குணர்ந்து செய்ய
கோடிப்பிணிகளெல்லாம்
வாடிப்பதுங்கியேதான்
வோடியலர்ந்துநிற்கும்
நீடிடாது சாடிடாது
கூடிடாது ஆடிடாதுவாது 1040

வாதுழைகளெல்லாம்
யேதுமணுகிடாது
சூதுதரஎதிரம்விட்டு
மாதுத்தொழிலைக்கட்டு
கோதுநீங்கும் சாதுதாங்கும்
ஊதுபாங்கும் தீதுபிணிவாங்கும் 1041

பிணிகளெல்லாமகலும்
அணியதாகவேமுன்பு
மணியெனவேபுகல்வர்
கணிதமப்பனஞ் சொல்வேன்
கனிநேர்மை இனிசீர்மை
தனிவார்மை தொனியானநேர்மை 1042

இதுவிதங்கம்பால்-சமர்த்தியெண்ணெயிதாமே
புங்கம்பால்எண்ணெயின்பாகம்.

நேரானபுங்கம்வேர் பால்படிகாஞென்று
நிலைத்ததொரு தேங்காயின் பால்படிகாஞென்று

சீரானவெங்காய சாற்படிவரைக்காலப்பா
சிதராதசம்பளச்சார் வகைக்காலப்பா
பேரானநேர்வாசும் ளத்திசெய்து
பிறியமுடனோ் பலந்தான்போடுபோடு
தாரானநுணுப்பட்டை வெள்ளெருக்கன்பட்டை
தவராமல்வகைக்கிரெண்டு பலந்தான்போடே. 1043

## கொச்சகம்.

பலங்களெல்லாம் பார்த்துபக்குவமாய்க் கண்டுணர்ந்து
சலங்களதுமீறால் சம்பிரமுடனேமிகவும்
தலங்களிலுள்ளோர்கள் தழைத்துநிதமேபுகழ
பெலந்தரவேயெண்ணெய்தனை பேரிலகதேர்த்துசொல்வேன்.

## விருத்தம்.

தேர்ந்ததொரு திரிகடுகுதேவதாரம்
தெளிவான பரங்கிசங்கைத்திப்பிலியின்மூலம்
கூர்ந்ததொருசிறுதேக்கு கோஷ்டமூலம்
குணமானகரியசீரகம் வகைவகைக்கு
பேரநாதப்பா வோர்பலமதாகவே தான்
புகழ்வுடனேசொன்னதெல்லா மிடித்துக்கொண்டு
நேர்ந்ததொரு யெண்ணெயிலே கூட்டியேதான்
நிதானமதாய் வடுப்பேற்றி யெரித்திடாயே. 1045

எரித்துமிகப்பதமாக யெடுத்திறக்கிப்பாரு
யேற்கையுடன்புனல் தங்காதிருக்கவேணும்
குரித்தப்பிஜலம்கோர்த்து நின்றுதானால்
குற்றம்வரும்யென்பேரில் சொல்லவேண்டாம்
பரித்தியல்பாயுரைத்த மொழிபண்பதாகும்
பார்த்துமெள்ள பதமறிந்து யெடுத்துக்கொள்ளு
விரித்தபடிக்கடுகு தள்ளியிருந்துநல்ல
விகிதமுள்ளப் பரணிதனிலடைப்பீர்தானே. 1046

அடைத்துவைத்து மனோகரியேமாதாவேயென்று
வாத்ததுமெனப்பணிந்து மிகதீபங்காட்டி
படைத்தவொநாதாந்தக் கடவுள்தன்னைப்
பரிவுடனேமனதில் வைத்துப்பாகமாக
துடைத்துவிடும்நோயனைத்துமெறேபோற்றி
துலககவேஅனுதினமும் வாழ்த்துமென்று
நடைத்ததையென்னில் பாவகுற்றந்தனைப்பொறுத்து
நலம்பெறவேகார்க்கநிதம்தொழுகுவீர்தானே

தொழுதுபுகழாவேதான் வெண்ணெய்தன்னை
துயரகலத்தோத்தரித்து வோர்கரணடி
பழுதுவிழலகல மிக்கக்கொடுப்பீரோகில்
பரிவானபுண்புரைகள் கிரந்திமேகம்
முழுதுமிலைவநோயனைத்து மான்றபோகும்
முறையிதுதான் மிகவுரைத்தேன் பாடல்தன்னில்
வழுதுவொன்றிலையிந்த பாகஞ்செயயில்
மார்க்கமுடன்கைவரிசை யிதுதான்பாரே. 1048

பத்தியம்.

இதுபோலேநல்லவிதப் பாகமுண்டோ
இணைப்பதற்குப் பெரியோராலாகுமாகும்
பொதுவாகச்சொன்னசொல்லை மறந்திடாமல்
பொக்கமுடன்செய்து கொண்டால்பிணிகள்நீங்கும்
மதுவானலாகிரிகளிதற்குவாகா
மகாக்கவனமாக நெய்பால்கறிகாய் வர்க்கம்
விதுருணையாய் பார்த்தறிந்து யுண்டபேர்க்கு
விகற்பமதுவொருநாளு வேண்டாதென்றே. 1049

வேண்டிநின்றால் யூகிகனம்பெருவர் மேலாய்
வினவுடனே சுந்தரம்போலிருக்கவேணும்
தூண்டிநின்றவிரல்கதை போலாகுமாகும்
சொற்பொருளின் மாத்திரையையூன்றியேறு
காண்டிகைகள்னநூல்தன்னில் சொல்வர்
கணக்குண்டோபணேயேட்டி லடங்காதப்பா
பாண்டித்தியம்விளங்குகின்ற பண்மையென்றால்
பாலவர்களுரைபுகல்வர் பரிந்துதானே. 1050

## இதற்குக் குடிநீர்.

தானென்றகொத்தமல்லிக்கு சோம்பு
தயவாகவகைக்கு வொருகால்பலமதாக
வேனென்றதாகாமல் வறுத்திடித்து
வினவுடனே சலம்விட்டுக்காய்ச்சியேதான்
பாலென்றபசுவின்பால் சீனியிட்டு
பாங்காகக்குடித்திடவே கனல்களெல்லாம்
நானென்றசொற்படியே நீங்கிப்போகும்
நன்மையுடன் தெரிந்தபடிசொன்னதாமே. 1051

இரண்டுநாள்காலையில் குடித்துநிறுத்திவிடவும்.

சொன்னதிந்த வெண்ணெய்தனக்கேற்றஸ்நானம்
சுகுணமுடன் புகலுகிறேன் கேளுகேளு

வன்னமுள்ள அருகன்வேர் பலந்தானென்று
வாகானநெல்லெண்ணெய் பசும்நெய்நானும்
பின்னமில்லாவிளக்கெண்ணெய் வகைவகைக்கி
பெலமாகத்தான் றாக்கி வொன்றதாக்கி
கன்னல்மொழிபோலவே தான் காய்ச்சிக்கொண்டு
சருகுசுடனேசிரசிலிட்டு வெந்நீரால்ஸ்நானஞ்செய்யே.

ஆட்டிரைச்சி துவரை நெய் கூட்டவும்.

## கலிவிருத்தம்.

செய்யவேநல்லச் செழுக்கனமாகுமாகும்
உய்யவேநல்லவொழுக்கமதென்பார்கள்
பொய்யவையே விட்டிகலுநிதநிதம்
அய்யமுமற்றிட ஆனந்தமென்பரே. 1053

என்றகுணந்தனையெழில் பெறக்கற்றுளம்
நன்றணிமேவிடமையதாகுமாம்
கன்றதைத்தேடிகளிப் புறப்பாலுறும்
என்றதையொன்றிவுகந்து ஒருங்குமே. 1054

ஒருமையினாலே வுலகிலேவாழலாம்
வருமைகளில்லே வளமைகள்மெற்றமை
சிருமைகளில்லே யெஜயமனமுற்றிட
தருமநெறிவளர் சனுவுடன்றீர்க்கமே. 1055

தீர்க்கமதாகத் தெளிந்துயிசைந்திடு
ஊர்க்கமுகந்து வுலவினால்நன்றது
ஏர்க்கசிறக்க இன்பபேரின்பமாம்
கார்க்கக்கருணைக்கடவுளர் சித்தமே. 1056

சித்தச்செயல் படிசேர்க்குமேனவையெனும்
மற்றப்பேச்சுண்டோ மானிலமீதினில்
புத்தித்திறந்தால் பொழிலாடும்வித்தையும்
நித்தியநாதன் நேர்நிலைவுண்மையே. 1057

வுண்மைக்கிநன்மை யொருங்குமிகவே தான்
தண்மைக்கிசொல்வது சாற்றுங்காலென்றது
தின்மைக்கிநாட்ட தொடாதுவப்பனே
தன்மையென நீக்கிதழைத்திடுயுன்னிலை. 1058

நிலையிதுசத்தியம் நேர்மைமனேதமை
கலைமுழுதாய்ந்து கற்கினுமதுதான்
பவகலைப்பார்த்தும் பரிந்து மேகாண்பரோ
தலையெனவறிந்தால் சகலமுத்தியே. 1059

வேறு-விருத்தம்.

சித்திரத்தேர்போலணியின் நூற்களெல்லாம்
புத்தியுடன்கோர்த்து நன்றாய் முடிக்கவேணும
எத்தியேசொல்லானதினாலாபமுண்டோ
வெத்திகொடிநாட்டுவதார்விரைந்துபாரே. 1059

இராசபண்டித வீரமாமுனிவரியற்றிய
மேகராசாங்கரசாயனவிர்த்தி

விருத்தம்.

ஒப்பிலான்றவத்திற்றேர்ந்த வுயர்மணியாகத்தோன்றி
முப்பகைவிழலைமாற்றி முழுதாற்குருவென்றேற்றி
தப்பிதமணுகிடாமற் றழைவிரிக்கடுக்கைப்போன்று
இப்புவித்தமிழ்கண்டாய்ந்த யின்பமாதபததிற்றேனே. 1060

பண்மைபுலாசம்.

தேனதுபொழிந்தூற்றுஞ்சீர்த்துவப்பன்மையாகி
பானதுபோலேமிக்க பற்பலபாஷைகற்றாள்
வானதுமீனினைக்கும்வகுப் பிலாசாத்திரமும்பார்த்து
கோனதுவிரைந்தபொன்னைக்குணங்குடியானலோலன். 1061

வளம்நிலை.

குடிநிழல்போன்றயூகிகுரிப்பிணைத்திணைக்கவல்லன்
வடிவலங்காரதாயவரமது நுவலின்மேலாம்
படிமிசையாவரொப்பப்பகிர்ந்துநற்பாகமேம
விடியிற்கண்வேந்தனின்றான்விளங்கியஞானதேனே. 1062

அமுர்தமூட்டல்

ஞானபோசனத்தைப்பூண்டு நக்கியேவொளியில்நின்று
ஆனசொற்புகழ்ச்சியாகியணியெனவிரதமுற்று
மோனபொன் விழிநேர்சேர்த்து மொலகியேமறைசீருற்று
தானதத்துவததிலூர்ந்தத்தபசுயமலர்ந் தான்றானே. 1063

குன்றாதொளி.

மலருறதிவ்யகற்புவழக்கற்றுத்தெழுந்தசுத்தன்
புலனதுதெய்வதோத்திரம் போன்றவைவூற்றிமற்றை
கலனறவெழுதிதந்துக் கலைமுதல்வுரையுமேற்கேள்
தனுமனு பெரியோரேற்கசாற்றும்நன்மதிவல்லோனே. 1064

நூலணிகாதல்.

வல்லபர்தெளிந்தயூர்க்கவலங்கிர் தபண்டிதத்தின்சாத்திரி
சொல்லரிதானயின்பசுவிகிரநிபுண்வாக்கியன்

இல்லறங்கடந்தயோகியிராப்பகலற்றொழும்நிர்வாகி
பல்லருக்குரைறாலீந்தபண்புசேர்மதிமல்லோனே. 1065

அறிவிடந்தேர்ந்தல்.

மதிநிறைந்துணர்ந்ததூயவமூர்தபாலிசைந்தநல்லன்
பதிநிறைந்தமிழ்பாயூற்றும் பாவலர்புகழ்நிதானன்
துதிநிறைமலர்மிசையிலேற்றி துற்செயல்நீக்கிகற்பு
நிதிநிலைவிரூமைநாட்டிற் நீண்டகற்பமென்றுய்வீர். 1066

பிரபல்பம்.

நீண்டவேதாந்தமற்ற நிறைபொருளணைத்துமாய்ந்து
பூண்டசொற்கடங்காதென்றும் பூவளரிதையகோலன்
ஆண்டகைரென்றென்றேற்றி அறிவுறதிறந்தசீலன்
தாண்டவயேமசாயல்த்தழைத்தநற்குருக்கள்தானே. 1067

மாதபயூகி

குருக்களில்பேர்பெற்றேங்கிகோதிலாமனத்திநாட்ன்
திருக்கமிழ்வதனரூபன் சீலாவிஸ்தாரதுய்யன்
கருக்களைவாய்ந்துதேர்ந்தகனாத்நசித்காந்தயூகி
பெருக்கமர்மிவர்சொல்லேற்ற பேரின்பச்சுகுணமாமே. 1068

மறைநிறைக்காதல்-கொச்சகம்.

சுகமறையிற்றேர்ந்த திருசூட்சபுயவிஸ்த்தாரன்
மிகமறையிற்றேர்ந்ததிருமேன்மைகுணவாக்கியராம்
செகமறையைவாய்ந்துவொரு சீவனடிக்கண்றேர்ந்த
அகமறையிலேற்றியுற்ற ஆச்சரியமாதவனே. 1069

பேரலங்காரம்-வேறு விருத்தம்

மாதவவீரமாமுனிபுகன்றசொல்
மாதவவீரமா முனியுணர்ந்தசொல்
மாதவவீரமாமுனிதிசைந்தசொல்
மாதவவீரமா முனிவர்சொல்ரசாயனம். 1070

கைகாட்டல்வெண்பா.

சொல்லும்பொருளில்சுபசெயமேலானந்தம்
கல்லுமிவையெனவேகாட்டிவைத்தார்-வெல்லு
நோய்களகலநுவன்றமொழிமீறுமல்
ஆய்வீரிதனைவறிந்து. 1071

பாகவிர்காந்தம்-விருத்தம்.

அறிவுகந்தபெரியோர்கள்செய்வதற்கு
அன்புடனேசொல்லுகிறே ரசாயனத்தை

பிரியமுடன்செய்துகொண்டால்நோய்கள்தீரும்
பேணியேகைவரிசைக்கண்டு கொள்வீர்
விரிவானதில்லையப்பா விளக்கமாகும்
வினவுடனே பண்டிதமும் திறமையாகும்
சரியானபாகமென்றேவீரமாமுனிவர்
சபாசெனவேபுகன்றதிந்த அவிழ்தந்தானே. 1072

தேர்ந்தநற்கருணை.

அவிழ்தமென்றுசாத்திரங்களனந்தம்பார்த்து
அவரவர்கள்கைவரிசை நுட்பம்பார்த்து
புவியாளர்பிழைக்கவேதானகவனமாக
போதிதமேன்லகுவாகப்புண்யமாக
சுவிகரமாய் செப்புகிறமாறகந்தன்னால்
சொல்லொன்றுந்தப்பாது பூராயங்கேள்
தவியாமலுணர்ந்துமிக நினைவில்வைத்து
தடங்கலன்றி தருமமனமாகச்செய்வீர். 1073

ஞானவுச்சாரணம்.

மனமதனையான்றிருத்திமோட்சானந்த
மதுரவழிமார்க்கத்தையுணர்ந்துபார்த்தேன்
கனமானமுக்குற்றமாய்கைதன்னை
கதித்ததொருவாளினால் வெட்டியேதான்
தினந்தினந்தான் பூசைநெறித்தவறிடாமல்
திவ்யபொருள்நாதாந்தப்பெலத்தில்நின்றேன்
சினந்தமண்ணைவிழிலற்றிஞானவீட்டில்
சேர்ந்திருந்துசெவ்வையொளிப்புக்கினேனே. 1074

நயனநாட்டிசைத்தல்.

புக்கியதின்மேல்பூட்டைத்திறந்துகொண்டேன்
புலனென்றகருவிகளைவகலத்தள்ளி
சொக்கியபின்விழித்துசுயநயனத்தேறி
சூட்டினேன்மாதபத்தில்கியானமுற்றேன்
அக்கியென்றகொடுமைவிட்டுவிலங்கிடாமல்
ஆதாரமூலமதைவிகிதமாக்கி
முக்கியமாய்இக்கணநூல் விரித்துமற்ற
முயற்சியுள்ள வாதநூல்மிகச்சொன்னேனே. 1075

சொன்னதென்னவெண்ணிக்கணக்காய்ந்திடாமல்
சூட்சமுள்ளபண்டிதநூலனந்தஞ்சொன்னேன்
வன்னமுறும்பாலமுர்தம் மீறியேறும்
வழிதுரையும்வதக்கேற்றபடினமெல்லாம்

கன்னிலைப்போல்சுவை பொருதுமனதுக்கேர்க்க
கண்மணிபோலாய்ந்துகொண்டாலாகுமப்பா
இன்னம்வெகுசாத்திரங்கள்விஸ்தாரமாக
இயம்பினசொல்லிசைந்தறிந்து பார்ப்பீர்தானே. 1076

பாரப்பாகாவியமும் பெருநூல்மந்திரம்
பண்பானஞானவிர்த்திகெவுனநாட்டம்
போப்பாவதற்கதற்குசெப்பியேதான்
பிரபலிக்கத்தவராமலோதினேன்யான்
நேரப்பாரேமைபுரிமடாதிபதிதானென்றும்
நிலைமைபெற்றதவயோகி முனிவரென்றும்
சீரப்பாபிராமணகோத்திரவேதியர்தானென்றும்
செப்பினேன்யெனதுபுகழ்வளப்பந்தானே. 1077

புகழானபாஷையதில்தேர்ந்தோரென்றும்
புத்தியுள்ளநபாபுசந்தாசாயபு
மகிழ்வாகியெனையழைத்துத்திருக்கபாஷை
மதிதமுடன்சோதித்துமந்திரியாக
விகிதமுடன்யிருமெனவேவுபசரித்து
வேண்டியேகிஸ்மத்தின்பேருமிட்டு
சுகிர்தநடையானதெல்லாமியற்றச்செய்து
சுந்தரம்போல்நற்கருணை புசித்திட்டானே. 1078

நிலைநாட்டம்

புசித்துகுருப்பட்டமதைத்தவறிடாமல்
போனறுற்றேன்வுலகிலுள்ளோர்ப்பகைத்திடாமல்
நசித்துவிட்டேன்பவவழுக்கைநாடிடாமல்
நாதாந்தக்கூட்டத்தில் யானொருவனொருவரென்று
சுசிகிரத்தின்கலையில்நிதம் தொந்தார்த்தமாகி
துலக்கினேன்நவரத்னமாலை யொன்று
பசித்திருப்போரப்பாலுண்டமோரையாக
பண்புற்றேன்பார்த்தறிந்து நேர்ந்தவர்க்குத்தானே. 1079

உண்மை.

நேர்ந்தயிந்தசாத்திரத்தில் சொன்னதெல்லாம்
நிச்சயந்தான்தப்புமொழியானதெல்லாம்
தேர்ந்தபடியானறிந்துபுகன்றேனப்பா
தெய்வசெயல்வுங்கள்தனக்கிருக்கவேண்டி
கூர்ந்துவிதநடையிதனைபோதித்தேன்யான்
குவலயத்தில்நீங்களுந்தான்பிழைக்கவேதான்

சார்ந்தபடிரசாயனத்தைத்தவறிடாமல்
சத்தியத்தில் நிலைநிறுத்திசெய்வீர்தானே. 1079

வெண்பா.

நிலைநிறுத்தியுன்னில்நேர்மையுடனேயிருந்தால்
கலையணைத்தும்வந்துபுகுங்காரணமாய்நிலையிதற்கு
உண்டோசொலலாய்ந்துவொருங்குடனேபண்டிதத்தை
கண்டாய்ந்துதேர்ந்தோர்க்கடன். 1080

கனமானசொல்லறிந்து கற்பகம்போலாய்ந்துநின்றால்
இனமானசொல்தெரிந்தாலேற்கையுமும்-தனமாகும்
வீரமாமுனிவர்விபரமுடனிம்மருந்தை
தீரமதாய் அம்மென்றார்சீர். 1081

சகலவியாதிக்கும்-அதஷ்டரசாயனம்-கலிவெண்பா.

அம்புலியைற்றுட்மிதித்த ஆதியடியைத்துதித்து
நம்மபுதஷ்டமேகராசாங்கரசாயனத்தை-அம்புவியில். 1082

செய்யும்வகைகேளுசீனத்துப்பட்டைபலம்
அய்யுரெண்டுசர்க்கரையுமைந்துநிறை-துய்யதொரு 1083

தாலப்பனைக்கிழங்குதயவாகரெண்டுபலம்
ஆலப்பிரம்போடு அசுவகெந்தி-சாலவே 1084

ஒன்றென்றொருபலமாய் ஓதகமிட்டோர்நிறையாய்
மின்றமுத்தக்காசு மிளகரையமாம்-நன்றுதரும் 1085

திப்பிலியதோர்பலமுஞ்சேர்மதரமாலிடையம்
மொப்பியலாசாதிவுயர்ந்தபத்திரி-செப்பரிய 1086

முந்திரிகைபேரிச்சன் முபர்ந்தக்கனியுடனே
அந்தமுள்ளக்கூகைநீரான துவும்கந்தமுறும் 1087

வெட்டிவேர்விலாமிச்சுமிதுகடுகுரோகணியும்
பட்டைகிரும்புவிருபனிரெண்டும்-திட்டமுடன் 1088

வொன்றானதுக்கைந்துவிராகனிடைகோஷ்டம்
குன்றாதசித்தரத்தைக் கொத்தமல்லிநன்றாக 1089

சன்னலவங்கமுடன்றாளிசைப்பத்திரியும்
மூன்றானதூதுவேளைமுளப்புரண்டி-சொன்னதொரு 1090

கண்டங்கத்திரியிதெட்டுகலந்துமொருவகைக்கு
விண்டேன்விராகனிடைமூன்று-பண்டரிய 1091

தேவதாரஞ்சிறுநாகப்புவாய்விளங்கம்
மாவிதஞ்சேர்மாசக்காய்வைந்துமேபாவகமாய் 1092

ரெண்டுவிராகனிடைசேர்ந்தநெய்யும்மூன்றுபடி
கண்டுகளிப்பீர்க்கருணையுடன் விண்டுரைகேள் 1093

சேங்தேனரைப்படியும் செப்பினதோரிவ்வளவும்
விந்தாமலேக்குணர்ந்துபேர்பெறவே நந்தாத 1094

பட்டைதனைவேறேவைத்துப் பதமாகவேயிடித்து
தொட்டவனமருந்தைத்தூளாக்கி சட்டமுடன் 1095

கடைசரக்கிலேநாதிக் காயேலங்கோஷ்டம்
நடைதக்கிரும்போட திமதுரம்தொடையிலேந்தே 1096

பொடிசாதிப்பத்திரியும் பேரிச்சப்பழமுந்திரிகை
யடித்தநிறைபாகப் பார்த்திடித்து-வடிவாக 1097

மற்றசரக்கெல்லாம்வகைவகையாகவேகூட்டி
குற்றமிலாதேயிடித்துக்கொல்வாய்நீ-உத்தபெரும் 1098

சட்டியிலேநெய்விட்டுத்தழலாயடுப்பேற்றி
கொட்டித்தொருவிறகால்கொண்டெரித்து-தொட்ட 1099

அரம்பைகனிதோட கற்றியேகையாலே
விரம்பிப்பணம்போலவேயரிந்து-பரந்த 1100

நெய்யிற்சிறுகனிவாகவேபோட்டு
கையிற்கனிசரியாய்நாடியபின்-பையவே 1101

கிண்டித்துளாவிக்கிளரிகளிபோல்சிவந்தால்
தண்டில்லாப்பட்டைத் தூள்தான்றாவி-கனமான 1102

வனமூலிகைத்தூளே வளமாகவேற்றாவி
துணிவாயகடைசரக்குத்தூள் தூவி-கனமான 1103

சர்க்கரைதேனிட்டுசலியாமலேகிளறி
மிக்கமதுரத்தூள்மேல்தூவி-தக்கதொரு 1104

பாகமறிந்துபதராமலேயிறக்கி
தோகயிருபொழுதுதோய்ந்துவர-தேகமதில் 1105

தீரும்நோய்சூசியொடுதீராதபுண்கிறந்தி
நீரழிவுதாகநிணமுறிக்கிச்-சாருகின்ற 1106

சலக்கழிச்சல்நீர்செரிப்புசத்தியோக்காளம்
பெலத்தஅதிசாரம்பித்தமொடு-தலைத்தியக்கம் 1107

வாதட்சயரோகமந்தாரகாசமொடு
சேதமேசெய்யுஞ்சிலேற்பனமும்மீதான 1108

குன்மவலிவாய்வுகுடல்பிரட்டல்ரோம்பல்
கன்மவினைப்போல்மூலங்காமாலை-தின்மையுள்ள 1109

செம்மிசெம்மித்தேதுடறுஞ்சுவாசகாசமிருமல்
கம்மியதோர்மாந்தைமேலிளைப்பும்-வெம்பியதோர் 1110

பாண்டுவிஷபபாகம்பவுத்திரமறையாப்பும்
கூண்டஅண்டவாதங்குதிவாதம்-வேண்டாத 1111

அன்னவெடிப்புமதிட்டிரச்சல்வாய்வூரல்
பின்னபடுரத்தப்பிரமேகம்-சொன்னவிந்த 1112

ரோகமுதலாகவெகுரோகமெல்லாம்பார்த்துமுன்னே
ஆகயிருள்போலவிட்டகன்றிடுமே-போகமுறும் 1113

தாதுவிர்த்தியுண்டாந்தையலர்க்கும்மன்மதனும்
சீதத்திருமகளுஞ்சேர்ந்திருப்பாள்-ஓதும் 1114

நரைதிரைபோம்வாலிபமாம் நற்காயஞ்சித்தியுண்டாம்
தரைமேல்வசீகரமுந்தானுமுண்டாய்-விரைவாக 1115

மகிழவேஅந்திசந்தியாகபுன்னைக்காயளவாய்
புகழவேகொண்டேற்றிபொருதிடுவீர்-அகமகிழ 1116

மண்டலந்தானுண்பீர்மாகொடியநோய்தனக்கு
தண்டமிழாச்சொன்னேன்சமர்த்தியமாம்-கண்டதிவை 1117

பத்தியத்தைக்கேளும்பழஞ்சாதம்நீக்கிவிடு
உத்தியுடன்பார்த்து உண்டுகொள்வீர்-சித்தியதே. 1118

விருததம்.

சித்தருடநூல்களெல்லாமாய்ந்துதேர்ந்த
சிகாமணியாம் வீரமாமுனிவர்தாமும்
மெத்தவிதநோயாளர்பிழைக்கவேண்டி
மேன்மையுடன் ரசாயனத்தைப்புகன்றாரப்பா
புத்தியினல்யானறிந்தமட்டில்தானும்
புகன்றிட்டேன்பொன்போலயிந்தநூலை
வெத்திகொடிகட்டினதுபோலேயாகும்
வேதாந்தபெரியோர்க்குவுண்மைதானே. 1119

தானுதிதற்பரத்தைமனதிலெண்ணி
தழைக்கவேயேழுதிரம்பூசைப்பண்ணு
வீணனகாரியத்திற்பொருதவேண்டாம்
விருளகலவனுதினமுந்தபத்திற்நில்லு

மாஞரதன்மயக்கமதில்வீழ்ந்திடாமல்
மனதடக்கமாகவே தான்றுகிப்பீர்நன்ருய்
தேனைபரமபதந்தனையென்றேதான்
தேர்ந்துகொள்வீரெந்நாளுந்திறமையாமே. 1120

திரமையுடனிருப்பதற்குசொல்லக்கேளு
திரவியத்தால்பொய்சொல்லலாகாதப்பா
மிகுத்தகளவுவஞ்சஞ்சூதும்வாதும்
காகண்ணரச்சொல்லாமலிருக்கவேணும்
பேரதசியேழைமுதலானபேரை
பரிகாசஞ்செய்துமிகஅடிக்கவேண்டாம்
சரசவிளையாட்டதனல் பெரியோர்தம்மை
சஞ்சலங்கள்செய்யாமல்தனித்துநில்லே. 1121

நில்லென்ருல்வேதாந்தம் நிலைக்குமோசொல்
நினைவுகொண்டுகியானத்தில்நிற்கவேண்டும்
வில்லென்ருலறிவுதனிலேற்றிக்கொண்டு
விவேகமென்ற அம்பதினல் தொக்கவேண்டும்
சொல்லென்றபுத்திதனைபூட்டிக்கொண்டு
சொற்பெரியநாட்டத்தில்மனதைவைத்து
பல்லென்றபேர்களுடன்சேர்ந்திடாமல்
பயனறிந்துநல்லோர்போலிருப்பீர்தாமே. 1122

வீரமாமுனிவரியற்றிய

கடைசரக்கின்பாகம்-கொச்சகம்.

ஆடும்சரக்குகளில் ஆறுபத்துநால்சரக்கை
தேடும்சரக்கெனவேதேர்ந்துசொன்ஞர்மாதவர்கள்
பாடும்சரக்கிதுதான்பாகமிதுவெப்போதும்
நாடும்சரக்கறிந்துநாட்டிடுவீர்பண்டிதரே. 1123

கும்மிப்பாடல்.

பண்டிதரெல்லாம்வகமகிழக்கடை
தன்னிலேவிற்குஞ்சரக்கதனை.
தண்டமிழ்முத்தோர்ப்புகழ்ந்தேற்றகும்மி
பாடல்தனைசொல்வேன்ஞானப்பெண்ணே. 1124

சொல்லுமிவைதனிலீசாவுங்குணை
மாகடணைபுரிந்தேயிருக்க
நல்லுறவாகவேகாவில்நின்ருேதவும்
நற்கருணைசெய்வர்ஞானப்பெண்ணே. 1125

நற்கருணைப்பொருளானந்தமேநவ
சிவவமூர்தமுவாதிபரே
பொற்கருணைப்பொருளானதுணையென
போற்றியுணர்ந்திடு ஞானப்பெண்ணே. 1126

போற்றியேபோற்றி யிருபாதம்
வருளானந்தமங்களஞ்சீர்பெறவே
மாற்றிமையில்லா மகுத்தவதாய்நேர்
மாமணியேதிருஞானப்பெண்ணே. 1127

## முதலாவது சுக்கின்குணம்

உன்னியசுக்குமுதல் சரக்குஇதி
லுத்தமமானக் குணங்கேளீர்
பன்னியசர்வரோகமெல்லாந் தீரும்
பார்த்துவறிந்துக்கொள்ஞானப் பெண்ணே. 1128

## மிளகின்குணம்

பார்த்துயெடுத்திடு நல்மிளகுசுக
பாகவிதமதைக்கேள் மிகவே
கோர்த்துவிடுகின்றவாய்வதைத்தீர்க்குங்
குரியிதில்மெத்தவாம் ஞனப்பெண்ணே. 1129

## திப்பிலியின்குணம்

மெத்தவுநேத்தியதான திருநல்ல
மேன்மையுறு சுயதிப்பிலியும்
உற்றசிலேற்பனத்துக் காதியென்றே
வுண்மைத்தெளிந்திடு ஞானப்பெண்ணே. 1130

## மூலத்தின் குணம்

உண்மையதாகிய மூலமதுசுரந்
தன்னை யகற்றியே நன்மைதரும்
பண்மையீதென்று வுனக்குள்ளேத்தேர்ந்து
பண்டிதஞ்செய்குவீர் ஞானப்பெண்ணே. 1131

## திப்பிலியின் குணம்

செய்யபெலவாணதிப்பிலியுங்கன
சன்னியணுகிடா தேற்றிவிட
உய்யவிதுகலமே மிகுத்தநியாய
உச்சிதமாகுமாம் ஞானப்பெண்ணே. 1132

24

### செவியத்தின்குணம்.

உச்சிதமான செவியமதுதிமிர்
யூன்றிடாதே மிகுப்பாயிருக்கும்
கச்சிதமென்றப் புகழ்வாகியேநிதம்
கலவியில்நேர்ந்திரு ஞானப்பெண்ணே 1133

### சித்திரமூலத்தின் குணம்.

நேர்ந்ததோர் சித்திரமூலமதால்சுரம்
நோரகவோடிபதுக்கி விடும்
சேர்ந்தநேர்பாகத்தைக்கண்டுணர்க்துநன்மை
சிவனென்பிர்கனம் ஞானப்பெண்ணே 1137

### கரித்தகொடிவேலியின்குணம்

சிவனென்றே சொல்வர்தான்கரித்த
கொடிவேலிரசந்தனைகட்டிவிடும்
மூவரென்றே யுணராகபணிந்துக்கொள்
முற்றமமானந்தம் ஞானப்பெண்ணே 1138

### நற்சீரகக்குணம்.

ஆனந்தமாகிய சீரகத்தால்பித்தந்
தாவியசிறலடக்கிவிடும்
மோனந்தபாதத்தொழுதுநிற்கசுக
முற்றமமாகுமாம் ஞானப்பெண்ணே 1139

### கரியசீரகக் குணம்.

சுகமதாய் கரியசீரகந்தான் பொல்லா
பாண்டுகிறிமிகளற்றிடவே
தக்கவேபாட்டிலறிந்தபடியிதை
சாற்றினேன்சாற்றினேன் ஞானப்பெண்ணே 1140

### சதகுப்பியின் குணம்.

சாற்றிடுவேன் சதகுப்பிபெலன்றனை
சந்ததம்யாவா புகழ்ந்திடவே
மாற்றுமுதிர வாதமும்போமென்று
மகிழ்ந்துசொல்லுவாய் ஞானப்பெண்ணே 1141

### காட்டுச்சதகுப்பியின்குணம்.

சொல்லிடுங் கானகத்தின் சதகுப்பியால்
தூரவகண்டிடும் குட்டமதும்
செல்லிடும்பொல்லாக்கடிகள்விஷங்களும்
கெஞ்சிக்கண்டோடிடும் ஞானப்பெண்ணே 1142

## வெந்தையத்தின்குணம்.

ஓடிப்பதுங்கி கனலெரிவானதும்
ஓதுங்கிறுகிறப்பானதுவும்
தேடியெடுத்திடு வெந்தையமென்பதை
சீர்தருமாமிக ஞானப்பெண்ணே. 1143

## கொத்தமல்லியின்குணம்.

சீர்தருங்கொத்தமல்லியின் நேர்மையால்
சேர்ந்தசிலேற்பனத்தை யறுக்கும்
தேர்ந்துசுகந்தர வுண்டுபயற்சிசெய்
தென்புதருமிகஞானப் பெண்ணே 1144

## வசம்பின் குணம்.

தென்புள்ள நல்லவசம் பதனுல்மந்தஞ்
சேர்ந்தவிஷ முதலான தெல்லாம்
அன்புடன்நீங்கிக் குணமதுவாகுவாம்
ஆசித்துப்பார்த்துக்கொள் ஞானப்பெண்ணே 1145

## கடுக்காயின் குணம்.

கொள்கையுடனே கடுக்காயின்குண
மானதைநன்முகக்கேளுமிப்போ
விள்ளுமிதுதிரு ஆதிகற்பமென்றே
வேண்டிக்கொள் மிக்கவேஞானப்பெண்ணே 1146

## நெல்லிக்காயின் குணம்.

மிக்கவேநெல்லியின்வற்றலினல் ஊஷ்ணம்
மேலாகநின்றுவணுகாது
தக்கவேநியாயப்படி யிதைத்தேர்ந்துத்
தழைத்திடப்பேசுவோம் ஞானப்பெண்ணே 1147

## தாணிக்காயின் குணம்.

பேசுவோம் தாணிக்காயின் பெலத்தை
புகழ்பெறக்கேட்கும் சுவாசமதை
ஆசுகளற்றிட செய்யுமென்றேநிதம்
அய்யரைத்தோத்தரி ஞானப்பெண்ணே 1148

## கடுகின் குணம்.

அய்யரைவேண்டிப் பணிந்திடவேகுலை
நோயதற்கே கடுகேற்றதென்போம்
துய்யவேதாந்தம் படித்தவர்க்குநன்மை
தோற்றுதலாகுமாம் ஞானப்பெண்ணே 1149

## வில்வைப்பழத்தின் குணம்.

தோற்றியவில்லைவயி னேடதனல்குட்டம்
தோற்றுதிருக்குமெனப் புகன்றார்
சாற்றியதென்று நினைந்துதெரிந்திடு
சம்பிரமதாகும் ஞானப்பெண்ணே 1150

## வெண்கடுகின் குணம்.

ஆகும்வெண்மைகடு கானதற்குவெள்ளை
யாகியகுட்டமகலுமென்றே
பாகுடனேபெரியோர் களுரைத்தனர்
பண்பதைவுற்றிடு ஞானப்பெண்ணே 1151

## மஞ்சளின் குணம்.

பண்பதைசேட்டு வறிந்துசொல்லுமஞ்ச
ளானதுவிந்தை செய்மந்தமதை
உண்பதில்தீபனமுங் கொடுக்குமென
ரோதியுகந்திடு ஞானப்பெண்ணே 1152

## கடுகுரோகணியின் குணம்.

உகந்தரோகணியானதுதான் மலக்
கட்டதைநீக்கி சுகங்கொடுக்கும்
பகர்ந்திடயிதில்மெத்தப்பெருமையாம்
பாக்கியமென்பர்கள் ஞானப்பெண்ணே 1153

## மஞ்சிஷ்டியின் குணம்.

பாக்கியமானதோர் மஞ்சிஷ்டியினல்
பண்பதாகாத்தபித்தமதை
யோக்கியமாகவே தீர்க்குமென்றே முன்னே
ரோதினர்பாரிதை ஞானப்பெண்ணே 1154

## சிறுதேக்கின் குணம்.

பாரிதில்நல்ல பெலசரக்குஞ்சிறு
தேக்குவாதசுரம் போக்கிவிடும்
நேரிதிலாயந்து குடிப்பவர்க்குசுப
மாகுமாம்மெத்தவும் ஞானப்பெண்ணே 1155

## கிச்சிலிக்கிழங்கின் குணம்.

சுபமதாகிய கிச்சிலியின்கிழங்
கானதினல்தலைநோய்தனையே
அபமதானதைப் போக்கிவிடுமென்று
அன்போடறிவீர்கள் ஞானப்பெண்ணே 1156

## கடுக்காப்பூவின் குணம்.

அன்புள்ள சுற்கடகசிங்கியால் கடுப்
பானவதிசாரக்கட்டிவிடும்
துன்பமணுகாதிருக்கு மப்பாமேன்மை
சுத்தமனமுறும் ஞானப்பெண்ணே 1157

## அதிமதுரத்தின் குணம்-

மனதுக்கேற்நவதிமதுரம் தோஷ
வய்யததைநீக்கிப் பெலப்படுத்தும்
தனதிது வெகுவாசனையாகிய
தன்மையிது வல்லோ ஞானப்பெண்ணே 1158

## கார்போகரிசியின் குணம்.

வல்லமைபோன்றதோர் கார்போகுவிஷ
குட்டந்தனையே அகற்றிவிடும்
சொல்லறிதான தென்றேபுகல்வரிதின்
சூட்சத்தைப் பார்நிதம் ஞானப்பெண்ணே 1159

## அரத்தையின்குணம்.

நித்தஞ்சிறந்த வரத்தையினல்
மேலானசுவாசமுந்தான் றணியும்
உத்துத்தெளிந்துக் குடிப்பவர்க்குபொன்
மாமணியாகுமாம் ஞானப்பெண்ணே 1160

## வாய்விளங்கத்தின் குணம்.

பொன்மணிபோலே சிவந்திருக்கும் குண
மாகியவாய்விளங்கமதனல்
துன்னியகெட்டப் புழுக்கள் தனைநீக்கி
சுத்தமிருத்திடும் ஞானப்பெண்ணே. 1161

## வாலுளுவையின்குணம

சுத்தமதான வாலுளுவையினல்
சொக்கியகுட்டமகற்றிவிடும்
கர்த்தர் துணைநமக்கெப்போதுமுண்டு
காரியம்பார்த்துக்கொள் ஞானப்பெண்ணே. 1162

## சிறியவாலுளுவையின் குணம்.

ஞானத்திற்றேர்ந்த வர்த்தகங்களுக்கு-நல்ல
நாணயமாஞ்சிறு வாலுளுவை
தானத்திலுன்றிட காமசததுதனை
தப்பாமலகட்டிடும் ஞானப்பெண்ணே. 1163

## பெருங்காயத்தின்குணம்

கட்டிடுமென்ற சொல்தப்பாது-பெருங்
காயத்தினல் பலரோகமறும்
ஒட்டிடுமெப்பசி யுண்டாக்கிமெங்க
மோங்கிடாமல் செய்யும்ஞானப்பெண்ணே. 1164

## செங்கொட்டாடையின்குணம்

ஓங்குதலானதோர் செங்கொட்டைவிஷம்
ஓடிடவேபலன்றுன் குடுக்கும்
நீங்கிடுமேகரிகுட்ட விரணமும்
நேத்தியதாமிது ஞானப்பெண்ணே. 1165

## அரத்தையின்குணம்

விரணம்போக்கிடுமா வரத்தை
வியலாகியவஸ்த்தி சுரந்தீர்க்கும்
சுரணமென்றேபிசைந்து நிற்பீர்யிந்த
சாதனபண்மையாம் ஞானப்பெண்ணே. 1166

## தாளிசைப்பத்திரியின்குணம்

பன்மைமிகுத்திடும் தாளிசைபத்திரி
பற்றியமேலிளைப்பு விஷமும்
புன்குணமான சுவாசசிலேநபனம்
புண்கள்தினவுபோம் ஞானப்பெண்ணே. 1167

## கிரும்பின்குணம்

தினவுபோகும் கிரும்பதனல்-சுரம்
சன்னிதோஷ பித்தசாயல்மூதல
மனதிற்சேர்க்க விகலுமென்றேசொல்
மங்களமாமிகும் ஞானப்பெண்ணே. 1168

## சிறுநாகப்பூவின்குணம்.

மங்களமானசிறுநாகப்பு பெண்கள்
மாயவிதகுண மோகமதை
இங்கிதமாகவேதீர்க்குமென்றேசெய
மாகவேசொல்லும்வாம் ஞானப்பெண்ணே. 1169

## சடாமாஞ்சியின்குணம்

சொல்லிடுவேன் சடாமாஞ்சியினல்கன
மேகத்தைநீக்கிப் புகழ்படுத்தும்
எல்லையிலுள்ள பிணியதற்கேற்றதோர்
யேற்கையையுற்றிடு ஞானப்பெண்ணே. 1170

### தனகெந்தமஞ்சள் குணம்

யேற்கைதாண தோர்கெந்தமஞ்சளினல்
யேப்க்கும் நீர்பாச்சலே கட்டிவிடும்
யேற்கையிதென்னமா பெரியோர் குணம்
பேர்பெறசொன்னர்கள் ஞானப்பெண்ணே. 1171

### கோஷ்டத்தின் குணம்

சொன்ன முறைகோஷ்டமந்தமும் சோபத்தை
சுந்தரம்போலவே தீர்க்குமப்பா
நன்முறையாமெனசூக்திரத்திலுரை
நட்டினர்மிக்கவே ஞானப்பெண்ணே. 1172

### குக்கிலத்தின் குணம்

சூத்திரமானக்குக்கில் தனக்கேதான்
சொல்லாமல்நீங்கிடும்சூலையது
சாஸ்திரக்கைபாகமிவ்விதமென்றேதான்
சந்ததமேற்று வோம்ஞானப்பெண்ணே. 1173

### குந்திரிக்கத்தின் குணம்

சந்ததமும் நிறையானகுந்திரிக்கந்தன்னல்
தலையீனமும்பீனிசம்போம்
விந்தையதாகவறிந்துசெய்தேற்றிட
வினைப்பலன்றரும்ஞானப்பெண்ணே. 1174

### சிவதையின்குணம்

தருமமாகச்சிவதையினல்
நீரானபிர்மியத்தைத் தீர்க்கும்
அருமையாகசிறந்துக்கொண்டாய்ந்திட
அம்மொழிலாகுமாம்ஞானப்பெண்ணே. 1175

### கஸ்தூரியின்குணம்

அம்பொழிலாகியகஸ்தூரிதன்னல்
ஆனந்தராஜவசிகரமாம்
சம்பிரமெனவேகொண்டாடியுகந்திட
சாட்சியிது தானே ஞானப்பெண்ணே. 1176

### வகிலின்குணம்

சாட்சியதான வகிலின்றனக்கேதான்
சாராதுவாதமிகுத்தேதான்
காட்சியதாகபராபரந் தன்னையே
கண்ணெனபோற்றுவாய் ஞானப்பெண்ணே. 1177

## கோரோசனத்தின்குணம்

கண்ணலங்காரமதான திருக்கோரோசனம்
சன்னிவிரணமதை
திண்ணமிருத்ததெல்லா நீக்குவுண்மை
சீர்த்துவமாகுமாம் ஞானப்பெண்ணே. 1178

## குங்குமப்பூவின்குணம்

சீர்த்துவமாகிய குங்குமப்பூவினல்
சேர்ந்தசிரசில் நின்றவாய்வை
தீர்த்துசுகந்தரும் மேன்மையதாகவே
தென்புடனுய்ந்துக்கொள் ஞானப்பெண்ணே. 1179

## சாதிக்காயின்குணம்

ஆய்ந்துக்கொள்வாய் திருசாதிக்காயினபெல
னைதையின்னதெனவுணர்ந்து
தோய்ந்துநீபார்க்கவே தாதுவிர்த்தியென்று
சொல்லியேசெய்குவோம் ஞானப்பெண்ணே, 1180

## சந்தனத்தின்குணம்

விர்த்தியதாகிய சந்தனமுஷ்ணத்தை
விட்டில்வுறும் பேர்பெறவே
சாத்திரமாக விங்ஙாபனமாய்நீங்கள்
சோதித்துபாருங்கள் ஞானப்பெண்ணே. 1181

## செவந்தசந்தனத்தின்குணம்

பாருங்கள்நேற்சிவப்பாகிய சந்தனம்
பற்றியதாகத்தைநீக்கிவிடும்
நெருங்கவேதந்தனைப் படித்துசத்திய
நித்தியரைற்றொழு-ஞானப்பெண்ணே. 1182

## செவ்வள்ளியின்குணம்

சத்துவமாகிய செவ்வள்ளியின் குணங்
தப்பாமல் தீர்க்கும் சுவாசமதை
முத்துமுதலெனக்கொண்டாடிசுக
மாகவேபேசுவோம் ஞானப்பெண்ணே. 1183

## வேறு விருத்தம்.

சுகமாகயிவ்விதத்தின் மருந்தில்மெத்த
சுகுணமுடன் நோய்கள்தனை தீர்க்குமப்பா
அகமகிழ இன்னம் வெகுமூலியுண்டு
அறிந்துசெயயில் பிணியாளர்கேற்றதென்போம்

மிகமீறிவாதுதற்கஞ் செய்திடாமல்
மேலானகடவுளுட சித்தமென்றே
தகதேஙிறைநதே யிருக்குஞ்சாத்திரத்தைப்பார்த்து
தபமீதிலிருந்தவர்க்கே இவ்விதமெய்யாமே. 1184

இவ்விதமாய்ப் பார்த்தறிந்து கடசரக்கினத்தை
இணையுடனே பார்த்தறிந்து கூட்டவேணும்
செவ்வியதோர் தேகத்தின்குணங்களாயந்து
திரமாகப்பண்டிதத்தை்செய்தால்நன்று
ஒவ்வியேநாள்பழக்கமாகவேதான்
உத்தியுடன் சாத்திரத்தில்தேறவேணும்
கல்வியநல்ராசாங்க நூலைப்பார்த்துக்
கதித்துகொண்டால் கனகமென்ற சார்புதானே. 1175

## கூணக்கண்ணரியற்றிய

### லவணகுணதி எண்ணெய்-விருத்தம்.

என்றதொரு லவணகுணதியெண்ணெயதன்னை
யியற்றுகிறேன் வெகுநோய்கள் தீர்வதற்கு
நன்றெனவேசெய்வதற்கு லகுவாமப்பா
நயன்றமொழிதவராது யிந்தமார்க்கம்
கன்றிதங்களில்லாமல் தாதரங்களாய்ந்து
களிக்கவேப்பார்த்தவர்க்குப் புண்யமாகும்
குன்றிக்கடுகின் விசுவாசமிருந்துதானல்
குணம்பெறலாம் யெப்போதும்விழிக்கலாமே. 1186

விழிநிகரானதொரு லவணகுணதி யெண்ணெய்
விவரமுடன் சொல்லுகிறேன்கேளுகேளு
தொழிலாகச்செய்யவென்றால் மறந்திடாமல்
தூயவர்தன்பதம் பணிந்துசெய்வீராகில்
அழியாதவஸ்துவென்ற கிருபையாலே
அம்மம்மாவெகுநோய்கள் தீர்ந்துபோகும்
மொழிந்தபடி பார்த்தவர்க்குசுகங்கொடுக்கும்
முயற்சியுடன் விம்புகிறேன் அறிந்துபாரே 1187

அறிந்தபடிதேங்காய்ப்பால் படியொன்றப்பா
அன்பான கல்லுப்புவளையலுப்பு
செறிந்ததொரு பொட்டிலுப்புயிந்துப்போடு
செழிமையுள்ள சவுக்காரம் அக்கிருகாரம்
முறிந்துவிடவாளமதை சுத்திசெய்
முயற்சியுடன் மலகிதுவுமொன்றதாகும்

பறுந்தவிதவிளக்கெண்ணெய் லரைப்படியில்நீதான்
பண்புடனே சரக்கதனை வரைத்துகொட்டே 1188

லவணங்கள்-வகைக்கோர்பலம் அரை நவாச்சாரம்பலம்-வ-கூட்டவும்.

கூட்டுகிறபோதல்லோ தேங்காய்ப்பாலை
குணமாகவூற்றியே கலக்கிக்கொண்டு
நாட்டுவாயடுப்பில்வைத்துயெரித்துமெள்ள
நயன்றபடி புனல்வற்றம் பாருபாரு
தாட்டிகமாய்க் கடுகதுவும்திரண்டுகீழாம்
தளதளப்பாய் யெண்ணெயதுமேலேநிற்கும்
காட்டிடாதேகனலதான் மிச்சமாக
கபளித்துபொங்கிவிழும் தெரிந்திடாயே. 1189

பொங்கிவிழாமல படிக்கிப்பதனமாகப்
புகழ்ச்சியுடன் முணிறக்கிஆறவைத்து
இங்கிதமாய்மெதுவாக யிருத்துவேறே
இசையானபீங்கானிலடைத்துக்கொண்டு
சங்கையுடன நமைப்படைத்தகர்தாவின் பாதம்
சுகுணமுடன் தோத்தரித்துத் தூபங்காட்டி
மங்கையர்க்கும் புருடருக்குமிருக்கின்ற
மகாபெரியநோய்தனக்குக் கொடுப்பீர்தானே. 1190

கொடுத்துவிடு சூதகத்தின் வாய்வுக்கப்பா
குணமாகமூன்றுநாள் தஞ்சைகாசாளவதாகும்
தொடுத்துவிடுகுன்மமொன்றே நோய்களுக்கு
துயரகலவரைமண்டலம் யிருநேரந்தான்
சடுத்தமுள்ள வயிற்றுவலிக்காகநீயும்
சமர்த்தாகயேழுநாள் குடுக்கத்தீரும்
கடுத்தமொரு பக்கவலிசூலைகைகால
கனமானபிடிப்புதனக் கேழுநாளே. 1191

பிடித்தப்பொல்லா வினைகளெல்லாம்நீங்கிப்போகும்
பொல்லாதவெள்ளை தனக்கொரு நாசிபடையதாகும்
தடித்தபுண்கள் மேகமென்றதெல்லாம் போகும்
தவாமல்கிதாணித்துச் செய்யநன்று
குடித்தமொரு நோயாளர் புழைப்பாரப்பா
குறமமென்று மணுகாதுத் தெரிந்தபேர்க்கு
முடித்தபொருளிது சுகிர்தஅவிழ்தமென்று
முண்மையுடன் பாகவிதஞ் செய்வீர்தாமே 1182

குன்மகட்டிகறைந்துபோம் வெள்ளைக்கிவொருகாசிடைக்குடிக்கவும உப்புவறுத்துக்கூட்டவும் இச்சாபத்தியம்

## ஸ்நானஞ்செய்ய பாகநிதானம்

செய்தயிந்த பெண்ணெய்தனைக் குடித்தபின்பு
சேர்க்கையால் மறுபத்தியமாயிருக்கச்சொல்லு
உய்தலுறும் நல்லவிழ்தமானதாலேஉத்தமமாய்
வுண்மையுடன் விளம்பினேன்யான்
அய்யருடக்கிருபையிது யிருக்கும்போது
ஆனந்தமகிழ்ச்சியென் போமன்பதாக
தொய்யாமல்விளக்கெண்ணெய் சீயக்காயிட்டு
சீக்கிரமாய் வெந்நீரால் ஸ்நானஞ்செய்யே 1193

மறுபத்தியம் எண்ணெய்குடித்தாளுக்குச்சரிக்கி சரியாய் யிருந்து தலைமுழுகவும். நன்றாப்பத்தியம் காக்கவும்.

கியாழம்.

வெந்நீரில்ஸ்நானமதுசெய்தபின்பு
விளம்புகிறேன் யின்னமொருபாகங்கேளு
நந்யமாம்வெந்தயமும் அருகன்வேர்தான்
நலமாகவோர்பிடிதான் சட்டியினிலிட்டு
பந்நீர்போல் சுத்தசலம் விட்டுக்காய்ச்சி
பாராமலிறக்கிவடி கட்டியேதான்
முந்நீரில்சர்க்கரைதான் பலமதிட்டு
மூன்றுநாள் குடித்துவிடமேன்மைதானே 1194

மேன்மையுடன் குடிப்பவர்க்குக்குன்மம்போகும்
மிகவுமிந்தஅவிழ்தமதால் செவ்வையாகும்
ஆண்மையென்ற வழிப்பாட்டில் நின்றிடாமல்
அகலவிடுபொய்மாய்கை அலட்டல்தன்னை
வீண்புறட்டில்சிக்காதேமெலிந்திடாதே
விவேகநெறிகுன்றாதேமெய்வழியில்நில்லு

கொச்சகம்.

காண்குகின்ற விதங்களெல்லா மறிந்துக்கொண்டு
கருத்தில்தெரிந்தாராய்ந்தோர் பெரியோர்தானே ()
பெரியோர்கள் பாதமதைபோர்பெறவே தொத்தரித்து
சிறியோர்க்குநல்லபுத்தி செப்புவீர்கலன்பர்களே
அறியாதவீணருடன் ஆசைவைத்துப்பேசாமல்
திரிலோக நாதர்பதம்தினந்தொழுவோமென்றதுவே ()

ஈடேற்றம் வேறுவிருத்தம்.

என்றவிதமாகவேதான் சொல்லக்கேளு
எம்பிரான்றுட்துதித்தப் போகளெல்லாம்

ஒன்றதுவும் குறைகளடராதுபாரு
ஒருவரல்லால் வேறுமுண்டோநமைமீட்டேற்ற
நன்றதுவென்றிருதயத்தில்நாட்டினேர்க்கு
நமன்விலகிப்போவதன்றி நியாயமுண்டோ
அன்றுமின்றும் அழியாதசுரூபஞான
அண்ணலென மனதில்வைத்துப் பணிகுவோமே ()

## டமானந்தரியற்றிய.

### பூவரசங்காய் எண்ணெய்விருத்தம்.

பணிவானபூவரசன்காய் பலந்தான்பத்து
பாங்கானபட்டையது பலந்தானைந்து
அணியானகரியசீரகம் பலந்தான்மூன்று
அறியதிருபரங்கிப்பட்டை பலந்தான்ரெண்டு
துணிவானகஸ்தூரிமஞ்சள் பலந்தானென்று
துணையானசங்கன்வேர் பலந்தானென்று
கணியானசதகுப்பிப் பலமுங்கால்தான்
கணக்குடனேயெடுத்தபின் போர்பாகங்கேளே ()

பாகமாம்கடுகுரோகணி பலந்தான்ரெண்டு
பண்பானநுணப்பட்டை பலந்தான்ரெண்டு
யோகமாப் வாதநாராயுணன் பட்டைதானும்
வுசிதமாய்ரெண்டுபல மிகவேசேர்ப்பாய்
ஆகவேவாலுளுவை வோமஞ்சுக்கு
அன்பானதிப்பிலியு முளகறணைபட்டை
யேகமாம்நால்சரக்கு ஓர்களஞ்சியாக
யெடுத்துமெள்ள இடித்ததனை ஒன்றுகக்கூட்டே 1199

கூட்டியேபாண்டத்திலிதனைப்போட்டு
குரிப்புடனே விளக்கெண்ணெய் வோர்படிதான்விட்டு
ஆட்டியேகலக்கியேதான் அடுப்பிலேற்றி
அடவுடனேத் தீமூட்டியெரிக்கும்போது
நாட்டிவிடுநேர்வாளம் சுத்தியாக்கி
நலமாகவரைப்பலந்தா னதனிற்போடு
பூட்டியேநன்றுகவெரித்துவாற்றி
பொங்கமுடன்பதம்பார்த்து இறக்கிடாயே 1200

பதம்பார்த்துஇறக்கிவைத்து கருணம்பரியேயென்று
பரிவுடனே மாதாவே தாயே யென்று
நிதம்பார்த்துக்காக்குகின்ற விமலியென்று
நின்பாதந் துணையெனவே தோத்தரித்து

அதமானநோயனைத்தும் நீக்குமென்று
அடவுடனே பூசைசெய்து தூபங்காட்டி
சதகோடிபவப்பிழைகள் செய்திட்டாலும்
சர்வகிர்பாகரியே பொறுத்தருள் செய்வாயென்னே ()

எண்ணெய்தனைப்பீங்கானிலடைத்துக்கொண்டு
யேற்கனவேசிறுகரண்டியளவதாக
கண்ணெனவே வைந்துநாள்குடிக்கச்சொல்லு
கனத்தடடைமெய்யூரல் தடிப்புப்பாண்டும்
திண்ணமுள்ளமேகவெட்டை புண்புரைகள்மற்ற
தினவுபலகைகாலின் குடச்சல்வெள்ளை
அண்ணலினருளதனுல் நீங்கிப்போகும்
அன்புடனே வோர்மண்டலத்தில் கலும்பாரே ()

அகலுமப்பா கருமேகம்புடைகள்வெப்பு
அனந்தநோய்திருமப்பா வறிந்தபார்க்க
இகலுமப்பா சொன்னதிந்தப் பிணிகளெல்லாம்
இசைவுடனே தீருமென்றுப் பெரியோர்கள்தானும்
சுகம்பெறவே பண்டிதர்கள் செய்யவேதான்
சூட்சமுள்ளவித்தையிது யெனவேசொன்னர்
மிகவிதனைவாராய்ந்துக் குடுக்கமேலாய்
மினிதநிறைபேர் சிறந்துவிருக்கலாமே 1202

எண்ணெய்காயச்சும்போது நீல அவுரிவேர் பலம் வொன்று அரைத்துப்போடவும்.

பத்தியம்.

பேர்சிறந்த முருங்கைக்காய் வெண்டைக்காயாகும்
பிறியமுள்ளகத்தரியின் பிஞ்சதாகும்
நேர்சிறந்தசிறுபயறுத் துவரையாகும்
நிதைறந்தவொரு பாலாகும்நெய்புமாகும்
ஏர்சிறந்தஅசனமிட்டு வெந்நீர்கொள்ள
யியல்புடனே தீருமப்பாநோய்களெல்லாம்
ஊர்சிறந்தஞானநெறியோர்கள் சொன்ன
உத்தமச்சொற்றவாராது வுண்மைதான 1203

கடும்பத்தியம் வைத்தால் சாதத்துடன் உப்புவறுத்துக் கூட்டவும் பயறு மூளகு வறுத்துப்பு சுண்டாங்கி சேர்த்துக் கொள்ளவும்.

## சிவவாக்கியரியற்றிய

### அவத்தியெண்ணெய்.

தவராதசொல்லிதுதான் வுகந்துபாரு
தயையான அவத்திச்சாறுபடியொன்றப்பா

கவரங்னக்குட்டித்தக்காளிச் சாறுபடிகாலாகும்
கலங்காமல் கனக்குடனே யெடுத்துக்கொள்ளு
பவமாறசித்தாமணக் கெண்ணெயப்பா
பக்குவமாசவேதான் படியறையதாகும்
துவராமல்கலந்துவொரு பாண்டத்திட்டு
துயரகலசாதிக்காய் அதிவிடையந்தானே 1204

அதிவிடையமாசிக்காய் வகைக்கோர்காசு
அடவுடனே பொடிபண்ணிக் கலந்தபின்பு
துதிபெறவேபதனமதா யெரித்துவாங்கு
துரிதமுடனெடுக்காதே நீர்வற்றப்பாரு
மதியுடனேகடுகதுவும் கீழேநிற்கும்
மார்க்கமதைக் கண்டறிந்துத் தெளியும்போது
சதியகலயிறக்கியேதான் ஆரவைத்து
சமர்த்தாகபீங்கானில் வைத்திடாயே 1205

வைத்தேதான் அயயர்பதம் நினைத்துகொண்டு
வயணமுடன் மூலரெத்தம்வாளமூலத்துக்கு
உத்தியுடன் வொருகளஞ்சிக் குடுப்பீராகில்
வுயர்ந்துவரும் ரெத்தமதையகலந்தள்ளும்
வித்தையுள்ள சீதமதையகலற்றும்பாரு
வினவுடனே நாலேழில் குணமதாகும்
பத்தியுடன் பார்த்தறிந்தால் பண்டிதந்தான்சித்தி
பண்புடனே லகுவாகச்செய்குவீரே 1206

லகுவாகும் மேகவனல்பித்தந்தன்னை
லாகிரியின்மயக்கமதைக் தீர்ததுநிற்கும்
சொகுசானயெண்ணெய் விதப்பெருமைசொல்ல
சொற்கடங்கா ஆச்சரியவித்தையாகும்
வெகுபேர்க்கு வுதவுமப்பா சிறுகுழந்தைக்காகும்
வேண்டியபோல்த தொடர்ந்துசெய்யநன்று
மிகுவாயிச்சாவின் பத்தியமதாகவுண்டு
மேன்மைபெறஸ் நானமதுசெய்வீர்தாமே 1207

எண்ணெய் குடித்தபிற்பாடு மூன்றுநாளைக்கிப் பின்பு நல்லெண்ணெய் முளகிட்டு கொதிக்கவைத்து சிரசில்தேய்த்து சீயக்காய்தேய்த்து வெந்நீரால் முழுகவும்.

அசுவனித்தேவரியற்றிய-குமறியெண்ணெய்

தாமதங்களில்லாமல் துரிதமாக
தருணமதிற் செய்வதற்கேபாகங்கேளு
நாமறிந்தபடியேதான் புகல்வோமப்பா
நலம்பெறவே கற்றாழைச் சோறெடுத்துக்கொண்டு

பூமலர்போல செய்வதற்கு தண்ணீர்விட்டு
புனிதமுறக்கழுவி விடுபனிரெண்டு திரமுப்பா
சோமநிறைபோலெடுத்துப் பாண்டத்திட்டு
சுகிர்தமுடன் வெங்காயம் பலமைந்தாமே 1208

கற்றாழைச்சோறு பலம் பத்து

பலம்பத்துசிறிதாகக் கொய்துபோடு
பரிவானசித்தமாணக்கெண்ணெய்படியதாமே
கலனுறசேர்த்துமிக கெரிக்கும்போது
கனத்தமொரு வெந்தயந்தான் விராகனென்று
பெலனனசாதிக்காய் அதிமதுரந்தானும்
பேர்பெறவேகளஞ்சி யொன்றுகணக்கதாக
நலமாகப் பொடியாக்கி கூடக்கூட்டி
நாடியேயெரித்து வடித்திருப்பீர்தானே 1209

இருத்துவொரு பீங்கானில்வைத்துக்கொண்டு
யெம்பிரான்றாட்பணிந்து தஞ்சைநாசு
நிறுத்திதனைக்குடித்திடவே மூலரத்தம்
நெடுநாளாய் நிற்குகின்ற கனல்வேகங்கள்
பெருத்தவித நோய்களெல்லாந் தீரும்தீரும்
பிறியமாய்ப்பார்த்தறிந்து செய்வீரப்பா
திருந்மவிதமொருவிதமாய்ப் பண்டிதத்தைச்செய்ய
தோஷவினையணுகாது தேர்ந்துகாணே 1210

தேர்ந்தவிதக்குணங்கண்டு கொடுப்பீராகில்
தேர்ந்தமுள்ள நோய்களெல்லாந் தீருமப்பா
சேர்ந்தனகல் தொடராதுநெடுநாள்கொண்ட
செவ்வையில்வாவெள்ளை சுருக்கதனைமாற்றும்
கூர்ந்தவிதப்பாகமதை அறிந்துசெய்தால்
கொடுமையுள்ள பிணிகளெல்லாமாறிப்போகும்
நேர்ந்தயிந்தசொல்லதனை மறந்திடாமல்
நிதானித்துத்தொழில் முடித்தால்நிசமதாமே 1211

முடித்தயிந்தபாகமதைப்பார்த்து யேதோ
முன்னுரைததார் பின்னுரைத்தாரெனவே யோதி
தடித்தமொழிபேசாமல் தெய்வசித்தந்
தானெனவேமனம் பொருதிவுறுதியாகி
அடித்தபுனலொன்றித் தவாறுக்கேர்க்க
அம்மம்மாசேர்க்கையற அமுர்தமாகும்
படித்ததனைசெய்துகொண்டு பண்டிதத்தைச்செய்யப்
பாருலகில் பெரியகுணரென்பர்காணே 1212

காணவேதான் யழிப்பதனை யகலத்தள்ளு
சபடமுள்ள நெஞ்சமதை நீக்கிநில்லு
தோணவேபத்தியமாயிருந்து வுண்ணு
தோற்றிய தோர் ஸ்நானமது வெந்நீரில்பண்ணு
வேணபடிமீனினங்கள் கருவாடாகா
விவேகமாய்நல்லபொருள பார்த்துவுண்ணு
ஊணவேகறிபொயில்பார்த்துச்சேர்த்து
வொழுங்குடனே கொணடுமிஸ் நானஞ்செய்யே ()

செய்வித்தில் குறைவாகச் செய்யவேண்டாம்
சின்மயததின் நாடடமதால் நோய்கள்தீரும்
பொய்விதசதால் யெடுத்தமதொழில் பலிதமாகா
பூவுலகில்மெய்யான வார்த்தைதசொல்லி
உய்யவழிதேடிநின்றால் நீடிப்பாகும்
உத்தமநற்கருணையது யுசிதமாகும்
பெய்யுகின்ற மழையதனல் சர்வசெந்தும்
பிழைக்கவழிக் கிருபைவைத்தப் பெருமைகேளே ()

பெருமையுள்ள சிவமயப்பொருள் தானென்று
பிரியமதாய் நாம்பிழைக்கச் செய்தநன்றி
கருமமெல்லா நீககிடவேசுவாமியென்று
களிப்புடனேற்றுெழுது கொண்டால் மோட்சானந்தம்
வருமையுடன் மனமதனைத் திருத்தவேணும்
வொழுஙகுடனே நடபபதற்குத் பதத்தில்புக்கி
திருநவமேமெஞ்ஞானக் கடவுளென்றே
தினமுனக்குள் தெளிதலுறசெப்புவாயே 1215

செப்புகின்ற மொழிதெரிந்துப் பெரியோராலே
செவ்வையுணரான வழிகேட்டுணர்ந்துவார்கள்
ஒப்புதமையில்லாத தேயவஞான
சூதரியவார்த்தைதனை வுணர்த்துவார்கள்
தப்புமொழிபேசவில்லை நீயாரென்று
தன்னிலே யெண்ணிமிகநினைத்துப்பார்த்து
எப்போதும் நிறைந்தவர்மேல் நாட்டம்வைத்து
ஈடேற்றநாதனடி வணங்குவாயே 1216

வணக்கமுள்ள ஞானத்தின் முயற்சிதன்னல்
வளமான அட்சரங்களறியவேணும்
இணக்கமுள்ள யெழுத்துமுதல்காரணத்தால்
இசைந்ததொரு ரோகங்கள்நீக்கிப்போம்
மணக்கவேதான் மனதனைமாற்றிடாமல
மாவிதமாய் செபதனல் தீர்க்கம்பாகு

குணங்குடியாய் நின்றசுயமயமேயென்று
குறிப்புடனேசெபத்தில் நின்றுகைகூப்புவீரே
நின்றிடவேமாய் கையது நிலைக்கொட்டாது
நீணிலத்தில் சுழன்று வரும் மயக்கவேதை
குன்றிடவும் செய்யாமல் தியானமோதி
குறிப்புடனே நின்றிடவேவாறிப்போகும்
ஒன்றிவரும் பலவியாயகுணகுணங்கள்
வொடுங்காத சித்துவிதபேதாபேதம்
கன்றிமாய்பராபரத்தாய் சொன்னமார்க்கம்
கற்பகம்போல் தெளிந்தவர்க்கு கனகந்தானே 1217

கனமான வார்த்தைதன்னை யுணர்ந்துகொண்டால்
களிப்பாகும் வித்தைமுதலான தெல்லாம்
வனமாக யுட்புகுந்துப் பார்க்கப்பார்க்க
வளமையெல்லாம் தோற்றிவிக்கும்வழிப்பதாக
தனமாகவேண்டியேதான் நிற்பாயாகில்
தராதலத்தில் நீயுமொரு பெரியோரென்பர்
சினமாய்கையிகழ்ந்தவர்க்கு சுகிர்தநன்மை
சீர்பெருகும் வகையான திறமைதானே 1218

ஜனமகா முனிவரியற்றிய

பிர்மதண்டி யெண்ணெய்

வகையானயெண்ணெய்தனை புகலக்கேளு
வனந்த பிணிதீர்வதற்கு சூட்சயாகும்
துகையான பிர்மதண்டுச்சமூலமாக
துரிதமாதாயிடித்த சாறுபடியாதொன்று
நகையாதேவெந்தையமும் நற்சீரகந்தான்
நலம்பெறவே அதிமதூரம் பலமுமைந்து
பகையாறயிடித்து நன்றாய்க்கலந்தபின்னர்
பகர்வுடனே விளக்கெண்ணெய்ச் சேர்ப்பீர்தானே 1219

எண்ணெயதுமுக்கால்தான் படியதாகும்
யேற்கனவே மிகக்கூட்டியடுப்பிலேற்றி
திண்ணமது தீர்ந்திடவே தீபம்போலே
தீரக்கமதாயெரித்திறக்கிப் புனற்றங்காமல்
வண்ணமுறவே யெடுத்துபிரித்தோ பீங்கான்
வகையானப் பாண்டத்திலூற்றியேதான
அண்ணலெனமனதில் வைத்துப்பிணியாளருக்கு
அடவுடனே சிறுகரண்டி யளவதாமே 1220

அளவெடைதான் கொடுத்திடவே யிதில்கேட்குகின்ற
அடங்காதகைகாலின் பிடிப்புநோய்கள்
தளம்பிநிற்கும் வாதமொடு மேகவெள்ளை
தயங்கியநோய்தங்காமல் நீங்கிப்போகும்
குளம்பியது மேற்கொண்டுயேறிடாது
குணமான ஆசானுலறிந்தவித்தை
களங்கமறுந்தேகத்தின் பிணியைமாற்றி
கனத்தயிந்த வியாதியெல்லாம்போகுந்தானே 1221

தானென்ற மூலியிது ரெனத்தையாற்றும்
தப்பாது தப்பாது பிடிப்பெனத்தும் போகும்
நானென்றுபேசுவதேன் பெரியோர்சொல்லால்
நானறிந்தவிதப்படியா மெனவேசொன்னேன்
யேனென்ற சொல்லதுபோல் பேசுகின்ற
யிசைவானமூலியென செப்பலாகும்
கானென்றவரிசையுடன் செய்தபேர்க்கு
கருதியசொற்றவராயல் நடக்குந்தானே 1222

நடத்தினதோர்யெண்ணயினுல் பெலமதாக
நன்றாகபேதித்து நோயைத்தீர்க்கும்
சடத்தினிலே நாள்சென்றுயிருக்கின்ற
சலுப்பானவியாதிதனைக் கண்டித்தாற்றும்
படத்தினிலே யெழுதிவைத்த பன்மைப்போலே
மருவமதாய் செப்புது பாரிந்தநூலில்
இடத்தையறிந்தே யுணர்ந்சால் விண்டு நிற்கும்
இயல்பான தொழிலறிவின் மார்கந்தானே 1223

மார்க்கமுள்ள சாத்திரத்தை படித்தபேர்கள்
மனதுகந்துத் தேர்ந்துநின்று மகிழ்வாய் செய்வார்
யேர்க்கையுள்ள விலக்கணமாய் மருந்திசைத்து
யேற்றிடவே கொண்ணதனுலாபமென்ன
தீர்க்கமுடன் வெளிப்படையயிருந்தால் நன்றாய்
செய்வதற்குலகுளரகும் செழிப்பதாகும்
ஆர்க்குமிது வுதவுகின்ற வாறுக்கொக்க
அறிந்து தொழிலேற்றுவது அதீந்தானே 1224

பத்தியம்

எற்றியதோரெண்ணெய் விதப்பத்தியத்தைக்கேளு
எழிலான வாட்டிரைச்சி துவரையாகும்
ஆற்றியதோர் சிறுபயறு வுள்ளானுகும்
அன்பான கத்திரிக்காய் பிஞ்சதாகும்

மாற்றியதோர் வெண்டக்காய் பிஞ்சிதானும்
 மனமறியமிளகின்றானிட்டுப் புசிக்கலாகும்
சற்றியதோர் அரைக்கீரையுண்ணலாகும்
 சாதமதில் பாலிட்டுவருந்தலாமே 1225

வெள்ளைப்பூண்டு-கடுகு-தள்ளவும்-புளியை சுட்டு வுப்புவறுத்துக் கூட்டவும்.

அருந்தினவர் தங்களுக்குச் சொன்னநோய்கள்
 அனுகாதுக்கடும்பத்தியமா யிருங்கால்நன்று
திருந்தவேதானந்தப்படியே ஆயிஞ்சொல்லல்
 திறந்துவிடே னெழியாமல் மறைந்திடாமல்
மருந்துவகையானதிலே யிதுவோர்மூலி
 மகாபெரியோர்ப் பார்த்துணர்ந்த வித்தையப்பா
பெருந்தபத்தென்றேதனைவராய்ந்து மேலாய்
 பேசினதென்றே வுனக்குள் பேணிப்பாரே 1226

## இதற்கு ஸ்நானஞ்செய்ய அலங்கிர்தயெண்ணெய்.

பேணியேவிளம்புகிறேன் ஆதண்டைவேரும்
 பிறியமுள்ளபட்டையொடு நன்னாரிவேரும்
ஊனியேசடாமாஞ்சி விலவைவேரும்
 உண்மையுடன்முனெடுப்பாய் பலம்ரெண்டாக
ஆணியாம்லரசிவூட்டு யிடித்துநன்றாய்
 அகண்டவொரு பாண்டத்திற் போட்டுக்கொண்டு
காணியாம்யெள்ளெண்ணெய் வறைப்படிதான்விட்டு
 கவனமதா யெரித்திறக்கிச் சாரம்போடே 1227

சாரமதுவொருகளஞ்சிப் போடித்துக்கூட்டு
 சபாசெனவே ஆயிபதம் பூசித்தேதான்
காரமுள்ளதேகமிலே யறிந்துபார்த்துத்
 கருணையுடன்றலே முழுகச்சொல்லுசொல்லு
தீரமுடன்சிறுபயறு சீயக்காய்தேய்த்து
 செழிக்கவேவெந்நீரால் ஸ்நானமாக்கி
பாரமில்லா ஆட்டிரைச்சி வற்றல்கூட்டி
 பகர்வுடனே புசித்திடவே அதிவிதமுமாமே 1228

கியாழம்.

புசித்தபின்போர் பாகமதைப்புகலக்கேளு
 பேர்பெரிய முளசதுதான் பலந்தானென்று
சுக்கிரத்தின்சீரகமும் பலமுங்காலதான்
 சுருக்காகக் கியாழாமிட்டுக் குடிக்கச்சொல்லு

வசிகரமருந்தினு லெடுத்தவேசம
வணங்கியேதேகமது நிறையதாகும்
பசியெடுக்கும் கடப்பதற்குமி பதாகும்
பண்புடனே செய்தொழின்பாகந்தானே 1229

ஸ்நானஞ்செய்த ஐந்துநாளைக்கிப் பின்புகாலேயில் வொரு நேரம் இந்தக்கியாழம்குடிக்கவும் வெண்ணெய்வேண்டுமானல் கூட்டிக்கொள்ளவும்.

## கண்ணுனந்தரியற்றிய
## கெருடன்கிழங்கெண்ணெய்

தொழிலான தொழிலொன்று விளம்பக்கேளு
தேர்ந்தனிதனைசெய்தவருக்கு மெத்தநன்று
வழியானகெருடனுடக் கிழங்குதன்னை
வயணமுடன் கண்ணிலிடுமைமோர்கொய்து
அழியாமல்நிழலில்வைத்துலர்ந்தபின்பு
அடவுடனே பனிரெண்டு பலந்தான்றாக்கி
விழியதனுய் பகாத்துநன்ருய் வினவதாக
வியல்புடனேக் கடைசாக்கைகூட்டுவீரே 1230

கைசரக்காம் விளங்கம்வாலுளுவையோடு
கனமான திரிகடுகு கரியசீரகமுமொக்க
நடையாகவகைக்கு வொருபலமதாக
நாடியேயிடித்ததனைச் சேர்த்துக்கொள்ளு
தடையறவே அகண்டதொரு பாண்டத்திட்டு
தனியான விளக்கெண்ணெய் வரைப்படிதான்சேர்த்து
இடையானவெங்காயம் இடித்துக் கூட்டி
இன்பமுடன் வடுப்பேற்றி யெரிப்பீர்தாமே 1231

வெங்காயம்-12-பலம்போடவும்.

அடுப்பேததீற் றீயதனை மெதுவதாக்கி
அமர்ந்துமெள்ள பார்த்திறக்கு புனல்தாங்காமல்
கடுப்பேற்றியனல்மெத்த மீறிநின்றுல்
காந்தபதம் சரியாகவரமாட்டாது
எடுத்துவிடுக்கை வரிசைநிதானங்கண்டு
யேற்கனவேவடிதிருத்து வைத்துக்கொண்டு
தொடுத்தபொல்லா கிரந்திகுட்டமகரிமேகங்கள்
துலையாதவெள்ளையறை யாப்புக்கென்றே 1231

அர்ரயாப்புமேகரெணம் விஷபாகங்கள்
அலேவானமேகத்தினாரல வெப்பு

திரையானப்புழுவெட்டு மலத்தின்சிக்கல்
தோராயமானதொரு நோய்களெல்லாம்
மறைவாகப்பதுங்கிவிடும் நேர்ந்துபாரு
மலக்கட்டுவயிற்றிரைச்சல் வுள்ரணங்கள்
குறையாமல் தீர்க்குமப்பா அறிந்துசெய்யில்
கோடானகோடி பிணியகண்டுபோமே

முதலாவது கெருடன்கிழங்கையும் கடைசரக்கையும் கியாழம் வைத்து காய்ச்சியபின்பு யிருந்துவெண்ணெயில் சேர்த்துப் பாகமாகக் கூட்டிக்செய்யவும் அல்லதுவொன்றாகக் கூட்டிக்காய்ச்சிக்கொள்ளவும்.

## இதற்குப் பத்தியம்.

பிணியதற்குப்பத்தியத்தில் வைத்துயேற்ற
பிழையகலசெய்வதனால் தர்மமாகும்
அணியானவார்த்தைசொல்லிப்பணத்தைக்கேட்டு
அவர்சிலவுக்கேற்றபடி செய்துக்கொண்டால்
மணியானவொளிமீதில் நின்றதாய்தான்
மனமகிழ்ச்சியாகாமல்சிரிப்பாளப்பா
கணிதமுடன்கடுபத்தியமாகவைத்து
கடந்தபின்பு யிச்சாபத்தியமா யிருக்கச்செய்யே ()

சிறுபயறுநெல்சம்பா வரிசிச்சேர்த்து சமைத்துவுண்ணவும் கிச்சடிசெய்து புசிக்கவும்.

## இதற்குஸ்நானஞ்செய்ய வெண்ணெய்.

பத்தியத்தில்பிசகாமலிருக்கச்சொல்லு
பரிவுடனேமண்டலமென்றிசைந்துசொல்லு
சுத்தியுடனிருந்து செபஞ்செய்யச்சொல்லு
சோம்பல்தன்னில் நாடாமல்விழித்திருக்கச்சொல்லு
மெத்தநடையாகாது பிணியாளருக்கு
விதனமுறும் பண்டிதர்மேல் பழிசொல்லவேண்டாம்
நித்தமுன்தான் காலைதனிற் செபத்தில்நின்று
நிதானித்துத்தொழில்களெல்லா முடிப்பீர்தாமே ()

ஆமென்றவிலாமிச்சன்வேர் பலமதொன்று
அறிதிருவெட்டிவேர் பலமதொன்று
நாமென்றவிலவையுடப் பழமதொன்று
நன்மையுள்ள சாதாப்பூவும் பலமதொன்று
தேமென்றகோஷ்டமொடு அறுகன்வேரு
சிறந்ததொருப் பூலாவின்கிழங்கு மப்பா

காமென்ற சடாமாஞ்சி கற்கடகம் நெல்லி
கனத்த வற்றல் சிரகமும் வகைக்கோர்காசே 1236

வகைக்கிவகைபார்த்தெடுத்து யிடித்த பின்னர்
வளமான சந்தனற்றுள பலமும் ரெணடு
துகையாக சிறுதேக்கு பலஞ்ங்காலதான்
துணையாக வொன்ருகக்கூட்டியேதான்
பகையாறயெள்ளெண்ணெய்வறைப்படியிற்ருனும்
பரிவுடனே கோர்த்து மிகபெரித்து வர்காய்
தகையாமலிறக்கி வைத்துவடித்தபின்பு
தனிமையுள்ளசீனியதுவிராகன்போடே 1237

போட்டபின்புத்தலைமுழுகவரிசைகேளு
போன்யெண்ணெய்தேய்த்துநன்ருய் மேலிற்றேய்த்து
வாட்டமறசியக்காய்வெந்நீரிட்டு
வயணமுடன்ஸ்நானமதுவானபின்பு
தேட்டமதாய்வாட்டிறைச்சி துவரைசேர்த்து
தென்புடனேகறிசமைத்து அசனஞ்செய்ய
ஆட்டமிட்டநோயணைத்துமகண்டுதப்பா
அறிவானப்பண்டிதர்கட்குண்மைகாணே 1238

மண்டலம் அல்லது அரைமண்டலம் 10 நாள் அல்லது 5 நாள் யெண்ணெய்குடிக்கச் சொல்லவும் பத்தியமாக நடக்கச் சொல்லவும்.

## வேறு விருத்தம்.

உண்மையிருந்தால்வொதுங்கிடும்நோயது
உண்மையிருந்தால்வொருபோதுந்தப்பாது
உண்மையிருந்தால்வோதலாம்வேதமும்
உண்மையிருந்தால்வொருவரால்கார்க்குமே 1239

## பாம்பாட்டி சித்தரியற்றிய.

### ஞானசுயம்ப-விருத்தம்

கார்க்குகின்றஅம்பரமேசுடரேகாப்பு
கருணையுள்ளமணியொளியேசுருபங்காப்பு
கோர்க்குகின்றமுத்தொளியேநித்தியமேகாப்பு
கோதில்லாநாதாந்தசின்மயமேகாப்பு
பார்க்கின்றவிடமெங்கணுமேநிறைந்தாயகாப்பு
பானுவின்மேல்சுடரதிகசுபமேகாப்பு
யேர்க்குமொருநிறைவடியாப்நின்ருய்காப்பு
யேமசாரமாகி சிறந்தபதந்தினமுங்காப்பு

தினமடியார்க்கருள் புரியும்பரமேபோற்றி
திருவிறக்கம்புரிந்தருளும் தேவாபோற்றி
மனவிறக்கம்வைத்துப் புகழ்தந்தாய்போற்றி
மதுரசுவை ஞானமணிவேதாபோற்றி
சினமானவிழலிகற்றுந்தயாபராபோற்றி
செகத்தோர்க்கு நன்மைசெய்யும் பொருளேபோற்றி
தனமானதிரிபுவனக் கடலேபோற்றி
தற்பரமேஅற்புதமே போற்றிபோற்றி 1241

## வேறு விருத்தம்.

அற்புதஞானம் வருள்நெறிகற்பகம்
அற்புதஞானம் அதிசெயக்காரணம்
அற்புதஞானம் அமுர்தவேதந்தான்
அற்புதஞானம்அளவிலாதெய்வமே 1242

தெய்வச்செயலால் செழிக்கப்பிழைக்கலாம்
தெய்வச்செயலால் செகத்தினில்வாழலாம்
தெய்வச்செயலால் செங்கோல்செலுத்தலாம்
தெய்வச்செயலால் செல்வம்வந்தெய்துமே 1243

## பாம்பாட்டி சித்தரியற்றிய.

### சிரோன்மணி பூபதிமாத்திரை.

செல்வமுள்ளசிரோன்மணியின்பூபதிதானப்பா
சீர்பெறவே சொல்லுகிறேன் விவரமாக
கல்வியுள்ளோர்படித்தறிந்து செய்வதற்கு
கருணையுடன்வியாதிதனை தீர்ப்பதற்கும்
தொலவினையை கற்றிவிடசுவாமிபாதக்
தோத்தரித்துவிளம்புகிறேன் நன்றாய்க்கேளு
வல்வினையையிகற்றிநிற்க மருந்தின்பாகம்
வயணமுடனே அறிவீர்வழக்கந்தானே 1244

வழக்கமகாய் விடுகாமய்சரக்கைப்பார்த்து
வதிசெயம்போல் பார்த்தெடுத்து நிறுக்கவேணும்
பழக்கமதாய்அனுதினமும்பண்பதாகப்
பலாபலத்தின் காரியத்தினுணரவேணும்
முழக்கமிட்டுத் திரிந்தலைகாலாபமுண்டோ
மூடருடன் சேராமலறிவைத்தேற்றி
அழக்குழக்குயென செப்புங்கதையைநீக்கி
ஆசைவைத்துப் புத்திபதிலன் பாகமில்லே 1245

அன்பான லிங்கமதுபலமும்ரெண்டு
ஆச்சரியகெந்தியது பலமுமொன்று

நன்பானகல்வத்தில் வைத்துமைபோல்
நலமாகயிஞ்சிச்சாற்றாற்றியே
பண்பாகயின்புமிகை நன்றாயாட்டி
பேர்பெறவேவழிர்த்தெடுத்து கரண்டி தன்னில்
ஒன்பாகவிட்டடுப்பி யெரித்துவாங்கு
வுலவியதோர் நீர்களெல்லாம சுவறற்றானே 1246

சுவறியபின்கல் வத்திற்போட்டுக்கொண்டு
சுகுணமுடன் சந்தனத்தாள் கியாழம்வார்த்து
கவறியேதான் முச்சாமம்நன்றாயாட்டு
கனலேழும்பசிவப்பேறும்பவழம்போலாம்
தவறிடாதேபார்த்துவிழித் தெடுத்து
தயங்காமல்குன்றியைப்பெறும் பவழம்போலாம்
நவமானபூபதியைக் குழலில்வைத்து
நன்மையுடன் வானந்தாய்ப்பதம் போற்றே 1247

போற்றியேதீபமொடு தூபங்காட்டி
பொலிவாகச் சித்தித்துநிற்கவொன்று
யேற்றியேற்றொழுத பின்புப் பிணியாளருக்கு
ரெடுத்திதனிலோ ருண்டைக்குடுப்பீராகில
மாற்றிவிக்கும் சன்னிவிஷங்குளிர்ச்சுரங்கள்
படக்குகின்ற மாரடைப்புமூர்ச்சையாவும்
தூற்றியற்சொல் தவறாமல் வயிற்றுநோயும்
தூரமெனவகண்டுவிடுந் துரிதந்தானே 1248

## அனுபானம்

துரிதமுடன்திரிகடுகுதெனில்சேர்த்து
துயரகலக்குடுத்திடவேசொன்னநோய்கள்
பரிவுடனேநீங்குமப்பா பண்பதாக
பண்டிதற்கு இதுசுளுநவுபாருபாரு
விரிவானமருந்திலே சொல்லவில்லை
விசிதமுடன் செய்தவர்க்கு மேன்மையாகும்
தெரிவிதமாயுணர்ந்து கொண்டால் யுண்மையாகும்
தெளிந்தவர்க்கு சுத்தவிதபாகந் தானே 1249

## பூபதிமாத்திரை வரைக்கின்ற சந்தன் கியாழம்.

பாகமுடன் சந்தனத்தாள் பலந்தான்மூன்று
பண்பானலவங்கப்பூ பலந்தானொன்று
யோகமுடன் பெண்மகப்பூ பலமுங்காய்தான்
யேகவொருசரக்கதனை யிடித்துக்காய்ச்சு

ஆகவேதான் யிருத்தனியே ரேதனுலைப்பா
அம்மம்மா அதட்டி மெள்ள வரைத்துக்கூட்டி
நோகவிதமணுகாது சொற்றவறிடாது
நுணுக்கமிதுக்கை கண்டபூபதியுமாமே 1250

தண்ணீர்சுகமாய் விட்டுக்காய்ச்சவும்.

கண்டபடிசொல்லமால் சாத்திரத்தைப்பார்த்து
கருதியதோர் விதப்படினமாகச்சொன்னேன்
விண்டதிந்த அவிழ்தமதுமெய்யதாகும்
விரட்டுமப்பா அனந்தவிதநோய்கள்தன்னை
தொண்டுசெய்துகைவரிசக் கற்றக்கொண்டேன்
தோயாதப்பொருளுணர்ந்து படித்துக்கொண்டேன்
மண்டலத்தில்பெரியோரைப் பணிந்துகார்த்து
மனமிறங்கயான் மிகவேதொழுதிட்டேனே 1251

பத்தியம்.

தொழுதபடிபத்தியத்தை நன்றாய்க்கேளு
துலங்கவேகோதுமையின் கஞ்சியாகும்
வழுவாமல்முளகு நீர்சர்தமாகும்
வயணமுட னுண்பதற்கு ஆவின்பாலாகும்
முழுகவேதான் சீயக்காய்வெந்நீராகும்
முயற்சியுடன் மற்றுநாளெல்லாமாகும்
நழுவாகச்சொல்லவில்லைக் கண்டுபார்த்து
நடத்துவீர் வியாதிகண்டுகாட்டுவீரே 1252

* வாட்டிறைச்சி வற்றலாகும்.

குதம்பைசித்தரியற்றிய.

சந்திரோதயக்குளிகை.

நாட்டமுடன் குளிகையொன்றநவிலக்கேளு
நலமான பெரியோர்களறிந்து செய்வர்
தேட்டமுடன் நோயதனை யகற்றியேதான்
திரேகமதைக் குணப்படுத்தும் செவ்வையாக
வாட்டமில்லாரசகற் பூரப்பலமுங்கால்தான்
வளவானகுங்குமப்பூ மலமதொன்று
தாட்டிகமதான திருபசசைபூரம்
தவராமற்சேர்ப்பீர் மிகப்பலங்காலாமே 1253

பலங்கால்தான் லவங்கப்பூ லவங்கப்பட்டை
பரிவானகோஷ்டமது கால்தானப்பா

நலங்காமல் வன்னிகெற்பமரைக் காலாகும்
நலமானசரக்கனைத்தும்வொன்றாய்ச்சேர்த்து
தலமானதலமறிந்து பெரியோர்செய்த
தவராதபாகமென்றே பனதில்வைத்து
பெலமான சல்வத்திற்போட்டரைத்துப்
போபெறவே கியாழம்வைத்து வரைப்பீர்தானே 1254

கியாழம்

தானானசந்தனந்தான் பலமுனமந்து
தயையானலவங்கப்பூ முத்தக்காசு
கோனானமாஞ்சிசிறு நாகப்பூவும்
குணம்பெறவே யிதுநாலும் வகைக்கோர்காசு
தேனானசட்டிதனி லிடித்துப்போட்டு
தீர்க்கமதாய் நன்றாகக்கியாழமிட்டு
பானனப்பதம்பார்த்து கரைததரைத்து
பசர்வுடனேரெண்டு நாளரைப்பீர்தானே 1255

அறைப்புப்பாகம்.

நாள்தவறிப்போகமலாட்டியாட்டி
நயனமதிலிட்டெடுக்கும மைபோல்பாரு
ஆள்சிறந்துப் பெலமாகவரைத்தபோது
அமமம்மாயென்ன சொல்வேன் பிசினிபோலாம்
தூள்யெடுத்துப்பெருகாமலிணக்கமாக
துரிதமுடன்றானெடுத்து வுருட்டிக்கொணடு
வாள்தொகுத்தரைசரைப்போல்துளிகைசெய்ய
வயணமுடன் விளம்புகிறேன்மகிழ்ந்துகேளே 1266

வியாதிகள் தீருங்குணங்கள்.

மகிழ்வாகக்குளிகைசெய்வீர் குன்றிபோலே
மாதிறமையாகவேதான் வுருட்டிக்கொண்டு
புகழ்வாகப்பரணிதனி லடைத்துமேலாய்
புண்ணியர்க்குக் கிடைத்ததென்றே கடவுள்பாதம்
அகமகிழபூசைசெய்து வைத்தன்பாக
அடவுடனே திரிகடுகுத் தேனிலாதல்
இகழாமல் துளசிரசஞ்தன்னிலேற்ற
இசைந்தசுரம் சன்னியெல்லாம்யேங்கிப்போமே 1267
ஏங்கிவிடும்மயக்கமொடு சிரசில்நிற்கும
இசைவிலாவாதபித்தந் தனையேநீக்கும்
தாங்கிவரும்பாரித்தநோய்கள் மற்ற
லிலவதத்தல்வாயாசமெல்லாம்போகும்

ஓங்கியசொற்றவருமலநந்தநோயை
ஓட்டிவிக்குஞ்சீதளங்களணுகிடாமல்
நீங்கியேபோவதற்குச் சந்தேகமில்லை
நிதானித்துவநுபாநத்தோடறிந்துசெய்வீர் 1258

ஐயத்தைச் சமாதாநப் படுத்தும்

## பத்தியம்.

அறிந்திதற்குப்பத்தியத்தைக்கேழ்ப்பீர்மிக்க
அன்மானஆட்டிறைச்சிமுருங்கைப்பிஞ்சாம்
முறிந்துவிடாக்கத்திரிக்காயப்பிஞ்சதாகும்
முழுதுவரை மிளகுநீர்சாதமாகும்
தெரிந்தபடிநிதாநித்து வியாதிதன்னை
தெளிவுடனேபார்த்துமிகக்குடுப்பீராகில்
சொரிந்தயிந்தக் குணங்கள்முதலானதெல்லாம்
சொல்லாமல்நீங்குமப்பா திறமையாமே 1259

கோதுமைரொட்டி தின்னலாம் சுக்குசற்கரையில் போட்டு காய்ச்சி குடிக்கலாம்.

## ஸ்நானஞ்செய்ய யெண்ணெய்

அப்பனேஸ்நாநமது செய்வதற்கு
அதிவிதமாய்விளம்புகிறேன்வினவாய்க்கேளு
தப்பிதங்கள்சொல்லவில்லை நல்லெண்ணெய்தன்னில்
தனித்தகரியசீரகமும் கஸ்தூரிமஞ்சள்
ஒப்பனையாய்வகைக்குஒரு பலமும்போடு
ஒல்கியசொற் றவற்றுமல்பாருபாரு
செப்பினேன்அருகன்வேர் பலந்தான்சேர்த்து
செழிப்புடனேயெரித்திறக்கிஸ்நாநஞ்செய்யே 1260

இறக்கியிதில்சாரமதுவிராகனிடையேபோடு
இன்பமுடன்முழுகவேதான்குணமாந்தேகம்
சிறக்கவேசீயக்காய் வெந்நீர்விட்டு
சிதறாமல்செய்துமிகத்தேர்ந்துபார்ப்பீர்
மறவாமல்பத்தியமா யசனமுற்று
மற்றயெந்தநாளில்பலக் கறிகாய்களுண்ணு
அறந்தழைக்கஆத்தாளைப் பூசைபண்ணு
அநுதினமும்நல்வழியில் நிலைப்பீர்தாமே 1261

## பதஞ்சலியாரியற்றிய

### வச்சிரகண்டி மாத்திரை

நிலைமைபெற்றவச்சிரகண்டி மாத்திரையிதென்று
நிறையானப் பெரியோர்கள் செய்தபாகம்

கலையாமல்கர்த்தாவின் பதத்தைப்போற்றி
  களிக்கவேவிளம்புகிறேன்மதிவல்லோர்முன்
சிலையானதேகத்தைத்தேற்றுதற்கு
  சிலமுள்ள இதுவுமொரு மாத்திரைதான்வேணும்
அலையாமல்செல் துவைத்துக் கொண்டால்நன்மை
  யாகுமென்றேசெப்புதிந்த நூலிற்றானே 1262

செப்புதற்குலகுவாக யிருக்குமப்பா
  செய்துகந்தாலப்பவல்லோதெரியும்பாகம்
ஒப்புதற்குலிங்கமதுவிராகனெட்டு
  ஓதரியபூரமது விராகனொன்று
மெப்பியலாய்வீரமது வரைக்கால்விராகனாகும்
  வினவுடனேதவராமல் முடிக்கப்பாரு
தப்பிதங்களில்லையப்பா ரசசெந்தூரம்
  தயவாகவிராகனிடைரெண்டதாமே 1263

இடைகள்கண்டுதப்பாமல் கல்வத்திட்டு
  இணையாகசப்பளத்தின் சாற்றால்சாமம்
தடைகளன்றிஇஞ்சியதைசிவிநன்றாப்
  தானிடித்தச்சாரதனா லரைத்தோர்சாமம்
விடையிதற்குப்பேச்சுமுண்டோ வெல்லுதற்கு
  விருதுகொடிகட்டிநின்றுவாடலாம்பார்
படையானநோய்களது தீர்வதற்கு
  பகர்வுடனேசொல்லுகின்ற பாகக்கேளே 1264

பாகமுடன்குன்றியிடை மேகக்குடச்சலுக்கு
  பரிவுடனேவைந்துநாள்விரைவாதத்திற்கு
வேகமுள்ளசுரத்துக்கு மூன்றுவேளை
  வினையானபுண்புரைக்கிப் பத்துநாள்தான்
தாகமுள்ளநடுக்கலுக்கு ரெண்டுநாள்தான்
  தடங்கல்செய்யுமூர்ச்சையதுவாய்வுக்கப்பா
நோகவேதான்வலிக்குகின்றகணுவாதத்திற்கு
  நேர்மையுடன்சர்க்கரையில்கொடுத்துப்பாரே. 1265

கொடுத்துவிடுவெள்ளையறையாப்புதீர
  குணமாகக்கண்டமாலைத்தோஷத்திற்கும்
அடுத்தவொருசன்னிபதிமூன்றுக்குந்தான்
  அப்பனேசீக்கிரத்தில்கொடுத்துப்பாரு
எடுத்தகணப்பிணிகளெல்லாமநீங்கிப்போகும்
  இனமறிந்துவனுப்பானந்தன்னிலியந்தால்

சடுத்தமிட்ட வெகுநோய்களகலுமப்பா
சாதித்துநின்றவர்க்குசுளுவுதானே 1266

## பத்தியம்.

நினறபடிசிறுபயறு முருங்கைப்பிஞ்சாம்
நிதானித்துவாட்டிரைச்சி வற்றலாகும்
நன்றினவாய்மிளகுநீர் துவரையாகும்
நலமானகாடையொடு வரைக்கீரையாகும்
ஒன்றியேதான்பால்கஞ்சி யாகுமாகும்
வொருமித்தகோதுமையின் கஞ்சியாகும்
வொன்றித்தசர்கரையும் நவரையாகும்
விளங்கவேபாத்தரிந்துக் குடுக்கலாமே 1267

## இதற்குஸ்நானயெண்ணெய்.

அறிந்தபடிசொல்லுகிற விவரங்கேளு
அன்பானநல்லெண்ணெய் படிகாலப்பா
செரிந்ததொருநுணப்பட்டைத் துளசிபட்டை
செவ்வையுள்ள வெள்ளுள்ளிமுளகுமஞ்சள்
சொறிந்ததொரு கரியவேப்பிலையினீர்க்கு
சுகிர்தமெனவகைக்கிவொரு பலமதாக
திறந்தயிந்தமூலிகையை யிடித்துமைபோல்
தீர்க்கமுடன் யெண்ணெய் தனிலிட்டுக்காய்ச்சே 1268

காச்சியேத் தலைக்கிட்டு சீயக்காய்தேய்த்து
களிக்கவே வெந்நீரில்ஸ்நானஞ்செய்ய
யேச்சிநின்ற தேகத்தைக்குணமதாக்கு
யெம்பிரான்றுணையதனுல் குறைவொன்றில்லை
ஆக்கியேவதிசயமாமந்தபோக்கு
ஆரறிவார்மெரியோர்க்குத் தெரிந்தவித்தை
பூசசியமாய்வைத்திதனைக் குடுத்தபேர்க்கு
புண்ணியமும் நன்மைவந்தும் பொருதும்பாரே. 1269

## சூதமாமுனிவறியற்றிய

### மேகநாதகுளிகை.

பொருதியதோர்மேகநாகக் குளிகைதன்னை
புகழ்ச்சியுடன் சொல்லுகிறேன் பெரியோர்கள்முன்பு
கருதியதோர்வெங்காரம்ஜாதிலிங்கம்
கனமானசிவதைவேர் வரம்புசுக்கு
நிருதியது சயந்திவ்வணம்வாய்விளங்கம்
நேரானவோம்மொடுபெருங்காயந்தான்

விருதிபதோர் காட்டாமணக்கின்வேருமே
விதமுவுடனே தானெடுப்பாய் பலமுந்தானே 1270

பலமொன்றுப் பார்த்தெடுத்துக்கல்வத்திட்டு
பண்புடனே தானரைத்து மைபோலாக்கி
பெலமானநேர்வாளம் சாக்கிடைநேர் தூக்கி
பிரியமுடன்சேர்த்திதனில் சம்பளத்தின்சாற்றால்
கலனேகவிடாமலேதான் நன்றாயாட்டி
கண்ணிலிடும்வயணமதாய்க் கருதிப்பாரு
நலமாகவழித்தெடுத்து குன்றியைப்போல
நயனமெனவுருட்டயொருக் குழலில்வையே 1271

ஒருகுளிகை அல்லது இரண்டுகுளிகை குடுக்கவும்
குழல்தனிலேவைத்து நமதாதிசோதி
குணமான பாரபர்த்தைத்தியானஞ்செய்து
விழலானகுன்மமொடு குளிர்சுரங்கள்
விதித்தபொல்லாவயிற்றில்நிர்க்குந்திரைகள்வாதம்
உழலானபித்தநீர்சோகைபாண்டு
உதித்தவிதக்ஷுறரோகவயிற்வலித்தல்
தழலானஅசீரணங்கள் சிலகணத்தநோயை
தப்பாமல்நீக்கிவிடும் தனிந்துபாரே

ஒருகுளிகை அல்லது மூன்றுகுளிகை நிதானத்துடன்பார்த்துக் கொடுக்கவும்-பித்தநீர்கழண்டுவிழும்.

## பத்தியம்.

தனிந்தபின்புமிளகுநீர்சாதமூட்டு
தயவாகவூடானின் கருவாடாகும்
செனித்ததொருவாழைக்கச்சல் கூட்டச்சொல்லு
சேதமினறிநோய்களெல்லாம்பறந்துபோகும்
முனிவர்பெரியோர்களிதைமுயர்ச்சியாக
மொழிந்தனர்கள் பரிகாசவார்த்தைபேசார்
கனிந்தபடிசெய்தவர்க்குக்கைகண்டபாகம்
கருத்துடனே தெளிந்துக்கொண்டால்கனிப்பதாமே. 1272

## ஆட்டிறைச்சிக் கூட்டிஞல்மெத்தநல்லது.

### இதற்குஸ்நானம்.

களிப்பானநல்லெண்ணெய் படியைரக்கால்
கணக்குடனே பாண்டத்திலூற்றிக்கொண்டு
விளிப்பாகமுளகுகரியசீரகங் கஸ்தூரிமஞ்சள்
வினவுடனேவதிமதுரம் வகைவகைக்கி

துளிப்பாசய் பலமரைதான் பால்லாலாட்டி
துலங்கவே வொன்ருகக் கூட்டியேதான்
தெளிப்பாகக் காய்ச்சியேதான் ஸ்நானஞ்செய்ய
செய்தகர் மவினைகளெல்லாம் விட்டுப்போமே 1273

சியக்காயதேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்வும்வியாதி கூறறிந்து குளிகையைக் கொடுக்கவும்

## வேதமுனியாரியற்றிய

### சுடாமணிமாத்திரை

விட்டுபோம் சகலநோயானதெல்லாம்
விடாமழைபோல் தொடுத்தகனலானதெல்லாம்
மட்டுவிதமில்லாமல் சுடாதுமணியின் மாத்திரை
மகிழ்வாகப்புகலுகிறென்
தொட்டுவிட வியாதியெல்லாமோடுதற்கு
சூட்டுகிறேன் படித்தோர்கள் மெச்சவேதான்
கட்டுவிதமுந்திரிகையிலுப்பைப் பூவும்
கருதறியதிப்பிலியும் பேச்சுதானே. 1274

பேரிச்சக்கோஷ்டமொடு முத்தக்காசு
பெருமையுள்ள வெட்டிவேர் பன்னீர்ப்பூவும்
சாரிச்சுததரமரைப்பு நன்னரிவேர்
சரியானசந்தனத்தூள் வகைதானென்று
தாரிச்சுபலமொன்று பிடித்துநன்ருய்
தவராமல் கல்வத்தில் போட்டப்பின்பு
கேரித்துலிங்கமொரு காசுபோடு
நிலையானபூரமொரு காசுபோடே 1275

போடப்பா வரிதாரம்காசுபோடு
புனிதமுடநாபியது வரைகாசுபோடு
ஆடப்பாதண்ணிமிட்டான் கிழங்கின்சாற்ருல்
அசலாமல் ரெண்டுநாளரைத்துக்கூட்டு
நீடப்பாகரிப்பான் சாற்விட்டுநன்ருய்
நீங்காமல்மூன்று நாளரைத்துத்தீரு
தேடப்பாவுழுந்திடைதான் வுண்டைசெய்து
தீர்க்கமுடன் நிழலுலர்த்தி பதனம்பண்ணே. 1276

### சரக்குசுத்தியின்பாகம்

வீரத்தைசம்பளத்தால் வொருநாளூரப்போடவும் ரசகற்பூரத்தை தேனினல்சுருக்கிட்டு வெடுத்துக்கொள்ளவும் நாபியை வெள்ளாட்டின்

கோமியத்தில் மூன்றுநாளூறவைக்கவும்மேற்படி மூளகுகியாழத்திலிட்டு அவித்துக்கொள்ளவும் மேற்படி யெலிமிச்சம சாறில்லூறவைத்துயெடுத்துசேர்த்துகொள்ளவும் அதிதாரத்தைசுண்ணும்புக் கல்லில்-15-திரம் நீததி நளுருய்க்கழுவிசேர்த்துக்கொள்ளவும்.

தீரும்நோய்கள்

வேறுவிருத்தம்.

பதனமுடன் சுகிர்தாக பண்புடன்சொல்லக்கேளு
விதனமுந்தீரவேண்டி விளக்கமாத்திரையிலொன்று
நிதமிகக்கொடுத்து மேலாய்நேர்படப்பார்ப்பீராகில்
அதனமரனசர்மவழ லதுவகலுந்தானே 1278

அகன்றிடுங்குளிர்சுரங்கள் அசாத்தியவிரணமூறல்
நகன்றிடும்கன்னித்தோஷம்நாடாதுசன்னியாவும்
புகன்றிடும்கண்சுழட்டல் பொல்லாதகிறுகிறுப்பு
இகன்றிடும் குந்தல்பித்தல் யேங்கியே வலறிப்போமே. 1279

அலறியசன்னிவேர்வை அழலதுநீங்கிப்போகும்
நவமுறவனுப்பானம் பார்த்துநாடியேக்கொடுப்பீரப்பா
பலவிதநோய்களெல்லாம் பரந்திடும் பறவைபோலே
தலமதிலறிவுள் ளோர்க்குந்தான் றெரிந்துரைத்தாமே 1280

இதற்குப்பத்தியம்.

அறிவினலப் பத்தியத்தைத்தானும் அடவுடன்புகலவேணும்
பிரியமாய்தெரிந்தவிதம் பேர்பெறச்சொல்லவேணும்
குறியவேஸ்நானஞ்செய்யக் குணமுடன்நுவலவேணும்
திரிகுணவிதத்தைக் கண்டுச்செப்புவீர்த்தானே 1281

யூகிமாமுனிவரியற்றிய

சிலோதிமாத்திரை

செப்புதற்குலகுவாகச் சொல்லக்கேளு
சேர்நதொரு வாளமதுப் பலமதொன்று
ஒப்புதற்குரசகற்பூரம் பலங்காலப்பா
ஓதறியஅழிஞ்சிப்பட்டைப் பலங்காலப்பா
தப்பமால் கல்வத்திலிட்டுக்கொண்டு
தயவாகமுலைப்பாலா லொருசாமமாட்டி
மெப்புடவேககையான் சாறதனலப்பா
மேன்மையொரு சாமமறைத் தெடுப்பீர்தாமே 128

அரைத்துப்பதமாகவேதான் யெடுத்துக்கொண்டு
அடவுடனே துவரையதின் நிறையதாக
குரைக்குவிடாதபடிக்கி வுண்டைசெய்துக்
குணமுடனே பாணியினிலடைத்துவைத்து
மரைத்துமிகசெய்யுகின்ற சுரத்துக்கப்பா
மாராமல்நறுதேனில் குடுப்பீராகில்
விரைத்தபயிர் தழைத்ததுபோல்தேகமாகி
வியாதியது நீங்கியேதானின் பமாமே 1283

## இதற்குப் பத்தியம்.

இன்பமுள்ள பத்தியந்தான் மிளகுநீர்சாதம்
இணையுடனே சேர்த்துவரக் குணமதாகும்
தென்புடனே சுரம்நீங்கிக் குணமதாகும்
தெய்வத்தாலாகிரது சிறக்குமப்பா
முன்பாகவையர் பதந்தோத்தரித்து
முயற்சியுடனவிழ்தமதுக் குடுக்கவேணும்
பண்புபெற்று நியாயவழியாகியேதான்
பாக்கியமுறுங்கை கூன்டும்பரிவாய்த்தானே 1284

இதர்க்கு ஸ்நானம் ஒமம்தேய்த்து சீயக்காயிட்டு வெந்நீரில் தலை முழுகவும்.

## கல்லுளி சித்தரியற்றி

## ஜெயரசகற்பூரமாத்திரை.

பரிவானரசகறபூரம் பலமதொன்று
பண்பாகதேனதிலே சுத்திசெய்து
குரியாகசம்பளத்தின் சாற்றினுலே
குணமாகசுருக்கிடுவாய் ரெண்டுசாமம்
தெரிவானமுலைப்பாலால் ரெண்டுசாமம்
தீர்க்கமுடன் செய்தபின்புக் கல்வததிட்டு
விரிவானவெண்மிளகுப் பலமதொன்று
விளங்கவே சேர்தத்ரைக்க வழிசொலவேனே 1285

சொல்லுகின்ற சம்பளத்தின் சாற்றால்சாமம்
சுருக்காகவரைத்துப் பனிப்பயறுபோலே
வெல்லுதற்கு மணிமணியாவுருட்டிக்கொண்டு
விவேகமுடன் நிழலில்வைத்து வுலரச்செய்து
நல்லுறவாய் குழல்தனிலேவடைத்துமேவ
நாதாந்தக் கடவுள்தனைத் தெண்டம் பண்ணி

பல்லுகிறவாய்வு பக்கச்சூலைகுத்தல்
பகர்வானக்குளிர் தனக்குக்கொடுப்பீர்தானே 1286

கொடுத்துவிடு அந்திசந்திரெண்டுவேளை
குறிப்புடனே திரிகடுகுதேனிற்றானும்
அடுத்துமரும் அய்யமுதல் குடைச்சலெல்லாம்
அணுகாமல் நீங்கிவிடும் மறிந்துபாரு
எடுத்ததொழில் தப்பாதுவெகுசமர்த்து
யேற்கனவேசெய்து குணமாக்குமப்பா
விடுத்தசொல்லை மனதில் வைத்துதெளிந்தபேர்க்கு
வினவியநற்பாகமது விளங்குந்தானே 1287

விடத்தாரிவேர் மாத்திரைவயைக்கும்போது பலம் முக்காலிட்டு மரைத்துக்கொள்ளவும்.

மேற்படியாரியற்றிய கட்டுவாதிமெழுகு

நற்பாகத்துடன் கேளுமிகவுமேதான்
நலமானசாதிக்காய் சாதிபத்திரி
பொற்பாகஅதிவிடையம் கூளாத்திக்காய்
பேர்பெரிய வெட்பாலை சிறுநாகப்பு
உற்பாகலவங்கமொடு காட்டாத்திப்பு
உயர்ந்ததொரு சீனத்தின்பட்டைவோமம்
சிறப்பாகசிங்கிக்கு ரோசாணிசுக்கு
சிதராதப்புளியன்றோல் காசுகட்டிதானே 1288

காசுகட்டிமையூரின் கஞ்சாவித்துக்
கருதறியபெருங்காயம் அசமதாகம்
ஆசுகளில்லாத திருபேர்சொல்லாதும்
அடவுடனேவகைக்கி வரைப்பலமதாக
பேசுகின்ற தீர்க்கமுடன் கேளுகேளு
பிரபலிக்கவுரவிலிட்டு விடித்துநன்றாய்
பூசுகின்றகல்வத்தில் போட்டுக்கொண்டு
புகழ்வுடனேசம்பளச்சார் தன்னலாட்டே 1289

ஆட்டியபின் விளாவினிடபிசினிதானும்
அன்பாகப்பலமரைதானி தலிற்போடு
நீட்டியதோர்வபினியதுக் கால்பலந்தான்போடு
நேர்ந்தரைப்பாய் வொருசாமம் நிலைமையாக
பூட்டுவிடுலிங்கமதுப் பலமரைதானப்பா
புனிதமுள்ளகெந்தகந்தான்பலமரையதாகும்
காட்டமுடன்றேனதனல் ரெண்டுசாமம்
நலம்பெறவேயரைத்தபின் போர்பாகங்கேளே 1290

குங்குமப்பூ-வ-கோரோசனம் பலம்-வ-சேர்க்கவும்

கேளப்பாமறுபடியும்கிறுத்தியேதான்
  கிருபைபெறவொருசாமமறைத்துக்கூட்டு
நாளப்பாயிப்படியே மூன்றுநாள்தான்
  நலம்பெறவே வழித்தெடுத்து பரணிதன்னில்
கோளப்பாவாராமலடைத்துக்கொண்டு
  குணம்பெறவேமனதில்வைத்துவினவதாக
தேளப்பாவானதொருக் கிருணிமந்தம்
  தடங்கல்செய்யும் நோய்தனக்குக் குடுப்பீர் தானே 1291

சுண்டக்காய் பிரமாணம் வுண்டைசெய்துக் கொடுக்கவும்.

தனதில்லாவியாதியது தீர்வதற்கு
  தயவாகத் தேனிலிடுபயமோயில்லை
வினவாகசர்க்கரையில் கற்கண்டிலாதல்
  விகிதமுடன் அதிவிடையக்கியாழந்தன்னில்
சினமாறவரிசியுட கியாழமாதல்
  சேர்த்துவிடு நல்லோமகருக்கல் செய்து
பன்மாகநற்சீரகம்கால் பலந்தானப்பா
  பகர்வுடனேகியாழமிட்டு கற்கண்டுசேரே 1292

## இதற்குவஸ்நானம்.

கற்கண்டுசர்க்கரைப் பாலூற்றிக்கொள்வாய்
  கருத்துடனே ரொட்டியதைக்கூட்டியுண்ணி
கற்கண்டுகோதுமையைக் களஞ்சிசெய்து
  நலம்பெறவே சீனியிடடுக் குடுக்கச்சொல்லு
சற்குணமாய் வாழைக்கச்சல் பூச்செருவும்
  சமைத்துமிகக் கொடுத்தாலுமெத்தநன்று
பொற்கனமாய்வாட்டிறைச்சிரக் காடையாகும்
  பொருதியிதைப் பத்தியமாய்ப் பார்த்துச்செய்வீர் ()

பார்த்துசொன்னதல்லாம்மறப்பொன்றில்லை
  பதராமல்ஒமமிட்டுவெந்நீர் தன்னில்
கார்த்துமிகத்தலைமுழுகி யசனஞ்செய்ய
  கடவுள்தன்கிருபையினல் சவுக்கியமாகும்
சேர்த்தயிந்தபாகமது மெத்தநன்மை
  செழிப்பாகக்குணங்குடுக்கும்தேகத்திற்கு
ஏர்த்தபடிப் பண்டிதற்கு சுளுவதாச்சு
  யெடுத்ததொழில் பொய்யாது யிணக்கந்தானே ()

## கேளபாலசித்தறியற்றிய.

### கோடாசுளிமாத்திரை.

இணக்கமுள்ள கோடாசுளி மாத்திரைதானென்று
இன்பமுடன லகுவாகச்சொல்லக்கேளு
வணக்கமுள்ளசாதிலிங்கம்விராகன்யெட்டு
வயணமுள்ளவெண்காரம்விராகன்நாலு
குணக்கமில்லாத்தேவதாரம் விராகன்யெட்டு
குர்த்தவொரு ஆமணக்கின் றூலேநீக்கி
மணக்கவேபதினறுப் பலந்தானப்பா
மங்களமாய்க் கல்வத்திலிட்டிடாயே 1295

கல்வத்திட்டபின்னர் சம்பளத்தின்சாற்றால்
கருணைபெறற்றானரைத்துக் கையான்சாற்றால்
சொற்படியேவரைத்ததற் பின்பாகங்கேளு
சுகிர்தமுடன்முசுமுசுக்கை சாற்றாலாட்டு
வில்பிடித்தசாயலைப்போல் குன்றிபோலே
வீளவியேவுண்டைசெய்துக்குழலில்வைத்து
நல்விதமாய் நவசுரங்களொன்பதுக்கும்
நாடியேசுக்கதனில் குடுக்கநன்றே 1296

நன்றாகமுளகுதனில் குன்மத்துக்கு
நடத்துவாய்வோருண்டை நலமதாக
குன்றானவிப்புருதித் தனக்குற்றானும்
குணமாகவிளக்கெண்ணெய் தன்னில்நீட்டு
கன்றானமகோதிரத்துக் கம்பர்கேளு
கவலையறவெங்காய விளக்கெண்ணெய்காய்ச்சு
மன்றாடிக்கொடுக்க விதநோய்கள்தீரும்
மனமகிழப்பார்த்தறிந்து செய்யலாமே 1297

நேர்வாளம் வாராகனெட்டு சுத்திசெய்துக்கூட்டி வரைத்துக்கொண்டு வலசலமடைத்தபேர்களுக்குக் கொடுக்கசுகமாகும் பத்தியம்பார்த்துவைத்துக் கொள்ளவும் அல்லது முளகுநீர்சாதம் ஆடடிரைச்சி ஒலைவாளைக் கருவாடுப் பத்தியபாகமாகப் பார்த்துக்கொடுக்கச் சொல்லவும்.

### சன்னிபதிமூன்றுக்கு-மேற்படியாரியற்றிய

### சண்டமாருதச் சுடர்த்தயிலம்.

செய்யக்கேள் சன்னிபதிமூன்றுந்தீர
சகத்திரமாய்விளம்புகிறேன்பாகமாக
உய்யவேலிங்கமதுப் பலந்தானென்று
உண்மையுள்ளத் தாளகந்தான் பலமுங்கால்தான்

தொய்யவேபூரமதுக் கால்பலந்தானப்ப
துலங்கியதோர் வீரமதுவரைக்காலாகும்
பய்யவேகேந்திய துவரையபலமதாகும்
பாங்குடனே பிவையெல்லா மொன்ருய்தாச்சே 1298

ஆக்கியபின் விளக்கெண்ணெய் இலுப்பையெண்ணெய்
அன்பானநல்லெண்ணெய் புங்கயெண்ணெய்
தாக்கிடுவாய் நெய்யதுவும் கணக்கதாக
தவராயலேயெடுப்பாய் பலமொன்ருக
தேங்கியேசிறுகவேதான் விட்டரைத்து
தென்புடனே வெண்மையுள்ள சீலைதன்னில்
நோக்கியேதடவியேதான் திரியதாக்கி
நுட்பமுடன் கம்பிதனில் கட்டிடாயே 1299

கட்டிடுவாய் கம்பியதைமேலதாக
கடுகவேதான் பாண்டத்திற்மண்ணீாவார்த்து
ஒட்டியேதான் வெண்மையுள்ள பீங்கான்ருனு
உறுதியுடன் நடுவாகவைத்தபின்னர்
சட்டமுடன் கொளுத்திவிடு தீபங்காண
சரியானநேரத்தில் முன்யெண்ணெய்தன்னை
திட்டமுன் ஞென்ருசக்கலந்துவைத்து
திறமாககொஞ்சங் கொஞ்சமாகவூற்றே 1300

வூற்றிவர சிவந்தநிரம்போலவேதான்
வுயந்ததொருத் தயில்மது விழுகும்பாரு
ஆற்றிவிடாத படிக்கிவிழுந்தயெண்ணெய்
அகமகிழ திரியின்மே லூற்றித்தீரு
காற்றடிக்க லாகாதுக் கவனமாக
கருத்துடனே செய்ததற்பின் பரணிதன்னில்
போற்றியேசேர்த்து வைத்துகற்பழியாக்கன்னி
பூரணியைபூஜைசெய்து புகலக்கேளே 1301

புகலுகிறேன் குங்குமப்பூலந்தான்போடு
புத்தியுடன் கோரோசனையுங்கால்தான்போடு
மிகவுமுறபச்சை சுற்பூரம்வரைக்கால்போடு
மேலானதிவையெல்லா மொன்ருயாட்டி
அகலாமல்வொக்கவேதான் கலந்தபின்பு
அதிவிதமாய் சாம்பிராணிப்பூவுங்கால்தான்
நிகழாமல்கூட்டியபின் வைத்துக்கொண்டு
நீட்டுவாய்சன்னிதனக் கேற்றதாமே 1302

ஆமப்பாமேற்கண்ட வலிசுழுத்தல்
அடங்காதமுயல் முற்சையிசுபுமற்ற
காமப்பாக்கைக் காலின்முடக்குவாதம்
கனத்ததொரு புண்புரைகள் அலறல்குற்றம்
கோமப்பா யெடுத்தவிதப்பாகங்கண்டு
குண்மாகத்தேனதிலே மூன்றுதுளித்தயிமை விட்டு
யேமப்பாகுடுத்துவிட சகலநோயும்
இணங்காம லகண்டுவிடும் விசைந்துபாரே 1303

பார்க்குகின்றசுரம்போகும் குத்தல்போகும்
பதரியதோர் நோய்களெல்லாம் பரந்துபோகும்
சேர்க்குகின்ற குன்மவலி விரைவாதங்கள்
சிதரிநிற்குஞ சந்துவவியனந்தநோய்கள்
தீர்க்கமுள்ள தயிலத்தால் தோஷகுற்றம்
சீக்கிறத்தில்விட்டகலும் செவ்வையாக
கார்க்குகின்ற அம்பலத்தி னருளாலப்பா
கருதியசொற்றவராமல் குணமதாமே 1304

## கஞ்சமலைசித்தரியற்றிய

## இரசபதங்கம்.

குன்றுமல்ரசபதங்கங் கூறக்கேளு
குறிப்பாகச்சொல்லுகிறேன் வினியதாக
நன்றாகசெங்கலுப்பு யிடித்துநன்றாய்
நலம்பெறவேசட்டிக்குள்பாதியிட்டு
குன்றுமல்குகைதனை ியே நடுவிலவைத்து
குணம்பெறவேரசமதனை ஊற்றியேதான்
பன்றாகமேலுமிந்தவுப்பிட்டேதான்
பதராமல்மேல்சட்டிகவித்துமூடே 1305

குகைமுறைகெந்திபற்பாடகம் சடாமாஞ்சு வெள்ளைவகைக்கி இருகளஞ்சி வெத்திலைசார் விட்டரைத்து அகல்போலே பிடித்துவைத்துக்கொள்ளவும்-2-பலம்-ரசம் ஊற்றி கையிறைலமிழ்த்தி சட்டிக்கிவுப்பு மறைய சீலைமண்செய்யவும்.

மூடியேகண்டதொரு வடுப்பின்மேலே
முயர்ச்சிபெற வேற்றிமெள்ளத்தீயைமூட்டி
வாடியேபோகாமல் இரவுபகலெரித்துநன்றாய்,
வயணமுடனாறவைத்துயெடுத்துப்பார்க்க
தேடியதோர் மேல்சட்டிமேலேநிற்குந்
திறமானபதங்கமது படிகம்போலே

நாடியேவோலையினால் வழித்தெடுத்து
நன்மையுடன் பரணிதனிலடைத்து வையே 1306

பெரிப்புசாமம்யெட்டு.

அடைத்தயிந்த பதங்கமதை பனவெல்லத்தில்
அடவுடனேவைந்தரசி யிடையதாக
நடையிதனைகைகாலின் குடைச்சல்மற்ற
நலமில்லாபரங்கிமுதல் சூலைபோகும்
தடையில்லைவாழைப்பழத்திலூட்டி
தவராமல் பால்களஞ்சிமிகவேயூட்டு
இடைமீறிவாய்ப்பிடித்தால் கறுவேலபட்டை
இணையாகக்கியாழமிட்டு கொப்பிளிக்கசெய்யே 1307
ஏழுநாளல்லது யேழுவேளைப்பனவெல்லத்திலிடவும்

அயச்செந்தூரம்.

உகந்தவொரு அயச்செந்தூரம் செப்பக்கேளு
உண்மையுள்ள லாடமதைராவியேதான்
இகழ்ந்துவிடாமல் படிக்குபலந்தானைந்து
இன்பமுடன்சம்பளத்தின் சாற்றிலிட்டு
மிகபுகழ்வாய் மூன்றுநாளானபின்பு
மேன்மையுடன் தண்ணீர்விட்டரைத்தெடுதது
சுகம்பெறவே வெண்ணுவல் பட்டைசாற்றால்
சிதராமல்வைந்துபுடம் வரைத்துப்போடே 1308

புடமிடுவாய் நெல்லிக்காய்சாற்றிலப்பா
புகழ்ச்சியுடன் ஆறுபுடந் தீர்த்துப்போடு
அடவுடனேபார்த்திதனை யெடுத்துக்கொண்டு
அதிவிதமாய் பொற்றலையின்சாற்றாலப்பா
திடனுடனேபத்துபுடந்தீர்த்தாயானால்
திவ்வியமதாய்க் கண்கொள்ளாச்சிவப்புமாகும்
கடவுள்பதந்தொழுதேற்றிக் குழலில்வைத்து
கனத்தபித்தவாய்வுத் தனக்கெடுத்துப்பூட்டே 1309

எடுத்தபலசோகை விக்கல்வாந்திப்பாண்டு
யெதிர்த்தகுணயெலும்புருக்கியினைத்தமேனி
அடுத்தவொரு கழிச்சலன்னதிரேஷம்யாவும்
அகண்டுவிட செந்தூரம்கட்டிக்கேட்கும்
தொடுத்துவிடு அனுபானபறிந்துமேலாய்
துடர்ந்துசெய்தாலின்னம் வெகுநோய்கள்தன்னை
சடுத்தமிட்டுதீர்க்குமப்பா புத்திமான்பர்
சமர்த்துடனேயித்தொழிலைச் செய்வர்தாமே 1310

தொழில்பார்த்து சுளுவாகச்செய்துக்கொண்டால்
தோற்றுதுபலவிதமாய் புதித்தாணு
விழியதனல் நோக்கிமெள்ள அறிவைத்தாண்டி
வியல்புடனே கைபாக மற்றிநின்றல்
ஒழியாது அவிழ்தத்தின் மார்க்கமப்பா
வோதுவாய்பலவிதமாய்ப் பேசுவார்கள்
வழியிதுதான் லேசானமுறையில் தேர்ந்து
வகுத்தபடிப் பண்டிதத்தைப் பார்ப்பீர்தாமே 1311

## இதற்குப்பத்தியம்.

பார்த்திதனைநோயாளருண்ணும்போது
பண்புடனேநெய்பாலாகும் வெண்ணையாகும்
தேர்ந்தபடிவாட்டிறைச்சி கிச்சடியாகும
தித்திததீவராட்சிம் பழமுமாகும்
யேர்த்தபடிகோதுமையின் ரொட்டியாகும்
இன்பமுடன் கொண்டவர்க்கு யேற்குமேற்கும்
சீரத்துவமாத் தெரிந்துணர்ந்து பார்த்துநின்றல்
தெய்வச்செயல் சித்தம்மடியாகுந்தானே 1312

மேலிந்ததேகத்தோர்க்கு யிந்தவிதபாகமாக புசிக்கலாம் மற்றவித நோய்களுக்கெல்லாம் பத்தியமாக வைத்துப்பார்க்கவேண்டும் நல்ல அரிசியாய்ப்பார்தது சமைத்துண்ணவும்.

ஸ்நானஞ்செய்யயெண்ணெய்.

## வேறுவிருத்தம்

ஆகியசொல்லேதென்று அடவுடன்புகலக்கேளு
பாகியசந்தனதிபன் பெருந்த்யிலந்தன்னை
யூகியசந்தனதிபண்பெறந்த யிலந்தன்னை
யோகியாம்பெரியோர்சொன்ன வுச்சிதமொழியதாமே 1313

மொழிந்தசொல் தவறிடாமல் முனிந்துநேர்காகங்கொண்டு
அழிந்திடச்செய்யும் நோயைஅதட்டியே நீக்கும்பாரு
செழிந்திடத் தேகந்தன்னைத் திறப்படப்போற்றிநிற்கும்
முழுதும்நேர்வயணமாக வுயர்படவுணர்வீர்தாமே 1314

படர்ந்ததுமனேகமென்னும்பார்ப்பது வொன்றுதானே
தளமிதுவேறென்றெண்ணி தவறிடாதிருந்தல்நன்று
அடவுடன் செந்தூரத்தாலாகிடும் மனந்தமார்க்கம்
சடமதுத்தெளிவுற்றோங்கி சகலமும் நனவமயாமே 1315

நன்மையாய் முனிவர்சொன்னடத்தையை யறிந்தமேலோர்
இன்பமாய்க்கண்டு தேர்ந்தயிதுவிதப்பாகமொப்ப
அன்புடன்செய்தோர்க்கெல்லா மதிவிதக்குணமதாகும்
வின்பமாய் மொழிந்தநியாய முறையிதுநிசமதாமே 1316

முறையதுசுளுவிதென்று மூத்தவரெனக்குச்சொன்னர்
விறைவுடனிந்நூல் யானும்விருப்பமா யெழுதினேன்யான்
மறையவர்வகுத்தசொல்போல மகிழவே கொர்கவேணும்
குறையிதுவணுகிடாது குணந்தருங்கனகமாமே 13'7

அயச்செந்தூரத்திலனேகவித ரோய்தீர்ந்துக்குணமதாகும்,

## வேதாந்தசித்தரியற்றிய

### நாகபற்பம்-வேறுவிருத்தம்

கனமானநாகந்தன்னைக் களிக்கவேபற்பமாக
இனமாகப்புகலக்கேளு யேற்கனபலமுமைந்து
வினவாகயிலுப்பைநெய்யிலிசை வுறவுருக்கிசாய்த்து
தனமிகமகிழ்வதாகசெய் முறையிருபதாமே 1318

இருபதுதிறந்தான் தீர்த்துயியல்புடன் சம்பளத்தின்சாற்றில்
பெருகவேவுருக்கிசாய்ப்பாய் பெலப்படக்கசடுநீங்க
குருவதுஆவதற்குக் குணமுடன்கறண்டிதன்னில்
கீவுருகவேவுருகிகழ் காநெல்லிவேரதனல்தாக்கே 1319

தாக்கியேகிண்டியாட்டித்தயவுடன் புகலக்கேளு
நோக்கியேசுத்திசெய்வீர் நூன்முறைசுமரதன்னை
ஆக்கிடப்பெலப்படுத்தி வதில்ரெண்டு பலமெடுத்து
தேக்கிடநாகத்தில் தாக்கித்தெளிவுடனரைகக்கேளே 1320

கேளப்பாபனமட்டைச்சாற்றால்கிடியுரவைத்துநன்றாய்
மீளப்பாவில்லைதட்டி மேன்மையால்க்காயவைத்து
நாளப்பரவோட்டில்வைத்து நலம்பெற சீலைசெய்து
வாளப்பாகிதானமாகவளர் கோழிப்புடத்திற்போடே 1321

இரண்டுசாமமரைக்கவேண்டியது

புடத்தினிலறிந்துப் பார்த்துப்பிசகென தெரிந்தால்பின்னும்
திடத்துடனரைத்து முன்போல்சிறக்கவே போடுபோடு
மடத்திடுவைந்திரமு மாகாநலம்பெறப்புட மூந்தீர்த்தால்
நடத்தினிலுள்ள சித்தர்மகிழ்வரென்றெடுப்பீர்தாமே 1322

புடம்-5-திரம்-அல்லது-7-திரம்போடவும்.

எடுத்துநற்பரணிதன்னில் யெழில்பெறவடைத்துக்கொண்டு
அடுத்ததோர் பிணிகள்பார்த்து அடவன்குடுக்கான்று

தொடுத்திடுமெக்ஷயங்கள் காசந்தோன்றிடு மிருமல்வாந்தி
கொடுத்திடுங்கிருணி தோடசுரமுதலணுகாதென்றே 1323

காணுதுபித்தவாய்வு கனத்திடுமதிசாரங்கள்
தோணுதுபவுத்திரங்கள் துயறதீர்க்குமப்பா
வீணனதென்றுநீங்கள் விரசுடன்பேசவேண்டாம்
கோணுதுவறிந்தபேர்க்குணமது வாகுமென்றே 1324

ஆகியவியாதிதன்னை அடவுடனின்னங்கேளு
யோகியாநின்றபேர்க்கு யுற்றசொல்தவறிடாது
ஆகியநடையைக்கண்டு அறிவினில்புக்கியேதான்
போகியென்றுணர்ந்திடாமல் போதிப்பார் சுயமதென்றே 1325

போதித்தநாகபற்பம் போட்லாம்வியாதிகண்டு
நீதிசொற்றவரிடாது நிலைபெருமொழிதப்பாது
வீதியாம்மனதைத்தேற்ற விளங்குமாஞ் சோதிதானும்
வாதியென்றேற்றும் வீண்சொல்வாய்மை அந்திரம்போலாமே 1326

நாதாந்தசித்தரியற்றிய

காந்தசெந்தூரம்.

அந்திரத்தொழில்போலூ சிவதனையேபிடிக்குங்காந்தம்
மந்திரமெனச்சொல்வார்கள் மதிவல்லோருரைத்தபாகங்
விந்தைசேர்பலமும் பத்துவினவுடனெடுத்துக்கொண்டு
சிந்தைநேர்படியே செய்யதிறமையைப் புகலக்கேளே 1427

விருத்தம்.

புகலுகிறேன் கொல்லனுடவுலையின்மீது
புகழ்பெறவேகரியனல்தான்மிகவேமூட்டி
அகலாமல்காந்தமதை நவில்லவத்து
அடவுடனே கரியதனல்மேலேமூடி
இகலாமல்லூதிவிடத் தீபமேறி
யேறகமொண்ணுவனல் பிடித்து கனல்தானுகும்
தகவிதனைப் பறக்கநன்றாயூது
தணலேறிகாந்தமது சிவந்துபோமே 1328

சிவந்தபதந்தனைத்தீப் பார்த்துயெடுத்தாரவிட்டு
சீர்பெறவேகலவத்தில் போட்டன்பாக
நவமானப்பொருளிதென்றுத் தோத்தரித்து
நன்மையுடன் முனைறைப்பாய்மைபோலப்பா
தவமானபேர்களுக்குச் சொன்னசூட்சம்
தவராதுயித்தொழிலின் மார்க்கபோதம்

கவரானசெந்தூரந் தனையெடுத்து
கர்த்தாவைநினைத்துமிகக் கொடுப்பீர்தானே 1329

## வேறுவிருத்தம்.

கொடுத்திடுபாண்டுஜன்னி குணமில்லாகாமாலைக்கு
தொடுத்திடுவாய்வுமூர்ச்சை சுபமிலாவியாதிக்கெல்லாம்
எடுத்திடும்சுவாசம்மூர்ச்சை யெதுவிதவிக்கலக்கும்
அடுததிடுதேனிலிஞ்சிச்சாற்றிலணைத்துச்சாடே 1330

அணைத்திடுமுயலினெய்யில் அழகியமனோரஞ்சிதத்தின்
துணைபெறும்லேகியத்தில் துடங்கியரசாயனத்தில
பிணையெனவருந்துகின்ற பேர்நிழல்நோய்களுக்கு
கணையவேபணவிடைதானூட்டக் கடவுளருளுண்டாமே 1331

இதற்குஸ்நானம் சந்தனுதித்தயிலத்தில் முழுகவும் பத்தியம் இச்சாபத்திய மாகவைத்துக்கொள்ளவும்.

## புலிப்பாணி முனிவரியற்றிய

### கற்பகமுத்தொளிபற்பம்

அழியாதப்பொருள்தனையே பணிந்துபண்பாய்
அதிவிதமாய்ப் புகலுகிறேன் கற்பகத்தின்பற்பம்
தொழிலாகச்செய்தவர்க்குக் குறைவொன்றில்லை
தோய்ந்தவர்க்குப் பஸ்தமுறுமபாகமப்பா
விழியானவிழியதுபோல் விறக்கமாக
விவேகமுடனுணர்ந்து மிகப்பார்க்கநன்று
பழியானகாரியத்தை வகலத்தள்ளி
பக்கவிசுவாச முடனுகந்து செய்யே 1332

செய்யக்கேள் கல்மதந்தான்பலந்தானென்று
சீர்சிறந்தகல்னர்தான் பலமுமொன்று
துய்யதிருசலாசத்துப் பலந்தானென்று
துரிதமுடன்நல்லசலமதனிற் போட்டு
அய்யமறக்காச்சியேபின் கழுவியேதான்
அன்புடனேகல்வத்தில் போட்டபின்பு
உய்யவேகொங்கிலவன் பட்டைசாற்றால்
உயர்பெறவே வரைத்துநன்று யெடுப்பீர்தானே 1233

எடுத்துமிகவில்லைசெய்து ரவியிற்போட்டு
யேற்கனவேயெடுத்திதனை யகலில்வைத்து
தொடுத்படி சந்துவாய் சீலைசெய்து
துலங்கவேபதினைந்து யெருவிற்போடு

அடுத்ததொரு முச்சரக்குமொன்றதாகி
அதிசெயமாய் நீறியதுவெண்மையாகும்
சடுக்கமில்லாமுத்ததுவும் பலமதொன்று
சுகிர்தமுள்ளபவழமது பலங்கால்தானே 1334

பலமதென்றவிதப்படினம் கல்வத்திட்டு
பண்புடனே பூலாவின்பழத்தின்சாற்றால்
கலனகலநெட்டடஙக மட்டும்வாட்டி
கருத்துட்னே வில்லேதட்டரவி யிற்போட்டு
பலன்பெறவே வோட்டில்வைத்து முன்போலப்பா
பதராவற்புடந்தனிலே போடுபோடு
பெலப்படுத்தி யிப்படியேவாறுதிறம்போடு
பெருமயுள்ள பற்பமதுத்தவளமாமே 1335

தவளமென்றபற்பமதை வெண்ணெய்தன்னில்
பரிவுடனேகாசிடை தான் கொடுப்பீராகில்
பவளமென்றநற்குணத்தால் வெள்ளைதன்னை
பத்துநாள்தனனிலே தான்பகர்வாய்நீக்கும்
குவளையுள்ள நீரடைப்பையகற்றிப் போடும்
குருவருளால் மேனிதனில்குளிர்சியேறும்
சிவபரமகிருபையது நாடிநின்று
செய்தவர்க்கு வெகுநன்மையாகுந்தானே 1336

நன்மையுள்ளபேர்தனக்கு ஆகுமாகும்
நாடாதுதர்மவினை யெப்போதுந்தான்
புன்மைகுணம் நீக்கிவிட்டால் செவ்வையாகி
பூதலத்தில்பெருகிநிதம் வாழலாம்பார்
தின்மையொன்றும் நினையாதேவிகடமாக
திருவிரக்கப்பதமனை மறந்திடாதே
உன்மனைத்தாய்க்கார்க்குகின்ற வொளியில்நின்று
உற்றமத்தில் புகழ்ந்திருக்க வுறுதியாமே 1337

உறுதியுள்ள க்ஷயத்துக்கும் புண்புரைக்கும்
வுலர்ந்தவுடலான பலநீர்கட்டுக்கும்
பொருதியேதான் நெய்யிலிடுத்தேனிலூட்டு
பொங்கமுட னீந்திடவேபோகுங்காசம்
கருதியேபத்தியங்கள் பார்த்துக்கொள்ளு
களிக்கவேமனோரஞ்சித லேகியத்திற்றானும்
கருதியேதான் குடுப்பதன்றிப் பன்னீர்பூவின்
சுகமானலேகியத்திற் குடுப்பீர்தானே 1338

லேகியங்கள் ரசாயனங்க ளிதனிற்சொல்லும்
நேர்மையறிந்தேகொடுக்க வியாதியெல்லாம்
ஆகியபோசிறந்தபடி நிசமதாகும்
அம்மம்மா ஆயிசொலலவறிந்துசொன்னேன்
யூகியாய்த்தெளிந்தவர்க்கு வுண்மையாகும்
யுசிதமதையெவராலு முறைக்கப்போமோ
யோகிபதமுனிவருரைத் துணர்ந்தோருற்ற
வுயர்ந்தமொழித்தவருமலுறைத்ததென்றே 1339

உறைத்தபடியல்லாது வேறுமுண்டோ
வுண்மையென்று நினைத்தோர்க்கு வுண்மையாகும்
மறைத்திதனில் யான்புகலவில்லையப்பா
மாபெரியோ ரறிவுகந் துணர்ந்துகொள்வர்
குறைத்தமொழிபேசாம லிந்தநூலில்
குறிப்புடனேயொழியாம லவிழ்தந்தன்னை
அறைந்தவிதங் கண்டுணர்ந்து தெரிந்தபேர்க்கு
அதிசயிக்கஞானவழிக் கைகூட்டுந்தானே 1240

சித்தானந்தரியற்றிய

அமுர் தசயக்குளிகை-வேறுவிருத்தம்.

வழியானபாகம் வகையுடன்புகலக்கேள்
விழியானவாளமெடுத்திடுவோர்பலம்
தொழிலானபூரம் துகைநிறைகால்பலம்
ஒழிலானசீனப்பட்டையிணக்கிடே 1341

பட்டையேலக்காய் பகர்வுடன்கூட்டனும்
சட்டமாய்வகைக்கி சார்ந்தெடுக்கால்பலம்
நட்டம்வராமல் நயன்றசரக்கதை
திட்டமெனத்தொழில் செய்துமுடித்திடே 1342

முடித்திடக்கோதுமை நொய்யைக்குணம்பெற
வடித்திடக்கஞ்சியாய் வணக்கமாய்க்காய்ச்சியே
படித்திடமாகப் பண்புடனெக்கவே
இடித்திடவரைத்து எடுப்பீர்நற்பிசினியே 1343

பிசினியைப்போல பெட்புடனூட்டிடு
சுசிகரமாகத் துலங்கமணக்குமாம்
வசிகரமாக வாழ்த்தியெக்குன்றிபோல்
சசிகரன்போலே சார்ந்தகுணமிதே 1344

சார்ந்தவிதப்படி சமர்த்தியமாகவே
தேர்ந்தபடியே தீர்க்கமாயோருண்டை
கூர்ந்தேகொடுத்திடக் குலைநோய்சுரமுதல்
பேர்ந்துவிடும்பழ மசலமென்றதே 1345

மலசலக்கட்டு வயிற்றினிரைச்சலும்
பலவிதவாய்வுப் பகட்டியவையமும்
உலவியநோய்களை யுதைத்துயிகற்றிடும்
கலனதுவில்லைநேர் கருணைசொல்லென்றதே 1346

பத்தியம்.

சொல்லுவேன்பத்தியம் சுருணமாகவே
நல்லுறவாகபன்ற வாட்டிரைச்சியும்
மெல்லுரவாக விகிதத்துடன்சூப்பும்
சொல்லுறவாகச் செய்துபுசித்திடே 1347

இரண்டு குன்றியிடைக் குளிகைசெய்துக் கொள்ளவும்.

விருத்தம்.

திடனுககரிபொரியல் வுண்ணலாகும்
தீர்க்கமுடன் ரொட்டிசர்க்கரையுமாகும்
அடவுடனேவெந்நீர் நறசாதமாகும்
அன்பாகமற்றுநாள் பெல்லாமாகும்
கடவுளர்க்குப்பாபந்து மிகநடக்கவேணும்
கண்மணிபோல் இரவுபகல்துதிக்கவேணும்
தடங்கலில்லே வியாதியெல்லாமாறிப்போகும்
தவநிலையில்சாதித்து நிற்கநன்றே 1348

கியாழம்.

நிற்குகின்றகியாழமொன்று சொல்லக்கேளு
நிதானமதாய் சுக்கதுவும்பலந்தானப்பா
பொற்கணேசீரகந்தான் பலங்காலப்பா
பொடித்துமிகக் கியாழமதாக்காற்கியேதான்
சற்குணமாய்சர்க்கரைதான் கொஞ்சமிட்டு
சலியாமல்சாயங்காலம் குடிக்கநன்று
துற்சனத்தைநீக்கிநின்றால் லெல்லாமாகும்
துயரகலசாதித் துத்துடங்குவீரே 1349

இமையகிரிசித்தரியற்றிய

பவழமாணிக்கக் குழம்பு

துடச்சியுள்ள பவழமாணிக்கமென்றே
துலங்குகின்ற பழம்பதனைப் புகலக்கேளு

படர்கையுள்ள லிங்கமது பலந்தானென்று
பாங்கானசித்தாமணக்கு பருப்புமைந்து
மடக்குதற்குலவங்கப்பூ யேலக்காதான்
மகிழவேதான் பலமறைதான்கூடக்கூட்டு
நடக்குகின்றபூரமது வரைக்காலப்பா
நல்லசுத்தி செய்ததொருவாளந்தானே 1350

வாளமதைச்சாணிதனி லவித்துபின்பு
வகையுடனே நஞ்சுதனீங்கிப்போடு
தாளமுள்ளசம்பளத்தின் சாற்றிலோர்நாள்
தயவாகமோருதனி லூறப்போடு
காளமுடன்பனவெல்லந் தண்ணீரிலிட்டு
கனற்கறப்புநீங்கவேதான் காய்ச்சிப்போடு
கோளமிட்டகளங்கமது நீங்கிப்போகும்
குறிப்புடனே சேர்த்துவிடபயமும் போச்சே 1351

போச்சப்பாவீரலென்ற கனத்தலெல்லாம்
பொய்யல்லவறிந்தவர்க்கு மெத்தநன்று
ஆச்சப்பாநேர்வாளமூன்று பலமுங்கூட்டி
அதிவிதமாய்ச்சமபளத்தின் சாற்றினாலே
வீச்சப்பாவொருசாம மறைத்தபின்பு
விளங்கவேதான் பரணிதனிலடைத்துவைத்து
காச்சப்பாகுன்றியிடை னேர்மைப்பார்த்து
துவிட்டுநல்லதண்ணீர் குடிக்கச்சொல்லே 1352

சொல்லென்றமார்க்கத்தை யுணர்த்துகொண்டால்
சூட்சமது தவிராதுப்பண்டிதற்கு
கல்லென்றவிதமாகத் தெளிந்துபார்த்து
களிப்பாகவீந்திடவேகுணங்கலுண்டு
மல்லென்றவழியன்ன வயணமென்ன
மதிவிடுத்துத் திரியாமல் மனதிலுண்ணு
வில்லென்றசாத்திரத்தின் நுட்பமாய்ந்து
விவேகமெனும் வீட்டுக்குள்விருதுபோடே 1353

## வேறுவிருத்தம்.

விருதுபோல்நியமம் விளங்குதும்மெய்தனில்
கருதுவுனக்குள் களங்கமில்லாமலே
பொருதுநற்பாகத்தில் போன்றவிளங்கிட
கருதுகொண்டேற்றக் கண்கள்துலங்குமே 1354

## பத்தியம்.

துலங்கவேசூப்புந் துணுவு கோதுமை
இலங்கவேபாலும்யியல்புடன்சர்க்கரை
நலங்கமிழ்போலே நயன்றுப்புசித்திட
பெலங்கனியாகும் பேர்பெரலாகுமே 1355

## வந்தவாசித்தரியற்றிய

### பவழபற்பம் - வேறுவிருத்தம்.

பேர்பெரபவழபற்பம் பிரியமாயுரைக்கக்கேளு
நேர்பெரசெய்துகொண்டால் நிதானமாய்வியாதியெல்லாம்
சீர்பெரதீர்ந்துபோகும் செழிப்புடன்வாய்ந்துபாரு
தோர்பெரப்பவழமைந்துப பலமதுவெடுப்பீர்தானே 1356

எடுத்துசம்பளத்தின் சாருலிலகவே வூரப்போட்டு
தொடுத்திடுமூன்று நாள்தான்துடியதா விருந்துபின்னர்
அடுத்திதைக்கழுவிநன்றாய் அன்புடன்காயவைத்து
தொடுத்திடவெள்ளெருக்கன் பாலைக்குணமுடனூற்றுவீரே 1357

வூற்றியோர் சிருகுடுவைதன்னில் வுயரவேசிரம்பவிட்டு
போற்றியேவோடுமூடிப் புகழ்வுடன்சீலைசெய்து
மாற்றியேபொயத்திடாமலமதியதாய் அன்பத்தைந்து
தேற்றிடயெருவிற்போட செய்முறபற்பமாமே 1358

பற்பத்தையென்னசொல்வேன் பளிங்கதுபோலேயாகும்
உற்பனமெனவே யெண்ணிவுயர்பெறவெடுத்துநன்றாய்
பொற்பதகடவுள்தன்னைப் போற்றியேபணிதலேற்றி
அற்புதமாகபின்பு அடவுடன்புகலக்கேளே 1359

அடவுடன்பற்பந்தன்னை அணையவேபாகங்கேளு
திடனுடனரைத்துவிக்கச் செழிக்கவேபாகமாக
நடனப்பூலாப்பழத்தின் ரசமதைவிட்டுமேலாய்
உடனேதானரைத்துநன்றாய் வுணர்வுடன் வில்லைபோடே ()

வில்லைபோல் செய்துகாய்ந்து விரவுடனெடுத்தோ ரோட்டில்
நல்லசொல்தவரிடாமல் நயன்றுமண்சீலைசெய்து
அல்லல்கள் தீரவேண்டி அதிவிதமாகவேதான்
சொல்லியபடினமாகத் துடர்ந்திதை முடிப்பீர்தானே 1360

முடித்திடக்கேட்பீரப்பா முயற்சியாயெருதான்பத்து
படித்திடக்கீழ்மேலிட்டுப் பதித்திடுவுள்ளேதானும்
வடித்திடப்புடத்தைத் தீருவக்கினிமிகுத்ததாலே
கடிக்கமிழ்காப்புபோலே கருணைசேர்பற்பமாமே 1361

## பத்தியம்.

கருணைசேர்பற்பந்தன்னைக் கருத்துடனெடுத்துமிக்க
பெருமையாய்ப்பரணிதன்னில் பிரியமாய்வைத்துமேலாய்
தருமமாய்தெய்வதோத்திரம் தவராமல் முடித்துஞான
குருவருள்பெருகவேண்டி குவிப்புடனுயந்துபாரே 1363

வேண்டியபவழந்தன்னை வியாதிகண்டியற்றநன்று
தூண்டியேமுசல்நெய் தன்னில்துயரறபண விடைதானப்பா
காணடிபம்போலே நிற்குங்கனத்ததோர் க்ஷயத்திற்கேதான
பூண்டிடக்குடுத்துப்பாருப் புகழ்வுடன் குணமதாமே 1364

புகழ்வுடன்மிகவேகொண்டால் பொருதுமாமிகவேபற்பம்
அகமகிழ்வாகச் சொன்னவதிசெபரசாயனத்திலப்பா
திகழவேக்கொடுப்பீராகில் சீராகவியாதிநீங்கும்
தகமைசேர் நெய்யில்வைத்து சமர்த்துடன் புசிக்கநன்றே 1365

நன்றதாய்லேகியமுமிந்த நடனநூல்தன்னில்சொல்லும்
என்றதைதேர்ந்துப்பாத்து இசைவுடன் கொடுப்பீராகில்
கன்றிதட்சயக்காசமீளை கனத்ததோர் பிணிகளெல்லாம்
ஒன்றியேநீங்குமென்றே வுரைத்தசொல்தவறிடாதே 1366

## பத்தியம்.

சொல்லும்பத்தியத்தைக் கேளுசுகிர்தநேர் முயலுமாகும்
நல்லுறவான காடைநயன்றதோ ராட்டிறைச்சியாகும்
செல்லுநற்பாலும் நெய்யுஞ்சிறக்கவே யுண்ணநன்று
அல்லலுந்துன்பம் நீங்கஅசனமுற்றிணைக் கொள்வீரே 1367

## இதற்குஸ்நானம்.

கொள்கையாய் சந்தனாதிக்குணமுறுந்தயிலந்தன்னில்
தெள்ளியேபடியே ஸ்நானஞ்செய்திட மெத்தநன்று
வள்ளலின்கிருபைமேவி வானந்தப்பெருமையாகும்
அள்ளியசெம்பொன்போலே அதிசெயமாகும்பாரே 1368

## கியானநாதாந்தசித்தரியற்றிய

### தாளகபற்பம் - விருத்தம்.

அதிசெயிக்கத் தாளகத்தின்பற்பந்தன்னை
அறிந்தவர்க்கு சுளுவாகச்சொல்லக்கேளு
துதிசெயிக்கத்தாளகந்தான் பலமொன்றப்பா
சுண்ணாம்புக்கல்லில்வைத்து இருபத்தைந்து
மதிப்புடனேநீத்தலசு யெடுத்துப்பாரு
மசடானக்குணவிதங்க ளகண்டுபோகும்

விதியெனவேவரசம் பட்டைவாகைமூலம்
நேர்ந்ததனை இவைமூன்றும் சாமபலாக்கே 1369

மூன்றுமொரு மிடையாகவெடுத்துக்கொண்டு
முனைபெறவேபுதுப்பாண்டந்தன்னிலேதான்
ஈன்றமொழி தவருமல்சாம்பலிட்டு
இணையுடனேதாளகத்தை நடுவில்வைத்து
ஆன்றலுடன் மேலுமந்தசாம்பல்தன்னை
, அடவுடனேபோட்டிசைத்துவமுக்கியேதான்
கான்றலுறவாய்தனக்குச் சீலைமண்செய்து
கணக்குடனே இருசாமம்யெரிப்பீர்தானே 1370

இருசாமங்கமலம்போல் தீபம்போட்டு
யெடுத்தாற்றிப் பதராமல்பார்ப்பீராகில்
கருகாமல்தன்குலம்போல நீறிநிற்கும்
களிப்புடனேபற்பமதைப் பதனமாக
பெருகவேசிமிழ்தனிலே வைத்துக்கொண்டு
பெரியக்ஷயமந்தாரக் காசத்திற்கும்
சுருக்கலுள்ளயிளைப்பு முதலிருமலுக்கும்
சாதித்துதீர்க்கமிகக் கொடுப்பீர்தானே 1371

கொடுப்பதற்கு அனுபானம் புகலக்கேளு
புகழ்பெறவேதிரிகடுகுத் தேனிலாதல்
அடுத்தசொல்லாம் முயலநெய்யிலரசயானத்தால்
ஆராய்ந்துபணவெடை தானீய்வீராகில்
கடுத்தபொல்லாநோய்நீங்கும் பத்தியமாயுண்ண
கர்த்தாவின்றுணையமென்றேகருதுவீர்கள்
தொடுத்தமொழிபொய்யெனவே நினைக்கவேண்டாம்
துயரகலச்செய்தவர்க்குத்துலங்குந்தானே 1372

பத்தியம்.

துலக்கமுள்ளவாட்டிரைச்சிகாடையாகும்
துணையானமுசல்கறியுங்கிழங்காகுதும்
கலக்கமில்லாப்பால்நெய்யுங்கோதுமையுமாகும்
கருணையுள்ளவாட்டுக்கால்சல்லியாகும்
பெலக்கவேதான்மிளகுநீர்சாதமுணடு
பிரியமுடன்பார்த்து மெள்ளவுண்ணவேதான்
சிலக்ஈநத்தகடி பிஷங்களறிப்புமேகம்
சீக்கிரத்தில்நீங்கிவிடுந்திறமைதானே 1373

ஸ்நாநஞ்செய்ய சந்துருதிதைலம்.

நீங்கிவிடும்மிதிற்சொன்ன பற்பத்தாலே
நிதானமுடன்பார்த்துணர்ந்துசெய்வீராகில்
தாங்கியதோரவிழ்தத்தால் எல்லாநோயும்
தப்பாமல்தீருமப்பா சார்ந்துபாரு
ஏங்கியேதிரியாமல்மனதைத்தேற்றி
எப்போதுந்தெய்வதுணைதன்னைத்தேடு
தூங்கியேவிழுகாமல் தியானஞ்செய்யில்
துலங்குமாம்வேதாந்தச்சுருதிதானே 1374

## காசிபரியற்றிய

### கரியநாதக் குழம்பு

சுருதிதனில்சொன்னபடிக் கரியநாத
சுத்தமுள்ளக்குழம்பதனைப்புகலக்கேளு
நிருதியைப்போல்பிரகாசமாக னேயை
நீக்கிவிடுங்கண்டறிந்துசெய்யநன்று
கருதியதோர்காரீயம் ரசமும்நேராய்
கணக்குடனே வகைக்குவொருபலமதாக
பொருதிவிடவுருக்கிநன்றாய் சேர்த்துக்கொண்டு
பின்பிதனில்பெருங்காயங்கூடச்சேரே 1375

பெருங்காயம்நாவியொடுகாந்தம்கெந்தி
பேசரியநெரிவிஷமுங் கரியசீரகமுஞ்சுக்கு
திருந்தவேதான்திப்பிலியும் வாய்விளங்கம்
தென்புடனேவகைக்குவொரு பலமதாக
விருந்ததுபோல்சுத்திசெய்து வொக்கக்கூட்டி
வியல்புடனேநேர்வாள மிடைநேர்சேர்த்து
வருந்தவேவுத்தமத்தாளிச்சாற்றால்
வயணமுடனொருசாம மரைப்பீர்தானே 1376

அரைத்தபின்புதேங்காய்ப்பால்விட்டுநன்றாய்
அதிவிதமாய்வொருசாம மரைத்தபின்னர்
வுரைத்தபின்புதேங்காயின் றோட்டைச்சுட்டு
வுயர்பெறவேமுன்பாலிலுரைத்துமைபோல
விரைத்துவிடக் கலக்கமட்டும் விடடுவாட்டு
வினவுடனேஎடுத்துநல்லசிமிளில்வைத்து
கரைந்துவிடாதப்படிக்கி பார்த்துமேலாய்
கண்ணுற்றேபதனமிடு பகர்வதாமே 1377

பகர்வுடனேசன்னிபதிமூன்றுக்குந்தான்
பாய்ச்சிவிடும்படியளவு இஞ்சிச்சாற்றில்

சுகம்பெறவேகுமரகண்டவலிக்குத்தானும்
சுகுணமுடன்தேனதிலேநீட்டிப்பாரு
தகமையுடன்சுரங்கள்முதலானதிற்கு
தப்பாமல்சுக்குக்கியாழத்திலீவாய்
அகமகிழநாய்கடிக்கு விஷத்துக்கெல்லாம்
அன்பானசம்பளத்தின்சாற்றில்தானே 1378

சாற்றிலிடுகுன்றியிடை கண்ணில்தீட்டு
சர்வபரம்பரையருளால்நீங்கிப்போகும்
போற்றியேகுளிர்சுரத்துக்கப்பாநியும்
பிரபலிக்கக்கொடுவேலிக்கியாழத்திலீவாய்
மாற்றிவிடுமனந்தநோய் வணுகிடாமல்
மறவாமலனுபானந் தெரிந்துசெய்வாய்
யேற்றியசொற்றவருமலிணங்கினோர்க்கு
யெப்போதுங்குறைகணுகாதுபாரே 1379

## இதற்குப்பத்தியம்.

பாரப்பாமிளகுநீர் சாதமூட்டு
பிரியமுடன்உப்பதனை வறுத்துக்கூட்டு
பெரப்பாகோதுமையின் கஞ்சிகூட்டு
பெலக்கவேதான் வெந்நீரைக்குடிக்கச்சொல்லு
நேரப்பாகடுகுநல்லெண்ணெயாகா
நிதானித்துப்பண்டிதத்தைநேர்ந்துபாரு
ஆரப்பாவறிவார்களாசான்சொல்ல
அகமகிழக்கற்றுணர்ந்தால்பெரியோர்தானே 1380

### சரக்குசுத்தி.

நேர்வாளம் எருமைச்சாணியில் நெரிவிடம்சாணத்தில் சம்பளச்சாற்றி லூரப்போடவும் காந்தத்தை கொல்லனுலையில் காய்ச்சி கோமியத்தில் துவைக்கவும் கெந்தியைச்சட்டியிலிட்டு வெள்ளாட்டுக் கொழுப்பிட்டு வுருக்கி பசுவின்பாலில் வூற்றவும் இரதத்தை கற்கண்டிட்டரைக்கவும் காரீயத்தை கற்றாழைமடலின்ரசத்தி லுருக்கிச்சாயக்கவும் இப்படியாகச்செய்த சரக்கைக் கூட்டிக்கொள்ளவும்.

சன்னி பதிமூன்றுக்கும் கலிக்கம்.

## வேறு விருத்தம்.

பெரியதோர்கலிக்கமெல்லாம் பேர்பெறச்செப்பினார்கள்
சிறியநற்கலிக்கமொன்று செப்புவேன்கேளுகேளு
அறியவேநேர்வாளத்தை அடவுடன்சுத்திசெய்து
குறியவோர்பருப்பில்கொஞ்சங்குணமுடனுரைப்பீர்தாமே ()

உரைத்திடுசம்பளத்தின்சாற்றிலூற்கனமாகவேதான்
விரைவுடன்சன்னிக்கேதான் வியல்புடன்கண்ணில்தீட்டு
மறைத்திடுங்குணத்தைமாற்றும் மலரிடுஞ்சீரல்போகும்
திரையெலாம்அகலுமப்பா சீர்பெறஅறிவீர்தாமே 1382

ஆக்கிருணம்.

கம்மார்வெற்றிலைச்சாற்றிலுமுரைக்கலாம்

அறிவுடன்விரட்டிதன்னில் அடவுடனெருக்கம்பாலை
குறியவேயூட்டியூட்டிக்குலாவவேரவியிற்போடு
பிரியமாய்வைத்துநாள்தான் பெலமுறவூட்டியேதான்
நெறியுடன்புடத்தைப்போட்டுநிலைக்கவேயெடுப்பீர்தானே 1383

எடுத்துநற்பற்பந்தன்னை யிணக்கமாய்ச்சிமிழில்வைத்து
அடுத்திடும்ஜன்னிதோஷம் அதிவிதத்தலைநோயிற்கும்
தொடுத்திடுரேணுவாகத் துரிதமாய்நாசிக்கேற்ற
சடுத்தமதானநோயைச் சாதித்துவிரட்டுந்தானே 1384

சிவயோகசித்தரியற்றிய

புண்புரைக்கி சிலையெண்ணெய்.

சாதித்துப்புண்புரையைத் தீர்க்கசமர்த்துள்ள யெண்ணெயென்று
போதித்தலாகாதிந்தப் புகழ்திருநூலில் சொல்லும்
பேதித்த ரசகற்பூரம்பிரபலகெந்தி சூதம்
சோதிதக்காசு கட்டிசுந்தரத் துருசுதானே 1385

சுந்திரமுருதார் சிங்கிசூட்சமாம் வகைக்கோர்காசு
மந்திரமாகயெல்லாம் வயணமாயரைத்துக்கொண்டு
விந்தையாம்தேங்காயெண்ணெய் விகிதநேர்புங்கயெண்ணெய்
கந்தமாம்பலந்தானைந்தில் கலந்துவிட்டெரிப்பீர்தானே 1386

எரித்தபின்பு எண்ணெய் சகலபுண்புரைக்கித் தடவவும்

ஆனந்தசித்தரியற்றிய

சகலவியாதிக்கும் நவரத்நசந்தனாதித் தயிலம்.

பலவிதமாய்த் தொடுத்தபொல்லா நோய்கட்கெல்லாம்
பண்பாகுப்பாகமொன்றுப் பகரக்கேளு
நலவிதமாம்சந்தனந்தான் பலமும்பத்து
நயனசெஞ்சந்தனந்தான் பலமுமஞ்சு
கலனகலவிடித்துவொரு பாண்டத்திட்டு
களிக்கவேரெண்டுபடித் தண்ணீருற்றி
விலகாமல்யெரித்துவரைப் படியதாக்கி
விளம்புகிறேன் பின்புகலும் பாகங்கேளே 1387

பாகமதாய்வடிகட்டிக் கியாழந்தன்னைப்
பரிவுடனே மறுபாண்டந் தன்னிலூற்றி

ஆகவேதான்நன்னாரிவேர் வெட்டிவேரும்
அன்பானவிலாமிச்சை அருகன்வேரும்
யோகமதாம்சங்கம்வேர் கீழ்க்காநெல்லி
யுத்தமையான்சிறுகீரை மணத்தக்காளி
தாகமுறஅசுவகெந்தி வீழிவேரும்
தயவாககரியிலந்தைபொன்னாங்கணின்வேரே 1388

வேர்வகைக்கி வோர்பலந்தானிடித்துப்போடு
வினவுடனே துளசிபட்டைப் பூலாப்பட்டை
பேர்வகையாம் பூவரசுபட்டை வள்ளிச்சாறும்
பிரியமுடன்வகைக்கியொரு பலங்காலாகும்
நேர்வகையாங் கொட்டிப்பூ ஆம்பல்நெய்தல்
நிதானிக்கசெங்கழனி ஆவாரைப்பூவும்
சீர்வகையாமாதளம்பூ பன்னீர்ப்பூவும்
சித்திரம்போல் வகைக்கி லரைப்பலந்தான்போடே 1389

தானென்றசடாமாஞ்சி வால்மிளகுவோமம்
தனியானசெண்பகப்பூதேவதாரம்
நானென்றவதிமதுரங்கஸ்தூரிமஞ்சள்
நயன்றகுணசித்தரத்தை வசம்புகோஷ்டம்
தேனென்றவக்ராகார ஏலரிசியேலக்காயும்
தீர்க்கமுள்ளகிச்சிலிக்கிழங்குசதாப்பூபத்ரி
மானென்றத்தொழாயிலையுஞ்சீரகமும் இஞ்சி
மகிமைபெறக்கிரும்புமுசுமுசுக்கைதானே 1390

தானேசீந்தியொடுகோட்டாத்திப்பூ
தழைத்தகரியசீரகமும் நெல்லிவற்றல்
பானைமுளகுடனே தாணிக்காயும்
பண்பானவாய்விளங்கம் மீதுரோகணியுமிக்க
கோனைபொன்னுவாபீரயோடு வோலைப்பூவும்
குரிப்புடனேவகைக்கி பலமரையதாகும்
தேனனதிவையெல்லா மிடித்துப்போடும்
தீர்க்கமுடன் பின்வகுக்கும் மொழியைக்கேளே 1391

ஆலம்விழுதுச்சார் பலம் மூன்று தென்னம்பூச்சார் பலம் மூன்று கூட்டவும்.

மொழிந்தபடிநல்லெண்ணெய் ஒருபடியிலப்பா
முயற்சியாய்ச்சொன்னதெல்லாமொன்றாய்க்கூட்டி
விழித்திடவேநெய்யதுவும் படியரைக்கால்
விரவிவிடுப்பாகத்தில் மேன்மையாக

அழியாமல் வடுப்பேற்றியெரிக்கும்போது
அனல்தானுமிஞ்சாம லடவாயப்பாரு
சுழியாமல்நீர்வற்றிக் கடுகதுவுங்கீழாய்
சுகுணமுடன்யெண்ணெய நிற்கும்பதத்தைப்பாரே 1392

## வேறுவிருத்தம்.

பதமுடன்காய்ச்சிப் பகர்வுடனெடுத்து
இதமுடனூற்றி யெடுத்திறுத்தேதான்
விதமுடன்பீங்கான் விளங்கவடைத்திடு
சதமுடன் பின்போர்பாகத்தைக்கேளே 1393

பின்னிதில்குங்குமப்பூ வொடுகோரோசனமும்
பன்னியபச்சைகற் பூரங்கஸ்தூரியும்
நன்னியபுனுகு நயன்றிடும்சட்டமும்
கன்னியமாகக் கணக்கதுகேட்டிடே 1394

கணக்கதுவகைக்கிக்கால் பலமாகவே
மணக்கவேயெண்ணெயில் மாட்டிக்கலந்திடு
பிணக்குகளில்லை பெரியோர்முறையிது
இணக்கமுடனே இசைந்துற்றெழுதிடே 1395

தொழுதுபேர்போற்றிடுத் தூயக்கடவுளை
முழுதுபேர்பெற்றிரு முனைகண்டசோதியில்
வழுவ துயிலையே வானந்தசொல்லினம்
எழுதும்வகையினம் மெம்பிரான்காப்பதே 1396

காக்குமனந்தவியாதியைக் கண்டித்து
ஆக்குங்குணத்தை அதிவிதமாகவே
நீக்குமிவைதனில் நெடுநாள்பிணியதை
தாக்கும்பெரியோர்க்கு சந்தானவிர்த்தியே 1397

சந்தானவிர்த்தியும் சவுபாக்கியமிகும்
சிந்தாதவாழ்வு சிறந்துவிளங்கிடும்
இந்தானத்துபோல இசைவுறுஞ்சொல்லது
வந்தாசைமேவும் வளருறுன்றன்னையே 1398

## எண்ணெய்காச்சுகிறபோது தெரிந்துணர்தல்

தன்னையறிந்துதத்தலைவனைக் கட்டிடு
எண்ணெய்தனிநிற்கும் புனலதைப்பார்த்திடே
நன்னயமாகத் திரித்திடுச் சீலையை
பின்னித்துவைத்துக் கொளுத்திப்பார்த்திடே 1399

பார்த்திடவேதான் பரிவுடன்னின்று
யேர்த்திடத்தெரிக்கும் மிசைந்தப்புனலினால்
கோர்த்திடாதாகில் குரிப்புடனெரித்திடு
ஆர்த்திடக்கண்டு அறிந்துக்கொளுண்மையே 1400

## சூரணபாகர் தெரிந்துணர்தல்.

அறிந்துசூரணத்தினதின் குணசுத்திகேள்
தெறிந்ததோர்பாகஞ்செப்புவேன் நன்றாய்
பிறிந்திடாப்பாலும் சலமுடனுக்கவே
நெறிந்திடப்பாண்டத்தில் நேர்மையாய்ஆற்றிடே 1401

ஆற்றியேவெண்மைச்சீலையால்வேடிட்டு
யேற்றியேகட்டிப் பொருதவேசூரணம்
யேற்றியேநடுவிலிட்டிடுநன்பாக
சாற்றியேயெடுத்துச் சார்ந்துவெடுத்திடே 1402

எடுத்துவுலர்த்து இதையமகிழவே
கடுத்துவிடாமல் கனல்கணக்காய்ந்திடும்
சடுத்தமதில்லைசற்குணபாலர்க்கும்
தொடுத்துக்கொள்ளப்பா தத்வந்துலங்குமே 1403

## தத்துவக்கண்ணாடியின் றிறவுகோல்

தத்துவத்தை ஆய்ந்துமிகப்பார்க்கவென்றால்
தழைத்தசிவயோகி பெரியோர்கள்நன்றாய்
உத்துநின்றுத் தெளியபெலப்புத்தியுண்டு
உண்மையென்ற வழிதனையேயறிவாரப்பா
சத்துவத்தையாய்ந்து மெள்ளகற்கவேணும்
சத்தியவான்கண்டுகொள்வான்சகலநூலும்
பத்துவிதநாடி முதலெல்லாம் தேர்ந்து
பண்புடனேமூன்றினுக் குட்பகர்வர்தாமே 1404

## தேகக்குறிப்பு.

பகர்வானசடலத்தின் நடக்கைபாரு
பரிவானநடையுறக்கம் வுண்ணல்பாரு
அகந்தளர்ந்து பேசுகின்ற வயணம்பாரு
அதிககனநித்திரையின் பெலத்தைப்பாரு
சுகமாகயிருப்பதற்கு சாத்தியவசாத்தியமும்பாரு
சூட்சமுள்ள குதிகாலின்நரம்பைப்பாரு
மிகமெலிதல் மோககுணந்தன்னைப்பாரு
மினவியிந்தமார்க்கமெல்லாம் மேவிப்பாரே 1405

## பார்வையின் குறிப்பு.

மேவிப்பாரென்றுசொன்ன விளக்கங்கண்டு
விவேகமுடன்வயித்தியங்கள் பார்க்கும்போது
தாவியேநாடிதனைப் பிடித்துப்பாரு
தயவாகசடலத்தைத் தொட்டுப்பாரு
ஆவியாம்சத்தத்தின் குணத்தைப்பாரு
அடவுடனேமலத்தைப்பார் சந்தம்பாரு
பூவிதழ்போல்விழியைப்பார் நாவைப்பாரு
புத்தியுடன்நிதானித்துப் புகழ்ந்துபாரே 1406

## இருவர்களின் குறிப்பு

பாரப்பாவிரலைந்தும் நெட்டிவாங்கி
மணிக்கட்டடில் நடுவிரலைவைத்துப்பாரே
நேரப்பாவாணுக்கு வலதுகைதான்
நிதானிப்பீர்பெண்ணுக்கு இடதுகைதான்
தேரப்பாயிதுவகையை மறந்திடாமல்
தெய்வச்செயல்சித்தமென்றே செப்புவீர்கள்
பேரப்பாவுனக்கிருக்க மனதில்வைத்து
பேரின்பநடத்தையினால் பேணிப்பாரே 1407

## மூவர்களின் நடையின் குறிப்பு

பேணியேநாடியெல்லா மொன்றேகூட்டம
பிரியமுடனிதில்மூன்று நாடியோடும்
ஊணியேமுதல்விரல்தான் வாதமாகும்
உகந்ததிருநடுவிரல் தான்பித்தமாகும்
காணியாம்மூவிரல் கீழ்சிலேட்டுமந்தான்
கருத்தியேமுன்விரலைத் தாண்டியோடும்
தோணிடும்சன்னி குணமானதென்றே
தொகுத்தபடிபண்டிதங்கள் சொல்வீர்தாமே 1408

## வாதத்தின் குறிப்பு

சொல்லுகின்றவிடாமழைபோல் தவளைபோலும்
சூட்சமுள்ளபன்னகம்போல் தோணியேதான்
பல்லுறவாய்வாதமது நடக்குமப்பா
பரிவுடனே நிதானித்துப்பாருபாரு
நல்லுறவாய்த் தெளிந்துனக்குள்வினவதாக
நாடியேயொரு குணமாய்ப்பாருபாரு
சொல்லறியவாசானால் கேட்டுநின்று
சுத்தம்நம்வைத்தவர்க்குச்சுளுவுகானே 1409

## பித்தத்தின் குறிப்பு

தானென்றமயில்போலுமன்னம்மோலும்
தயையானகொக்கைப்போல் நடக்குமாகில்
ஏனென்றபித்தகுண மென்றேசொல்லு
இவவிதத்தையாசானலறியவேணும்
நானென்றவகமீறி நடந்திடாமல்
நன்மையுடன்தேர்ந்துக்கொணடால் நியாயமுண்டு
பானென்றபரமதனய கிருபையாலே
பண்டிதர்களுணர்ந்திட நற்பாகந்தானே 1410

## சிலேட்டுமத்தின் குறிப்பு

பாகமுடன்சொல்லுகிறேன சிலேட்டுமந்தனே
பரிவானகுருவிசிட்டு ஆந்தைபோலும்
தாகமுடன்டக்குமென்றே முனிவர்மூத்தோர்
தவறுமலெழுதிவைத்தார் சாஸ்திரங்கள்
ஆகமநூல்விதியறிந்தோருணர்ந்துசெய்வார்
ஆரறிவாராசானலெல்லாமாகும்
யோகவான்றனக்கெல்லாம் சித்தியாகும்
வுத்தமர்க்குவிளக்குமப்பா வுண்மைதானே 1411

## வால்மீகரியற்றிய

### நாடிப்பிரிவின்குறிப்பு - வேறுவிருத்தம்

உண்மையாய்நடந்ததாது வூன்றிப்பன்னகத்தைப்போலே
தண்மையைமீறியேதான் தவளைப்போல்நடக்குமாகில்
திண்ணமாம்பித்தஞ்சேர்ந்து திரும்பியதென்றுகூறு
அண்ணலினருளின்லேயறியவே புகலுவீரே 1412

அறியவேகொக்குபோலே அடர்ந்திடுந்தாதுதானும்
முறியவேமயில்போலுற்றல் முயன்றதுவாதபித்தம்
குறியவேசார்ந்தென்று குணமுடன்தெரிந்துசொல்லு
பிரியமாய்ஆசானலே பேர்பெறத்தெளிவீர்தாமே 1413

தாமெனக்கோழிபோலே தனித்தங்கேநடந்தாது
நாமெனவட்டைபோலே நயன்றதுத்துடருமாகில்
காமென்றசிலேட்டும்மென்றுகாட்டினர் முனிவரெல்லாம்
தோமெனவகுத்துதன்றாய்த் துலங்கவேயறைகுவீர 1414

ஆனையைப்போல் தாதுநடந்தால் அசீரணமென் றுரைக்கவும் காகம் போல நடந்ததாது சுதந்திரியைப் போலே நடக்குமாகில் சன்னியென்றுரைக்கவேண்டும்

## தேகக்குறிப்பு

துலங்கவேவாதரோகிமேனி தோற்றியே கருக்திருக் தமப்பாகலங் கவேபித்தவுடல்பசந்தேனும் சிவந்தேனும்பகர்வாய்காணும் இலங்கவே சிலேட்டுமரோகிமேனி யியபலதாய் வெளுப்பாகத்தோன்றும்மலங் கவே தொந்தநோய் உடல்தானப்பா மடர்கறுப்பாய் வெளிராய்த் தோற்றும்

நோயாளியைப்பேசவொட்டால் வாதமிகுந்திருக்கும்

## மொழிவிதக்குறிப்பு

தோற்றியதோர் அய்யத்தால் கம்மிப்பேசும்
  துடர்ந்தேதான் தாந்திரிகுணத்தாலன்று
மாற்றியதோர் வகைபேதம் பதரிப்பேசும்
  மதிவிதத்தைக்கண்டறிந்து செப்புவீர்கள்
ஆற்றியதோர்பண்டிதர்களறிந்தேபோகும்
  ஆச்சரியநாடியின் கூத்தறிவிற்றங்கி
போற்றியேதினந்தோறும் பிடித்துமேலாய்
  பொங்கமுடனே சிறந்தால் புகழுங்காலே 1415

## விழிக்குறிப்பு

புகழானவாதத்தால் விழிகறுத்து
  போன்றேதான் நீர்க்கசிந்துவீழும்பாரு
இகழானபித்தகுணத்தாலே வப்பா
  இருவிழியும்பசந்தேனும் சிவந்தேனுமிருக்குமப்பா
நிகழானவையத்தால் வெண்மைபோன்று
  நிற்குமென்றுதென்றிசையின் புலவர்சொன்னர்
திகழானவார்த்தைதனைக்கண்டுதேர்ந்து
  திருவருளால் சொன்னவர்க்குசெல்வமாமே 1416

## மலக்குறிப்பு

செல்வமுள்ள பண்டிதர்க்கே சொன்னதல்லால்
  செகசாலப்புரட்டருக்கு நடக்காதொன்றும்
கல்வியுள்ளபெரியோர் களறிவுகொண்டு
  கற்றறிந்துதேரோட்டம் பார்ப்பாரப்பா
சொல்தனைக்கேள் வாதநோய் மலத்தைப்பார்க்கில்
  கிக்கிகட்டி ஒட்டுரைந்து யிருக்கும்பாரு
பல்லருக்கும்மிப்படியே வருத்துப்பாரு
  பயிர்சியிது வல்லாமல் வேறென்றுமில்லைதானே 1417

## பித்தரோகிமலக்குரிப்பு

ஒன்றானகடவுள் தன்னைப்போற்றிநின்றால்
ஒருபோதுங்கைவிடா ரதிந்துசெய்வாய்
குன்றாமல்சொல்லுகிறேன் பித்தரோகி
குவிந்ததொரு மலமதுதான் பசந்துகாணும்
வென்றானசிவந்திருக்கும் கண்டுகொள்வாய்
விரித்துரைத்தவார்த்தை யிதுபொய்யொன்றில்லை
நின்றாடும்பெரியோர்கள் நூலைப்பார்த்து
நிதானித்துப் படித்தவர்க்கேநேர்மைதானே 1418

## ஐயரோகிமலக்குறிப்பு

நேர்மையுள்ள நாதாக்கள் கிருபையாலே
நிலைப்பெறப்பண்டிதற்குத் தெளிவாய்ச்சொன்னார்
கூர்மையுள்ளவையநோய் மலத்தைப்பார்க்கில்
குவிந்துகறுப்பாக வெளுப்பாகத் தோன்றும்
தார்மையுடன் தெரிந்தவிதநோய் மலத்தைப்பார்க்கில்
துரிதமுறநுரைபொருதி நீருடனேகூடிவிழும்
பார்பொருதமுனிவர் சிவயோகிப்பத்தர்
பண்பாகப்புகன்ற மொழியுணர்வீர்தாமே 1419

## நீர்க்குறிப்புவேறுவிருத்தம்

புகன்றதொரு வாதநீர் வெண்மையாகும்
அகன்றதொரு பித்தநீர சங்குவெண்மையாகும்
மிகநிவைந்த சிலேட்டுமநீர் கலங்கித்தெறிவீழும்
தகவேதான் தொந்தநீர்வந்திருக்குமென்றே 1420

## நாவின்குரிப்பு

எனறதோர்வாதரோகி இணைதிருநாவைப் பார்க்கில்
நின்றெனவிரித்துமேலாய் நேர்படப்பசந்துகாணும்
கன்றெனப்பித்தரோகி நாவதுகறுப்பாய்த்தோன்றும்
குன்றெனசிவப்பதாகக் குலாவியேயிருக்கும்பரே 1421

இருக்கின்றநிலையைப்பார்த்து யிசையவேகண்டுகொள்ளு
பெருக்கின்றசிலேட்டுமரோகி நாவதுதடித்துமிக்க
கருக்கியேவெளுத்துக்காட்டும் சரிவரத்நேர்ந்துச்சொல்லு
உருக்கியபொன்போல் யானும் வுகந்தசொற்படித்ததென்றே

## சன்னியின்குரிப்பு

சொற்படிதெரிவீர் மிக்கச்சூழண்டிடும் சன்னிநாவை
நற்படியாகப்பார்க்க நாடியேவரண்டுலர்ந்து

உற்படிகறுத் துலாவி உதித்திடும் பலவிர்த்தாந்தம்
பொற்படிவாய்ந்து தேர்ந்து புகலுவீர் மதிவல்லோரோ 1423

இவ்விதமாகவுறைத்த குணுகுணுங்களை தெரிந்த பெரியோர்களின் நூல் வரிசைநாடியிது வெனும் பாகமாக அறிந்து மேல்வரிசை விவரிதங்களைக் கண்டுசெய்ய வுண்மையாகுமென்றவாறு

## திருவள்ளுவரியற்றிய
## வயித்தியத்திற்கு முப்புவின்குரு

மதியறிந்துயர்ந்து மாபெரியோர்கள்முன்
துதியதுபுரிந்து சொல்லிணைப் புகலுவேன்
அதிவிதமாக நின்றுய்ந்தபேர் முத்தர்கள்
நிதியெனப்போன்ற நேர்மையைக்கண்டிடே 1424

## முப்பூவின்தொகுப்பு

கண்டுகொள்வீர் யிதிலனந்தமொழிகள் மேவும்
கருத்துடனே முப்பூவின் செய்கைகேளு
தொண்டுசெய்துக் கற்றுணர்ந்தபடியேயானும்
தொகுத்துயிதில் செப்புகிறேன் வினவதாக
பண்டுரைந்தசிவயோகி செய்தமார்க்கம்
பரம்பரையைப் பூசையுற்றுப் பார்த்தநேர்மை
விண்டுரைக்கும் வயித்தித்தியன் முப்புதன்னை
விளம்புகிறேன் மெய்பாகத் துலங்குந்தானே 1425

துலக்கமுள்ள சிவந்ததொருபூமிதன்னை
தூயமென்றேமந்திரத்தா லுறுதிகொண்டு
பெலக்கவேதான் உவர்நாடிகூடிடாமல்
பெருமையுள்ள அத்தலத்தைக் கண்ணுல்நோக்கி
கலக்கமின்றி பராபரிமெய்ஞானசோதி
கண்மணியேயென்று வுந்தன்மனதில்வைத்து
தலம்பிறக்கவந்தெனையாட் குடிகொண்டேற்ற
தவப்பொருள்சொல் நிறைந்துமிகச்சாற்றுவீரே 4426

சாற்றியேசெப்பூசை வஸ்துவைத்து
சகலகலைபுரந்தரியேவாவாவென்று
போற்றியேதாம்பூலம்வைத்தேதூபம்
பொங்கமுடன்போட்டுநிதயாகவேதான்
தேற்றியெனைகாக்கவென்று வுபசாரமாக
திருவிறக்கமுண்டாகப் பணிதலேற்றி
மாற்றியெனைவிடுகாமம் துணைசெய்யென்று
மங்களமாய்க்கேட்டு நின்றுவரிசைபாரே 1427

வரிசைபெற அத்தலத்தில் குடிசைபோடு
வகையானவுபதேசம் நினைத்துச்சொல்லு
பரிசைபெறபானுவொளிக் காணவென்றே
பண்பாகவொருவரிடம் பேசவேண்டாம்
தெரிசனத்தைத் தோற்றியது நிற்கவென்றே
தெய்வமேதுணைவருந்திக் கேட்டுக்கொள்வாய்
கரிசலணிதனை யுகந்ததாயேயென்று
களங்கமறமேல் பார்த்துக்கருதுவீரே 1428

கருணையுடனுள்ளிருந்து செபத்தைச்செய்து
கலங்காமலிருந்துமிகப் பார்க்கும்போது
பெருமையுள்ள ஜோதிமயஆத்தாள் நின்று
பெலமாகப்பதினெட்டு முழத்தில்நின்று
அருமையுடன் பூர்வபட்சம் அம்மாவாசி
ஆசையுள்ள உத்திரத்தின் நட்சேத்திரந்தன்னிற்
வருவாள்பார்பளிச்சென்று வழுர்தப்பெண்தான்
வாலையெனுஞ் சிறுபெண்ணாள் மோடிக்காரி 1429

மோடிவைத்தசெய்கையைப் போலாடிநிற்பாள்
மொழிமீறி சுடர்க்கோடி யாகநிற்பாள்
தேடியேபிடிக்கவென்று லாமோசொல்லு
தெருண்டகன்னிப் பத்துவயதானரூபி
கூடியேபார்த்தாலும் பதுங்கிக்கொள்வாள்
கூடுகட்டிக் கொண்டவர்க்கேகுணமதாமே
நாடியேஅவளிடத்தில் செல்லும்போது
நமன்றனக்கு நமனாகயன்றுபாரே 1430

பார்க்கையிலே பூமியதுதளர்ந்துநிற்கும்
பக்திவிசுவாசமுடன் சிந்தித்தேற
ஊர்க்கனமாய் சுமந்தலேத்தலபோலேநின்றால்
வுத்தமியாம் பத்தினித்தாய் வொதுங்கிக்கொள்வாள்
தீர்க்கமுடன்வொருமனதாய் பிடித்துக்கொண்டால்
திவ்வியமலர்பூ வரசிச்சிக்கிக்கொள்வாள்
பார்க்கையிலே கைப்பிடித்தாளென்றுசொல்லி
பரிவாகவுனதிடத்தில் வைத்துப்பாரே 1431

வைத்துநிதம் சைபண்ணுத்தவறிடாமல்
வாய்மதங்கள்பேசாதே வாயாடாதே
புத்திநின்று அவையடக்கமாக நில்லு
வொருபொருளைத் தோத்தரித்து நினைவாய்ப்பாரு

எத்தொழிலுமாகாது இவட்கொவ்வாது
யேற்காள்பார்ஒருவர் சொல்லைக்கேட்கமாட்டாள்
பத்துவயதானதிந்தப்பெண்ணாள் தன்னை
பணிவுடனேகண்டவர்க்குப்பலிதந்தானே 1432

பலித்தஇவள்பேர்தன்னையே செப்பக்கேளு
பரிதிசுடர்காலென்றும் சகியாளென்றும்
கலினதிருகுமரியென்றும் சிவகாமியென்றும்
நயனசல்லிவல்லிகனக்குறிப்பதென்றும்
கலியனைத்துந்தீர்க்குகின்றரூபியென்றும்
கனியரனவூர்த்தியென்றுங் காரமென்றும்
வலிவானகாரமென்றுஞ்சிகாரமென்றும்
வதிசெயமாய்ப்பிறந்தசெல்வத்தால்தானென்றே 1433

தாயானமவுனியென்றும்சுயமதென்றும்
தருவீரபூரமென்றும் சாரமென்றும்
ஓயாதநாதசத்திசுகந்தமென்றும்
ஒழுங்கானவல்லியென்றும் பிண்டமென்றும்
மாயாதகெவுநபுசமணித்தாயென்றும்
மலராகவந்தகன்னிகுமரியென்றும்
தோயாதவேரென்றமுருவபச்சை
சேர்ந்துநின்றவுருவானசிவந்தபெண்ணே 1434

பெண்ணனஇவள்தனக்கு ஆடைசாற்றி
பேர்பெறவேதூபமிட்டுமாலைபோட்டு
கண்ணனமாதிவளைவளர்த்துநீதான்
கநகம்போலுச்சரித்துப் பார்க்கும்போது
ஒண்ணனமாதவிடாயிவனில்வாங்கி
ஒருபீங்கான்றனில்விட்டுவுலர்வதாக
பண்ணனமதமடக்கிநீரினாலே
பகட்டியேநீக்கலந்துவிடுபாகந்தானே 1435

பாகமுடன்சுத்திசெய்வாய் பயிற்சியாக
பனைபாகப்பனிக்குடத்தின் சலத்தினாலும்
வேகமுடன்கண்ணடியின் சலத்தினாலும்
வினவானப்பனிநீரால் பத்துமுறைதானப்பா
ஆகச்சொற்றவராமல் செய்துயிந்த
அன்பானமுப்பூவைப் பதனம்பண்ணு
யோகமுள்ளமார்க்கமிது முப்பூவாகும்
யுத்தியுடன்முடித்தபடி அறிவீர்தாமே 1436

அறிவானதிலவையெடுத்து லேகியங்கள்
அனந்தவித ரசாயனங்கள் தயிலத்திற்கும்
பிறிந்ததொரு நெய்வர்க்கியாழத்திற்கும்
பேசரியமாத்திரைகள் சகலத்திற்கும்
தெரியவேதான் அணுவஅவுயெடுத்துப்போடு
தெய்வசெயலாலபிணிகள் நீங்கிப்போகும்
சிறியவர்போலாசாநின்றுப்பார் பாரு
சீர்த்துவமாயவர்தனையே வடுத்துக்கேளே 1437

அடுத்துவிடுப் பற்பமுதல் செந்தூரத்திற்கும்
அணியாகத்தொடுக்குகின்ற விதத்துக்கெல்லாம்
எடுத்துவிடுகுன்றியிடை முப்பூவைத்தான்
யென்னாலேசொல்ல விதைமுடியாதுபாரு
சடுத்தமதைவிட்டுனக்குள்தெளிவதாகி
சத்தியத்தினிலேபொருளைச் சார்ந்துநில்லு
அடுக்கடுக்காய்பொன்செயகல் லேற்றிவைத்த
அதிசயம்போலித்தொழில்தானுடுப்பாரே 1438

## வேறுவிருத்தம்.

தொழிலிதுபாருதுயமலர்ப்பூவாம்
வழியிதுபாருவாநந்தபுட்களம்
சுழியிதுபாருசொற்கடங்காதெனும்
வழியிதுபாருவேதாந்தமூலமே 1439

மூலக்கிழங்குமுளைத்துக்கிடக்குது
காலத்தைப்பார்த்துக்கண்டுதெளிந்திடு
தூலத்தைத்தேற்றதுலங்குஞ்சுகமாக
பாலத்தைதாண்டிபார்த்துக்கண்டேறுவீர் 1440

## போதரிஷியாரியற்றிய

## வயித்தியத்திற்கு இரசமுப்பு.

பார்த்துநீமுடிக்கப்பணிவுடன்கேள்மிக
கோர்த்துவிடுவாய்குணங்குடிக்கொண்டிடே
ஏர்த்துக்கொளிதனை இணைபெறவேதான்
சீர்த்துவமொன்று செப்புவேன்கேட்டிடே 1441

கேட்டிடும்மேன்மையாய்க் கீர்த்தியதாக
நாட்டிடுநல்ல ரசபதங் கந்தனைப்
போட்டிடுசெய்தப் புகழவிழ்தங்களில்
வாட்டிடும்நேர்மை வளமைபேர்பெற்றிடே 1442

பேர்பெறுங்குன்றிப்பிரமாணமாவிடை
நேர்பெறசேர்ப் பாய்கிறையுறவாக
சீர்பெறநோயை சிமிட் டினிலாற்றிடும்
ஏற்பெறவிதனை யியம்பினர்முத்தரே 1443

முத்தர்கள்முனிவர் முயன்றதட சிகள்
சித்தர்கள்பெரியோர் செப்பியமொழியிது
சுத்தவிதமிது சூக்ஷத்தொழிலிது
ஒத்துவிரைந்து வொழுங்குடனின்றிடே 1444

ஒழுங்குடன்சொல்லும் வுயர்ந்தவியாதியை
விழுங்கும்ரசந்தான் வேணபடியென
தொழும்புயெய்தாலுங் துடர்ந்தேரிக்கட் டிடும்
எழும்பும்வியாதியை யேனென்றுகேட்குமே 1445

என்றதுவாதமெண்பதும்நீங்கிவிடும்
கன்றினமானக்கமடமுடன்வரும்
மின்றியபதிமூன்று மேலானசன்னியும்
ஒன்றியபித்தம்நாற் பதொடுங்குமே 1446

ஒடுங்குமேசுரமுதலறுபத்துநாலதும்
கடுங்குணமேழு தோடங்களானதும்
படுமிங்ரோகம் பார்த்துமுடித்திட
தொடுமிந்தசொல்லால் தோய்ந்துக்கொள்ளென்றதே 1447

சொல்லானமேகங்களிருபத்து வொன்றுக்கும்
வல்லானகுன்மம் வகைவிதமெட்டுக்கும்
கெல்லானசூலை கிளர்பதினெட்டுக்கும்
நில்லாதமூலமநேர் பாருவாறுக்கே 1448

பாருமேவாதசுரமுதல் பகிரண்டாம்
தீருமாம்பித்தசுரமிருபத்தொன்றதும்
ஆருமாம்சேத்துமசுரமுப்பத்திரண்டதும்
பேருமாமொன்பது மூலக்கிருணியே 1449

கடுகுப்பிரமாணம் மூலத்திற்குலேகியத்தில் சேர்த்துவாம் வுமிகுந்திருந்தால் கொடுக்கப்பிணியகலும்

விருத்தம்

மூலமுதலெழுந்தவொரு நோய்களெல்லாம்
முனிவருரைசொற்படியே வகண்டுபோகும்
காலனெனத்தொடுகின்ற பிணிகளெல்லாம்
கடல்கடந்து நிங்கிவிடுங்கருதிப்பாரு

சீலமென்றமனமிருந்தால் சித்தனுவான்
செகசாலமாய்கையதுப் பொல்லாதப்பா
ஆலமென்றவிடம் நீங்குமறிந்தபேர்க்கு
அளவற்றவிதனதை நிறைந்தாகுந்தனே 1450

நிறைந்ததொருவயித்தியத்தைப்பாருபாரு
நிதானிக்கசத்திமுப்பு சாத்தின்முப்பு
குறைகளில்லே யிதுரெண்டுஞ் செய்துகொண்டால்
கோடானகோடிபிணி நீங்குமப்பா
திறையானவார்த்தையிது வென்றெண்ணுதே
திருத்தமுடன் வுனக்குள்ளே படித்துதேர்ந்து
பறையானபரம்பரியின் பாதம்போற்ற
பலித்ததுபார் பவமேகும் பாக்கியந்தானே 1451

பலமகலும்புத்தியுடன் நடந்துகொண்டால்
பாரில்வரும் துன்பவினே தீங்கிப்போகும்
தவமானபேர்களுக்கு சித்தியாகும்
தனேயறியாப்பேர்களுக்கு நியாயமுடண்டோ
மவமானரசமல்லோ முப்புமுப்பு
சேர்க்கவிதமறியாமல் தியங்கிப்போனுர்
நவமானகாரணத்தை விட்டுப்போட்டு
நாவில்வந்தபடிக் குன்றிசெப்புவாரே 1152

செப்பியசொல் சுத்தியந்தான் பொய்யொன்றில்லே
சீர்சிறந்த நாதாக்கள் மறைவாய்ச்சொன்னுர்
ஒப்பியசொல் தவறுமலிந்த நூலில்
ஒழியாமல்பார்த்தப்படி புகன்றேனப்பா
தப்புமொழியென்றிவனே நீனேக்கவேண்டாம்
தாய்சொல்லயான் பணித்துத்தயையாய்ச் சொன்னேன்
முப்புவென்றுபடிததவர்க்கு யிதுபோகாதே
முழுமனதாய்செய்தவர்க்கு யிதுதானுமே 1453

தானுனக்காரியத்தைப்பார்த்திதாமல்
தடுதாறிப் புத்திதனேபிசகதாக்கி
வீணுனகாரியமாய் சரக்கைச்சேர்த்து
வீரசானபுடந்தீர்ந்தா லிருக்குமோசொல்
கோனுனமதிதனேயே கைமெய்யாக
கோதகலக்கண்டவர்க்கே குணக்களுண்டு
தேனுனஆமுர்தமென்பார் சீவனென்பார்
தெகுட்டாதஞ்சுகொடி வித்தைதானே 1454

நஞ்சுகொடிபிண்டத்தின் மேலேநிற்கும்
நலமாகவழித்தெடுக்க மாவுமாச்சு
நெஞ்சுதனில்வையாமல் சொல்லிப்போட்டேன்
நேர்மையுடன் வழுக்கற்றிறெடுத்துப்பாரு
அஞ்சுருவாய் முளைத்திருக்க மலமாகும்
அம்மம்மாயென்னுசான் விளங்கினர்பார்
விஞ்சையதுமின்னுகின்றநாரிதன்னல்
விருதுகொடிகட்டி நின்றுடினரே 1455

ஆட்டமெல்லாம் முப்புக்குளிருக்குதப்பா
அதிவிதமாய்ரசமுமொரு முப்புவாச்
கூட்டமுட்டுப்பதம்பிரித்து வாலோசித்து
குரிப்பானத்துவென்று மிதுவென்பார்கள்
நாட்டமுடன்தரையை விடசங்கியாகிக்கு
நயன்றசிலம் பதுபடிக்கலாகாதப்பா
சாட்டியில்லாபம் பரம்விட்டாட்டலாமோ
சமர்த்தறிந்துப் பாகமதைசார்வீர்தாமே 1456

சார்ந்தவர்க்கு லகுவாகத் தோன்றுமய்யா
சாகரம்போல்நூல்படித்து விளங்கிடா
தேர்ந்தகுணப்பண்டிதற்கு வாய்க்குமுப்பு
தெரிந்தபடியிந்நூல் சொல்கிசமதாகும்
நேர்ந்ததொழிலிதுவென்றே யெண்ணிக்கொண்டு
நிலைமையுடன்கருத்தில்வைத்து ஆசானுலே
பார்த்தறிந்துமேவிடப் பிரகாசிக்கும்
பரிகாசவார்த்தையென்று பகராமல்நில்லே 1457

நில்லென்றால் வேதாந்தம் நிலைக்குமோதான்
நிறைந்தபெரியோர்கள் சொன்னல் கேட்கமாட்டார்
புல்லென்றகாடதனிதில் தவடிறைத்த
பொதுவசல்சொற்படியே நூலிற்றுனும்
வில்லென்றேகாட்டிவைத்தார் யோகிசித்தா
வினவிமெள்ள கெற்சித்தால் வருவதுண்டோ
மல்லென்றமார்க்கம்விட்டு ஆசான்சொல்ல
மகிழவேதான்கற்றவீர் மதிவல்லோரே 1458

மதியானபேர்களுக்கு யெல்லாமுண்டு
மட்டமாகவிருந்துவிட்டால் குணமதாக்கி
பதிதனிலே அவரவர்க்கு யேற்றவிதம்
பார்த்துப்பலவிதமாக சோதிப்பார்கள்

அதிகாரியையந்துவித ராசியோர்கள்
அகமகிழவெத்தொழிலும் மறிந்துசெய்வார்
விதியாளரிவரென்றே யேர்கையென்பார்
வினிதமொழிதவறுமல் முடிப்பர்தானே 1459

## வேறுவிருத்தம்.

முடியடியெனச்சொல் மொன்படவேதான்
விடிமுதலெனவே வேந்தனென்றுந்தும்
குடிதொழில்போலேக் குரிப்புடன்வைத்திடில்
படிவினமிது வெனப்பார்த்துணர்ந்தேறிடே 1490

ஏறினல்சித்தர் யெவரறிவார்களோ
மீறினலாகாமிகுத்த தோரானந்தம்
வாரியிதென்றும் வழங்குசசிறென்றும்
காரிமதியென்றக் காரணமெண்பரே 1461

மென்னவிதமெனும் யேர்கையின்வரிசையும்
சொன்னதோரூர்த்தியம் சூட்டியிசைத்திட
அன்னநடையென அகமகிழ்வாய்சொலும்
பொன்னலங்காரமும் பொருதும்பொருதும் 1462

பொருதும்பொருதும் புண்ணியவாளர்க்கு
கருதுமிவையெலாங் காணலாங்கையினில்
குருவுடன்சீஷனும் கொள்கிவிசைந்திட
திருவருளாகித் தெளிதலுண்டாகுமே 1463

## வெண்பா

உண்டான நல்மனியை உத்தியுடன் பார்த்தவர்க்கு
பண்டானநல்மொழிமேல் பரலிக்கும்- கண்டபடி
முப்புவரிசைமுயன்றுத்தேரிந்தோர்க்கு
அப்புவென்றேச் சொன்னாறி 1464

## வேறுவிருத்தம்.

சொன்னர்சவுக்காரம் சூட்சமறிந்திலார்
பொன்னரவொக்கும் பூட்டினபேர்க்கிதை
நன்னுவலர்க்கு நாட்டினசொல்லிது
முன்னுனவர்க்கு மொழிந்தனரப்பனே 1465

அப்பினில்சப்பு ஆட்டிக்குழைத்திட
துப்பிதுவாகும் தொடர்ச்சியைப்பாரு
மெம்பியலாச்சு வேடிக்கையென்பர்கள்
ஒப்பிமுடிக்கவொரு கோடிசித்தியே 1466

சித்திரத்தேர்போல்செப்பியிருக்குது
பத்திரமாகப் பணிந்துறவாகினுல்
உத்தியுமாகும் உண்மைநிலேப்படும்
சத்தியமென்றுசாற்றினர்கண்டிடே 1467

கண்டதும்கேட்டதும் கணக்குடனென்றுத்தால்
விண்டதுமேலாய்விளங்கித்துலங்குமாய்
மண்டலந்தன்னில்மகாபெரியோர்மொழி
தண்டமிழியற்றி சாற்றியதென்றே 1468

என்றமொழிகண்டியற்றுவீரப்பனே
என்றமொழிகண்டிருபதம்போற்றிடு
என்றமொழிகண்டிசைந்துவணங்கிடு
என்றமொழிகண்டிணைமுதலாகுமே 1469

முதல்வழிப்பார்த்து முடித்துவகுத்திடு
முதல்வழியானதைமுயன்றுநிகற்றிடு
முதல்வழிசொல்லே முனைந்துப்பிடித்திடு
முதல்வழியேற்கனமுயர்ச்சிபேரின்பமே 1470

பேரின்பமுற்றும்பேர்பெறசிக்கினுல்
பேரின்பமுற்றுப்பெட்பலங்காரமாம்
பேரின்பமுற்றுப்பிரியமாய்கையுற்றுல்
பேரின்பமுற்றுப்பேசும்வானந்தமே 1471

வானந்தவீட்டில்வமிர்தெனச்சங்கித்து
வானந்தவீட்டில்வதிகமாய்க்கண்ணுற்று
வானந்தவீட்டில்வர்த்தித்துவர்த்தித்து
வானந்தவீட்டில்வாழ்வறச்செய்குவீர் 1472

செய்யப்பெலப்படுபம்சீர் திருஞானமும்
செய்யப்பெலப்டுபம் சிரோன்மணிபொற்கழல்
செய்யப்பெலப்டுபம் செப்பியவாசகம்
செய்யநற்பாகமாம் செகமாய்கைநீக்கிடே 1473

நீக்கிவிடுத்தால்நேர்படுமாணிக்கம்
நீக்கிவிடுத்தால்நிறைந்திடும் வாசிதான்
நீக்கிவிடுத்தால்நினைகண்டுமெய்யுறும்
நீக்கிவிடுத்தால்நிதங்குணமாகுமே 1474

குணங்குடிகொண்டபின்கோதுகளேது
குணங்குடிமேவிடக்குற்றமகண்டிடும்
குணங்குடியாகிகுறிப்பதென்மற்றதை
குணங்குடியானதுகுற்றமகற்றேற்றுமே 1475

மற்றதோர்நியாயத்தைமாசிக்கப்போமோ
மற்றதோர்நியாயம்போல்மடர்ந்திடலாமோ
மற்றதோர்நியாயமலரெனவொக்குமே
மற்றதோர்நியாயம்மனமொக்கலாமோசொல் 1476

மனதைத்திருத்துமங்களமாகவே
மனதைத்திருத்துமழுக்கதையாற்றிடு
மனதைத்திருத்துமதிவிதமாகவே
மனதைத்திருத்துமாபொழிலாகுமே 1477

பொழியும்வமுர்தம்பூவதுபோலவே
பொழியும்ரசமது பொன்மயம்போல
பொழியும்விவேகம்பொருதிநிழலுற
பொழியும்சுடரதுபோன்றிடுமாமிகே 1478

மிகவெத்தெளிந்திடுவிதியையறிந்துபின்
மிகவெத்தெளிந்திடுவேதாந்தப்பாகத்தில்
மிகவெத்தெளிந்திடு விருவிறவேதான்
மிகவெத்தெளிந்திடுவிருகலேபூட்டியே 1479

## ஞானவித்தாரம்

பூட்டித்திறந்துபொருளெனக்கண்டிடு
பூட்டித்திறக்கப்புகழ்வழிநேரிடும்
பூட்டித்திறக்கப்பொறுமையும்வேண்டுமாம்
பூட்டித்திறக்கப்புண்ணியமெய்துமே 1480

புண்ணியமென்றுலிதுநல்லபாக்கியம்
புண்ணியமென்றல்பிறந்தாலுமென்பலன்
புண்ணியமென்றல்பொருந்துமிதுதொழில்
புண்ணியவானுக்குப்புத்திவருந்துமே 1481

புத்திவருந்தப்போதிக்கும்சாத்திரம்
புத்திவருந்தப் புகன்றிடுமட்சரம்
புத்திவருந்தப்புனலதுகாட்டிடும்
புத்திவருந்தப்பொய்யாதுதேகமே 148[illegible]

பொய்யாதுதேகம்பொருந்தியுணர்ந்திட
பொய்யாதுதேகம்புனிதமதாகுமாம்
பொய்யாதுதேகம்புகழ்நலமேன்மை
பொய்யாதுதேகமும்பொன்னணிதானே 1483

பொன்னடிவித்தைப் பொருதுமிவையினுல்
பொன்னடிவித்தைப் போதாதோசொல்லுவீர்

பொன்னடிவித்தைப் பொங்கமணிக்கதிர்
பொன்னடிவித்தைப் புசித்தவர்சித்தரே 1484

சித்தர்கள்சாத்திரம் சேர்ந்துபடித்தவர்
சித்தர்கள்சாத்திரம் திறமையாய்க்கற்றவர்
சித்தர்கள்சாத்திரம் தேர்ந்தபெரியோர்கள்
சித்தர்கள்சாத்திரம் தெளிந்தனரப்பனே 1485

தெளிந்துத்தெளிந்துத் தெய்வச்செயலினால்
தெளிந்துத்தெளிந்து சிர்வழிபிக்கினால்
தெளிந்துத்தெளிந்து சிகாமணியென்றது
தெளிந்துத்தெளிந்து சேர்ந்திடும்மெய்யதே 1486

சேர்ந்தகுணத்தில் திருவருளேற்குமாம்
சேர்ந்தகுணத்தில் தேற்றமிகவெளி
சேர்ந்தகுணத்தில் செப்பிடும்பேரின்பம்
சேர்ந்தக்குணத்தில் சீலமதொக்குமே 1487

சீலம்பிறக்கும் சிலம்பொலிமேவிட
சீலம்பிறக்கும்தெய்வச்செயல்படி
சீலம்பிறக்கும்தெய்வப்பெலத்தினால்
சீலம்பிறக்கும் தேர்ந்தர்வமன்னரே 1488

மன்னரில்கற்றோர் மாபெரியோர்களாம்
மன்னர்கள்மேலாய் மனோரம்யபேர்கள்தான்
மன்னர்கள்மெச்சும் மதிவிதயோகிகள்
மன்னர்களாய்ந்த மாசெபவல்லரே 1489

வல்லமைபோன்ற மணிதனிற்சேர்த்திட
வல்லமைபோன்ற மலங்கிர்தயூகிகள்
வல்லமைபோன்ற மவுனசித்தாந்தர்கள்
வல்லமைபோன்ற வாசிமகத்துவமே 1490

மகத்துவமான வளர்கந்திவீட்டினில்
மகத்துவமாகமாசற்ற வீட்டினில்
மகத்துவமபிர்பாலமீதேறிநின்றவர்
மகத்துவவீட்டில் மலிவுரைதந்ததே 1491

உரைதந்தபின்னர் வுகந்துநீகேட்பதென்
உரைதந்தபின்னர் வுனக்குள்ளேகண்டிடு
உரைதந்தபின்னர் தோதுவதாமிக
உரைதந்தபின்னர் வொருங்குடன்பாரே 1492

ஒருங்குடன்பார்த்து வொலகிசிறந்திடு
ஒருங்குடன்பார்த்து ஒன்றித்துநின்றிடு

ஒருங்குடன்மூலம் வொளிமேவும் வாசகம்
ஒருவகுடனாட்டி வோதுவீர்தானே 1493

ஓதுமிவை முதலானவழிதனே
ஓதுமெய்ஞ்ஞான வுகந்தநிலையதை
ஓதும்சுவையென வொன்றித்துநின்றிடில்
ஓதுமிவையெலாம் வொளியெனகாண்குமே 1494

ஒளிகண்டபேர்க்கு வுறவென்னசொல்லு
ஒளிகண்டபேர்க்கு வுவமைகளேதுதான்
ஒளிகண்டபேர்க்கு வுதித்தமதுமார்க்கமே
ஒளிகண்டபேர்க்கு வொருகுணமென்பரே 1495

குணமானபெரியோர்க்கு விப்புடனுய்ந்து
குணமானமாதபங்கொண்டு சிறந்தனர்
குணமானமாதபங் கொண்டுநிறைந்தனர்
குணமானசித்தம் குவிந்துரைத்தாரே 1496

குவிந்ததுநேத்திரம் கோப்பெனவாகாய்
குவிந்ததுநாலாய் கோள்கிநிறையுறும்
குவிந்ததுமேலாய் கொண்டாட்டமாட்டினர்
குவிந்ததுமாய்கையைக் குலைத்தார்கள்தானே 1497

தானனசொல்லை தடுத்துநில்லாமலே
தானனசொல்போல் தபத்தினில்புக்கில்
தானனசொல்போல் தாய்தனைநம்பினல்
தானனசொல்போல் தழைப்பர்களுண்மையே 1498

உண்மைக்கு நன்மைவுயர்ந்துதருங்குணம்
உண்மைக்கிநன்மை வோயாமல் சேர்ந்திடும்
உண்மைக்கிநன்மை வொழுங்காய்ப்பிறந்திடும்
உண்மைக்கிநன்மை வுதிக்கமாமென்றே 1499

உதித்தக்கருணை வுலகமுங்கொள்ளாது
உதித்தக்கருணை வுறுதிப்பெலனது
உதித்தக்கருணை வுண்மைபராபரம்
உதித்தக்கருணை வுகந்ததுக்கார்க்குமே. 1500

பதிநெண்சித்தர்கள்

## சிரோரத்னநடனகாண்டம்-முற்றும்.

முற்றுப்பெற்றது

---